ஸ்ரீ காஞ்சீபுரம்

மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியஸ்வாமி

ஷஷ்டியப்தபூர்த்தி

நினைவு மலர்

விக்ருதிஞு பங்குனிமீ 14உ

(27—3—1951)

ஷஷ்டியப்தபூர்த்தி வரவேற்புக் கமிட்டியாரால்
வெளியிடப்பட்டது.

ஹானரபள் Mr. ஜஸ்டிஸ்,

W. S. கிருஷ்ணசாமி நாயுடு.

வரவேற்புக்கமிட்டி தலைவர்.

ஸ்ரீ காஞ்சீபுரம்

மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியஸ்வாமி

ஷஷ்டியப்தபூர்த்தி நினைவு மலர்

விக்ருதி வருஷம் பங்குனி மீ 14௳

(27-3-1951)

ஷஷ்டியப்தபூர்த்தி வரவேற்புக் கமிட்டியாரால்
வெளியிடப்பட்டது.

ஹானரபள் Mr. ஜஸ்டிஸ்

W. S. கிருஷ்ணசாமி நாயுடு,

வரவேற்புக்கமிட்டி தலைவர்.

ஸ்ரீகாஞ்சி. மஹாவித்வான் ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள்.

தமது வேதவேதாந்த வைஜயந்தீவித்யா நிலயத்தில் ஸ்ரீஸ்வாமிகள் 1931ஆம் ஹஸ்த்தில் நிகழ்த்திய திருமந்த்ரார்த்த காலக்ஷேபத்தில் அந்தரங்கபக்தர்களமைந்த கோஷ்டியின் காட்சி.

இம்மலரிலுள்ள விஷயங்களின் அட்டவணை

பக்கம்	விஷயம்	எழுதியவர்
1	அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் வைபவ ஸங்க்ரஹம்	புரிசை வரதாசாரியர்
28	அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளியிட்டுள்ள வடமொழி தென்மொழி நூல்களுக்கு அகராதி க்ரமமான ஜாபிதா	ஷை
34	ஷஷ்டி பூர்த்தி நினைவு மாலைகளின் அறிக்கை.	ஷை
35	ஸத்க்ரந்தப்ரகாசன ஸபையின் அறிக்கை (ஸ்ரீ ஸ்வாமியின் பெருமையைப் பற்றின ஸ்ரீமுகங்கள்)	ஷை
36	ஆசார்ய சிகரம்.	திருக்குறுங்குடிமடம்
36	திருவல்லிக்கேணி வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யஸ்வாமி திருமுகம்	
37	திருக்குடந்தை இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீ முகம்.	
39	ஜகதாசார்யர்	காரப்பங்காடு வேங்கடாசார்யர்.
41	ஆசார்ய வைபவத்விசதீ (பொழிப்புரையுடன்)	அ. மு. ஸ்ரீநிவாஸாசார்யர்.
75	அபிநந்தந பத்யமாலிகா.	கருடபுரம் வரத தேசிகாசாரியர்.
76	ஓர் குதூஹல ஈடுபாடு	N. ஜீயப்பங்கார்.
81	வாழ்த்துப்பாக்கள்	மதுரை செந்தமிழ்ப் பத்ராதிபர் ராமானுஜய்யங்கார்
82	அபிநவ பெரியவாச்சான்பிள்ளை	அன்பில் ஸௌம்ய நாராயணாசார்யர்
83	**An Appreciation (in Tamil)**	S. ரங்கஸ்வாமி ஐயங்கார், திருக்குடந்தை
86	ஸ்வாமியின் பெருமை	C. R. ராமஸ்வாமி ஐயங்கார்
89	நமது குலக்கொழுந்து	Dr. V. ராமய்யங்கார்
90	எங்கள் குடிக்கரசு	C. நரஸிம்மாசார்யர், அட்வொகேட்.
	A Brief Estimate of a great Personality	**Sir. S. Varadachariyar**
	Embodiment of Vaishnavism.	**D. Ramaswami Iyengar, Advocate.**
	Our Swamy a Genius	**A. K. Satakopan**
	The most Eminent of all Acharyas.	**Sami Venkatachalam Chetty**
	Another Ramanuja.	**R. Narasimha Iyengar. Madurai**
	A Divine Personality.	**V. V. Iyengar, Bombay**
	Sri Mahavidwan P. B. A. Swamigal	**Vedavyasa Bhattar Swami**
	A Towering Spiritual Personality	**S. R. S. Raghavan (New Delhi)**
	A Great Master	**Vidwan H. Srinivasacharyar**

(ஷை ஆங்கில வியாஸங்களின் மொழிபெயர்ப்பு)

விஷயம்	எழுதியவர்
ஒரு மஹானைப்பற்றின ஆராய்ச்சிச் சுருக்கம்	ஸர். எஸ். வரதாசாரியர்.
ஸ்ரீ வைஷ்ணவமே வடிவெடுத்தவர்.	D. ராமஸ்வாமி ஐயங்கார்.
நம் ஸ்வாமி ஓர் மேதாவியே.	A. K. சடகோபன்.
ஸகல ஆசார்யர்களுக்கும் சிகரமாய் விளங்குபவர்.	ஸாமி வெங்கடாசலம் செட்டி
மற்றொரு இராமானுசர்.	R. நரசிம்ம ஐயங்கார், மதுரை.
ஓர் தெய்வீக மஹாபுருஷர்.	V. V. ஐயங்கார். பாம்பே.
ஸ்ரீ மஹாவித்வான். P. B. A. ஸ்வாமிகள்.	வேதவ்யாஸபட்டர்
ஒளிபொருந்திய ஞானிகளின் சிகரம்.	S. R. S. ராகவன், டில்லி.
ஓர் பெரிய ஆசார்யர்	H. ஸ்ரீநிவாஸாசார்யர், மேல்கோட்டை

T. S. நடேச சாஸ்த்ரிகளின் வியாஸம் (ஆங்கிலமும், தமிழும்)
ஸ்ரீபெரும்பூதூர் காலேஜ் தங்கவிழாகொண்டாட்டவெளியீட்டின் வியாஸம் ௸
V. V. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களின் பேச்சு
ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபரின் ஸ்ரீமுகம்
ம. ம. சாமிநாத ஐயரின் மதிப்புரை
அபிநந்தந பத்திரிகை. ந. தேவநாதையங்கார், காஞ்சீ.
மகிழ்ச்சியுரை. தி. த. பாஷ்யம் ஐயங்கார் ,,
A Thrilling Experience ந. ஜீயப்பய்யங்கார் ,,
A Critical Appreciation of an Inspiring Personality S. ரங்கஸ்வாமி M. A. புனா.
An ardent Follower of Ramanuja P. N. ஸ்ரீனிவாஸாசார் M.A.
ஸ்வாமி விஷயமான மங்களாசாஸநம், ப்ரபத்தி, ஸுப்ரபாதம், திநசர்யா (ஸம்ஸ்கிருதத்தில்)—மேலவாத்யார் திருமலை ஐயங்கார். ஸ்ரீ வில்லிபுத்தூர்.
ஸ்ரீமத் பரகாலமட ஸ்ரீமுகம்.
விஜயநகரம் வெங்கடராமாசாரியர் ஸ்ரீமுகம்.
அபிநந்தந பத்திரிகை. தி. ந. ராமக்ருஷ்ணையங்கார்.
ஸ்ரீ ஸ்வாமியின் இரண்டு வியாஸங்கள்

இம்மலரிலுள்ள திருவுருவப்படங்கள்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் ஜகத்குரு. அனந்தாசார்ய ஸ்வாமி (சரித்திரமும்)
ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்
ஸ்ரீமதஹோபில மடாதீச 42வது பட்டம் இஞ்சிமேடு ஸ்வாமி
ஸ்ரீமதஹோபில மடாதீசஸ்தாநத்தை யலங்கரித்திருந்த சக்ரவர்த்தி ஸ்வாமி
ஸ்ரீகாஞ்சீ அழகிய மணவாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி (வைபவமும்)
திருக்குறுங்குடி மடம் 46வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
ஸ்ரீவானமாமலை மடம் 27 வது பட்டம் சின்ன ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
மைஸூர் ஸ்ரீரங்கநாதப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி
மைஸூர் பண்டிதரத்ந கஸ்தூரி ரங்காசாரிய ஸ்வாமி
க்ரந்த மாலா கார்யாலய க்ரந்த சோதக ஸமிதி (அ. மு. ஸ்ரீனிவாஸாசாரியரும், அக்காரக்கனி ஸம்பத்குமாராசாரியரும்).
திருக்கண்ணபுரம் கனபாடி வெங்கடாசாரிய ஸ்வாமி
திருமலை விஞ்சிமூர் மாம்பள்ளம் ஸுதர்சனாசாரிய ஸ்வாமி (வைபவமும்)
திருமலை அனந்தாண் பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமி (வைபவமும்)
நம்பிள்ளை ஸன்னிதி காலக்ஷேப கோஷ்டியின் ஒரு பகுதி
தி. அ. குன்றபாக்கம் ஸ்ரீனிவாஸாசார்ய ஸ்வாமி. (வைபவமும்)
மைஸூர் மண்டயம் அனந்தாழ்வார் ஸ்வாமி (வைபவமும்)
பெங்களூர் கல்கி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி
திருநாராயணபுரம் மண்டயம், ஆழ்வார் ஸ்வாமி
ஸ்ரீபெரும்பூதூர் குண்டலம் நரசிம்ஹாசார்ய ஸ்வாமி (வைபவமும்)
,, காழியூர் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் கோஷ்டி (வைபவமும்)
திருமலை ஈச்சம்பாடி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி
,, ராமானுஜாசார்ய ஸ்வாமி
திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமி (வைபவமும்)
ஸ்ரீ வில்லிபுத்தூர் சோலைமலையாசார்ய ஸ்வாமி
,, திருமலை ஐயங்கார் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டி.
ஏலூர் ஸ்ரீ வைஷ்ணவமஹாஸபையின் ஒரு பகுதி
T. S. நடேச சாஸ்த்ரியார் அவர்கள், அட்வொகேட்.

PREFACE.

It is my good fortune that I have been associated with the Committee constituted to celebrate the Sashtiabdapoorthi of Sri Maha Vidwan Annangaracharya Swami of Kancheepuram and that is due to the kindness and insistence of some of my friends who prevailed upon me to accept the presidentship of the Committee. I am grateful to them for giving me the opportunity of taking part in this historic celebration.

The souvenir, which is issued by the Committee, is to put on record, however meagre it may be, the life, work and service of Swamiji. To those in Southern India, nay, even the entire Hindu India, such a publication is superfluous as every Hindu who is religiously inclined is well aware of his life and work and the benefits they have derived from the inspiring and learned exposition of the great truths found in our sacred books. His lectures and in addition his publication of books and periodicals on religious topics in Sanskrit, Tamil, Telugu, and Hindi are well known. But to those who have not been fortunate to know him or hear him personally and to the succeeding generations this publication may afford an opportunity of knowing and realising the greatness of Swamiji and the impressions he had left in the minds of the Hindu public. He has placed the followers of the Hindu faith under a deep debt of gratitude to him for the valuable services he has rendered to the cause of Hinduism in general and to the Visishtadwaitha Siddhanta in particular.

Several eminent and learned persons have sent articles about Swamiji for publication. We have been able to incorporate only a few of them as others could not be included for want of time. The lives and the photographs of some of the eminent scholars who have been responsible for the promotion of our religion and culture have also been included, most of the life-sketches being reprints from some of Swamiji's journals.

It was originally contemplated to bring out two publications which would be of outstanding value, a commentary on Bhagavat-geetha as annotated by Sri Ramanuja in his famous Bhashya, both in

Tamil and Telugu, and the other Vishnupurana with a commentary, both being under the authorship of Swamiji. But this could not be accomplished again on account of want of sufficient time. The text of Sri Vishnupurana is, however, under print which is rendered possible due to the generosity of Sri Musalappa Reddiar, B.A., B.L.

The life-sketch of our Swamiji contributed by Sri P. R. Varadachariar, one of the members of the Committee, is the main article in this book. With the permission of Pandit Sri A. M. Srinivasachariar Swami the Sanskrit verses composed by him depicting the Swami's life and called "Acharya Vybhava Dwisati," together with a Tamil synopsis, has been included. Two articles by Swamiji, which come at the end of the volume of great philosophic interest, will be appreciated.

The Committee offers its thanks to Pandit Sri P. R. Varadachariar and the energetic Secretaries and other office-bearers of the Committee and to Sri M. R. Appadorai, B.A., Printer and Publisher, for the help rendered in printing and publishing this souvenir.

Madras,
1—4—51.

(*Sd.*) W. S. KRISHNASWAMI,
(Hon'ble Justice W. S. Krishnaswami Naidu
President, Shastiabdapoorthi Committee.

ஸ்ரீ காஞ்சீபுரம்

உபயவேதாந்த மகாவித்வான் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

ஸ்வாமியின் திவ்ய வைபவ ஸங்க்ரஹம்.

(சென்னை. புரிசை. பரவஸ்து. வரததாஸன் தொகுத்தது.)

ஸ்வாமி தனியன்கள்

(ஸமாச்ரயணத் தனியன்.)

ஸ்ரீவத்ஸவம்சாம்புதி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீரங்கநாதார்ய தநூஜாத்நம்,
தத்பாதயுக்மாம்புஜ ப்ருங்கராஜம்
அண்ணங்கராசார்யமஹம் ப்ரபத்யே.

திருநக்ஷத்திரத் தனியன்

மீநமாஸி விசாகர்க்ஷே காஞ்ச்யாமவததார ய:,
அண்ணங்கரார்யம் தம் வந்தே ப்ரதிவாதிபயங்கரம்.

(க்ரந்தபரம்பரைத் தனியன்)

காஞ்சீ ஸௌம்யவரோபயந்த்ருயமிராட் காருண்யஸம்பாதித
ஸ்ரீமத் த்ராவிடவேதபாஷ்ய விசதஜ்ஞாநாம்ருதாஸ்வாதநம்,
வாத்ஸ்ய ஸ்ரீமதநந்த தேசிகக்ருபாஸப்ராப்த பாஷ்யாம்ருதம்
வந்தே வாதிபயங்கரார்யகுலஜம் ஹஸ்த்யத்ரிநாதம் குரும்.

(தரவு கொச்சகம்.)

அண்ணனது குலவிளக்காய் அவனியில்வந் துதித்தருளி,
எண்ணரிய எம்பிரானுர் எழிற்குணமே யெடுத்துரைப்போய்!
மண்ணுலகோ ருகந்தேத்தும் மாண்புடைய மதிக்கடலே!
தண்ணளிசேர் ஆரிய! நின் தாளிணையாம் கருதுவமே.

விண்ணவரும் மண்ணவரும் விளம்புமெந்த நாட்டினரும்
கண்மணியாய்க் கருதிவரும் கற்பகமாந் தமிழ்மறையில்
எண்ணதனை யுரைத்தவுடன் இதுவேபாட் டென்றியம்பும்
அண்ணனடி வாழ்த்துமவர் அருளாள னருள் பெறுவார்.

ஸ்ரீ ஸ்வாமியின் திருவவதார திவ்ய சரித்திரம்

ஸ்வாமியின் திருவம்ச விளக்கம்.

திருமகள் கொழுநனுன ஸர்வேச்வரன் தனது பரம க்ருபையால் இருள்தருமா ஞாலத்துள் பிறவியெடுத்துள்ள சேதனர்கள் கடைத்தேறும் பொருட்டு ஆழ்வார்களை யும் ஆசாரியர்களையும் அவ்வப்போது உவந்து தந்தருளினன். அவர்களுள் ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வாரும் விசிஷ்டாத்வைத தர்சநஸ்தாபகரான எம்பெருமானுரும் தனிச்சிறப்பெய்தியவராவர்.

ஆதிகாலத்தில் எம்பெருமானார் தாம் நிறுவிய வைணவக் கோட்பாடுகள் இந்நிலவுலகம் முழுதும் மேலும்மேலும் பெருகும் வண்ணம் திருவுள்ளமுகந்து நியமித்தருளின எழுபத்து நான்கு ஸிம்மாஸனாதிபதிகளுள் **முடும்பை நம்பி** யென்பார் ஞானம் அனுட்டானம் இவை நன்குகொண்டு இனிது வாழ்ந்திருந்தவர்; அவரது வழித் தோன்றலாகத் தேவப் பெருமாள் திருவருளுடன் தோன்றினார் பிள்ளை லோகாசார்யருடைய சிறிய தகப்பனாரின் திருப் பேரனாராகிய **ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் ஸ்வாமி.** காஞ்சீபுரத்துக்குள் ஒரு பகுதியான தூப்புலெனும்தலமே அவரது திருவவதாரத்தினால் புனிதமாயது. சிறு வயதிலேயே அமோக பாண்டித்யம் பெற்று ப்ரதிவாதி பயங்கரரென்ற விருதையும் பெற்றவரான அண்ணன்ஸ்வாமி, கவிதார்க்கிக ஸிம்ஹமாய் விளங்கிய ஸ்ரீவேதாந்த தேசிகருடைய திருக்குமாரராகிய நயினாராசாரியருடன் பழகி அவருடைய அருளினால் விசிஷ்டாத்வைத ஸாரத்தை க்ரஹித்திருந்து, பிறகு ஸத்ஸம்ப்ரதாய ஸாரப்பொருள்களை நன்கு உணரவேண்டி, உபயகாவிரியின் மத்தியில் பள்ளி கொண்டுள்ள திருவரங்கற்கு ஈடளித்த தனிப்பெருமை வாய்ந்த மணவாள மாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தார்.

"ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரதிவாதிபயங்கர:,
ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸஇதி விச்ருத:"

என்று தாமே அனுஸந்தானம் செய்துகொண்டபடி புறமதத்தவர்திரளில் ப்ரதிவாதி பயங்கரராயும் பாகவத கோஷ்டிகளில் ஸ்ரீவைஷ்ணவ தாஸராயும் விளங்கின (மூல புருஷராகிய) அப்பேராசிரியரது திருவம்சத்தில் அவதாரம் செய்து குலப் பெருமையை மிகவிளக்கிய மஹான்கள் பலர். நூறு ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியாவில் பல நாடுகளில் திக்விஜயம் செய்து வைணவமதத்தைப் பரவச்செய்த புஷ்கரம் (ஆத்ய) அனந்தாசார்ய ஸ்வாமிபோல்வார்பலர் இம்மரபில் உதித்த மாஞானிகள். அவ்வனந்தாசாரியர் ஸ்வாமியின் திருப்பேரனாருடைய திருக்குமாரரே ஜகத்குரு வென்று புகழ்பெற்ற காதி அனந்தாசாரியர் ஸ்வாமி. அவரது அபார பாண்டித்யமும் அபரிமிதமான தேஜஸ்ஸும் வடநாட்டில் லக்ஷக்கணக்கான சிஷ்யர்களை அவர் திருவடிகளில் ஈடுபடச் செய்தன. கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாங்கூர், திருவிந்தளூர் முதலான திவ்ய தேசங்களில் தீர்த்தம் மாலை மரியாதைச் சிறப்புகள் அந்நாள் தொடங்கி இந்நாள் வரையிலும் இத்திருவம்சத்தவர்களுக்கு உள்ளது. அன்றியும், மணவாள மாமுனிகள் நியமித்தருளின அஷ்டதிக்கஜாசாரியர்களுள் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநாதிபதியாக நியமனம் பெற்ற பெருமையும் இத்திருவம்சத்தலைவர்க்கு உள்ளது.

அன்னவரது மரபில் தோன்றிய ஸ்ரீமத் அண்ணரங்காசாரியர் ஸ்வாமி யென்பார் காஞ்சிபுரியில் தென்னண்டை மாடவீதியில் வாழ்ந்துவந்தார். அவர் சிறந்த கல்விக்கடலாகவும் வேதாந்த வித்யா நிதியாகவும் விளங்கியவர். அவரிடத்துக் கல்வி பயின்று தேறிய பண்டிதர்களில் இற்றைக்கும் சிலருளர். அவருடைய தேவியாரின் திருநாமம் அலர்மேல் மங்கையம்மங்கார்.

ஸ்ரீஸ்வாமியின் ஜனனம்.

அத்தம்பதிகளின் நல்த்வப்பயனாக இம்மண்ணுலகத்தவரின் பாக்கியமே வடிவெடுத்தவராய் நம்மனைவர்க்கும் கண்கண்ட தெய்வமாய் விளங்கிவருமவரான ஸ்ரீமான்

அண்ணங்கராசாரிய ஸ்வாமி, கலி ௵4992-ஆம் விக்ருதி ௵ பங்குனி ௴ விசாகத்திரு நன்னாளில் ஸிம்ஹலக்னத்தில் திருவவதாரம் செய்தருளினர். ஆழ்வார்களு மாசாரியர்களு மொன்றுசேர்ந்து திருவவதரித்த படியோ வென்று இக்காலத்தவர்கள் விதர்க்கிக்கும்படியான பெருமையை அப்போதே திருமுகவொளியினால் கண்டறிந்த தாய்தந்தையர், தம் குலகூடஸ்தரான அண்ணனே அவதரித்தனரென்று அறுதியிட்டு அவருடைய திருநாமத்தையே சாத்திச் சீரும் சிறப்பும் பொலிய வளர்த்து வந்தனர். நம் ஸ்வாமி, உடன் பிறந்த தங்கை தமக்கைமார்களையுடையவரா யிருந்தாலும் வேறுஸஹோதரரின்றிக்கே அத்விதீய புத்திரராயிருந்தபடியால் "செல்வத்தினால் வளர்பிள்ளாய்!" என்னும்படியாக வளர்க்கப்பட்டு வந்தார். ஸ்வாமி இளம்ப்ராயத்திலணிந்திருந்த தங்கவளை, ஸுவர்ணமேகலை முதலான அணிகலன்களைப்பற்றி இன்றும் சிறப்பாகவும் களிப்பாகவுமுரைப்பார் பலருளர்.

ஸ்வாமியின் குடும்பயோக க்ஷேமங்கள்.

ஏறக்குறைய முந்நூறாண்டுகட்குமுன் அரசாட்சி புரிந்துவந்த நபாபு, வித்வான்களுக்கு நன்கொடையாகக் கிராமபூமிகளை வழங்கும் முறையில் நம் ஸ்வாமியின் முன்னோர்க்கு, வட ஆற்காடு ஜில்லாவில் திருவடிராயபுரமென்னும் கிராமத்தைப் பரிசளித்தனர். இப்படி யளிக்கும் கிராமத்திற்கு சுரோத்திரியக்கிராம மென்று ப்ரஸித்தமாக வழங்கும் பெயர். வேதசாஸ்திரங்களையோதி ஆசார சீலர்களாயிருக்குமவர்கள் வடமொழியில் ச்ரோத்ரியரென்று வழங்கப்பெறுவ ரன்றோ. அன்னவர்களுக்கு அளிக்கும் கிராமமாதலால் ச்ரோத்ரியக்ராமமென்றே வழங்கப்பெற்றது. பரம்பரையாக அந்தக்ராமம் நம் ஸ்வாமியின் ஆளுகைக்கும் வந்தபடியால், ஸ்வாமி ச்ரோத்ரியம்தார் (அதாவது) ஜாகீர்தார், ஜமீன்தார் என்ன நின்றவர். ஸ்வாமியின் திருத்தகப்பனார் பரமஸாதுவாய் காஞ்சியில் வித்யாப்ரவசனத்திலேயே நிரதராயிருந்தபடியாலே அவருடைய காலத்தில் அந்தக்ராமம் விசேஷபலனை யளிக்கவில்லை யென்றும், பிறகு ஸ்வாமியின் மாதுலரான ஷஷ்டி. திருவேங்கடாசாரியரென்பவர் 30 வருஷகாலம் ஸ்வாமிக்குப் பிரதிநிதியாயிருந்து பலபடியும் பரிச்ரமப்பட்டு அந்தக்ராமத்தை விசேஷமாகப் பயன் பெறுத்தின ரென்றும் பலரும் சொல்லக்கேள்வி.

ஸ்வாமியின் கல்விப்பயிற்சி

நம் ஸ்வாமி பெற்றிருக்கின்ற அபாரயோக்யதைகளைப் பார்த்தால் இவர் இப்பிறவியில் சிலரிடத்துக் கல்விபயின்று இந்த யோக்யதைகளைப் பெற்றாரென்று சொல்வதற்கில்லை, நெஞ்சாலு மெண்ணுவதற்கில்லை. ஆனாலும் ஸ்ரீராமக்ருஷ்ணாதிகளும் குருகுலவாஸம் செய்து கல்வி பயின்றதாக நாம் கேள்விப்படுகிற முறையில் ஸ்வாமியின் வித்யாப்யாஸ வைகரிகளையும் கேள்விப்படுகிறோம். ஸ்வாமி உபன்யாஸ காலங்களில் சிலஸமயங்களில் தமது வித்யாகுருக்களை யெடுத்துரைத்து அவர்களின் பெருமைகளைப் புகழ்ந்து நன்றி பாராட்டிக் குலாவக் கேட்டிருந்ததுண்டு. அந்த ப்ரசம்ஸைகள் ஸ்வாமியியற்றிய நூல்களிலுமுண்டு.

ஸ்வாமிக்குத் திருத்தகப்பனார் சிறந்த வித்வானாகவும் "பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வார்" ஆகவும் விளங்கினவராதலால் அவரிடத்திலே பெரும்பாலும் காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களை நம்

ஸ்வாமி பயின்றார். அக்காலத்தில் ஸ்ரீமத். காதி. அனந்தாசாரியர் ஸ்வாமி தமது குலகூடஸ்தருடைய ஸன்னிதியில் வேதாந்த வைஜயந்தீ என்கிற பாடசாலையை ஸ்தாபித்திருந்தார். நம் ஸ்வாமியின் திருத்தகப்பனார் அப்பாடசாலையிலேயே தலைமைப் பண்டிதராக எழுந்தருளியிருந்தவர். மத்வஸம்ப்ரதாயஸ்தராய் மஹாபண்டிதரான வித்யாசார் என்பவரும் அப்போது அப்பாடசாலையில் உபாத்யாயராக இருந்தார். அவரிடத்திலும் நம்ஸ்வாமி வித்யாப்யாஸம் பெற்றனர். தேவப்பெருமாள் ஸன்னிதி வஸந்தோத்ஸவ மண்டபத்தில் சடகோபநிலய மென்னும் பாடசாலையும் அப்போது சிறப்பாக நடந்து வந்தது. நம் ஸ்வாமி அப்பாடசாலையிலும் அந்வயித்துக் கல்வி பயின்றார்.

பத்து பன்னிரண்டு பிராயத்திற்குள்ளேயே திருத்தகப்பனாரிடத்திலேயே நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களைப் பூர்த்தியாக அதிகரித்து வேதத்திலும் உபயுக்த பாகங்களையோதி மஹா மேதாவியாய் விளங்கினார். புத்திரரின் பெருமைகளைப் பூர்த்தியா யநுபவிக்கும் பாக்கியத்தைப் பெறாதவரான திருத்தகப்பனார், ஸ்வாமியின் பதினான் காவது பிராயம் நிரம்பும்போதே திரு நாட்டுக்கெழுந்தருள நேர்ந்துவிட்டது! காலத்தின் கோலம்! விதியின் விளையாட்டு. அதன்பின் நம் ஸ்வாமி ஸ்ரீமத் காதி$ அனந்தாசார்ய ஸ்வாமியிடத்தில் குருகுல வாஸஞ்செய்து வாழ்ந்து, தர்க்க வ்யாகரணாதி சாஸ்திரங்களை யதிகரித்து அப்போதே மஹாவித்வானென்று புகழ்பெற்றார். காதி அனந்தாசாரியர் ஸ்வாமி சிஷ்ய யாத்திரையாக வடநாட்டுக்கெழுந்தருள நேருங்காலங்களில், அவருடைய திருமாளிகையின் பக்கத்திலே யெழுந்தருளி யிருந்தவரும், இப்போது ஸ்ரீரங்கராஜ வீதியிலெழுந்தருளி யிருப்பவருமான ஸ்ரீ உ. வே. வித்வான் இளங்காடு ரங்காசாரியர் ஸ்வாமியிடத்தில் ந்யாயக்ரந்தங்கள் சில அதிகரித்தார். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதி ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களைப் பூர்த்தியாக ஸ்ரீகாதி அனந்தாசாரிய ஸ்வாமி ஸன்னிதியிலேயே கிரஹித்து அப்போதே ப்ரவசனமும் செய்ய ஆரம்பித்தார்.

அக்காலத்தில் ஸ்ரீகாஞ்சி $அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் மடாதிபதியாய் ஷஷ்டி ஜீயர்ஸ்வாமி யென்று வழங்கப்பெற்றிருந்த உத்தமாச்ரமிஸ்வாமி நம் ஆசிரியர்க்கு ஸாக்ஷாத்மாதாமஹராய், தமிழ்க்கலையில் ஒத்தாரும் மிக்காருமற்ற மஹா விசக்ஷணராய் தர்சன நிர்வாஹ துரந்தரராய் எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமிதாம் நம் ஆசிரியரை ஞானபுத்திரராக அபிமானித்து நாலாயிர திவ்யப்ரபந்த வியாக்கியானங்களையும் திருமந்த்ரார்த்த ஸ்ரீவசனபூஷணாதிரஹஸ்ய வியாக்கியானங்களையும் நன்கு உபதேசித்தருளினதுமல்லாமல் தம்மிடமிருந்த இலக்கணவிலக்கியச் செல்வங்களையும் அப்படியே நம் ஆசிரியர்க்கு அளித்துவிட்டார். வடமொழி தென்மொழிகளிரண்டையும் ஸமமாகப் பயின்றவர்கள் நமது பூர்வாசாரியர்களில் இருந்தார்களே யல்லது பிற்பட்டவர்களில் இருந்ததாக நம்முடைய புத்திக்கு எட்டவில்லை. தமிழ்க்கலைகளில் அதிகமான ஞானமுள்ளவர்களுக்கு ஸம்ஸ்க்ருத கலைகளில் பரிமிதமான ஞானமே இருக்கும். ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் விசேஷ பரிசயம் பெற்றவர்களுக்குத் தமிழில் ப்ரவேசமிருப்பதே அரிதாகும். இருந்தாலும் இலக்கண விலக்கியங்களில் ஆழ்ந்த அறிவு பெற்றிருப்பது அஸம்பாவிதமென்றே சொல்லலாம். அப்படியல்லாமல் நம் ஸ்வாமிக்கு

$இந்த ஸ்வாமிகளின் திருவுருவப் படத்தை இதன் அநுபந்தத்தில் ஸேவிக்கலாம்.

உபயபாஷாபாண்டித்யமும் ஏற்றத் தாழ்வின்றி ஒரு நிகராக விளங்கியிருப்பதை உலகம் முழுதுமுணரும், அஸூயையினால் எவர் எது சொல்லிலும் இவ்விஷயத்தில் குறைகூற ஒருவருடைய நாவும் எழாது. "அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்" என்ற திருப்பாவைப் பாசுரத்தில் ஏகாரங்களுக்கு உண்மைப் பொருளை உரைத்தருளின பூருவாசாரியர்களின் வியாக்கியானமே நமக்கு நினைவுக்கு வரும். நம் ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத பாண்டித்யத்தைப் பார்க்கும்போது ஸம்ஸ்க்ருத கலையொன்றுதானோ இவர்கற்றது என்று தோன்றும். தமிழ்ப் புலமையைப் பார்க்கும்போது தமிழ்ப்பயிற்சி யொன்றிலேயே இவர் தம் காலத்தைக் கழித்திருப்பரோ என்று தோன்றும். மற்ற தெலுங்கு ஹிந்தீ பாண்டித்யங்களைப் பற்றிப் பிறகு தெரிவிப்போம். இருபது பிராயத்திற்குள்ளேயே நம் ஸ்வாமி உபய பாஷையிலும் மஹா வித்வானாகி இரண்டிலும் விசேஷமாக க்ரந்தங்களையும் ரசனை செய்யத் தொடங்கிவிட்டார். கவிதையிலும் நிகரற்ற சதிர்பெற்றார். பதினெட்டாவது வயதிலேயே **திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை** யென்னும் தமிழ்வேத வுரையை யெழுதிப் பிரசுரிக்கத் தொடங்கினவர் நம் ஸ்வாமி. மணவாள மாமுனிகள் ஆண்டாளைப்பற்றி "ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்குந்தன்மையளாய்ப் பிஞ்சாய்ப் பழுத்தாளை" என்றருளிச்செய்ததை நம் ஸ்வாமி விஷயத்தில் பலரும் அதிசயமாகப் பேசிக்கொள்வதுண்டு.

உலகம் போற்றும் பெருமை வாய்ந்த கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீமத் வை. மு சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி சில மாதங்கள் காஞ்சீபுரியில் வாழ நேர்ந்தபோது அவரிடத்தில் நம் ஸ்வாமி யாப்பிலக்கணம் முதலியனவும் பயின்றுதேர்ச்சி பெற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத்து வெளியீடாகிய செந்தமிழ்ப் பத்திரிகையில் ஸ்வாமியின் திவ்யார்த்த தீபிகையுரையின் பெருமையை வெளியிட்ட காலத்து அப்பத்திரிகையின் ஆசிரியர் நம் ஸ்வாமிக்குச் **செந்தமிழ்ச் செல்வரென்னும்** விருதைப் பெறுவித்திருக்கின்றாரென்பதை உலகமுணரும்.

ஸ்வாமியின் வேதாத்யயன வைபவமும் வித்யாலய ஸ்தாபனமும்.

நம் ஆசிரியர் இருபத்திரண்டு வயதுக்குமேல் வடமொழி வேதக்கடலையும் கரைகாண வேணுமென்று ஆசைகொண்டு, அப்போது ஸ்ரீ ரங்கத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருமலை விஞ்சிமூர் மாம்பள்ளம் $ஸுதர்சநாசாரிய ஸ்வாமியைக் காஞ்சீபுரிக்கு எழுந்தருளப்பண்ணி அவருடைய தேஹயாத்திரைப் பொறுப்புகளை யெல்லாம் நம் ஸ்வாமியே ஏற்றுக்கொண்டு, வேதம் வல்லார்களில் ஒப்புயர்வற்றவரான அந்த ஸ்வாமியின் திருவடிகளிலே சிஷ்யவ்ருத்தி செய்து தம்மோடொக்க மற்றும் பலரையும் ஸஹாத்யாயிகளாகக் கூட்டிக்கொண்டு தமது சாகையான யஜுர் வேதத்தை க்ரமாந்தமாக ஐந்தாறு வருஷங்களில் ஓதி முடித்து, 'தென்மொழி வேதத்திற் காட்டிலும் வடமொழி வேதத்திலே தான் ஸ்வாமி நிகரற்ற நிபுணர்' என்று உலகம் போற்றும் படியாகவும், இளமையிலோதின கனபாடிகளும் நடுங்கும் படியாகவும் அந்த ப்ரஹ்ம வித்யையில் அபார யோக்யதை பெற்றார். வெறும் மூலத்தை அதிகரித்ததோடும் நில்லாமல் வேத பாஷ்யங்களிலேயும் வெகு பரிச்ரமப்பட்டு, ப்ராதிசாக்கியம் முதலான லக்ஷண க்ரந்தங்களிலும் பரிசீலனை செலுத்தி, தாமும் **வேதாத்யயன ஸர்வஸ்வம்**

$ இந்த ஸ்வாமியின் திருவுருவப் படத்தையும் இதன் அநுபந்தத்தில் ஸேவிக்கலாம்.

முதலான பல வேத லக்ஷண நூல்களை வடமொழியிலும் மணிப்ரவாள நடையிலும் இயற்றி வெளியிட்டு அது விஷயமான வாதவிவாத கோஷ்டிகளிலும் பண்டிதோத்தமர்களின் முன்னிலையில் ப்ரதிபக்ஷிகளின் செருக்கையடக்கி வெற்றிபெற்று 'ப்ரதிவாதி பயங்கர விருது இவர்க்கே ஏற்கு'மென்று வைதிக வுலகம் முழுவதும் போற்ற நின்ற பெருமை தனிப்பட ஒரு பாரதமாகும். அப்போது, நம் ஸ்வாமி காட்டியருளின லக்ஷண வழிதான் பொருத்தமான தென்று, திருப்பதி மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி, மைஸூர் மஹா ராஜ ஸம்ஸ்தான வித்வான் பண்டிதரத்னம் ஸ்ரீமத். லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சேரங்குளம் கனபாடிகள் முதலான பல ப்ரபல பண்டிதர்கள் எழுதி வெளியிட்ட அபிநந்தந பத்திரிகைகள் பல பல.

நம் ஸ்வாமியின் மற்ற கீர்த்திகளெல்லாம் ஒரு புறமிருக்க இப்படி வேதாத்யயன ஸம்பத்தின் மிகுதியினால் விளைந்த கீர்த்தியே அபரிமிதமானது. வேதாத்யயனம் செய்தருளாதிருந்தால் பல்வேறு யோக்யதைகளிருந்தும் அவை விசேஷமாகப் பயன் பட்டிராது. ஸ்வாமியின் எந்த வுபன்யாஸங்களிலும் வேதவாக்குகளின் பரிமளம் நிகரற்றதாயிருக்கும். "பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழை" நம் ஸ்வாமி வருஷந்தோறும் 'அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதமே' யென்னும் படியாக விவரித்தருளும் போதும், மற்றும் வேத ப்ராதுர்ப்பாவ விசேஷங்களான ஸ்ரீ ராமாயண பகவத் கீதாதிகளை உபன்யஸித்தருளும் போதும் வேதத்வனிகளும் உபநிஷத்கோஷங்களும் செவிக்கின்பமாக வெளிவரும் வைபவம் அவரவர்கள் அநுபவிக்குமதாதலால் இதைப் பற்றி இங்குநாம் பன்னியுரைக்க வேண்டாமென்று நிற்கின்றோம்.

ஸ்வாமி தாம் வேதமோதுவதற்காக ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார். தம் ஆசார்யரான ஸ்ரீகாதி அனந்தாசார்ய ஸ்வாமி ஸ்தாபித்திருந்த பாடசாலையின் பெயர் **வேதாந்த வைஜயந்தீ** என்பது. அதையே வேதவேதாந்த வைஜயந்தீ என்னும் பெயரால் புதுப்பித்தனர் நம்ஸ்வாமி. இப்பாடசாலை, முதலில் கீழ்கோபுர வாசலிலுள்ள ஸ்ரீஅழகிய மணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி மடத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்தது (ஆரம்பித்த வருஷம் 1913.) பிறகு பாடசாலைக் கென்றே தனியான நிகேதனம் சாச்வதமாக இருக்கவேண்டு மென்று திருவுள்ளம் பற்றிய நம் ஸ்வாமி தேவப்பெருமாளுடைய கிழண்டைப்ராகாரவீதியில் ஒரு க்ருஹத்தை விலைக்குவாங்கி அதை முப்பதினாயிரம் ரூபாய் செலவில் மூன்றடுக்காகக் கட்டுவித்து நாளைக்கும் அந்த மஹாபவனத்திலேயே இப்பாடசாலையை நடப்பித்து வருகிறார். முன்புஸாபிக்ஷமாக இருந்தபோது பலவருஷகாலம் வெளியூர் வித்யார்த்திகள் பலரையும் சேர்த்து நித்ய ததீயாராதனை நடத்திப் பாடசாலையை நடத்தி வந்தார். அப்போது இந்தப் பாடசாலையின் பக்கத்திலேயே மற்றொரு க்ருஹமும் விலைக்குவாங்கி அதனையும் முப்பதினாயிரம் ரூபாய் செலவில். ஹாஸ்டெலாகக் கட்டுவித்து அதில் வித்யார்த்திபோஜனமே யல்லாமல் தேசாந்தரி ஸ்வாமிகளின் ததீயாராதனையும் சிறப்பாக நடத்திவந்தார். அது இப்போது காலநிலைக்கேற்றவாறு ததீயாராதனைகளுக்கு ஸௌகர்யமற்று தேசாந்தரிகள் சுகமாகத் தங்கும் ராமாநுஜ கூடமாய் விளங்கி வருகின்றது. விவாஹோபநயநாதிகளும் பலர் செய்ய ஸௌகரிய மளிக்கப்படுகிறதிங்கு.

ஸ்வாமியின் கைங்கர்ய ஸாம்ராஜ்யம்

ஸ்வாமி பலருடன் கூடி வேதாத்யயனம் செய்ததின் பலன் இரண்டுவகையாகப் பரிமளித்து வருகின்றது. காஞ்சீபுரியில் திவ்யதேசங்கள் பலவுளவாதலால் அவற்றில் பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகள் நடைபெறும் ஸமயங்களில் பாடசாலை யுபாத்யாயர்களும் வித்யார்த்திகளும் நியதமாகச் சென்று வேத பாராயண கைங்கர்யம் நடத்தி வரவேண்டுமென்று நிபந்தனையாகி, முப்பத்தைந்து வருஷகாலமாக இவ்வரிய பெரிய கைங்கரியம் குறையற நடந்து வருகின்றது. விசேஷித்து திருவெஃகா வென்னும் ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதியில் ஒரு சிறு புறப்பாடும் வேதபாராயணமின்றி நடைபெருதபடி ஏற்பாடுஉள்ளது; இது ஒருவகையான கைங்கர்ய பரிமளம்.

மற்றொருவகை யாதெனில்; சென்ற 1919-ஆம் வருஷம் (நவம்பர் மாதம்) கார்த்திகை மீ சித்திரை நக்ஷத்திரம் முதலாகப் பாடசாலையின் சார்பாக நித்ய பாராயண வீதீ ப்ரதக்ஷிண கைங்கரிய மொன்று ஏற்பாடு செய்யப்பட்டு 31 வருஷகாலமாக நடைபெற்று வருகின்றது. அதாவது நாள்தோறும் பின்மாலையில் 4 மணி முதல் 5 மணி வரையில் யாவரும் சேர்ந்து வேதபாராயண கோஷ்டியாய்த் திருவீதி வலம் வருவது. அஷ்டமீ சதுர்தசி, பர்வம் பிரதமை போன்ற அநத்யயன நாட்கள் தவிர மற்ற அத்யயன தினங்களி லெல்லாம் நியதமாக பகவத் ஸந்நிதிகளில் புறப்பாடுகாலங்களில் நடைபெறுகிற விதமாய் க்ரமபாராயணம் செய்வது; அநத்யயன தினங்களில் பூர்வாசாரியர்களருளிச்செய்த ஸகல ஸ்தோத்ரங்களும் அந்தந்த நக்ஷத்திரங்களுக்குத் தக்கபடி பாராயணம் செய்வது. ஏறக்குறைய இருபது திருநாமங்களுடன் கூடி இக்கைங்கர்யத்தை அவிச்சிந்நமாக நம் ஸ்வாமி அநுபவித்துவருகிறார். வேதமும் ஸகலஸ்தோத்ரங்களும் முகஸ்தமாகத் தேறியுள்ள அதிகாரிகள் இப்பாடசாலையில் இருபதின்மருள்ளார்கள். இக்கைங்கரியத்திற்கு விடுமுறை நாளென்பது கிடையாது. ஏதாவது காரண விசேஷத்தினால் பின்மாலை இது நடத்தமுடியாத நாட்களில் மாலைப்பொழுதில் நடைபெறும். ஆக இவ்விருவகைக் கைங்கரியங்கள் இப்பாடசாலை யெனும் கற்பகத்தருவின் புஷ்பங்களாகவும் பழங்களாகவும் கருதப்பட்டு நித்ய ஸ்ரீர்நித்யமங்களமென்று மங்களாசாஸனம் செய்யத்தக்கவையாயுள்ளன.

புஸ்தகாலய ப்ரதிஷ்டாபநம்.

ஸ்வாமியின் விடாமுயற்சியினால் வடமொழி தென்மொழிகளிலுள்ள முக்கியமான நூல்கள் பலவும் சேகரிக்கப்பெற்ற லைப்ரெரியொன்று இப்பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டது. காவ்யநாடகாலங்காராதி ஸாஹித்யக்ரந்தங்களும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும் ஸாமாந்ய சாஸ்த்ரங்களும் தர்மசாஸ்த்ர நிபந்தநங்களும் வேதபாஷ்யங்களுமான ஆயிரக்கணக்கான புத்தகங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் சேகரிக்கப்பட்டுள்ளன. தமிழில் இலக்கண இலக்கிய நூல்கள் பலவும் ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் யாவுமுள்ளன. ஸ்வாமியின் திருப்பணியாக நம்பிள்ளை ஸன்னிதி ஏற்பட்டபின்பு இந்த புஸ்தகாலயம் அந்தஸன்னிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்வாமியின் க்ரந்த நிர்மாண ப்ரகாசனங்கள்.

நம் ஆசிரியர் உலகுக்கெல்லாம் பரமோபகாரமாகச் செய்திருக்கின்ற—செய்து வருகின்ற ஒருதொண்டைப்பற்றி உலகமெல்லாம் நன்கு உணர்ந்திருப்பதனால் இங்கு

நாம் அதை விவரிக்கவேண்டிய அவச்யமேயில்லை. ஆயினும் இச்சிறு நூலை நாமெழுதுவது ஸ்வாநுபவரூபமாகவும் ஆத்மாநந்தத்திற்காகவுமே யாதலால் இதைப்பற்றியும் சிறிது எழுதிக் களிப்போம். வடமொழி தென்மொழிகளில் மாத்திரமன்றிக்கே தெலுங்குபாஷையிலும் ஹிந்தீபாஷையிலும் அனேகக்ரந்தங்களை ஸ்வாமி இயற்றியுள்ளார். ஆக ஸ்வாமியின் க்ரந்தங்களை நான்கு பாஷைகளிலும் நாற்றிசையும் அநுபவிக்கின்றது. இச்சிறு நூலின் அநுபந்தமாக வெளியிடப்படும் புத்தகவிளம்பரங்களினால் அது விசதமாகும்.

இப்படிதாம் ஸொந்தமாக நூல்களியற்றுவது தவிர, ஸ்ரீபாஷ்யகாரர் முதலான நம் பூருவாசாரியர்கள் பலரும் அருளிச் செய்த ஸகலக்ரந்தங்களையும் தேவநாகர லிபியிலும் தெலுங்கு லிபியிலும் மணிப்ரவாள லிபியிலும் ஸுபரிஷ்க்ருதமாய் ஸ்வாமி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அந்த க்ரந்தங்களே ஆங்காங்கு பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவர்க்கும் உபயோகப்பட்டு வருகின்றன. எம்பெருமானாரருளிச் செய்த க்ரந்தங்களை பகவத் ராமாநுஜ க்ரந்தமாலையென்று பதிப்பித்தார். வேதாந்த தேசிக க்ரந்தங்களையெல்லாம் ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலையென்று ப்ரசுரித்தார். மணவாள மாமுனிகளின் வியாக்யான ஸ்ரீ ஸூக்திகளை ஸ்ரீமத் வரவர முநீந்த்ரக்ரந்தமாலையென்று வெளியிட்டார். நம்பிள்ளை யீடுமுப்பத்தாறாயிரப்படியைத் தெலுங்கு லிபியிலும் தமிழ்லிபியிலும் பரமோபயோகமாகப் பதிப்பித்தார். இங்ஙனே செய்திருக்கின்றனவும் செய்து வருகின்றனவுமான முத்ரணங்கள் அதிமாநுஷங்களென்னத் தக்கவை. இவற்றால் நம் ஸ்வாமியின் ஞானப்பெருமை நாற்றிசையும் விளங்கியுள்ளது.

மாதாந்தப் பத்ரிகைகளின் வெளியீடு.

நம் ஆசிரியரின் ஆசார்யரான ஸ்ரீகாதி ஸ்வாமி மஞ்ஜுபாஷிணீயென்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகையொன்று பிரசுரிக்கத் தொடங்கி அதனுடைய நிர்வாஹ பாரத்தை நம் ஸ்வாமியிடத்தில் ஒப்புவிக்க, பதினைந்து வருஷகாலம் அப்பத்திரிகையை வாரந்தோறும் நம் ஸ்வாமியே ஸம்பாதநம் செய்து வந்தார். **ப்ரஹ்மவித்யா** என்றொரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையும் ஆரம்பித்துப் பலகாலம் நடத்திவந்தார். ஸ்ரீகாதி ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளினபின் அவ்விரண்டு பத்ரிகைகளும் நிறுத்தவேண்டியதாக நேரவே, பிறகு ஸ்வாமிகள் நான்கு பாஷைகளிலும் மாதப்பத்திரிகைகள் நான்கு நடத்தத்தொடங்கினார். அம்ருத லஹரீயென்பது தமிழ்ப்பத்திரிகை. ஸ்ரீ ராமாநுஜ பத்ரிகை என்பது தெலுங்கு பத்திரிகை. ஸ்ரீ வைஷ்ணவ ஸுதா என்பது ஹிந்தீ பத்திரிகை. வைதிக மநோஹரா என்பது ஸம்ஸ்க்ருத பத்ரிகை. இவை நாற்றிசையும் நன்கு பரவியுள்ள பத்ரிகைகளாதலால் இங்கு அதிகமாக நாம் என்ன எழுதவேண்டும்? அம்ருதலஹரீ என்கிற தமிழ்ப்பத்ரிகை இரண்டரை வருஷமாக ஸ்ரீ ராமாநுஜன் என்னும் பெயரால் நடந்து வருகின்றது. ஸ்ரீ வைஷ்ணவஸுதா என்னும் ஹிந்தி பத்ரிகை அச்சுக்கூட அஸௌகர்யத்தினால் சிலமாத காலமாய் நின்றிருக்கின்றது.

ஸ்ரீ ஸ்வாமியும் ஸத்க்ரந்த ப்ரகாசநஸபையும்.

நம் ஸ்வாமியின் போது போக்கை நேரில் காண்பவர்களுக்குத் திருமழிசையாழ்வாருடைய வொருபாசுரம் நினைவுக்கு வந்தேதீரும்; அதாவது, 'தெரித்தெழுதி

வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது'' என்பதாம். இப்பாசுரத்தின் படியேதான் நம் ஸ்வாமியின் தின சர்யாக்ரமம் நடந்து வருகிறதென்பதை அறியாதாரில்லை. இவ்விதமாகப் போது போக்கிவரும் முறையில் வியாக்கியானங்களெழுதுவது, வியாஸங்களெழுதுவது, பூர்வாசார்ய திவ்ய க்ரந்தங்களைப் பரிஷ்கரித்துப் பதிப்பிப்பது என்னுமிக்காரியங்கள் பிரதானமாக ஸ்வாமியால் நிர்வஹிக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் சிரமமில்லாமல் நீண்ட காலம் நன்கு நடந்து வருவதற்காக மூன்று வருஷங்களுக்கு முன் மதராஸில் 'ஸத்க்ரந்த ப்ரகாசநஸபா' என்னும் பெயரால் ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலமாக அனேக க்ரந்த ப்ரகாசனங்கள் இதுகாறும் நடந்திருக்கின்றன; இனிமேலும் குறைவின்றி நடந்துவரும். தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும் இந்த ஸபையின் மூலமாக வெளிவந்துள்ள புத்தகங்களின் விவரணம் அநுபந்தத்தில் வெளிவரும். ஸ்வாமியால் வெளியிடப்பட்டுவரும் தமிழ் தெலுங்கு மாதப்பத்திரிகைகளும் இந்த ஸபையின் ஆதரவிலேயே நடந்து வருகின்றன. இந்த ஸபைக்குத் தலைவர் நம் ஸ்வாமியேயாவர். வைஸ் பிரெஸிடெண்டுகள், ஸெகிரிடெரிகள், டிரஷரர், நிர்வாஹமெம்பர்கள் ஆகிய இந்த ஸ்தானங்களில் பல பெரிய மனிதர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமியும் சென்னை மாநகரும்.

நம் ஸ்வாமியின் நற்புகழை நன்கறிந்த சென்னை மாநகர் வாஸிகளான பக்தர்கள் ஸ்வாமியை மதராஸிலேயே இருத்தி உபந்யாஸங்கள் கேட்கப் பெறவேணுமென்று முப்பது வருஷங்களுக்கு முன்னமே பிடித்து மனோரதித்து ஸ்வாமியை அடிக்கடி பிரார்த்தித்து வந்தார்கள். தேவப் பெருமாளுடைய திவ்யாநுபவங்களை ஒரு நொடிப் பொழுதும் விட்டிருக்க மாட்டாத நம் ஸ்வாமி நெடுநாள் வரை அதற்கு இசையாமலேயிருந்தார். கடைசியாக சென்னை வாஸிகளான பக்த பாகவதர்களின் பாக்ய பரிபாகத்தினால் 1931-ஆம் வருஷத்தில் ஸ்வாமி சென்னைக்கெழுந்தருளி உபன்யாஸங்கள் செய்யத் திருவுள்ள மிசைந்து நின்றார், அப்போதும், சிலருடைய நிர்ப்பந்தத்திற்காகச் சில வாரங்கள் மாத்திரமே சில உபன்யாஸங்கள் செய்து நிறுத்திக்கொள்வதாகச் சொல்லி சென்னையில் திருவடிகளைவைத்தார். அந்த ஸமய விசேஷம் எம்பெருமானருளால் ஸ்திர லக்னமாக அமைந்தது போலும்.

அங்குத் தங்கசாலை வீதியில் தொண்டை மண்டலம் கலாசாலையில் பலவருஷங்களுக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்டிருந்த பகவத்கதாப்ரஸங்கஸபை யென்னும் ஓர் மஹாஸபையானது நம் ஸ்வாமிக்கு நல்வரவளித்தது, ஸ்வாமியின் பெருமைக்குத் தக்கபடி ஆயிரக்கணக்கான பக்தர்கள் இருந்து அநுபவிக்கப் பாங்காக மிகவிசாலமான அந்த ஹாலில் சனி ஞாயிறு தோறும் ஸ்வாமியின் உபன்யாஸங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு அன்று முதலின்றறுதியாய் மேன்மேலும் உயர்த்தியாகவே நடைபெற்று வரும் விஷயம் நாடறிந்தது. அவ்வுபன்யாஸ கோஷ்டியின் பெருமையைப் பற்றியும் உபன்யாஸத்தின் அதிசயங்களைப் பற்றியும் வேதாந்த தீபிகையென்னும் அஹோபில மடத்துப் பத்ரிகையில் 1934-ஆம் ஆண்டில் ஒரு அட்வொகேட் ஸ்வாமியால் எழுதப்பட்டு, கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீவாஸுதேவாசார்ய ஸ்வாமியால் வெளியிடப்பட்ட வியாஸமொன்றை இவ்விடத்தில் எடுத்துக் காட்டி நிற்கின்றோம். அந்த வியாஸம் வருமாறு :—

(1934 ஹு மே மீ வெளிவந்த வேதாந்த தீபிகை)

" ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

பிரதிவாதி பயங்கரம் அண்ணனுடைய ஸந்ததியில் தோன்றினவரும், அந்தத் திருவம்சத்திற்கு ஏற்ற ஞான அனுட்டானங்கள் நிரம்பப்பெற்றவரும், காஞ்சீ நகரத்தில் எழுந்தருளி யிருப்பவரும், நாடெங்கும் பரவிய நற்புகழ் பெற்றவருமான ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களும், அவருடைய கல்வித்திறத்திலும் உபந்யாஸ சைலியிலும் க்ரந்தலேகந வைகரியிலும் ஈடுபடாதவர்களும் பெரும்பாலும் இருக்கமாட்டார்களென் றெண்ணுகிறேன். ஷை ஸ்வாமி ஸம்ஸ்கிருத பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் இயற்றி வெளியிட்டிருக்கின்றவும் நாளைக்கும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றவுமான பற்பல அரும்பெரும் நூல்களினால் இவருடைய உபய பாஷா ப்ராவீண்யம் ஒப்பற்றதென்பது உலகமறிந்ததாகும். ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளிலும் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிலும் அநேக பாகங்களுக்கு இந்த ஸ்வாமியின் அருமையான வியாக்கியானங்கள் வெளிவந்து பண்டிதர்கள் பாமரர்களென்கிற வாசியில்லாமல் எல்லோருக்கும் மிகப்பயன்பட்டுக் கொண்டிருப்பது பற்றி நாம் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை.

தவிரவும் ஸ்ரீ காஞ்சியில் 'வேதவேதாந்த வைஜயந்தீ' யென்கிற ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்து அதன் மூலமாகப் பல ஸ்ரீவைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு உபயவேத வேதாந்த ப்ரவசந கைங்கரியத்தை ஆச்சரியமாக இந்த ஸ்வாமி நடத்தி வருகின்ற விசேஷமும் ப்ரஸித்தமானதே.

இப்படிப்பட்ட அதிசயங்களெல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஸ்வாமி மூன்று வருஷகாலமாய் சென்னைமாநகரில் பிரதி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தோறும் அருளிச்செய்து கொண்டு வருகிற அமுதமொழி மயமான உபந்யாஸங்களின் சிறப்பு விலக்ஷணமானது. இவ்விஷயத்தைப்பற்றி இங்குக் கொஞ்சம் விவரமாக எழுத விரும்புகின்றேன்.

சென்னைப் பட்டணத்தில் வித்வான்களுடைய உபந்யாஸங்களை அடிக்கடி நடத்திவைக்க அநேக ஸபைகளும், சாரிடிகளும் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஸபைகளுள் "பகவத்கதா பிரசங்கசபா" என்பது ஒன்று. மற்ற எல்லா ஸபைகளைவிட இந்த ஸபையே முதன் முதலாக ஏற்பட்டதென்றும் இது சிறந்த பிரமுகர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. இந்த ஸபை ஏற்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய நாற்பது வருஷங்கள் போல் ஆகின்றன. இதுவரையில் இந்த ஸபையில் அநேக வித்வான்களுடைய ஹரிகதா காலக்ஷேபங்களும், ஸங்கீதக் கச்சேரிகளும் உபன்யாஸங்களும் விசேஷமாக நடந்திருக்கின்றன. ப்ரஸித்தர்களாயிருந்த ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்த்ரியாரவர்கள், பருத்தியூர் கிருஷ்ணசாஸ்த்ரியாரவர்கள் பண்டிட் லக்ஷ்மணாசாரவர்கள் முதலான மஹான்கள் இந்த ஸபையில் அநேக நாள் காலக்ஷேபங்கள் நடத்தியிருக்கின்றார்கள்.

தங்கசாலைவீதியிலுள்ள தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் ஹாலில் இந்த ஸபையின் காரியங்கள் நடந்து வருகின்றன. ஷை ஹால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வீற்றிருக்கக் கூடிய மிக விசாலம் அமைந்தது. 1931-ஆம் வருஷம் ஜூன் மாதத்தில் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஷை ஸபையில் உபந்யாஸங்கள் செய்தருள நியமிக்கப்

பட்டார். உடையவர் வைபவம், பாகவதர்களின் வைபவம், தேவப் பெருமாள் வைபவம் போன்ற தனித்தனி விஷயங்களில் பத்தெட்டு உபந்யாஸங்கள் நடந்த பின்பு ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸங்களை விரிவாகக் கேட்க விரும்பின அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி 1931 ஹு ஆகஸ்டு மாஸத்தில் ஸ்வாமி ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் நடத்த ஆரம்பித்தார்.

புஸ்தகம் வைத்துக் கொள்ளாமலும், கைக் குறிப்புகளுமில்லாமலும் கங்கா ப்ரவாஹம் போல் ஸ்வாமி ஸாதித்துவரும் உபந்யாஸங்களைக்கேட்டு அதிசயப் படாதவர்கள் யாருமில்லை. வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், பிள்ளைப்பெருமாளையங்கார் பாடல்கள், திருக்கோவையார் முதலான தமிழ்க் கிளவி நூல்கள், காவ்ய நாடக அலங்கார ச்லோகங்கள், ஸகல ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் ச்ருதி இதிஹாஸ புராணங்கள், ஆகிய இவ்வளவையும் இனிமையாகப் பொழிந்துகொண்டு ஸ்வாமி நிகழ்த்தும் உபந்யாஸங்கள் மிகவும் அருமையானவை. இப்படிப்பட்ட அமைப்புடன் ஸ்ரீ ராமாயண விசேஷார்த்த உபந்யாஸம் இதுவரை எங்கும் கேட்டதில்லை யென்றே பலரும் அபிப்ராயப்படுகிறார்கள். புருஷர்களும் ஸ்திரீகளுமாய் சுமார் ஆயிரம் ஜனங்கள் கேட்டுக் களித்து வருகிறார்கள். ஆங்கிலத்தில் B A. M. A. முதலான பட்டப் பரீக்ஷைகள் தேறினவர்களும், தமிழ்ப்பண்டிதர்களும் வடமொழிப் புலவர்களும் பலவகை உத்யோகஸ்தர்களும் வியாபாரிகளும், அநேக மத ஸம்பிரதாயஸ்தர்களும் திரண்டு மிக்க குதூஹலங்கொண்டு கேட்டுக் களிக்கும்படியாக நடத்தப்பட்டு வருகின்ற இவ் வுபந்யாஸத்தில் இப்போது (1934 ஹு மேமீ) விபீஷண சரணாகதி நடந்து வருகின்றது. இந்த சரணாகதி விஷயத்தில் மாத்திரம் இதுவரை பன்னிரண்டு உபந்யாஸங்கள் நடந்திருக்கின்றன. சென்ற மாத முடிவில், ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய ஹம்ஸ ஸந்தேசகாவியத்தின் ஸாரப்பொருள் இரண்டு உபன்யாஸங்களில் வெகு அழகாக எடுத்துரைக்கப்பட்டது. அப்போது முக்கியமாகக் கையாளப்பட்ட சுலோகங்கள் தெலுங்கு லிபியில் தனிப்பதிப்பாக வெளியிடப்பட்டுமுள்ளது.

அநேகமாய் நாளது கார்த்திகை மாதத்தில் பட்டாபிஷேகமும் நடைபெறலாமென்று உத்தேசிக்கப்படுகிறது. அதற்குப்பிறகு ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை ஆநுபூர்வியாக எடுத்துக் கொண்டு உபந்யாஸங்கள் ஸாதிக்கவேணுமென்று பக்த ஜனங்களின் கோரிக்கை இருந்து வருகின்றது. பகவத் கீதை யுபன்யாஸமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து எது வெளிவந்தாலும் அதுவே பரம போக்யமென்று கொள்ளுகிறவர்களாகவே ஸகல ச்ரோதாக்களும் காணப்படுகிறார்கள்.

சனிக்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரையிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8-மணி முதல் 10-மணி வரையிலும் இவ்வுபன்யாஸங்கள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வாரம் விடுமுறையாகும்.

கீழ் நடந்த மூன்று வருஷங்களிலும் மார்கழி மாதத்தில் முப்பது நாளும் திருப்பாவை விசேஷார்த்த ஸ்வாபதேசார்த்த அந்யாபதேசார்த்த உபன்யாஸங்கள் வெகு அருமையாக ஸ்வாமியால் நடத்தப்பட்டன. உபய பாஷையிலும் ஸகல க்ரந்தங்களிலும், உபய வேதாந்தங்களிலும் மிகவும் பாராட்டத் தகுந்த வல்லமை பெற்று ஆங்காங்குப் பொருத்தமான மேற்கோள்களை விளக்கி, சிறியவர்களுக்கும் நெஞ்சில்

நன்கு பதியுமாறு எளிதாகவும், அழகாகவும், கம்பீரமாகவும் அமுத மொழிகளை அளித்துவருகின்ற அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் இப்படியே பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து உலகினரை உய்விக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.'' —ஆக இவ்வளவும் வேதாந்ததீபிகையின் வியாஸம்.

ஸ்வாமியின் சொற்பொழிவுகளைக் கேட்கவிழைந்து மொய்க்கும் கூட்டத்தினரோ பலவகையினர். பண்டிதர், பாமரர், கல்லூரி மாணவர், வர்த்தகர், நியாய வாதிகள், வழக்கறிஞர், செல்வர், வறிஞர், பெண்டிர், பாலரென ஜாதிமத வித்யாஸமின்றி வந்து கூடுவர். ஸ்வாமியது உபன்யாஸங்களில் விஷய ஆராய்ச்சியின் பயனாக வெளிவரும் வேதாந்த ரஹஸ்யார்த்த நிர்ணயங்களும், தர்க்கரீதியாகத் தமது கூற்றை நிலைநிறுத்தும் வன்மையும், ஸந்தேகங்களைப் போக்கித் தெளிய விளக்கும்பான்மையும், உலகப் போக்கிலும் சாஸ்திரப் போக்கிலும் உபமானமாகக் காட்டும் அரிய மேற்கோள்களும், சொல்லும்பாணியும், கம்பீரத்வனியும், வீற்றிருக்கும் நிலையும், திருமேனியின் பாங்கும், நிரீசுவரவாதிகளையும் தம்பக்கல் ஈர்க்கும் சொற்சாதுரியமும் பண்டிதரையும் பாமரரையும் ஒருங்கே ஈர்த்து மெய்மறக்கச் செய்கின்றன. இவரது அபார ஞாபகசக்தி அளவிடற்பாலதன்று. எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷமின்றி மற்றியாதெனக் கூறவல்லோம். ஜாயமாநகடாக்ஷமென்னும் கருவிலே திருவுடைமைதான் இத்தனை பெருமைகட்கும் அடியாகுமென்று அனைவருங் கூறுவது. மேலும் பேசிடில் எம்கண்ணெச்சிற் படுமென்றேயஞ்சுதும்.

ஸ்வாமியும் மார்கழித்திங்களும்.

மார்கழி மாதம் பன்னிரு மாதங்களில் பரமஉத்க்ருஷ்டமானதென்பது கீதாசாரியன் வார்த்தை. அக்கூற்றை மெய்ப்பிக்கின்றனர் ஸ்வாமி. அம்மாதம் பிரதிதினமும் திருப்பாவையை ஆழ்வாராசாரியர் ஸ்ரீஸூக்திகள் இதிஹாஸ புராணங்கள், திருக்குறள், நாலடியார், ரஞ்சகமான ஹாஸ்யத்துணுக்குகள், கருத்தமைந்த குட்டிக்கதைகள் இவையனைத்தும் மேகவர்ஷம் போல் பொழிய அவற்றை நெஞ்சால் வாரிப்பருகும் எம்போல்வார்களின் பாக்கியம் பரமபதத்திலும் கிடைத்தலரிதெனக் கூறின் மிகைபடாது. ஒருகணம் வால்மீகி பகவான், மறுநிமிடம் பராங்குசன், அடுத்தடுத்து காளிதாஸன், பவபூதி, கம்பர், நயினர், வியாஸர், எம்பெருமானார், கீதாசாரியன், பண்டிதராஜன், நம்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், தேசிகர், பட்டர், கூரேசர், சங்கரர் இப்படியாக ஒவ்வொருவரையும் திரைக்காட்சியில் காண்பது போன்று நமது அகக்கண்ணில் தோற்றுவிப்பர். ஐம்புலன்களுக்கும் ஏககாலத்துத் தமது உபன்யாஸங்கள் மூலம் உணவுகொடுத்துதவும் வள்ளல் இவரையன்றி மற்றையோரும் உளரோ? நம்மிராமாநுசனைநம்பிள்ளைபோல்வாரைக் காணுக்குறைதீர நம் அண்ணனைக் கண்டு அமுதமருந்தி உள்ளம் புனித மடைகிறோம்.

மார்கழி மாதந்தோறும் மற்றுமொரு ஆனந்தானுபவம் பக்தர்களுக்குப் பிராப்தமாகிறது. திருவரங்கத்தில் அரவணைத்துயில்கொள்மாயன் திருமுன்பு அரையர்கள் எவ்விதம் திவ்யப்ரபந்தப் பாசுரங்களை அநுபவிக்கின்றார்களோ அவ்வண்ணமே, அதனிலும் பதின் மடங்காகவே நம் ஸ்வாமியவர்கள் நீண் முடியுடன், திருமார்வில் அணியார

மும் திருமணித் தாழ்வடமும் இலங்க, நின்ற திருக்கோலத்துடன் பாசுரங்களைக் கரதாளத்துடன் ஸேவிப்பதும், அபிநயித்துக் காட்டுவதும், வியாக்கியானங்கள் ஸேவிப்பதும், அரையர் ஸேவையிலுள்ள விசேஷங்களை யெடுத்துரைப்பதும் ஓர் கண்கொள்ளாக் காட்சியாகவே விளங்கும். செப்பும் திறத்ததன்று.

மேலும் ஸ்வாமி அன்றையதினம் பக்தர்கள் எதுவும் கேட்கலாமென்று அதிகாரம் கொடுத்து விடுவர். அதனால் வெகு குதூஹலத்துடன் அவரவர்கள் ஆழ்ந்து கேட்கும் கேள்விகள் யாவற்றிற்கும் அவ்வப்போதே ஒரு நொடியும் சிந்தை செய்யாது அற்புதமாக பதிலிறுப்பர் ஸ்வாமி. இது பண்டைப் புலவரது சரித்திரங்களில் பேசப்படும் யமகண்டம் அரிகண்டம் முதலியவற்றை ருசுப்படுத்தும் தன்மையது. இந்த சந்தர்ப்பத்தில், எண் கூறப் பாசுரமுரைப்பது அற்புதம் அற்புதம் அற்புதமென அறிஞர் அனைவரையும் பிரமிக்கச்செயயும் ஆற்றலுடையது.

ஸ்ரீஸ்வாமியின் கவிதா சாதுரியம்.

ஆசுகவி, மதுரகவி, விஸ்தாரகவி, சித்ரகவி என்னப்படுகிற நால் வகைக் கவித்வத்திலும் நம் ஸ்வாமி இளம்பிராயந் தொடங்கியே நிகரற்றவர். வடமொழியில் இயற்றி வெளியிட்டிருக்கும் ச்லோகங்களும் தண்டகங்களும் சூர்ணிகைகளும் பல ஆயிரக்கணக்கானவை. திவ்யப்ரபந்தங்களில் ஏறக்குறைய ஆயிரம் பாசுரங்களை மிகவும் லலிதமான ச்லோகங்களாக்கி யுள்ளார். சிறிய திருமடலையும் பெரிய திருமடலையும் ஆர்யா வ்ருத்தத்தில் அதிஸரளஸரணியில் ச்லோகமாக்கியுள்ளார். திருவாசிரியத்தையும் திருவெழு கூற்றிருக்கையையும் தண்டகங்களாக்கியுள்ளார். க்ரந்தலிபியிலும் தேவநாகரலிபியிலும் இவை அச்சேறியுள்ளன. இவற்றுக்கு வியாக்கியானங்களுமியற்றி யுள்ளார். ஸ்ரீராமாயணத்தைத் தண்டகங்களாக ஆக்கித் தெலுங்கு லிபியிலும் தேவநாகரலிபியிலும் வெளியிட்டுள்ளார். ஸ்ரீபாகவத தசமஸ்கந்தம் முழுவதையும் சூர்ணிகையாக்கியுள்ளார். கோபாலபக்தாம்ருதம், கோவிந்த கீதாம்ருதம், ராமபத்ரகர்ணாம்ருதம் இத்யாதி க்ரந்தங்கள் ஸங்கீத ஸாரஸ்யம் பொலிய இயற்றப்பட்டவை. மணவாள மாமுனிகளின் வைபவத்தைச் சுருக்கி ஸ்ரீவரவரமுனி தண்டகம் என்று இயற்றித் தமிழுரையோடுஞ் சேர்த்து அச்சிடப்பட்டுள்ள க்ரந்தம் மிகச் சிறந்து விளங்குகின்றது. ஹயக்ரீவ சதகம், கருட விம்சதி, கோபாலபஞ்சாசத், கமலாஸ்தவம், லோகாசார்ய ஸ்துதி, ராமாநுஜஸஹஸ்ரநாமம், சடகோபஸஹஸ்ர நாமம், ஸ்ரீ சைலேச பாதுகாஸஹஸ்ரம் முதலான பலஸ்தோத்ரக்ரந்தங்கள் பக்தர்களுக்கு ரஸாயநமாக அவதரித்துள்ளவை.

ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா, ஸ்யஸ்யமாநோக்திஸௌஷ்டவவிமர்சம், ரத்நபரீக்ஷா, ஸபாபுஜங்கீஸர்வஸ்வம், வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகா, அபிநவதயாசதகம், அத்யமேபத்யார்த்தசததூஷணி என்றிவை முதலான க்ரந்தங்கள் பலவகைப்பட்ட வ்ருத்தங்களில் ச்லோக ரூபமாகவே அமைக்கப்பட்டு ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தாமே வியாக்கியானங்களுமியற்றி வெளியிடப் பெற்றிருப்பது உலகமெங்கும் பரவியுள்ளது. வித்யார்த்தி தசையில் ஸமஸ்யா பூரணங்கள், சித்ர ப்ரச்னோத்தரங்கள் என்கிற முறையில் இயற்றி விஜ்ஞாநசிந்தாமணி, மஞ்ஜுபாஷிணி முதலான ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள சுலோகங்கள் பல்லாயிரக்கணக்கானவை.

ஸ்வாமி தாம் முதன் முதலாகக் கவியியற்றின பெற்றியை ஒருநாள் உபந்யாஸ கோஷ்டியில் ஸாதிக்கக் கேட்டிருந்ததுண்டு. அவ்வதிசயத்தையும் இங்கு விவ

ரிக்கக் குதூஹல முண்டாகின்றது. காவ்ய பாடம் வாசித்துக் கொண்டிருக்கையில் உபாத்யாயர் ஓர் மறைபொருள் வினாவைச் சொல்லி அதற்கு விடையளிக்கும்படி நியமித்தாராம்; உடனே ஸ்வாமி அந்த வினாவை மூன்று ச்லோகங்களாக இயற்றி விடையை ஒரு ச்லோகத்தினால் வெளியிட்டாராம். வினா என்னவென்றால், ஒருகுளத்தில் சில தாமரைமலர்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் உட்காருவதற்காகச் சிலகிளிகள் ஆவலோடு அங்கு வந்து சேர்ந்தன; ஒவ்வொரு மலரில் தனித்தனி ஒவ்வொரு கிளியாக உட்கார வேண்டியதென்று எண்ணி அப்படியே அக்கிளிகள் உட்காரப் பார்க்கையில் ஒருகிளிக்கு மாத்திரம் தாமரைப்பூ கிடைக்காமற் போகவே அது வருந்திக் கிடந்தது; அதைக் கண்ட மற்ற கிளிகள் உடனே யெழுந்து ஒவ்வொரு மலரில் இரண்டிரண்டு கிளி வீதம் உட்கார்ந்தன. அப்போது ஒரு தாமரைப்பூ (கிளி உட்காராத படிக்கு) மிச்சப்பட்டு விட்டது; எத்தனை கிளிகள் வந்தன? குளத்தில் எத்தனை தாமரை மலர்கள் இருந்தன? என்பது. இந்த வினாவுக்கு விடை-நான்கு கிளிகள் வந்தன; மூன்று மலர்கள் இருந்தன என்பது.

இவ்வினா விடைகளை ஸ்வாமி ச்லோகங்களாக்கின விதம் வருமாறு:—

(வினா ச்லோகங்கள் மூன்று)

சுகா: கேசித் கஸ்மிம்ச்சந ஸரஸி பாதோஜகுஸுமேஷு
அவஸ்தாநம் ப்ராப்தும் ஸகுதுகமுபாகத்ய ஸரஸீம்,
ப்ருதக் சைகைகஸ்மிந்நபி கமல ஏகைகசுக இதி
அமீ ஸங்கல்ப்யைவம் ப்ருதகுபவிசந்திஸ்ம ஸஹஸா.
ததச்சைகம் கீரம் கமலகுஸுமாலாபஜசுசா
விஷண்ணம் வீக்ஷ்யைதே ஸரபஸமதோத்தாய ஸகலா:,
ந்யஷீதந் ப்ரத்யப்ஜம் சுகயுகள ரீத்யா,ததநு போ
அபூதேகம் பத்மம் சுகசரணவிந்யாஸவிதுரம்.
அயி போஸ் ஸுஹ்ருதோ ப்ருத கதி கீராஸ் ஸமாகதா:?
கமலாநி ச ஸந்திஸ்ம கியந்தி கமலாகரே?

(இந்த வினாவுக்கு விடை யிறுத்த ச்லோகம்)

சுகாச் சத்வார ஆயாதா:, கமலத்ரிதயம் ஸ்திதம்,
இத்யேவமுத்தரம் ஸாது த்ரஷ்டவ்யமிஹ பண்டிதை:.

இப்படிப்பட்ட முக்தக ச்லோகங்கள் பல பலவுள.

இவை கிடக்க; ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளில் ஒவ்வொரு பதிகத்தின் கருத்தையும் ஸாரமாகத் திரட்டி ச்லோகங்களைப் பணித்து அவற்றுக்கு வியாக்கியானமுமெழுதி (தேவநாகரலிபியில்) பதிப்பித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க மஹோபகாரம். தமிழ்நாட்டில் பிறவாதவர்களும் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுமான பிறநாட்டினர் அவற்றால் பரம ஸந்தோஷமடையக் காண்கிறோம்.

ஸ்வாமியின் திவ்யதேச யாத்திரைகள்.

ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளில் அபரிமிதமான அபிநிவேசங்கொண்டுள்ள நம் ஸ்வாமிக்கு திவ்யதேசங்களில் ப்ராவண்யம் வாசாமகோசரமானது. அதனால் ஸ்வாமி இதுவரையில் செய்திருக்கிற திவ்யதேச யாத்திரைகளுக்கு எண்ணிக்கையில்லை.

தென்னாடுகளிலும் வடநாடுகளிலும் பற்பலமுறை யாத்திரை செய்திருக்கிறார். நினைத்தபோதெல்லாம் செய்தும் வருகிறார். சோழநாடு பாண்டி நாட்டுத்திருப்பதிகளை அடிக்கடி ஸேவித்து வருவர். வடநாட்டிலும் பதரிகாச்ரமயாத்திரை இருமுறை ஸபரிவாரராய்ச் செய்திருக்கிறார். ஹரித்வாரம் வரையில் பத்தெட்டு தடவைகளுக்குமேல் யாத்திரை செய்திருக்கிறார். அஹோபிலமும் ஸாளக்ராமமுமே ஸ்வாமி இதுவரையில் ஸேவியாதவை. மற்ற ஸகல க்ஷேத்ரதீர்த்ததிவ்ய தேசங்களைப் பல்கால் ஸேவித்திருப்பதனால் அவ்வநுபவங்களின் அதிசயங்களை உபன்யாஸங்களில் அமுதமாகப் பொழிய நேரும். அந்த க்ஷேத்ரதீர்த்தங்களை ஸேவியாத பக்தர்களும் தாங்கள் அப்போது அந்த க்ஷேத்ரதீர்த்தங்களில் வாழ்வதாகவே நினைத்து மெய்சிலிர்ப்பக் கண்ணீர் சோரவிருப்பர்கள். ஸ்வாமியின் உபன்யாஸ கோஷ்டிகளில் இது வொரு விசேஷித்தஸம்பவம்; இது வேறு எங்கும் காணமுடியாதது, எதிர்பார்க்கவுமொண்ணாதது.

> "உலகமேத்துங்கண்டியூ ரரங்கம்மெய்யம் கச்சிபேர்மல்லையென்று
> மண்டினாருய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே"

என்கிற திருமங்கையாழ்வா ரருளிச்செயலில் நம் ஸ்வாமி யொருவர்க்கே திடநம்பிக்கையுளதென்று நன்கு தெரிகின்றது. அதற்குத் தகுந்தபடி திவ்ய தேசத்தெம்பெருமான்கள் நம் ஸ்வாமி திறத்தில் காட்டியருளின அநுக்ரஹ விசேஷங்களையும் ஸ்வாமியோடு கூடச் சென்று ஸேவிக்கும் பாக்யவான்களான மஹான்கள் வாயிலாகக் கேட்டுக் களிக்கின்றோம். ஸ்வாமியும் உபன்யாஸ விசேஷங்களில் அவற்றைப் பரவசமாகச் சொல்ல நேருவதுமுண்டு. "அத்புத வார்த்தாப்ரகாசம்" முதலான சில நூல்கள் மூலமாக ஸ்வாமி அவ்வதிசயங்களை உலகறிய வெளியிட்டிருப்பது முண்டு.

தீர்த்தக்ஷேத்ர ஸேவைகளுக்காக நம் ஸ்வாமி யெழுந்தருளு மிடமெங்கும் ஆங்காங்குள்ள பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி உபன்யாஸங்களை அந்தந்த தேசங்களுக்குரிய பாஷைகளில் ஸாதிப்பதுண்டு. அனேகமாய் அப்படிப்பட்ட ப்ரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்காகவே ஸ்வாமி புறப்படுவதும், அது க்ஷேத்ரதீர்த்தயாத்திரையாக முடிவதும் வழக்கம். பம்பாய், கல்கத்தா, டில்லி, காசி, ஹைதராபாத், ஸகிந்தராபாத், ஷோலாபூர், பூனா, ஜகன்னாதம், கோதாவரீ, க்ருஷ்ணா முதலான விடங்களில் ஸ்வாமியின் உபன்யாஸங்களைப் பலகால் கேட்டுக்களித்த பக்தர்கள் கணக்கிலடங்கார்கள். இவை ஸ்வாமியின் வெளியீடுகளிலிருந்தும் விசதமாகும். ஸ்வாமியின் கீர்த்தி வெள்ளம் நம் நாட்டை விட வடநாட்டில்தான் விசேஷமாகப் பெருகியுள்ளதென்று சொல்லலாம். ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தைக் காஞ்சியிலும் சென்னையிலும் சிறப்பாக நடப்பிக்க வேணுமென்று நமது தேசத்திலுள்ள பக்தர்களுக்குத் தோன்றியது போலவே மற்றும் பல நாட்டினர்க்கும் தோன்றி அவர்களும் இப்படி முயற்சி செய்து வருவதே நம் ஸ்வாமியின் பெருமைக்குப் போதுமான சான்று. டில்லியிலுள்ள மஹான்களின் உத்ஸாஹம் அநுபந்தத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆங்கில (அப்பீல்) வியாஸத்தினால் நன்கு விளங்கும்.

நம்பிள்ளை ஸன்னிதி திருப்ரதிஷ்டை

ஸ்வாமியின் வாழ்ச்சியில் இதைக் காட்டிலும் அற்புதமாகவும் அதிசயமாகவும் சொல்லக்கூடிய விஷயம் வேறில்லை, சென்னையில் வாழும் பலதனிகர்கள் ஸ்வாமி

யின் திருவடிகளில் ஆச்ரயித்து, நம்பிள்ளையருளிச்செய்த அர்த்த விசேஷங்களையெல்லாம் கேட்டுக்களிக்கவே அவர்களது உள்ளங்களில் நம்பிள்ளை குடிகொண்டுவிட்டார் போலும். அவர்களுடைய தனங்களை ஸபலமாக்குவதற்காக 1939-ஆம் வருஷத்தில் ஸ்வாமி காஞ்சீபுரியில் தேவப்பெருமாள் ஸன்னிதியின் திருமுன்பே லோகோத்தரமான வகையில் நம்பிள்ளை ஸன்னிதியை ஸ்தாபித்திருப்பதானது ஸ்வாமியின் கீர்த்திக்கு சாச்வத ஜயஸ்தம்பமாகக் கருதத்தக்கது. இந்த ஸன்னிதியில் ஸ்ரீரங்கநாதன் சக்ரவர்த்தி திருமகன் வேணுகோபாலன் நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இவர்கள் திருப்ரதிஷ்டை பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு மாஸத்திரு நக்ஷத்ர பரிபாலனமும் வருஷோத்ஸவ நிர்வாஹங்களும் நீடூழி காலம் குறைவின்றி நடந்து வரும்படி ஸ்வாமி செய்தருளியிருக்கும் ஏற்பாடுகள் விலக்ஷணமானவை வாழிவாழி. வேதபாராயணம் திவ்யப்ரபந்தஸேவை இதிஹாஸ புராணபடனம் இவைகளுடன் நித்ய கோஷ்டியும் நைமித்திக கோஷ்டிகளும் நடைபெறுவது ப்ரஸித்ததிவ்ய தேசங்களின் ப்ரக்ரியைகளை நினைப்பூட்டுகின்றது.

அன்றியும், த்வாதசி தோறும் பலர்கூடி முமுக்ஷுப்படி ஸேவிப்பது, திருவிசாகந்தோறும் ஆசார்ய ஹ்ருதயம் ஸேவிப்பது, திருமூலந்தோறும் தத்வத்ரயம் ஸேவிப்பது, திருவோணந்தோறும் ஸ்ரீவசநபூஷணம் ஸேவிப்பது, என்றிப்படி நியதமாக நடந்து வருகிற க்ரமங்கள் அநுபவிப்போருடைய அகங்குழைய அமைந்தவை. இந்த ரஹஸ்யக்ரந்தங்களை யெல்லாம் ஸ்வாமியின் திருவருளால் கண்டபாடம் செய்திருக்கும் பெரியார் பதின்மருளர்.

நம்பிள்ளைநிலயமென்கிற விசாலமான ராமாநுஜகூடம் இந்த ஸன்னிதியின் பின்புறத்தில் அமைந்து தேசாந்தரிகளான பக்தர்களுக்கு வஸதிஸௌகரியமளித்து வருவது அற்புதமான லோகோபகாரம் இந்த ஸன்னிதிஸம்பந்தமான நிர்மாணங்களுக்கும் திருப்ரதிஷ்டைக்குமாக ஸ்வாமி லக்ஷம் ரூபாய்க்குமேல் செலவு செய்திருக்கிறார். இந்த ஸன்னிதிஸம்பந்தமான சிறப்புக்களை மிகவிசேஷமாக எழுத வேண்டியதுண்டு. விரிவுக்கஞ்சி நிற்போமிப்போது.

ஸ்வாமியும் மணவாளமாமுனிகளும்

நம் ஆசிரியர்க்கு ஆழ்வாராசாரியர்களின் திருவடிகளில் நிகரற்ற ப்ரேமம் கனத்திருப்பது இவரது உபந்யாஸங்களிலும் நூல்களிலும் கைகொள்கனியாகக்காண நின்றதே; ஆயினும் ஸ்வாமிக்கு மணவாளமாமுனிகள் திருவடிகளில் ப்ராவண்யம் தனிப்பட்ட செல்வமாகக் காண்கிறது. மாமுனிகளின் திவ்யக்ரந்தங்கள் தவிர மற்ற க்ரந்தங்களெல்லாம் மறைந்து போயிருக்கலாமேயென்று கூட ஸ்வாமி யெழுதியிருப்பதைக் காண்கிறோம் தமது திருமாளிகைத் திருவாராதனத்தில் மணவாள மாமுனிகளுக்கே ப்ராதான்யம் கொடுத்திருப்பதும், ஸ்வாமி யாத்திரையாக எழுந்தருளுங்காலங்களில் மாமுனிகளின் திருக்கோலத்தையே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்வதும் ப்ரஸித்தமானது. ஸ்வாமி, நம்பிள்ளை ஸன்னிதி ஏறியருளப் பண்ணினதுங் கூட நம்பிள்ளை பக்கலில் ப்ராவண்யாதிசயத்தாலன்று; மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் நம்பிள்ளையைப் பற்றி நெஞ்சுருகியருளிச்செய்திருப்பதால் அவருடைய திருவுள்ளவுகப்புக்காகவே என்று இதையும் ஸ்வாமி தாமே எழுதிவைத்திருக்கின்றார்.

இப்படிப்பட்ட பக்திப் பெருங்காதலடியாக மாமுனிகள் விஷயமாய் ஸ்வாமியருளிச்செய்துள்ள மிகச்சிறந்த ஸ்தோத்ரம் **ஸ்ரீசைலேசபாதுகாஸஹஸ்ரம்** என்பது. ஸ்ரீசைலேசர்—திருவாய் மொழிப்பிள்ளை; அவருடைய பாதுகை—மணவாளமாமுனிகள்; அவர் விஷயமான ஸஹஸ்ரம் என்றபடி. இந்த பாதுகாஸஹஸ்ரமானது பல பகுதிகள் கொண்டது. வரவரமுநி நக்ஷத்ரமாலா, வாரமாலா, ஸம்வத்ஸரமாலா, ருதுமாலா, அயநமாலா, மாஸமாலா, திதிமாலா, பக்ஷமாலா, ஸ்ரீசைலேசதயாபாத்ரமாலா, வரவரமுநிவைபவமாலா, ரஸாயநம், மங்களாசாஸநம், கர்ணாம்ருதம், தண்டகம், ஸஹஸ்ரநாமமாலா, அஷ்டோத்தரசத நாமமாலா, விஜயமாலா என்றிப்படி அமைக்கப்பட்ட பரிச்சேதங்கள் பெரும்பாலும் தமிழ்க்கருத்துரையுடன் ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யமென்னும் பெயரால் அச்சிடப்பட்டு உலகம் பரவியுள்ளது. அந்தச்லோகமாலிகைகளைக் காணும் வடமொழிப்புலவர்கள் ‘பிள்ளைகளுக்கு இவற்றைப் பாடமாக வைத்தால் இவ்வாயிரம் ச்லோகங்களிலேயே ஆழ்ந்த விற்பத்தி விளையுமே; மேகஸந்தேசமென்றும், மாலதீமாதவ மென்றும் பிறநூல்களில் போதைப்போக்குவதேன்?’ என்று பகர்வர்கள். இந்தஸ்தோத்ரத்தை நோக்குமிடத்து நம் ஸ்வாமிக்கு மணவாள மாமுனிகளின் ஸாக்ஷாத்காரம் கிடைத்துள்ளதென்று நன்கு தெரிகிறது. அது அடியாகவே ஸ்வாமியின் பெருமை ஓங்கி வளர்கின்றது.

இந்த ஸ்தோத்ரத்தில் நம்ஸ்வாமியின் சித்ரகவிதா சாதுர்யம் ஒப்பற்று விளங்கும். ஸம்வத்ஸரமாலை முதலான பகுதிகளில் காட்டியிருக்கும் சித்திரம் அற்புதமானது. தீர்க்காக்ஷரமொன்றுகூட இல்லாமல் ஹ்ரஸ்வாக்ஷரங்களையே வைத்துப் பல சுலோகங்கள் பணித்திருப்பதும் சித்திரமே.

ஸ்வாமியின் குடும்ப ஸந்நிவேசங்கள்.

ஸ்வாமியின் பெருமைகளை யெல்லாம் திருத்தகப்பனார் அநுபவிக்கப்பெறாத குறைதீர திருத்தாயார் வெகுகாலம் அநுபவித்து ஏழெட்டு ஆண்டுகட்கு முன்பு ஆசாரியன் திருவடி சேர்ந்தார். அருந்ததியோ அவனிமகளோ வென்னும்படி வாழ்ந்த திருத்தேவியாரும் ஸௌபாக்யத்துடனே நாலைந்து வருஷங்களுக்கு முன்பு திருவடிச் சார்ந்தார். ஸ்வாமிக்கு ஔரஸபுத்ர ஸந்ததியில்லை. இரு புதல்விகளுள்ளார்கள். இளைய புதல்வியின் மூத்த குமாரனான ஆயுஷ்மாந். செல்லமணி ஸ்ரீரங்கநாதனை ஸ்வீக்ருத புத்ரனாகக்கொண்டு அவனையும் வைதிகவழியில் பழக்கிவருகிறார் ஸ்வாமி. விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல் மேன்மேலும் அபிவிருத்தியடையவேணு மென்று உலகமெல்லாம் ஆசாஸிக்கும்படி.

ஸ்வாமியின் இரண்டு ஜாமாதாக்களும் நல்ல யோக்யதைபெற்று ஸ்வாமியின் நோக்கங்களுக்கெல்லாம் நிர்வாஹகர்களாயிருந்து வருவது குறிப்பிடத்தக்கது. மூத்த ஜாமாதாவான ஸ்ரீஉவே. அக்காரக்கனி, ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமி லௌகிக வைதிக வித்யைகளில் அப்ரதிமராகத் தேர்ச்சிபெற்று ஸ்வாமியின் வெளியீடுகளான க்ரந்தமாலைகளுக்கெல்லாம் பரிஷ்காரகராயிருந்துவருவது உலகின் ஒருபாக்ய விசேஷமாகும். பாடசாலை நிர்வாஹமும் நம்பிள்ளை ஸன்னிதி நிர்வாஹமும் சிறியஜாமாதா கவனித்து வருகிறார். இவ்விருவருடையவும்ஸந்தானங்கள் தழைத்தோங்குக வென்று காப்பிடுமுலகம்.

ஸ்வாமியின் வாதவிவாத கேளிகள்.

ஸ்வாமியின் உபந்யாஸங்களைப் பலமதத்தினரும் உவந்து கேட்பவர்களென்பதும், ஒருவருடைய மனமும் புண்படாதபடி ஸ்வாமி விஷயங்களைச் சொரிபவரென்பதும் உலகமறிந்ததேயன்றோ. ஸ்வாமியோ ஸ்ரீவைஷ்ணவ மரபில் அதிலும் தென்னுசார்ய ஸம்பிரதாயத்தில் தோன்றியவர். தமது மதத்தில் திடமான நம்பிக்கையும் ஊற்றமும் உடையவர். ஆனால் இதரமதங்களில் பகையோ பொறுமையோ உடையவரல்லர். தமது உபன்யாஸங்களில் *வணங்குந் துறைகள் பலபலவாக்கி, மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி, அவையவை தோறணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்* என்கிற நம்மாழ்வாருடைய திருவிருத்தப் பாசுரத்தை எடுத்துக்காட்டி ஸமரஸ புத்தியை ஊட்டுவதும் ஸ்வாமியினுடைய இயல்பு. லௌகிகமான உதாஹரணமும் ஸ்வாமி ஸாதிப்பதுண்டு; பரமபதிவ்ரதையான ஒரு மாதரசி தன்னுடைய கணவனிடத்தில் அபாரமான அன்புகொண்டிருக்கக் கடமைப்பட்டவளேயானாலும் பரபுருஷர்களிடத்தில் பகை பாராட்டச் சிறிதும் அவசியமில்லையன்றோ. அதுபோல அவரவர்கள் தங்கள் தங்கள் மதத்திலோ, ஸம்பிரதாயத்திலோ அன்பும் ஆதரவும் நெஞ்சுநிறையக் கொண்டிருக்கவேணுமேயொழிய இதரமத ஸம்பிரதாயங்களை இழித்துப் பேசவோ தூஷிக்கவோ அவசியமில்லையென்று. இதுதான் ஸ்வாமியினுடைய அந்தரங்கமான அபிப்பிராயம். ஆனால் ஸ்வாமியின் பலபலநூல்களினிடையே மறுப்பு நூல்களும் வடமொழி தென்மொழிகளில் காணப்படுவதால் ஸ்வாமியைப் மதாந்தர த்வேஷமுடையவராகச் சிலர் கருதுவதும் கூறுவதுமுண்டு. "தேசிகத்வேஷி" "வடகலைஸம்ப்ரதாய வித்வேஷி" என்றுகூடச் சிலர் பறைசாற்றுவதுண்டு. இதெல்லாம் ஸ்வாமியின் நூல்களை ஆழ்ந்து பாராமல் ஸ்தூலமாகப் பார்த்துவிட்டு, அல்பச்ருதர்களாயும் அஸூயாளுக்களாயுமுள்ள சிலருடைய கற்பனையைப் பின்பற்றிச் சொல்லுவதேயல்லாமல் உண்மையுரையன்று.

ஸ்வாமியினுலெழுதி வெளியிடப்பட்டுள்ள மறுப்பு நூல்கள் இற்றைக்கும் வெற்றியுடன் விளங்குகின்றன. அவற்றையெடுத்தால் ஒவ்வொன்றிலும் முகப்பிலுள்ள முகவுரையே தெளிவையுண்டாக்கும். உதாரணமாக ஒன்றிரண்டு புத்தகங்களை யெடுத்துக்கொண்டு இங்குப் பேசுவோம். ஸ்வாமியின் நூல்களில் **விதவாவபந வித்வம்ஸநம்** என்பது ஒரு நூல். இது 1929-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இது ஏன் எழுதப்பட்டது, எவ்விதமாக இதில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது' என்பதைச் சிறிதும் பாராமல், நூலின் பெயரையேகண்டு, அதில் **வித்வம்ஸந** மென்கிற கடியசொல் இருப்பதால் அதுகொண்டு பலவும் பேச முன்வருகிறுர்கள், மாயவரம் நடேசசாஸ்திரிகளென்பவர் வபனம் செய்துகொள்ளாத விதவைகள் வாழும் சம்பிரதாயத்தை இழித்துரைத்து வேதாந்த தீபிகையில் ஒரு வியாஸம் வெளியிட்டிருந்தார்; பிரமாணகதிகளைப் பராமர்சியாமல் வீணான ஆக்ரஹங்கொண்டு அநாதி ஸம்பிரதாயத்தை நிந்திப்பது முறையன்று என்று முகவுரையில் விளக்கி உபயஸம்பிரதாயங்களுக்குமுரிய பிரமாணங்களை விவரிக்கவே நம் ஸ்வாமியின் நூல் எழுந்தது. அதில் முடிவு கட்டிய விஷயம் என்ன? என்பதையும் எடுத்துக்காட்டுவோம். உபஸம்ஹாரத்தில்(பக்கம் 33ல்) "விதவைகளுக்கு முண்டனம் செய்கையும் செய்யாமையுமாகிய இவ் விருவகை

யநுஷ்டா னங்களும் சிஷ்டச்ரேஷ்டர்களின் பரம்பரைகளிலே நெடுநாளாகவே நிகழ்ந்து வரக் காணு நின்றோம்; இவ்வநுஷ்டானங்களைப் பரஸ்பரம் நிர்மூலமென்று தூஷிக்க வொண்ணாதபடி சாஸ்திரங்களிலே விதிநிஷேதங்களும் விளங்கக் காண்கிறோம். இவை ....அதிகாரி பேதத்தை யிட்டு உபபந்நங்களாகக் கூடியவை. ஆனபின்பு அவரவர் கள் பரஸ்பரம் இகழ்ச்சியின்றியே யிருக்க ப்ராப்தம்" என்று மதுரமாக முடிவு கட்டி யிருக்கிறது. நமஸ்காரத்தவம் முதலிய மறறு எந்நூலையெடுத்துக் கொண்டாலும் இவ்வகையான நிகமனமே ஸ்வாமி செய்திருப்பது காணப்படும்.

மற்றொரு வாதக்ரந்தத்தையு மெடுத்துக்கொள்வோம்; **ஸ்தோத்ரவ்யாக்க்யாநசோதநம்** என்பதும் ஸ்வாமியின் வாதநூல்களில் ஒன்று. ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்த வியாக்கியானத்தில் சில அஸம்பத்தங்களிருப்பதாக திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரிய ரென்னும் பண்டிதரொருவர் வெளியிட்டிருந்ததற்கு மறுப்பாக இந்நூல் தோன்றியுள்ளது. இவ் விஷயம் நூன்முகத்திலேயே விசதமாகக் காட்டப்பட்டுள்ளது. பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளில் அஸம்பத்தமுள்ளதென்று பண்டிதரான வொருவர் எழுதினால் இதை நம் ஸ்வாமி கடாக்ஷித்து விட்டிட முடியுமோ? வாளாவிருக்க முடியுமோ? அந்தஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை தூஷணத்தோடும் நிற்கவில்லை. ச்ருத ப்ரகாசிகாபட்டரையு மெடுத்துக்கொண்டு அவரும் யுக்திப்ரமாண விருத்தமாக (வாத்ஸல்யார்த்த விஷயத்தில்) எழுதிவிட்டாரென்று தூஷித்துள்ளார். இப்படியாக மஹாசார்யர்கள் ஸ்ரீ ஸூக்தி களில் தோஷாரோபணம் செய்தால் ப்ரதிவாதி பயங்கர குலவிளக்கான நம்ஸ்வாமியோ வாளாவிருப்பவர்?

இன்னொரு வாதத்தையுமெடுத்துக்கொள்வோம். காஞ்சீபுரத்தில் உத்தமா ச்ரமியாக இற்றைக்கு மெழுந்தருளியிருக்குமொரு ஸ்வாமி **பூர்ணத்வவிசார** மென் றொரு சிறுநூலை யெழுதிவெளியிட்டு, எம்பெருமானுக்குப் பரிஸமாப்ய வர்த்தித்வ மென்கிற வ்யாப்தி கிடையாதென்றும் அது அஸம்பாவிதமென்றும் நிரூபித்தார். திரு வாறாயிரப்படிக்கும் தேசிகனுடைய ந்யாயஸித்தாஞ்ஜனநிர்ணயத்திற்கும் நேர்விருத்த மாக இப்படியெழுதுவது தகுதியற்றதென்று நம் ஆசிரியர் **ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா** என்னும் வடமொழி நூலினால் விரியவுரைத்தார். இது மிகவும் ஆவச்யகமான தொரு கைங்கரியமென்று உலகமெல்லா முகக்கும்படியாயிற்று.

இங்ஙனே பலவித்வான்களோடு வாதவிவாத கேளிகள் நடந்திருப்பதானது ஸ்வாமிக்குள்ள ஸதாசார்ய பக்தியையும் யதார்த்தக்ராஹித்வத்தையும் ப்ராமாணி கார்த்த விசேஷங்களில் அசஞ்சலமான ப்ரதிபத்தியையும் காட்டி நிற்குமேயல்லது அநு சிதமான மதத்வேஷத்தை ஈஷத்தும் காட்டாதன்றோ. இப்படி ஸ்வாமியெழுதியுள்ள வாதவிவாத நூல்களுக்குப் பல பண்டிதர்கள் திரண்டு ஆந்தனையும் மறுப்புகளெழுதிப் பார்த்தும் அவை பயன் படாமையினாலே தேசிகத்வேஷித்யாதியாக நிந்தைகளை அஸ் தானே பொழிந்து சில அறிவிலிகளை மயங்கச் செய்தாலும், உத்துங்க மஹாஜ்ஞான நிதி களான ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ பரகால மடாதிபதி ஸ்வாமிகள் ஸ்ரீமதஹோபில மடாதிபதி ஸ்வாமிகள் போல்வார் நிலை கலங்காது திருவுள்ள வுகப்புடனே விளங்கும் படியை வையமுணரும்.

ஸ்வாமியும் மடாதிபதிகளும்

பெரிய மஹாராஜர்களும் மடாதிபதிகளும் மஹாப்ரயாஸங்கள் பட்டுச் செய்ய வேண்டிய அரியபெரிய காரியங்களை நம் ஸ்வாமியொருவரே அஸஹாயராய் அவலீலையாகச் செய்து வருவதனால் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவான மாமலை ஸ்வாமி, திருக்குறுங்குடி ஸ்வாமி, பரகால ஸ்வாமி, அஹோபில ஸ்வாமி, காமகோடி சங்கராசார்ய ஸ்வாமி போல்வாரான பல மடாதிபதிகளும் மற்றும்பல மஹா வித்வான்களும் கனபாடிகளும் லௌகிகத் தலைவர்களும் நம் ஸ்வாமியின் க்ரந்த ப்ரவசனகார்ய விசேஷங்களை மெச்சி உலகறிய வெளியிட்டிருக்கின்ற அபிநந்தன பத்ரிகைகள் மதிப்புரைகள் அபரிமிதம். ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய திவ்யக்ரந்தங்களை யெல்லாம் ஒரு கோர்வையாக அச்சிடவேணு மென்று தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான பல மஹான்கள் பல தடவை கூடி ஆரம்பித்தும் நிறைவேறாதிருந்த அப்பெரிய காரியத்தை நம் ஸ்வாமி அவலீலையாய் அதிஸ்வல்பகாலத்தில் அதிரமணீயமாக முடித்திட்டது கண்டு பரமப்ரீதரான ஸ்ரீமத் பரகால ஸ்வாமிகள் தமது மடத்துப்பூருவர்கள் பணித்திருந்த வியாக்கியானதி க்ரந்தங்களையும் நம் ஸ்வாமியிடமே கொடுத்து இவர் வழியாகவே அப்புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிடக் கோரி பத்தெட்டு வருஷ காலமாய் அப்படியே நடந்து வருகின்றது. இப்படி மடாதிபதிகள் உகக்கும்படியான திறமைவாய்ந்தவர் நம் ஸ்வாமி.

ஸ்வாமியின் அநேக பாஷாபாண்டித்யம்.

தமிழ் க்ரந்தம் தெலுங்கு தேவநாகரி கன்னடம் மலையாளம் ஆங்கிலம் ஆகிய ஏழுலிபிகளில் நம்ஸ்வாமி இளமையிலேயே நன்றாகப் பரிசயம் பெற்றவர். ஸ்வாசார்யரான ஸ்ரீ காதிஸ்வாமியோடு சில காலம் வடஇந்தியாவிலும் இளமையிலேயே யாத்திரை செய்ததனால் அப்போதே ஹிந்தீ பாஷையில் நல்ல பரிசயம்பெற்றார். சென்னைமாநகரில் பிரவேசம் ஏற்பட்ட பின்பு தெலுங்கு பாஷையிலும் ப்ராவீண்ய முண்டாகி ஆந்திர தேசங்களில் அடிக்கடி தெலுங்கு பாஷையில் உபந்யாஸங்கள் நடத்திவருவது பத்தெட்டு வருஷ அநுபவம். ஆக ஸம்ஸ்க்ருதம் தமிழ் தெலுங்கு ஹிந்தீ இந்நான்கு பாஷைகளிலும் நம் ஸ்வாமியின் உபந்யாஸங்கள் ஆங்காங்கு அடிக்கடி நடந்து வருவதனாலும், இந்நான்கு பாஷைகளிலும் ஸ்வாமியினுடைய வெளியீடுகள் பல தோன்றியிருப்பதனாலும் ஸ்வாமியின் வித்யாபரிச்ரமங்களும் ஞானப்பெருமையும் நாற்றிசையுங் கொண்டாட அமைந்தது. தெலுங்கிலும் ஹிந்தியிலும் நம் ஸ்வாமியைக் காட்டிலும் வெகு விசேஷமாகப் பேசவல்ல பண்டிதர்கள் அந்தந்த தேசங்களில் பலர் இருந்தாலும் அந்த தேசங்களிலும் நம் ஸ்வாமி அந்த பாஷைகளிற் செய்யுமுபந்யாஸங்களைக் கேட்டு மிகவு மீடுபடுகின்றனர். அந்த தேசத்தவர்கள் அடிக்கடி சென்னைக்கு வந்து ஸ்வாமியின் உபந்யாஸ கோஷ்டிகளில் பேசுவது கொண்டு, மேற்கூறிய விஷயத்தைப் பலருமுணர்வர்கள்.

சில முக்கிய விஜ்ஞாபனங்கள்.

ஸ்வாமியின் பெருமைக்கடலிலே சில திவலைகளை மாத்திரமே தெரிவித்தபடி இவ்வளவும். நமக்கு நினைவுக்கு வரும் விஷயங்களையெல்லாம் எழுதுவதானால் இதுவொரு மஹாபாரதமாகவே வளரும். நன்றியறிவாளரது நெஞ்சில் நிச்சலும் நிலைபெற்றிருக்கக் கூடிய சில விஷயங்களைச் சொல்லவிரும்புகிறோம். மிக விசாலமான இந்நிலவுலகில் கல்வியாலும் செல்வத்தாலும் பெருமைபெற்ற எத்தனையோ மகான்கள் தோன்

றிமறைந்தவர்களுளர். அன்னவர்களில் ஒருவரும் செய்யாதவையும், செய்ய நினையாதவையுமான பணிகளை நம் ஸ்வாமி சிறு பிராயந்தொடங்கியே செய்து வருகின்றாரென்பதை யறியாதாரில்லை. திவ்யப் பிரபந்தங்களுக்கும் ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்யங்களுக்கும் பூர்வாசார்ய வியாக்கியானங்களிருந்தாலும், பேராசிரியர்களிடத்துக் காலக்ஷேப முறையில் கேட்டேயறியத்தக்கவையாயும், அப்படி கேட்டாலும் அறியமுடியாதவையாயும் அவையிருக்கிறபடியை நோக்கி, மந்த மதிகளும் எளிதாக அவகாஹித்துக் கொள்ளும்படி பதவுரையும் விரிவுரையுமெழுத வேணுமென்று தோன்றி **திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையுரையை** அமைத்ததும், ஸ்ரீ வசநபூஷணஸாரம், முமுக்ஷுப்படிஸாரம், ஆசார்யஹ்ருதய ஸாரம் என்றிப்படிப்பட்ட ரஹஸ்யவுரைகளை யமைத்ததும், அவற்றைப் பன்முறையுமச்சிட்டு வெளியிட்டுவருவதும் மற்றையோர்க்கு நெஞ்சாலும் நினைப்பரிதன்றோ. அந்த வுரைகளை அநுபவிக்க வநுபவிக்க, எவ்வளவு விசேஷங்கள் அறியக்கிடக்கின்றனவென்பது அநுபவரஸிகர்களுக்கன்றோ தெரியும். அஸூயாவிஷ்டர்களின் உள்ளமும் உருகுகின்றதன்றோ.

திவ்ய ப்ரபந்தங்களின் பொருள்களை வடநாட்டினரும் அறிந்துய்யும் வண்ணம் ஸம்ஸ்க்ருத பாஷையிலும் மிக லலிதமாக எழுதி அச்சிட்டுவரும் திருப்பணி அதனிலும் அதிசயிக்கத் தக்கதன்றோ. பஞ்ச ஸ்தவம் ஸ்ரீரங்க ராஜஸ்தவம் ஸுதர்சனசதகம் முதலான பெரிய பெரிய ஸ்தோத்திரங்களுக்கும் சிறியபல ஸ்தோத்திரங்களுக்கும் ஒன்று விடாமல் விரிவான வியாக்கியானங்களை மணிப்ரவாள நடையிலும் தெலுங்கு பாஷையிலும் எழுதியச்சிட்டிருப்பது "நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்களிதோரற்புதங்கேளீர்" என்றாப் போலே குலாவத்தக்கதன்றோ.

மேலே சொன்ன மஹாக்ரந்தங்களில் பல காரணங்களினால் ஆங்காங்கு தவறான பாடங்கள் பல் புகுந்துவிட, அவற்றையெல்லாம் தகுந்த உபபத்திகளைக் காட்டிச் செவ்வைப்படுத்தி யிருக்குந்திறம் ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்களை வியக்கச் செய்கின்றது. ஓரிடமே இதற்குச் சான்றாக எடுத்துக்காட்டுவோம்; சிறிய திருமடலில் "செங்குறிஞ்சித்தாரார் நறுமாலைச் சாத்தற்குத் தான் பின்னும் நேராதனவொன்று நேர்ந்தாள்" என்ற விடத்து ஸ்வாமியின் தீபிகையுரையில் உள்ள வாக்கியங்கள் இவை—"நறுமாலைச் சாத்தற்கு என்று பாடமோத வேண்டியதை விட்டு 'நறுமாலை சாத்தற்கு' என்று தப்பான பாடம் ஓதிவருவதனால் இவ்வாக்கியத்தின் பொருளை உள்ளபடி யறியா தொழிந்தனர் பலர்; சாஸ்தா என்னும் வடசொல் சாத்தன் எனத்திரிந்து கிடக்கின்றதென்பதை யறியாமல் 'செங்குறிஞ்சித்தாரார் நறுமாலை சாத்திக் கொள்ளுகிறவனுக்கு என்று கற்றறிந்த பல பெரியோர்களும் பொருள் பகரவும் எழுதவும் நேர்ந்துவிட்டது. அங்ஙனன்று; செங்குறிஞ்சித்தாரார் நறுமாலையையுடைய **[சாத்தற்கு]** சாஸ்தா என்று ப்ரஸித்தமான தேவதாந்தரத்திற்கு என்று உண்மைப் பொருள் உணர்க. சாத்தன்+கு=சாத்தற்கு; இவ்வகைப் பொருளில் 'மாலைச்சாத்தற்கு' என்றே பாடமோதவேண்டும்" என்று.

இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் ஸ்வாமியின் உரைகளில் பலநூற்றுக்கணக்கில் அமைந்துள்ளன; மதுரை ஹரிசமய திவாகர பத்திராதிபர் தமது பத்ரிகையில் இத்திருமடல் திருத்தத்தை யெடுத்துக்கொண்டு ஸ்வாமியின் ஆராய்ச்சித் திறமைக்கு மிக வியந்து பன்னியுரைத்திருக்கின்றார். இவ்வகைத்திருத்த ஆராய்ச்சிகள் திவ்யப்பிரபந்தங்

களில் மாத்திரமல்ல; ஆசார்யஹ்ருதயாதி ரஹஸ்யங்களிலும் பஞ்சஸ்தவ ஸ்ரீரங்க ராஜ ஸ்தவாதி ஸகல ஸ்தோத்ரங்களிலும் விசேஷமாகக் காணலாம்.

காஞ்சீபுரத்தில் உவே. பண்டித. குணகரம்பாக்கம் அனந்தாசாரியர் ஸ்வாமி யிருந்தனர். இவர் வால்மீகி ராமாயணத்தைத் தமிழுரையோடு பதிப்பித்த புகழாளர். இவர் தமது அச்சுக்கூடத்தில் ஸ்ரீவைஷ்ணவஸ்தோத்ர பாடங்களெல்லாவற்றையும் க்ரந்தலிபியில் இரண்டு ஸம்புடமாக அச்சிட்டு உலகம் பரவ வெளியிட்டிருக்கிறார். இவர் அச்சிடத் தொடங்கியபோது "அண்ணங்கராசாரியர் ப்ராசீந பாடங்களை மாற்றித் தாம் சில புதிய பாடங்களைக் கற்பனை செய்து ப்ரவசநாதிகள் செய்து வருகிறார்; ப்ராசீந பாடங்களைப் பாதுகாப்பதற்காகவே நான் ஸ்தோத்ரங்களையெல்லாம் அச்சிட ஆரம்பிக்கிறேன்" என்று தம் ஆப்தர்களிடம் சொல்லிவந்தார். அவர் நம்ஸ்வாமியிடத்தில் நல்ல அபிப்பிராயமில்லாமலும், ஸ்வாமியோடு கலவாமலும் இரண்டொரு பாரம் அச்சிட்டுமாயிற்று. அவர் வித்வானுகையாலே சிலவிடங்களில் தமக்கே ஸந்தேகம் தோன்ற, பிறகு ஸ்வாமியின் ஸ்தோத்ரவுரைகளையெல்லாம் ஒன்று விடாமல் பார்க்கப் புகுந்தார்; ஒவ்வொரு திருத்தமும் சிறிதும் ஆக்ஷேபிக்க முடியாமல் மிகவுகக்கத்தக்கதாயிருந்தமையைக் கண்டு உள்ளம் பூரித்து 'அந்தோ! விஷயங்களில் உள்ளிறங்கி ஆராய்ச்சி செய்யாமல் அவிவேகிகளின் மோசப் பேச்சுக்களைக் கேட்டு மருண்டு அபசாரப்பட்டுவிட்டோமே' என்று மிகவும் அநுதபித்து அன்று முதலாக ஸ்வாமியிடத்தில் ஹயக்ரீவப்ரதிபத்தி பண்ணி ஸ்வாமிதிருத்திப் பதிப்பித்துள்ள பாடங்களையே ஆசார்யர்கள் திருவாக்கில் அவதரித்த பாடமாக நம்பி அவற்றையே தாம் அச்சிட்டு முடித்ததுமல்லாமல் அவ்விரண்டு ஸம்புடங்களிலும் முகவுரையில் தாமே வெளியிட்டார்—"இந்த ஸ்தோத்ரங்களில் குருட்டுப்பரம்பரையாகப் புகுந்த பாடப்பிழைகளை யெல்லாம் ஸ்ரீஅண்ணங்கராசாரியர் ஸ்வாமி சாஸ்த்ரீயமாகத் திருத்தியருளினார்" என்று.

இப்படி பொறாமையகன்ற ப்ராமாணிகர்கள் போற்றும்படியா யமைந்த ஆராய்ச்சிகள் பொலிய நின்ற ஸ்வாமியின் க்ரந்தங்கள் இதுகாறும் அவதரித்தவையும் இனி அவதரிக்கப் போகின்றவையும் பல்லாண்டு பல்லாண்டுவாழ்க வென்று காப்பிடுவார் பல்லாயிரவர்.

ஸ்ரீராம க்ருஷ்ணாத்யவதாரங்களில் எதிரம்பு கோப்பதற்குப் பலர் உண்டானாப்போலே நம் ஸ்வாமிக்கும் சிலர் எதிரம்பு கோப்பவராயினர். ஆனால் அவர்களை யெல்லாம் உலகுக்கு மஹோபகாரம் செய்தவர்களாகவே மதிக்கவேண்டியதாயிற்று. உண்மையில் அன்னவர்கள் தோன்றியிராவிடில் ஸ்வாமி மூலமாகப் பலபல உண்மைப் பொருள்களை உலகமறிந்து உய்ய ப்ரஸக்தியேயிராது.

டில்லியில் வாழும் S. R. S. ராகவன் என்னும் மஹாமேதாவி நம் ஸ்வாமியின் பெருமைகளைப்பற்றி யெழுதி வெளியிட்டுள்ள ஒரு வியாஸத்தில் இங்ஙனம் எழுதுகிறார்:—

"ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் சததூஷணி முதலான வாதக்ரந்தங்களையும் எழுதியிருப்பதுபோல் நம் P. B. A. ஸ்வாமியும் வாதக்ரந்தங்களையும் எழுதுவதிலும் மிக்க ருசியும் வல்லமையு முள்ளவர். மிகவும் அவ்வச்யமான விஷயங்களிலேயே இவர் வாதக்ரந்தங்கள் எழுதியுள்ளார். ஷெ. வாதங்களில் பிறர் கடினமாகத் தாக்கினாலும் இவர்

சிறிதும் அஞ்சமாட்டார். ஒழுங்குதவருமல் எதிர்வாதங்களை யெழுதி தம் வாதத்தையே உலகம் மெச்சும்படியாகச் செய்துகொள்வது இவருடைய இயல்பு. ஸமீபகாலத்தில் "பரந்தரஹஸ்யம்" என்கிற க்ரந்த விஷயமாக நடந்த சர்ச்சையே இதை நன்கு விளக்கும். ஆனுலும் இவர் ஹ்ருதயபூர்ணமாக ஸமாதானத்தையும் ஒற்றுமையையுமே விரும்புவர். இவர் புது டெல்லியில் வந்து செய்த உபந்யாஸத்தில் "விசிஷ்டாத்வைத மதமானது அத்வைதத்தை ஒருகையாலும், துவைதத்தை மற்ருெரு கையாலும் தழுவி அணைத்துக்கொண்டு அவைகளுடன் சாந்தமாகவும் ஸந்தோஷமாகவும் நடக்கவல்லது" என்பதையே அதிக ஸாமர்த்தியமாக விளக்கிக்கொண்டு போனது எனக்குப் பேரானந்தத்தை விளைவித்தது. இவருடைய க்ரந்த பிரசுரங்கள் மிகவும் அதிகமானவை. மலை போலுள்ளவை. இந்த வயதிலும் இவர் தினந்தோறும் 18 மணிகளுக்குமேலாக க்ரந்தங்களை மேன் மேலும் எழுதுவதிலேயும், சாஸ்திரவிஷய சம்பாஷணைகளிலேயும், உபந்யாஸங்களிலேயுமே தம்முடையபொழுதைப் போக்குவதை நாம் பார்க்கிருேம். இவரது திவ்ய பிரபந்த வியாக்கியானம் இவர் நமக்களித்த ஓர் பேருதவியாகும். ஆழ்வார்களின் திவ்ய உபதேசங்களை நாடு நகரமும் நன்கறியப் பரவச்செய்வதற்கு இதுவே ஓர் பெரிய பணியாகும். இவர் செய்திருக்கும் மற்ற பணிகளும் மிகமிக மதிப்புவாய்ந்தவை. விசிஷ்டாத்வைத மதத்தின் சீரிய க்ரந்தங்கள் இவருடைய விடாமுயற்சியினுலேயே புத்துயிரளிக்கப்பெற்று, எல்லோரும் அறியும்படி பரவச் செய்யப்பட்டு, நேர்த்தியான புத்தகங்களாய்ப் பதிப்பிக்கப்பட்டு காலதத்துவ முள்ளவரையிலும் வாழ்விக்கப்பட்டதென்ருல் இது மிகையாகாது." என்று.

இன்னமும், நமது ஸம்ப்ரதாயத்தில் லௌகிக வைதிகங்களில் மிகவல்லவராய் உயர்பதவியில் வாழ்பவரான ஸர் S. வரதாசாரியர் ஸ்வாமி, நம் ஸ்வாமியைப்பற்றி யெழுதி வெளியிட்டுள்ள ஓர் வியாஸத்தில்—"ஸ்ரீ உ. வே. வித்வான் அண்ணங்கராசாரிய ஸ்வாமியிடம் பெரிய ஸபைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அதிசய சக்தியுண்டு; இவரது உபந்யாஸங்களைக் கேட்க பெரிய கூட்டங்கள் சேருவது வழக்கம். பெரிய ஸபைகள் முன் இவர் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் உபந்யஸிக்க வல்லவர்; சில காலமாக ஹிந்தீபாஷையையும் இவர் பழகுவதாகத் தெரிகிறது. இவர் மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்த ஓர் மிகப் பெரிய பணி என்னவென்ருல், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீநம்பிள்ளை, ஸ்ரீவேதாந்த தேசிகர், ஸ்ரீமணவாள மாமுனிகள் இந் நான்கு பெரிய ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் கிரந்தங்களையெல்லாம் தொகுத்து ஒரு கோர்வையாக வெளியிட்டதே. இது இவர் ஸாதித்த ஓர் அரிய பெரிய காரியமாகும். ஆனுல் இது இவருடைய வெளியீடுகளின் ஓர் பகுதியேயாகும். ஏனென்ருல் ஹிந்தியிலேயும், ஸம்ஸ்க்ருதத்திலேயும், தமிழிலேயும் அறிவு பொருந்திய வியாஸங்கள், சர்ச்சைகள், மதவிஷயங்கள், தமது சொந்த கற்பனைகள் அல்லது வியாக்கியானங்கள் இவைகளைக் கொண்ட அநேக பத்திரிகைகளை வெளியிடுவதிலேயே இவருடைய காலம் சென்றுகொண்டிருக்கிறது" என்று. இப்படி உண்மையறிந்து உகக்கும் பெரியார்கள் போற்றும் பெருமையைச் சிறியேனுகிய யான் தெரிவிக்க எவ்வளவன்?

முடிவாக ஓர் விஷயம் விஞ்ஞாபிக்கிறேன். வித்வான்களின் ப்ரவசனக்ரமம் இருவகைப்பட்டது; ஸபைகளில் உபந்யாஸம் செய்வது ஒருவகை; அடிபணிந்த சிஷ்யர்களுக்குப் பூருவாசாரியர்களின் திவ்யக்ரந்தங்களை பங்க்திகளின்மீது பொருள்

விவரித்து உபதேசம் செய்வதென்பது மற்றொரு வகை; 'காலக்ஷேபம் ஸாதித்தல்' என்கிற வியவஹாரம் இப்படிப்பட்ட உபதேச மார்க்கத்திற்கே அநாதி காலமாகப் பெரியோர்களால் செய்யப்பட்டு வருகின்றது. ஆசாரியர்களின் தனியன்களைச் சொல்லாமலும் நமஸ்காரங்கூடச் செய்யாமலும் சுவரில் சாய்ந்துகொண்டும், கைகால்களை இஷ்டப்படி வைத்துக் கொண்டும் கொட்டாவிவிட்டுக் கொண்டும் கேட்கிற உபந்யாஸவகை ஒரு புறமிருக்க, மேலே சொன்ன அஸந்தர்ப்பங்களுக்கு இடமில்லாதபடி புனிதமான இடத்தில் புனிதமான ஸமயத்தில் பக்திச்ரத்தைகளோடு உபதேசம் கேட்க வருகிற பரிமிதர்களான சிஷ்யர்களுக்குப் பூர்வாசார்ய க்ரந்தபூர்வமாகப் பொருளுபதேசிப்பதான காலக்ஷேப முறைதான் அநாதிகாலமாக நிகழ்ந்து வருவது. அந்த முறையை நம் ஸ்வாமி ஸ்வஸ்தானமாகிய காஞ்சீபுரியிலேயே முப்பத்தைந்து வருஷ காலமாக வெகு அற்புதமாய் நடத்தி வருகிறார். ஸ்வாமி பாடசாலை ஏற்படுத்துவதற்கு முன்பு சில வருஷகாலம் ஸ்ரீ அழகிய மணவாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மடத்திலேயே இக்காலக்ஷேபத்தை நடத்தி வந்தார். பிறகு பாடசாலையிலேயே பலவருஷம் நடத்திவந்தார். நம்பிள்ளை ஸன்னிதி அமைந்த பின்பு அதிலேயே பத்துவருஷ காலமாக நாடோறும் காலைவேளையில் நடத்தி வருகிறார். அந்த கோஷ்டியில் ஒரு க்ஷணம் விடாமல் நியதமாக அந்வயித்து அநுபவித்து ஆனந்திப்பவரும், ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதி தர்மகர்த்தாவுமான ஸ்ரீஉவே நல்லப்பா ஜீயப்பங்கார் ஸ்வாமி "ஓர் குதூகல ஈடுபாடு" என்னும் சிறு புத்தகமொன்று எழுதியுள்ளார். அதில் நம்பிள்ளை ஸன்னிதி காலக்ஷேப கோஷ்டியின் பெருமையைப் பற்றி யெழுதியுள்ள பகுதியை அடியேன் அடிக்கடி படிப்பதுண்டு; பலர்க்கும் வாசித்துக் காட்டுவதுண்டு; அப்பகுதியை இங்கும் அப்படியே யெடுத்தெழுதுகிறேன் :—

"ஸ்ரீஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேப நிர்வாஹமோ வாசாமகோசரம். இவருக்கு முன் சில வித்வான்கள் "பகவத் விஷயம்" என்கிற விருதைத் தங்கள் பெயர்கள் முன் கூட்டிக்கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டொருவரிடம் அடியேன் அனேக பாசுரார்த்தங்களைக் கேட்டதுண்டு. அவர்கள் ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் இரண்டொரு நாட்களாவது அன்வயிக்கப் பெற்றிருந்தால், அருளாளப் பெருமாளெம்பெருமானார் எம்பெருமானாரிடம் ஈடுபட்டது போலவும், நஞ்சீயர் பட்டரிடம் ஈடுபட்டதுபோலவும் ஸ்வாமியிடம் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். விஷயமோ பகவத்விஷயம்; பாசுரங்களோ பராங்குசருடையவை; "ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம்" "த்ராவிட வேதஸாகரம்" என்கிற ப்ரஸித்தியைப் பெற்றவை; இதற்கு வியாக்கியானம் ஸாதித்தவரோ ஸகல கலாவல்லபரான நம்பிள்ளை; இதைப் பட்டோலை கொண்டருளிய காலமோ 600 வருஷங்களுக்கு முற்பட்டது; இதில் அரும்பதஉரைகாரர்களென்று கீர்த்திபெற்றவர்கள்கூட அனேக விடங்களில் இடம் வலம் தெரியாமல் திகைத்திருக்கிறார்கள். இத்தகைய ரத்னாகரத்திற்குள் ஸ்ரீ ஸ்வாமி நம்மை அழைத்துச்சென்று, "இதோ பாருங்கள், இது முத்து, இது கெம்பு, இது பச்சை, இது நீலம், இதுஒரு சிறந்த கோமேதகம், இது ஓர் உயர்ந்த வைடூர்யம், இது ஒரு விலையில்லா மாணிக்கம், இதோ பாருங்கள் ஒரு ஆயிரம்கேரட் வைரம்; இன்னமும் பாருங்கள், இதன்பெயர் 'முத்துக் கெம்பு!', இது 'கெம்புப் பச்சை!', இது 'பச்சை நீலம்!', இது 'நீலகோமேதகம்!', இது 'கோமேதக வைடூர்ய வைரம்!', இதைப் பார்த்தீர்களா? இது ஸ்ரீ கௌஸ்துபத்திற்குச் சமானமான ஓர் "கெம்பு நீலரத்ன வைரமணி!",

அதோ அந்த ஆச்சரியத்தைப் பாருங்கள் 'நீரிலே நெருப்பு!' அதன் பக்கத்திலேயே பாருங்கள் 'நெருப்பிலே நீர்!' என்றென்று, அன்று அர்ஜுனனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணன் காட்டிய விச்வரூபத்தைப்போல், பகவத் பாகவதகுணங்களைத் தம்முடைய நிரங்குச ஞான ஒளியைக்கொண்டு வீசியும், நிகரற்ற மிகக் கூர்மையான ஆராய்ச்சி வல்லமையைச் செலுத்தியும், நாமெல்லாம் மயிர்க்கூச்செறிவுடன் ஆனந்தப்பட்டும், *நினைந்து நைந்து உள் கரைந்துருகியும் ஈடுபடும்படி பிரகாசிப்பித்து நம்மைக் குதூஹலப் படுத்துகிறார். ரூபாய் ஐம்பதும் நூறுமான டிக்கெட் வாங்கிக் கேட்கவேண்டிய சில சிறந்த கோகிலகான சங்கீதக் கச்சேரிகளையும் அடியேன் கேட்டதுண்டு; உலகிற் சிறந்த சிலபெரிய ஸர்க்கஸ், ஜாலவித்தை, எக்ஸிபிஷன் முதலிய அற்புதக் கண்காட்சிகளையும் கண்டதுண்டு. உலகப்பிரஸித்தமான சில அரிய சொற்பொழிவுகளையும் ஆங்கிலத்தில் கேட்டதுண்டு. சமீப காலத்தில் உலகிலேயே முதல்தரமான பேசும்படம் என்று அனேக தங்கமெடல்கள் அளிக்கப்பெற்ற ஷேக்ஸ்பியரின் 'ஆமலதன்' (Hamlet) உள்பட சில உயர்ந்த ஸினிமாக்களையும் பார்த்ததுண்டு. ஆனால் இவை யொன்றிலும் நம் ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் உண்டாகுமனுபவங்களில் பதினாயிரத்தில் ஒருபங்குகூட உண்டாகாதென்று திண்ணமாய் ஆணையிட்டுச் சொல்வேன். "பக்தாம்ருதம்", "விச்வஜநாநு மோதனம்" என்று நித்யஸூரிகளும், இன்றும் அப்படியே ஸர்வேச்வரனும் மண்டி ஈடுபடும்படியல்லவோ நம் சடகோபரின் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளின் அர்த்த விசேஷங்களை நமது பூர்வாசார்யர்கள், ஸ்திரீ பாலர்களும் ஈடுபடும்படி, ஸகல சுவைகளையும் வெகு அற்புதமாக அமைத்தல்லவோ நமக்குக் காட்டியுள்ளனர். இவைகளில் தலைசிறந்த தல்லவோ நம்பிள்ளையின் 'ஈடு'. இதன் ஆழ்பொருள்களை நம் ஸ்வாமியிடத்திலல்லவோ நாம்கேட்டு ஈடுபட்டு ஆனந்திக்க வேண்டும். இந்த மாபெரும்பாக்யத்தை அடியேன் போல்வார் * காஞ்சீபுரத்தில் நம்பிள்ளை ஸந்நிதியில் தினப்படியாக அனுபவித்துவர ப்ராப்தமாயிருப்பதுதான் இந்த குதூகல ஈடுபாட்டுக்கு மூலகாரணமாயமைந்தது. ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில், ஒவ்வோரிடத்தில் "இத்தகைய வியாக்யானம் நம்பிள்ளையைத்தவிர வேறு எவராலும் ஸாதித்திருக்கமுடியாது" என்கிற உணர்ச்சியும் "இதை ஸ்ரீ ஸ்வாமியைத் தவிர வேறு எவராலும் அறிந்து இப்படிப் பாமரர்க்கும் நன்றாகப் புரியுமாறு விளக்க முடியாது" என்கிற மகிழ்ச்சியும், பெரிய வித்வான்களுக்கும் வாய்வெருவும்படி உண்டாவது ப்ரதிதின அனுபவம். ஸகல சாஸ்திரங்களிலேயும் ஸ்ரீ ஸ்வாமிக்கிருக்கும் ஞானம் ஒருவிதத்திலேயும் நம்பிள்ளையின் ஞானத்தைவிடக் குறைந்ததன்று என்கிற உணர்ச்சியும் அநேக தடவைகளில் உண்டாகும்.

வேதம், உபநிஷத், இதிஹாஸபுராணங்கள், திவ்வியப்ரபந்தங்கள், ஸ்தோத்திரங்கள், ரஹஸ்யங்கள் இவை யெல்லாவற்றிற்கும் நம் பூர்வாசார்யர்களிட்டிருக்கும் அற்புத வியாக்யானங்கள் இவையெல்லாவற்றையும் கரைத்துக்குடித்து, கூரத்தாழ்வானுடைய ஞாபகசக்தியும் வாய்க்கப்பெற்று, தர்க்க வியாகரண மீமாம்ஸை முதலிய ஸகல சாஸ்திரங்களிலேயும், காவிய நாடகாதி ஸகல ஸாஹித்யங்களிலேயும் பரிபூர்ண பாண்டித்யமும் பெற்றிருந்தாலொழிய பகவத் விஷய காலக்ஷேபத்தைக் குறைவற நிர்வஹிக்க முடியாது. இவைகளில் ஒன்று குறைந்திருந்தாலும் இந்த காலக்ஷேபத்திற்குச் சோபை குன்றியே தீரும். இவையெல்லாம் ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் புஷ்கலங்

களாய் இருப்பதைப்போல் வேறு எந்த வித்வானிடத்தில் காணமுடியும்? ஐந்தாறு நூற்றுண்டுகளுக்கொருமுறை அவதரிக்கும் மஹாசாரிய கோஷ்டியைச்சேர்ந்தவர் நம் ஸ்வாமி. இவருடைய காலத்தில் நாம் பிறந்திருந்து இவருடைய க்ருபா கடாக்ஷத்திற்கும் இலக்காயிருப்பது பெறுதற்கரிய பாக்கியமே. நாம் உடையவர் காலத்தில் பிறந்திருக்கவில்லையே! நம்பிள்ளையின் கோஷ்டியில் அன்வயிக்கக் கொடுத்துவைத்திருக்கவில்லையே! என்கிற இழவுதீர எம்பெருமான் ஸ்ரீ ஸ்வாமியை நமக்கு அனுக்ரஹித்திருக்கிருன்." என்பது.

இந்த ஜீயப்பங்கார்ஸ்வாமி இப்படி புகழும் காலக்ஷேப கோஷ்டியை ஒருநாளாவது நாம் ஸேவிக்க வேண்டாமாவென்று குதூஹலித்து சென்றவாண்டில் ஒருநாள் அடியேன் காஞ்சிக்குச் சென்றேன்; காலை ஏழுமணிக்குள் நம்பிள்ளை ஸன்னிதிக்கு விடைகொண்டேன். காலக்ஷேபம் கேட்கும் ஸ்வாமிகள் யாவரும் "தூயோமாய் வந்தோம்" என்றபடி தூயராய் வந்து சேர்ந்தார்கள். தனியன்களை எல்லாருஞ் சேர்ந்து கர்ணமிருதமாக அநுஸந்திக்குமழகே அற்புதமாயிருந்தது. அன்று காலக்ஷேபம் திருவல்லவாழ் திருவாய்மொழியில் "மானேய் நோக்குநல்லீர் வைகலும் வினையேன் மெலிய, வானூர்வண் கமுகும்" என்றவளவே எட்டரை மணிவரை நடந்தது. அந்த ஸந்நிவேசத்தை நினைக்குந்தோறும் இன்னமும் கண்ணுங்கண்ணீருமாய் நிற்பதே அடியேனுடைய ஒரு பெரும் பாக்கியமாக நினைக்கத்தக்கதாயுள்ளது.

வைபவ நிகமனம்

இங்ஙனே நாம் விவரித்தெழுதவேண்டிய வைபவங்கள் "பன்னியுரைக்குங்கால் பாரதமாம்" என்று திருமங்கையாழ்வாரருளிய கணக்கிலே மிகப் பெருகும். தற்போது இவ்வளவு வரைந்ததே போதுமென நிற்கின்றேன். நம் ஸ்வாமியின் ஸகல நூல்களையும் ஆதியோடந்தமாக அநவரதம் அநுபவித்து ஆனந்தித்துக் கொண்டிருக்கும் புதுக்கோட்டை மஹாராஜஸம்ஸ்தான (விச்ராந்த) தாஸிதிகாரியும் பிரபல வித்வானுமான ஸ்ரீஉவே. காளி. ரங்காசாரியர்ஸ்வாமி ஆசிரியர்க்குப் **பூர்வாசார்ய ஸமுதாயாவதார** ரென்று விருதுசூட்டியிருப்பதை உலகமறியும்; உண்மையில் இவ்விருதுக்கு ஏற்ற கலமான நம் ஸ்வாமி "வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஈட்டில் அருளிச் செய்தபடி எம்பெருமானுரைப் போலே சாஸ்த்ரோக்தமான தீர்க்காயுஸ்ஸையும் அரோக திடகாத்திரத்தையும் பெற்று நாற்றிசைக்கும் மேன்மேலும் நல்லுணவான நல்லுணர்வையளித்து உலகத்தை வாழ்விக்குமாறு நூற்றெட்டுத் திருப்பதி யெம்பெருமான்களையடிதொழுது அனுதினம் வேண்டுவோமாக.

ஸ்ரீஸ்வாமியின் வாழி திருநாமம்

கச்சி நகர் வந்துதித்த கவிப் பெருமான் வாழியே
கற்பவர் தம் மனமுருகக் கருத்துரைப்போன் வாழியே
சிச்சன் தன்னுருயிரைச் சேமிப்போன் வாழியே
சீர் வசன பூடணத்தின் சிறப் புரைப்போன் வாழியே

இச்சையுடன் ஆசார்யனிதய மீந்தோன் வாழியே
எழிற்கலைகள் திருநாவிலிலங்கநின்றுன் வாழியே
அச்சுதன் தாளிணை பணிந்தே அருள் பெற்றுன் வாழியே
அண்ணங்கராரியன்தன் அடியிணைகள் வாழியே.

ஆரணநூல் வாழ அருளிச்செயல் வாழத்
தாரணியோர் தாமுமுடன்வாழ—ஏரணிசீர்
மன்னுபுக ழண்ணங்கராரியனும் மாகுருவே!
இன்னமொரு நூற்றுண் டிரும்.

திருநாள் பாட்டு

எத்திசையும்புக ழோங்கவளர்ந்து சிறந்துபிறந்திடுநாள்
ஏழுலகாரிய னீந்தகலைப்பொரு ளின்பமிசைத்திடுநாள்
அத்திகிரித்தலை யுத்தமன்நற்பத மாழ்ந்துமகிழ்ந்திடுநாள்
ஆழ்ந்தகருத்துட னாழ்வார்கலைகளை யறியவுரைத்திடுநாள்
பத்தியுடைப் பரவாதிபயங்கர னற்குலமோங்கிடுநாள்
பாரினிலாரிய தரிசனவைபவம் பாங்கினிலோங்கியநாள்
நித்தியமெம்முடை நெஞ்சிலுறைந்தரு ளண்ணல்பிறந்திடுநாள்
நீடுபுகழ்பெறு பங்குனிமாத விசாகமதெனுநாளே.

ஸ்ரீமதே ஸௌம்யஜாமாத்ரு முநிபாதாப்ஜஸேவிநே,
அண்ணங்கரார்யவர்யாய நித்யஸ்ரீர் நித்யமங்கலம்.

ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை
ஸ்ரீரங்காசார்யஸ்வாமி திருவடித் துகளான
புரிசை. பரவஸ்து. வரததாஸன்
விஜ்ஞாபனஞ் செய்த
அண்ணங்கராசார்யஸ்வாமி வைபவஸங்க்ரஹம்
முற்றுப் பெற்றது.

ஸ்ரீ :

ஸ்ரீ காஞ்சிபிரதிவாதிபயங்கரம் மஹாவித்வான்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
இயற்றி வெளியிட்டுள்ள வட மொழி தென் மொழி நூல்களுக்கு
அகராதிக் கிரமமான ஜாபிதா.

1. அகிலபுவனச்லோகவியாக்கியானம்
2. அஞ்ஜனக்ரந்தபஞ்ஜநம். (வேதவிசாரம்)
3. அடைக்கலப்பத்து உரை
4. அண்ணுவைபவம்
5. அதிமாநுஷஸ்தவவியாக்கியானம்
6. ஷ தெலுங்கு டீகை
7. அத்திகிரிவைபவம்
8. ஷ வடமொழி நூல்—கிரந்தலிபி
9. ஷ தெலுங்கு பாஷை
10. அத்புதசக்தி
11. அத்புதவார்த்தாப்ரகாசம் (ஸம்ஸ்க்)
12. அத்யமேபத்யாாத்ததத்வம்
13. ஷ சததூஷணி (முதற்பகுதி) [ஸம்]
14. அத்யாபகஹஸ்தபூஷணம்
15. அத்ருஷ்டார்த்தஸர்வஸ்வம்
16. அபிநவதயாசதகம் (ஸம்ஸ்க்ருதச்லோ)
17. அபூர்வராமாயணம்
18. அமலனுதிபிரான் தீபிகையுரை
19. ஷ தெலுங்குடீகை
20. அம்ருதலஹரி 100 ஸஞ்சிகைகள்
21. அருளிச்செயலாராய்ச்சி
22. அருளிச் செயல்விசேஷார்த்தங்கள்
23. அர்ச்சாவதாரத் திருமண்காப்பு
24. அஷ்டச்லோகீவியாக்கியானம்
25. ஷ தெலுங்குடீகை
26. அஸூயாபரமௌஷதம் (வேதவிசார)

---

1. அகில புவநஜந்மேத்யாதி ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோகத்திற்கு நம்மாழ்வார் பரமான ரஸ்ய ரஹஸ்யப் பொருளை விவரிப்பது.

10. எம்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்தில் பிறர் செய்யுமாக்ஷேபங்களை நிரஸித்து ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்கப் பணித்த நூல்களில் முடிவானது.

11. ஸ்வாமியின் வடநாட்டு யாத்திரையில் ஸம்பவித்த விசேஷங்களைத் தெரிவிப்பது.

14. நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தை முன்னடி பின்னடியாக ஸேவிக்க நேரும் ஸமயங்களுக்கு உபயுக்தமாகும் பதிப்பு இது.

16. தயாகுணத்தின் ஸ்வரூபத்தைப் பற்றிப் பிறர் சொல்லுமாக்ஷேபங்களெல்லாவற்றையும் நிரஸித்து ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தத்தை நன்கு ஸ்தாபிக்கும் ச்லோகமாலிகை. தாத்பர்ய விவரணமுமுள்ளது. (தெலுங்குலிபி.)

17. இது ஒரு அபூர்வமான நூல். வான்மீகி நாரதரை நோக்கிக் கேட்ட 16 குணங்களில் ராமாயண கதை முழுவதையும் அடக்கி விரிவாக எழுதப்படுமிந்நூல் ஜகன்மோகினி பத்ரிகையில் மாதந்தோறும் ஒவ்வொரு பகுதியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. தனிப் புத்தகமாகவும் ஸித்தமாகி வருகிறது.

20. இப்பத்ரிகை ஒன்பது வருஷகாலம் மாதந்தோறும் நடத்தப்பட்டு வந்தது. ஸ்ரீ ரங்கம். உவே. மெ. ஸுந்தரராஜாசாரியர் மானேஜிங் எடிடராயிருந்து வந்தார்.

27. ஆசார்யஹ்ருதயஸாரம் (சுருக்கம்)
28. ஷை விரிவான பதிப்பு
29. ஆசார்யஹ்ருதயப்பதவுரை
30. ஆச்சான் பிள்ளை யஷ்டாத்யாயி
31. ஆதிவராஹத்ரிம்சத் (ஸம்ஸ்க்ருதம்)
32. ஆராய்ச்சி மணிமாலை
33. ஆர்த்திப் பிரபந்தவுரை
34. ஆழ்வார்கள் வைபவம்
35. ஷை ஸம்ஸ்க்ருதம்—நாகரலிபி
36. ஷை தெலுங்கு பாஷை
37. ஷை ஹிந்தீ பாஷை
38. ஆளவந்தார்ஸ்தோத்ரவியாக்கியானம்
39. இரண்டாந் திருவந்தாதி தீபிகை யுரை
40. இராமானுச நூற்றந்தாதி தீபிகை
41. உபதேசரத்தினமாலையுரை.
42. உபதேச ரஸாயநம்
43. உபந்யாஸத் தொகுதி
44. உபந்யாஸ ரத்நமாலா (ஸம்ஸ்க்ருதம்)
45. உபயராமாயண கதாஸாரம்
46. உபாக்யாந ரத்நமாலா (ஸம்ஸ்க்ருதம்)
47. உள்ளுறை பொருள் விளக்கம்
48. எம்பெருமானார் வைபவம்
49. ஐதிஹ்யஙிர்வாஹ ரத்நமாலா
50. கண்ணிநுண் சிறுத்தாம்பு—தீபிகை.
51 ஷை ஸம்ஸ்க்ருதம்
52. ஷை தெலுங்குடீகை
53. கத்யத்ரய வியாக்கியானம்
54. ஷை தெலுங்குடீகை
55. கமலாஸ்துதி (ஸம்ஸ்க்ருதம்)
56. கருடவிம்சதி (ஸம்ஸ்க்ருதம்)
57. கலிவைரி தசகம் (உரையுடன்)
58. குசேலோபாக்யாநம் (ஸம்ஸ்க்ருதம்)
59. குலசேகரஸூக்தஸர்வஸ்வம் (ஸம்)
60. கூரத்தாழ்வான் வைபவம்
61. கோதாஸூக்த ஸர்வஸ்வம் (ஸம்)
62. ஷை தெலுங்கு பாஷை
63. கோதாஸ்துதி வியாக்கியானம்
64. ஷை ஸம்ஸ்க்ருத டீகை
65. கோபாலபஞ்சாசத் (ஸம்)
66. கோபாலபக்தாம்ருதம் (ஸம்)
67. கோவிந்த கீதாம்ருதம் (ஸம்)
68. கோஷ்டீநாத சதகம் (ஸம்)
69 கிருஷ்ணவதாரகதாரஹஸ்யம்
70. க்ஷமாஷோடசி வியாக்கியானம்
71. ஷை தெலுங்கு பாஷை
72. க்ஷேத்ரதீர்த்தயாத்திரை விளக்கு
73. க்ஷேத்ரதீர்த்தயாத்ராதர்சம் (ஸம்)
74. ஷை தெலுங்கு பாஷை
75. ஷை ஹிந்தீ பாஷை
76. சதுச்ச்லோகீ வியாக்கியானம்
77. ஷை தெலுங்குடீகை
78. சப்தசாஸ்த்ரஸர்வஸ்வம் (ஸம்)
79. சாரீரகஸர்வஸ்வம் (ஸம்)
80. சாஸ்த்ரஜ்ஞாநசாணபலகம் (வேத...)
81. சிரோமணி சிரோபூஷா
82. சிரோமணி சேகரம்
82. சிறிய திருமடல் தீபிகையுரை
84. ஷை ஸம்ஸ்க்ருத ச்லோகமாலா
85 செந்தமிழாராய்ச்சி
86. சேட்லூரார் மாயமயக்கம்

---

31. இது முதலாகப் பல ஸ்தோத்ரங்கள் ஸ்வாமி பணித்தவையுண்டு. இதுவும், 55, 56, 57, 65, 66, 67, 68, 245, 268 ௵, ஸ்தோத்ரங்களும் தேவநாகரிலிபியிலுள்ளன.

45. வால்மீகி ராமாயணம் கம்பராமாயணம் ஆகிய உபய ராமாயணங்களின் கதைகளை வெகு எளிதாகத் தொகுத்து எழுதிய புத்தகமிது. பாலகாண்டம் பூர்த்தியாக ஸ்ரீராமாநுஜனில் வெளி வந்துளது. முழுதும் தனிப்புத்தகமாக அச்சிடப்பட்டு வெளிவரும்.

47. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பல பல ஸூக்திகளின் வ்யங்க்யார்த்தங்களை விவரிக்கத் தோன்றிய நூலிது. அச்சிலுள்ளது.

49. இதில் 20 பக்கங்கள் ஸ்ரீ ராமாநுஜனில் வெளியிடப்பட்டது. தனிப்புத்தகமாக அச்சாகி வெளிவரும்.

78, 79. இவையிரண்டும் இனிமேல் அச்சிடப்பெறும்.

86. திருவஹீந்திரபுரம் சேட்லூர் நர்ஸிம்ஹாசாரியரால் எழுதப்பட்டிருந்த பூர்வாசார்ய தூஷணங்களுக்கு மறுப்பாக வெளியிடப்பட்ட நூல்கள் இங்ஙனே பல.

87. சேஷாவதாரச் சிறப்பு
88. ஸ்ரீ காஞ்சிதேவப்பெருமாள்ஸன்னிதி
89. ஸ்ரீகுணரத்நகோச வியாக்கியானம்
90. ஸ்ரீசைலேச பாதுகாஸஹஸ்ரம் (பெரும்பாலும் தமிழுரையுடன்)
91. ஸ்ரீசைலேசாஷ்டகவியாக்கியை (ஸம்)
92. ஸ்ரீபாஷ்ய-ஸாரார்த்தஸங்க்ரஹம்
93. ஸ்ரீரங்கநாதஸ்தோத்ரவுரை
94 ஷை தெலுங்கு பாஷை
95 ஸ்ரீராமாநுஜ பூஷணம்.
96. ஸ்ரீராமாநுஜன் (மாதப் பத்திரிகை)
97. ஷை தெலுங்கு மாதப்பத்திரிகை
98. ஸ்ரீராமாயண தண்டகம் (ஸம்)
99 ஸ்ரீவசந பூஷண ஸாரம்
100. ஸ்ரீவசந பூஷணச்லோக மாலிகா (ஸம்)
101. ஸ்ரீவைகுண்டஸ்தவ வியாக்கியானம்
102. ஷை தெலுங்குடீகை
103. ஸ்ரீஸ்தவ வியாக்கியானம்
104 ஷை தெலுங்குடீகை
105. ஸ்ரீஜகத்குரு [காதிஸ்வாமி] வைபவம்
106. ஷை ஸம்ஸ்க்ருதம்
107. தர்க்க சாஸ்த்ரஸர்வஸ்வம் (ஸம்)
108. தத்வத்ரயார்த்தரத்நமாலா (ஸம்)(தேவநாகர லிபியிலும் தெலுங்குலிபியிலும்)
109. தத்வவிவேசநம்
110. தத்வஹிதோபதேசம்
111. தர்மவாதம் (ஸம்ஸ்க்ருதம்)
112. தாடீபஞ்சக வியாக்கியானம்
113. ஷை தெலுங்கு பாஷை
114. திருக்குறுந்தாண்டகம் தீபிகையுரை
115. திருச்சந்தவிருத்தம் ஷை
116. திருச்சின்னமாலையுரை
117. திருநெடுந்தாண்டகம் தீபிகையுரை
118. திருப்பல்லாண்டு தீபிகை
119. ஷை ஸம்ஸ்க்ருதச்லோ—டீகையுடன்
120. ஷை தெலுங்குடீகை
121. ஷை ஹிந்தீ பாஷை
122. திருப்பள்ளியெழுச்சி தீபிகை
123. ஷை ஸம்ஸ்க்ருத ச்லோகமாலா
124. ஷை தெலுங்குடீகை
125. திருப்புட்குழி ஸ்வாமி வைபவ பரிஷ்காரம்
126. திருமாலை—தீபிகையுரை
127. திருவாசிரியம் ஷை
128. ஷை ஸம்ஸ்க்ருத தண்டகம்
129 திருவாய்மொழியாயிரம்—தீபிகையுரை
130. திருவாய்மொழி நூற்றந்தாதியுரை
131. திருவிருத்தம் தீபிகையுரை
132, திருவெழுகூற்றிருக்கை ஷை
133. ஷை ஸம்ஸ்க்ருத தண்டகம்
134. திவ்யப்ரபந்த வைபவவிவேகம் (ஸம்)
135. திவ்யப்ரபந்தஸாரத்திரட்டு
136. திவ்யப்ரபந்த ஸாராம்ருதம்
137. தீண்டாமை தொலையாமை
138. துவரைப்பிரான் திருவருள்
139. தென்னுசார்யஸம்ப்ரதாயம்

---

89. அச்சிடப்பட்டு வருகிறது.

92. இந்நூலின் சில பகுதிகள் ஸ்ரீ ராமாநுஜனில் வெளிவந்தன. முழுதும் தனிப் புத்தகமாக அச்சிடப்பட்டு வருகிறது.

111. வித்யார்த்தி தசையில் எழுதின நூலிது. பம்பாய் நகரத்தில் கேமராஜ ஸேட் அச்சுக்கூடத்தில் 40 வருஷங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டுள்ளது. 123, 184 நெ. நூல்களும் இத்தோடு சேர்த்து ஒரே புத்தகமாக அச்சிடப்பட்டுள்ளது.

125. காஞ்சீபுரியில் மஹாவ்யாபகராயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத். திருப்புட்குழி அப்பாஸ்வாமியின் வைபவத்தை யெழுதுவதாகப் புகுந்தவொருவர் அபத்தமான கதைகளைக் கற்பனை செய்து ஸத்ஸம்ப்ரதாயதூஷணம் செய்திருந்தார். அதனை ஆராய்ச்சி செய்து உண்மையை வெளியிட்டது இது.

129. இதில் ஒன்பதாம் பத்து, பத்தாம் பத்து உரை அச்சாகி வருகிறது; ஸமீப காலத்தில் வெளிவந்து விடும்.

134. ஸ்வாமியின் நூல்களில் இதுவே முதன்முதலாகத் தோன்றினது; க்ரந்தலிபி.

138. உத்யாந பத்ரிகையில் வெளிவந்த அஸம்பத்தங்களான பல வியாஸங்களுக்கு மறுப்பாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் இது தலைசிறந்தது. 10, 158, 223, 242 நெ. முதலியனவும்.

140. தேசிகமங்களம்—உரை
141. தேசிகன் வைபவம்
142. ஷை தெலுங்குபாஷை
143. தேசிகஸூக்திஜயத்வஜமாலா (7 ஸஞ்சிகைகள்)
144. தேசிகஸூக்திபரிமளம்
145. தேசிகஸூக்திஸித்தாஞ்ஜநம்
146. தேவப்பெருமாள் ஸன்னிதிவிமர்சம்
147. தேவராஜ பஞ்சகம் உரை
148. தேவராஜ மங்களம் உரை
149. தேவராஜாஷ்டகம் உரை
150. ஷை தெலுங்கு பாஷை
151. த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளி உரை
152. த்ரமிடோப நிஷத்ஸங்கதி உரை
153. த்ருவசரிதம் (ஸம்ஸ்க்ருதம்)
154. த்வம்மேஹம்மேவியாக்கியானம்
155 நக்ஷத்ரமாலிகாவியாக்கியானம்
156. ஷை தெலுங்கு பாஷை
157. நமஸ்காரதத்வம்
158. நரஸிம்ஹாவதாரதத்வம்
159. நாச்சியார் திருமொழிதீபிகையுரை
160. நாச்சியார் திருமொழிஸாரம் (ஸம்)
161. நான்கண்ட நல்லது.
162. நான்முகன் திருவந்தர்தி தீபிகை
163. நித்யாநுஸந்தானவுரை
164. நித்யாநுஸந்தேயஸ்தோத்ரமாலா-உரை
165. பகவத் கதையமுதம்
166. பகவச் சாஸ்த்ர தத்வம்
167. பக்தாம்ருதம் (40 உபந்யாஸங்கள்)
168. பட்டநாதஸூக்தஸர்வஸ்வம் (ஸம்)
169. பரகாலஸூக்தஸர்வஸ்வம் (ஸம்)
170. பரதுக்கதுக்கித்வ பரமார்த்த ரக்ஷா
171. பரமார்த்த பரித்ராணம் (வேதவிசாரம் ஸம்)
172. பரமார்த்தரக்ஷா (ஸம்பிரதாயம்)
173. பரமார்த்தஸ்துதிவியாக்கியானம்
174. பரஸ்வரூபநிரூபணம்.
175. ஷை தெலுங்கு பாஷை
176. பராங்குசாஷ்டக வியாக்கியானம்
177. ஷை தெலுங்குபாஷை
178. பரிபந்திபஞ்சபங்கீ (ஸம்ஸ்க்ருதம்)
179. பன்னிருதிங்களநுபவம்
180. பாதுகாஸஹஸ்ராவதாரதத்வம் (ஸம்)
181. ஷை தமிழ்
182. பாத்ரதத்வபரமார்த்தம்
183. பாத்ரதத்வஜயத்வஜம்.
184. பாலகோபதேசமாலிகா (ஸம்)
185. பாலபோதரஸாயநம்
186. பிரமாணத்திரட்டாராய்ச்சி
187. பிழைதிருத்தப் பேரின்பம்
188. பிள்ளை நூற்றந்தாதி
189. பிள்ளையந்தாதி உரை
190. பூர்வாசார்யவைபவம்
191. பெரியதிருமடல் தீபிகை
192. ஷை ஸம்ஸ்க்ருதச்லோகமாலிகை
193. பெரிய திருமொழியாயிரம்—தீபிகை
194 ஷை ஸாரஸங்க்ரஹச்லோகமாலா
195. பெரியார்களின் சரிதைகள்.
196. பெரியாழ்வார் திருமொழி தீபிகை
197 ஷை பொழிப்புரை
198. ஷை ஸம்ஸ்க்ருதமும் தெலுங்கும்
199. பெருமாள் திருமொழி தீபிகை
200. ஷை ஸம்ஸ்க்ருதச்லோகமாலா
201 ப்ரணவாதிகாரதத்வம்
202. ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா (ஸம்)
203. மணவாளமாமுனிகள் வைபவம்
204. மதிரேக்ஷுணர்த்ததத்வம் (ஸம்)
205. மலைநாட்டுத் திருப்பதியாத்திரை
206. மல்லாபுரீசஸ்தவம் (ஸம்)
207. முகுந்தமாலைவியாக்கியானம்
208 ஷை தெலுங்குபாஷை
209. முதல் திருவந்தாதி தீபிகை
210. முப்பத்திரண்டு மொழிமாலை.
211. முமுக்ஷுப்படிஸாரம்
212 ஷை தெலுங்குபாஷை
213. ஷை ஸம்ஸ்க்ருதபாஷை
214. மூன்றுந்திருவந்தாதி தீபிகை
215. யதிராஜவிம்சதிவியாக்யானம்

151, 152. இவை, திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையுரையிற் சேர்ந்தவை. அதில் பதிகங்களின் முடிவிற் காணத்தக்கவை. தனிப்புத்தகமாகவும் அச்சாகும்.

165. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களி லடங்கியுள்ள இதிஹாஸ புராணக் கதைகளெல்லாவற்றையும் விவரித்த நூல் இது. மறுபதிப்பாக வேண்டும். தெலுங்கு பாஷைப் பதிப்பு உள்ளது. (பகவத்கதாம்ருதமு.)

172. இந்நூலில் நவீனர்களின் துர்வாதங்கள் பலவும் நிரஸிக்கப் பட்டுள்ளன,

216. யதிராஜவிம்சதி தெலுங்குடீகை.
217. ஷ்டி ஹிந்திடீகை டன்)
218 யாத்ராஸ்தோத்ராம்ருதம் (உரையு
219. ரக்ஷாவிமர்ச சிக்ஷா
220. ரக்ஷாவிலோசநபாவப்ரகாசிகா (ஸம்)
221. ரத்நபரீக்ஷா (ஸம்—ச்லோக மாலை)
222. ரஸிகபுதரஞ்ஜநம் (ஸம்)
223. ரஸிகரஸாயநம் (ஸம்)
224. ராமாநுஜசதுச்ச்லோகி உரை
225. ஷ்டி தெலுங்குபாஷை
226. ராமாயண கதாஸாரம்
227. லக்ஷ்மீதத்வநிர்ணயம் (ஸம்)
228. லோகாசார்யஸ்துதி: உரையுடன்
229. வம்பவிழ்கோதை தத்துவம்.
230. வரதராஜஸ்தவவியாக்கியானம்
231. வரவரமுனி தண்டகம் உரையுடன்
232. வரவரமுனி திநசர்யாவியாக்கியானம்
233. வாதிபீகர விஜயம்
234. வாத்ஸல்யார்த்த விஜயத்வஜம்
235. வாத்ஸல்யார்த்த விவரணம்
236. வான்மீகிராமாயண வசனம் உத்தரகாண்டம் வரை
237. விசேஷார்த்தரத்நநிதி
238. ஷ்டி தெலுங்குபாஷை
239. விஜயத்வஜவைஜயந்தீ
240. விதவாவபநவிசாரம்
241. வித்வத்விநோதிநீ
242. வித்வத்வைதிகபூஷணம்.
243. விஷ்ணுஸஹஸ்ரநாமம் உரை
244. ஷ்டி தெலுங்குடீகை
245. வேங்கடநாதகுருஸ்தோத்ரம் (உரையு
246. வேங்கடேச ஸ்துதி உரை. டன்)
247. வேதாத்யயநஸர்வஸ்வம் (ஸம்)
248. வேதாந்த தீபிகாவிமர்சம்
249. வேதாந்தஸர்வஸ்வம் (ஸம்) கா)
250. வைதிகமநோஹரா (ஸம்—மாஸபத்ரி
251. வைராக்ய பஞ்சகவியாக்கியானம்
252. வ்யாமோஹப்ரசமௌஷதம்
253. ஸதாசார்யஸம்ரக்ஷா
254. ஸத்யநாராயணஸ்த்ரம்
255. ஸத்யநாராயணஸ்த்ரஸத்யப்ரதாபம்
256. ஸத்ஸம்ப்ரதாயபரிசுத்தி
257. ஸத்ஸம்ப்ரதாயபரித்ராணம்
258 ஸத்ஸம்ப்ரதாயப்படி
259. ஸபாபுஜங்கீஸர்வஸ்வம் (100 ச்லோ)
260. ஸமஸ்யமாநோக்திஸௌஷ்டவவிமர்சம் (200 ச்லோ உரையுடன்)
261. ஸாவித்ரீபாதிவ்ரத்யம் (ஸம்)
262. ஸுந்தரபாஹுஸ்தவவியாக்கியானம்
263. ஸுதர்சந குருஸ்துதி (வேதோபாத்யாயஸ்துதி)
264. ஸுதர்சந சதகவியாக்கியானம்.
265. ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநம்
266. ஸ்வஸ்வரூபநிரூபணம்
267. ஷ்டி தெலுங்குபாஷை
268 ஸ்வாபதேசார்த்தஸாகரம்
269. ஹயக்ரீவசதகம் (ஸம்)
270. ஹயக்ரீவஸ்தோத்ரவுரை
271. ஷ்டி தெலுங்குடீகை
272. ஹிரண்யன்வதை—வசனம்.

மேலே குறித்த நூல்கள் மாஸபத்ரிகைகள் மூலமாக வெளிவந்தவை சில; தனிப் புத்தகமாகவே வெளியிடப்பட்டவை பல. (இதுவரை வெளிவராதவை நாலைந்தே.) இந்த நூல்கள் 42 வருஷ காலமாக வெளி வருவனவாதலால், பல நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டன. சில நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஒரு நூலும் துர்லபமாகாதபடி எல்லாமும் மறுபதிப்புச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இப்புத்தகங்கள் பெரும்பாலும் உலகம் முழுதும் பரவியவை. மதராஸ் கனிமராலைப்ரெரி முதலான ராஜகீய புஸ்தகாலயங்களில் சேமிக்கப்பட்டு வருபவை. இப்படிப்பட்ட நூல்கள் இன்னமும் பல பல வெளிவருமாறு பெருந்தேவி மணவாளனை பேரருளாளன் நம் ஸ்வாமிக்குத் தீர்க்காயுளும் திடகாத்திரமுமளிக்க வேணும்.

தாஸன். பு. ப. வரதாசாரியன்.
15, தங்கசாலை வீதி, மதராஸ்-3. 5—3—195]

ஸ்ரீ:

காஞ்சீபுரம் மஹாவித்வான். P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் பதிப்புகளில் தற்காலம் விலைக்குக் கிடைக்கக் கூடிய புத்தகங்களின் ஜாபிதா

		ரூ.	அ.
1.	முதலாயிரம் விரிவுரை ...	10	0
2.	திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி பொழிப்புரை ...	1	0
3.	திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழியாயிரம் திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகமுட்பட ...	12	0
4.	நான்கு திருவந்தாதிகள் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவெழுகூற்றிருக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல் இராமாநுசநூற்றந்தாதி ஆகிய இயற்பா ஆயிரம் (தீபிகையுரை) ...	11	0
5.	நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய் மொழியாயிரத்தில் 800 பா. (மேலே அச்சிலுள்ளது) ...	17	0
6.	திருப்பாவை - விரிவுரை ...	1	4
7.	நாச்சியார் திருமொழி - விரிவுரை	1	12
8.	பெருமாள் திருமொழி - விரிவுரை	1	8
9.	உபதேசரத்தினமாலை திருவாய்மொழி நூற்றந்தாதி விரிவுரை	1	0
10.	ஆர்த்திப் பிரபந்தவுரை ...	0	8
11.	அத்திகிரி வைபவம் (ஸம்) ...	0	8
12.	முகுந்தமாலை, ஆளவந்தார் ஸ்தோத்ரம் சதுச்லோகி, ஸ்ரீஸ்தவம், யதிராஜவிம்சதி, தேவராஜாஷ்டகம், தேவராஜமங்களம்-உரையுடன் ...	2	10
13.	கூரத்தாழ்வான் வைபவம் (விரிவானது) ...	0	6
14.	அதிமாநுஷஸ்தவவுரை ...	0	12
15.	ஸுதர்சநசதக வியாக்கியானம்.	1	0
16.	ஸ்ரீரங்கராஜஸ்தவவுரை (1) ...	1	8
17.	அஷ்டச்லோகி உரை ...	0	8
18.	தேசிகஸ்தோத்ரங்களில் ஹயக்ரீவஸ்தோத்திரம், வைராக்ய பஞ்சகம், கோதாஸ்துதி, பரமார்த்தஸ்துதி, தேசிகமங்களம் உரை	1	8
19.	அபிநவதயாசதகம் (ஸம்-தெலுங்குலிபி) ...	0	8
20.	முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம் மூலம் ...	0	8
21.	முமுக்ஷுப்படிஸாரம், ஸ்ரீவசநபூஷணஸாரம் ...	3	0
22.	ஆசார்யஹ்ருதயஸாரம் (விரிவு)	4	0

		ரூ.	அ.
23.	ஷை சுருக்கமான உரை ..	1	10
24.	முமுக்ஷுப்படி முதலிய நான்கு ரஹஸ்யங்களுக்கும் மணவாள மாமுனிகளின வியாக்கியானம் (தெலுங்கு லிபி) ...	7	0
25	அஸமயாபரமௌஷதம் ...	0	6
26.	ஆழ்வார்கள் வைபவம் ...	0	12
27.	ஆராய்ச்சி மணிமாலை ...	0	5
28.	ஸ்ரீராமாநுஜர்வைபவம் (தனி)...	0	8
29	ஸ்ரீராமாயண ஸாரம் ...	0	10
30.	பக்தாம்ருதம் ...	1	4
31.	உபதேசரஸாயனம் ...	0	6
32	உபந்யாஸரத்நமாலா (ஸம்-க்ரந்தலிபி) ...	0	8
33.	க்ஷேத்ர தீர்த்தயாத்ராதர்சம் (ஸம்ஸ்க்ருதம்) ...	0	12
34.	ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணம் ...	0	8
35.	பரமார்த்த ரக்ஷா ...	1	8
36.	அத்புத சக்தி ...	0	6
37.	தத்வஹிதோபதேசம் ...	0	4
38.	பாடசோதநபரீக்ஷா (ஸம்) ...	0	8
,,	சேஷாவதாரச் சிறப்பு ...	0	6
39.	அத்யாபக ஹஸ்தபூஷணம் (நாலாயிரம்முன்னடி பின்னடி) ...	1	0
40.	க்ஷேத்ரதீர்த்தயாத்திரை விளக்கு	0	6
41.	த்வம்மேஹம்மே உரை ...	0	6
42.	ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யம் (உரையுடன்) ...	0	12
43.	நற்போது போக்கு ...	0	6
44.	தேவப் பெருமாள் ஸந்நிதி விசேஷம் ...	0	8
	ஷை மற்றொருவிதம் ...	0	4
45.	நான் கண்ட நல்லது ...	0	8
46.	பரமார்த்த பரித்ராணம் ...	0	8
47.	பாதுகாஸஹஸ்ராவதாரதத்வம்	0	8
48.	எம்பெருமானார் பெருமைகள் ...	0	12
49.	ஆச்சான் பிள்ளை அஷ்டாத்யாயி	0	4
50.	பாத்ர தத்வவிமர்சங்கள்	0	12
51.	பிள்ளையந்தாதி உரை ...	0	8
52.	யாத்ராஸ்தோத்ராம்ருதம் ...	0	4
53.	வேதாத்யயநஸர்வஸ்வம் (ஸம்)...	1	0
54.	வேதவிசார நூல்தொகுதி ...	2	8
55	விவாத நூல் தொகுதி ...	2	8
56.	ஸப்ரபுஜங்கீஸர்வஸ்வம் ...	0	10
57.	ஸதாசார்ய ஸம்ரக்ஷா ...	1	0
58.	ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணம் ...	0	12

கிடைக்குமிடம்: க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் P. B. A. ஸ்வாமியால் "ஷஷ்டி பூர்த்தி நினைவுமாலை" என்னும் மகுடத்தினுல் வெளியிடப்பட்டு வரும் புத்தகங்களின் ஜாபிதா

1. பூர்வாசார்ய ப்ரபாவம்.—ஸ்ரீமந்நாத முனிகள் முதலாக வேதாந்த தேசிகன் மணவாள மாமுனிகள் வரையிலுள்ள ஆசார்யர்களின் வைபவம் விசதமாகவுள்ளது இதில். விலை 1—8—0

2. நித்யாநுஸந்தேயஸ்தோத்ரமாலா.—ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் அவசியமான ஸ்தோத்ரங்களெல்லாம் இதில் எளியவுரையுடன் வெளிவந்திருக்கின்றன. அந்த ஸ்தோத்ரங்களாவன :—1. ஸப்தப்ராகாரமத்யே இத்யாதியான ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம் 2. க்ஷமாஷோடசி. 3. கமலாகுசேத்யாதி ஸ்ரீ வேங்கடேசஸ்தோத்ரம். 4. தேவராஜாஷ்டகம். 5. தேவராஜ மங்களம். 6 நரஸிம்ஹாஷ்டகம். 7. காஞ்சீக்ஷேத்ர ஸங்க்ரஹம். 8. தேவப்பெருமாள் கருடஸேவை விஷயமான (தொட்டயாசாரியர் ஸாதித்த) பஞ்சகம். 9. பராங்குசாஷ்டகம். 10. நக்ஷத்ரமாலிகை 11. தாடீபஞ்சகம். 12. ராமநுஜ சதுச்ச்லோகி. 13 ஸ்ரீவரவரமுநிதிநசர்யா. 14. உத்தரதிநசர்யா. 15. நம்பிள்ளை ஸ்தோத்ரம். 16. வரவரமுநி வைபவஸ்துதி. 17. லோகாசார்ய வைபவஸ்துதி. ஆக இவை. மூலம் தேவநாகரலிபியிலுமுள்ளது. மிகத் தெளிவானவுரை.

3. ஸ்ரீவைகுண்ட ஸ்தவவியாக்கியானம்.—கூரத்தாழ்வானருளிச் செய்த பஞ்சஸ்தவத்தில் முதல் ஸ்தவமான இது நூறு ச்லோகங்கள் கொண்டது. இதற்குப் பதவுரையும் விரிவுரையும் வெகு ரமணீயமாகவுளளது. மூலச்லோகம் தேவநாகரலிபியிலும் தமிழ் லிபியிலுமுள்ளது. விலை. 1—8—0

4. திருவாய்மொழி எட்டாம்பத்து திவ்யார்த்த தீபிகையுரை —திருவாய்மொழிக்கு மிகவிரிவாக எழுதப்பட்டு வரும் திவ்யார்த்த தீபிகையுரை, 9, 10 ஆகிய இரண்டு பத்துக்களுக்கே பாக்கியுளளது. அவையும் அச்சாகிவருகிறது. விரைவில் வெளிவரும். எட்டாம் பத்தின் விலை. 2—4—0

5 பெரிய திருமொழி 1, 2 பத்துக்கள்.—இதற்கு திவ்யார்த்த தீபிகையுரை மறுபதிப்புச் செய்யவேண்டியிருந்தபடியால் அது செய்தது இது. இதன் விலை. 3—4—0

6. ஆசார்ய ஹ்ருதயப் பதவுரை.—ஆசார்ய ஹ்ருதயஸாரம் என்று சுருக்கமாகவும் விரிவாகவும் இரண்டு பதிப்புகள் வெளியிடப்பட்டிருந்தாலும் மூலத்தின் மேல் பிரதி பதார்த்தம் தெரிந்துகொள்வதற்கு அவற்ருல் ஸௌகரியமில்லாத குறைதீர இப்புத்தகம் வெகு ஸௌகரியமாக அமைந்து வெளிவந்துளது. விலை. 4—0—0

ஷஷ்டிபூர்த்தி நினைவுமாலையின் மலர்கள் நிரந்தரமாக வெளிவந்துகொண்டிருக்கும். திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகை 9, 10 பத்துக்களும் ஸுந்தரபாஹு ஸ்தவ ஸ்ரீ குணரத்நகோச வியாக்கியானங்களும் அச்சாகிவருகின்றன.

இவையெல்லாம் காஞ்சீபுரம் கிரந்தமாலா ஆபீஸில் கிடைக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் B. P. A. ஸ்வாமி சென்னையில் ஸ்தாபித்திருக்கும் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையைப் பற்றின அறிவிப்பு.

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை சென்னையில் 1947-ஷு அக்டோபர் மாதத்தில்

ஸ்ரீ காஞ்சீ P. B அண்ணங்கராசார்ய சுவாமிகளின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

பல பெரியார்கள் இந்த ஸபைக்கு ரக்ஷகர்களான அங்கத்தினராய் ஏற்பட்டிருக்கிருர்கள்,

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும் நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

“ ஸ்ரீராமாநுஜன் ”

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும் தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை மாதப்பத்ரிகையானது ஒருமாதம் உபந்யாஸ வியாஸங்கள் கொண்டும், மற்றொரு மாதம் வியாக்கியானப் பகுதிகள் கொண்டும் வெளிவருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசக ஸபையில் மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 10 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள் ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத் தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை. மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 2-8-0
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 3-0-0
} இந்த சந்தாதாரர்களுக்கு ஒன்று விட்டொரு மாதமே பத்ரிகை வரும்.

மற்றும் இது ஸம்பந்தமான விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.

ஸத்க்ரந்த ப்ரகாசக ஸபையின் மூலமாக வெளிவந்த தமிழ்ப் புத்தகங்கள்.

		ரூ.	அ.			ரூ.	அ.
1.	பூர்வாசார்ய வைபவம்	1	8	13.	ஷை ஆறும்பத்து	2	3
2.	ஆசார்ய ஹ்ருதயஸாரம்	4	0	14.	ஷை 7. 8, 9, 10 பத்துக்கள்	8	0
3.	திவ்யப்ரபந்தஸாரத்திரட்டு	1	0	15.	திவ்யப்ரபந்தக்கண்ணுடி	0	12
4.	பன்னிரு திங்களநுபவம்	2	0	16.	விஷ்ணு ஸஹஸ்ரநாம வுரை	1	0
5.	நித்யாநுஸந்தானம் மூலம்	1	0	17.	ஸ்ரீதேசிகரஹஸ்யமாலை 1 to 16	1	0
6.	ஷை உரை	2	9	18.	திருவாய்மொழி இரண்டாம்பத்து திவ்யார்த்த தீபிகையுரை	2	0
7.	பரந்த ரஹஸ்யம் மாணிக்கமாலை	1	4	19.	ஆசார்யஹ்ருதய வியாக்கியானம் (மணவாளமாமுனிகளருளியது)	4	4
8.	ஸ்ரீராமாநுஜன் முதல் தொகுதி	4	0	20.	ஸ்ரீராமானுஜன் தொகுதி 2	4	0
9.	கத்யத்ரய உரை	1	2	21.	திருவாய்மொழி மூன்றும் பத்து திவ்யார்த்த தீபிகையுரை	2	8
10.	திருப்பாவையுரை	1	4				
11.	பகவத்விஷயம் ஈடு முதற்பத்து	1	12				
12.	ஷை இரண்டாம்பத்து	2	0				

இதில் 1 நெ. புத்தகம் மறுபதிப்புச் செய்ய நேர்ந்தபடியால் ஷஷ்டி பூர்த்தி நினைவு மாலையின் முதல் மலராக மறுபதிப்புச் செய்து வெளியிடப் பட்டிருக்கின்றது.

கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம் :—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

20—2—51

ஸ்ரீஸ்வாமியின் பெருமையைப் பற்றின ஸ்ரீமுகங்கள்.

இச்சமய விசேஷத்தில் பலமஹான்கள் நம்ஸ்வாமி விஷயத்தில் தங்களுக்குள்ள மதிப்பையும் ஈடுபாட்டையும் விளக்கிப் பல திருமுகங்களையனுப்பியுள்ளார்கள். அவற்றில் சில திருமுகங்களே இங்கு வெளியிடப்படுகின்றன.

ஸ்ரீமதுபயவே. ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகளின் திவ்ய ஸ்ரீ முகம்.

"ஆசார்ய சிகரம்"

ஸ்ரீ உவே. ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியினுடைய அபரிமிதமான வித்வத்தும், அனேக வியாக்கியானங்களையும் அனேக ஸ்ரீ கோசங்களையும் செவ்வனே பணித்தருளும் செவ்வியும், கம்பீர்வாக் சாதுர்யத்தாலே காலக்ஷேப உபந்யாஸாதிகளை ப்ரஸாதித்தருளும் பெருமையும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணாதிசயங்களும் விசத வாக்சிகாமணியான மணவாள மாமுனிகளின் மாஹாத்மியம் போலே வாசாமகோசரமாயிருக்கையாலே அவற்றை யெடுத்துரைக்க வாயோரீரைஞ்ஞூறுபெற்ற அரவரசப் பெருஞ் சோதியான அனந்தன் தானும் சக்தனோவென்று ஸந்தேஹிக்க வேண்டும்படியுள்ளது. ஆயினும் ஸ்ரீ ஸ்வாமியின் பரமானந்த பரீவாஹ ரூபமான வியாஸமொன்று அவதரித்தாகிறது. ஸமயத்தில் வந்துசேரும்.

திருமடம். ஸ்ரீ கார்யம் கிருஷ்ணையங்கார்.
திருக்குறுங்குடி. 9-3-51

திருவல்லிக்கேணி ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யஸ்வாமியின் திருமுகம்.

ஸ்ரீ காஞ்சீபுரம் மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளைப் பாலப்பிராய முதலறிவேன். அந்த ஸ்வாமியை, நாஸ்திகம் தாண்டவமாடும் இக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தை உத்தரிப்பிக்கத் தோன்றிய ஓரவதார புருஷராகவே மதிக்கின்றேன். அந்த ஸ்வாமியை யறியாதவர் இந்த பாரத நாட்டிலேயிரார். அந்த ஸ்வாமி ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங்களை ஸாங்கமாக அதிகரித்து அவை வாசோவிதேயமாய் நிற்க, மிக்க பெருந்திரளான குழுவில் ரத்நங்களான பரமார்த்தங்களை வாரிவாரி யிறைப்பதும், திவ்ய ப்ரபந்தம் முற்றவும் பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கட்கு முரண்படாது பலரும் மனங்கொண்டு போற்ற வ்யாக்யான மிட்டிருப்பதும் உலகெலாமறிந்து போற்றப்படுவனவாகும்.

ஆயிரக்கணக்காகத் திரண்டு பேரிரைச்சலிட்டுக் கொண்ட பெருங்கூட்டத்தில் இந்த ஸ்வாமி யெழுந்தருளியிருந்து உபந்யஸிக்கத் திருப்பவளங்களைத் திறந்தபோது பொங்குமா கடலொலியவிந்தது போல் எங்கும் ஸ்தப்தமாய்விட இந்த ஸ்வாமியின் பெருமிடறே கங்கா ப்ரவாஹம்போல் தட்டுத்தடங்கலின்றிப் பொழியும் அதிசயத்தை ஒருகால் காணும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. ஒரு கீறலுமின்றி முத்துக் கோத்தாற்போல் அக்ஷரங்களமையச் சிறந்த சைலியில் இன்சுவை பொதியக் கம்பீரமான பொருளோடு இந்த ஸ்வாமியின் லேககம் மிளிர்வதையும் ஸேவித்துள்ளேன். அபாரமான யோக்யதையுடன் தென்மொழி வடமொழி என்ற இரண்டு மொழிகளிலும் தட்டுத்தடங்கலின்றி ப்ரஸங்கஞ் செய்வதும் எழுதுவதுமாகிய இரண்டு திறனும் ஒருங்கே அமைந்த வ்யக்தி வேறொன்று நபூதோ நபவிஷ்யதி என்றே த்ரிகரண சுத்தியோடு விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

இப்படிப்பட்ட மஹான் விஷயத்தில் மிக்க ஈடுபாட்டினால் இந்த ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை வெகு சிறப்பாகக் கொண்டாட ஒரு ஸங்கம் மேற்கொண்டுள்ளதென்பது மஹத்ப்ரமோத ஸ்தானம்.

இந்த மஹாவித்வான் ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாய் அரோகத்ருடகாத்ரராக எழுந்தருளியிருந்து தாம் மேற்கொண்டுள்ள வாக்கினாலும் ஹஸ்தத்தினாலும் லோகோஜ்ஜீவநார்த்தமாகச் செய்யும் கைங்கர்யங்களை அநவரதம் செய்து வாழுமாறு பேரருளாளனான எம்பெருமான் க்ருபை செய்வானாக.

6—3—51 வை. மு. கோபால கிருஷ்ணமாசார்யன்

ஸ்ரீ :

ஸ்ரீமான் உ. வே. திருக்குடந்தை இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியின் ஸ்ரீமுகம்.

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

"நலத்தால் மிக்கார் குடந்தை" என்றும், "வாழ்தொல் புகழார் குடந்தை" என்றும், "செழுமாமணிகள் சேருந் திருக்குடந்தை" என்றும், மகிழ்மாலை மார்பினன் மகிழ்ந்து கொண்டாடுகிறபடி மிகப் பெருமைவாய்ந்த திருக்குடந்தையில், "த்ராவிட ச்ருதிதர்சக:" (தமிழ்மறை காட்டியவர்) என்று கொண்டாடப்படுகிற குடந்தையன் கோவலனின் குடியடியராய் விளங்கி, அவனுகந்த தமிழ்மறை கொண்டு அவனுக்கு அநவரத மந்தரங்க வடிமைசெய்து, அவ்வடிமை தானும் சில காலத்தோடு நில்லாதே பின்னாரும் பெரிது அடிமைபூண்டு வாழும்படி பரமாநுக்கிரஹம் பண்ணியருளிப் போந்த முன்னவர்களின் திருவடி ஸம்பந்தமும் திருமேனி ஸம்பந்தமும் வாய்க்கப் பெற்று, ஸ்ரீ ஆராவமுதாழ்வான் திவ்ய ஸன்னிதியில் ஆழ்வார்களருளிச் செயலை அநுஸந்திக்கும் பரமபாக்கியம் பெற்றபடியினால்,

"நல்லரன் நாரணன் நான்முகனுக்கிடந்தான் தடஞ்சூழ்ந்தழகாயகச்சி" என்றும், "வரந்தருமாமணி வண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி" என்றும், "முத்திதரு நகரேழில் முக்கியமாங்கச்சி" என்றும், "காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனி யருளாளர் கச்சிக்கொவ்வா" என்றும், "தொண்டைநாடு சான்றோருடைத்து" எனப் புகழப்பட்ட, "தொண்டையெனும் மண்டலத்தில் நடுவில் பாரில் தூநில மெய்விரதம்" என்றும், கலியனாலும், கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனான தூப்புற் குலமணியாலும் கொண்டாடப்பட்ட கச்சிமாநகரின் கண், "கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்" என்றும், "கருதவரந்தருந் தெய்வப் பெருமாள்" என்றும் வியப்பாக விருதூதும்படி பெருந்தேவியாருடன் விளங்கிநிற்கிற பேரருளாளன் திவ்ய ஸன்னிதியில், அடியார்கள் குழாங்களுடன் அநவரதம் ஆழ்வார்களருளிச் செயலை ஓதி நிற்குந்தலைவரான ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் அண்ணங்கராசார்யஸ்வாமியின் நட்புக்கு முப்பது வருடங்கட்கு முன்பே பாக்கியம் பெற்றவனடியேன்.

நமது ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் நிகழும் விக்ருதி, பங்குனி விசாகத்திலாதலால், அந்த ஸ்வாமி ஸம்பந்தமான பெருமைகளை அறிந்த மட்டில் சுருக்கமாக எழுதியனுப்ப வேண்டுமென்று ஸ்ஹ்ருதயர்களிடமிருந்து ஒரு பத்திரிகை கிடைத்தது.

ஸ்ரீ பாகவதோத்தமர்களின் பெருமைகளை எவருமறிந்து பேசமுடியாதென்பது எவருமறிந்த விஷயமேயாகிலும் ஸ்ரீஸ்வாமி ஷஷ்டியப்தபூர்த்தி நன்னாளில் நமக்கும் சிறிது ஸம்பந்தம் கிடைக்கப்பெறுகிறதே என்றே ஒருவாறு எழுதத் துணிகிறேன்.

(1) ஸ்ரீ ஸ்வாமியின் திருவம்சப் பெருமை. வாசாமகோசரம்.

(2) பிரதி தினம், சிற்றஞ் சிறுகாலையில் வடமொழிமறை யோதிக்கொண்டு, கச்சிப் பேரருளாளன் மாடவீதிப்ரதக்ஷிணமாகப் பெரிய கோஷ்டியுடன் எழுந்தருளும் அழகு மிகவும் சிறந்தது.

(3) பின்னர், வெள்ளக்குளமென்கிற தெண்ணீர்ப் பொய்கையில் நீராடி அங்குத்தானே அனுஷ்டானங்கள் பண்ணி அங்கிருந்து ப்ரபந்த காயத்ரியைப் பாராயணம் பண்ணிக்கொண்டு திவ்ய தேஜஸ்ஸுடன் திருமாளிகைக் கெழுந்தருளும் பெருமை பகரவொண்ணாதது.

(4) அதன் பின்னர், ஸன்னிதியில் விச்வரூபமாகி பேரருளாளன் திருவாராதனங் கண்டருளுகையில் பெரிய திருவோலக்கத்தில், நாலாயிரக்கிரமமாக ஸேவை சாற்றுமுறை செய்யும் சதிர், சாதுசனங்கள் ஸந்தோஷமாக அனுபவிக்கும்படி.

(5) நித்யோத்ஸவாதிகளான எல்லா உத்ஸவங்களிலும் அகலாது இயல் கோஷ்டியை அலங்கரிக்கும் ப்ரகாரங்களை அமைத்துக்கொள்ள அவரேயறிவர்.

(6) நெடுநாளாகத்தாம் நிறுவியுள்ள வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலையினுடையவும், சிறிது பின்னால் அமைக்கப்பட்ட ஸ்ரீ நம்பிள்ளை ஸன்னிதியினுடையவும், காலக்ஷேப திருவாராதன, லௌகிக கார்ய நிர்வாஹங்களை, எந்த கைங்கர்யங்கட்கும் இடையூறின்றி இனிது நடத்துங்காட்சி ஆச்சர்யமாகவிருக்கும்.

(7) கிரந்தங்கள் எழுதுவதிலோ, அச்சிட அனுப்புவதிலோ, வருகிற ப்ரூப்களை உடனுக்குடன் தவக்கமின்றிச் சோதித்து, புத்தகமாக விரைவில் வெளியிடுவதிலோ உள்ள விநோதம் விவேகிகள் வியக்கும்படியாயிருக்கும்.

(8) சென்னை மாநகர் தொண்டைமண்டலக் கலாசாலையில் ஸ்வாமியின் உபந்யாஸங்களில் பல உபந்யாஸங்களைக் கேட்டு அனுபவித்திருக்கிறேன். அவ்வானந்தானுபவ காலத்தில் ரஸிகர்களனைவரும் ஆனந்தக்கடலில் அமிழ்ந்தே யிருப்பர்களென்றால், அது சிறிதேனும் மிகையாகாது.

(9) ஸ்வாமியால் வெளியிடப்பட்ட ஆழ்வாராசார்யாதிகளின் ஸ்ரீஸூக்தி வ்யாக்யானரீதிகள் எவரும் எளிதிலறியும் வண்ணமே விளங்கும்.

10. எம்பெருமானாருடைய கிரந்தங்கள் முதலாக, ப்ரதான ஆசார்யர்களுடைய கிரந்தங்களனைத்தையும், மாலை மாலையாகத் தொடுத்து, மாலுகக்கச் செய்த அரிய பெரிய கைங்கர்யத்தை யறிந்த வைணவ வுலகமனைத்தும் மால்கொண்ட சிந்தையாய் மனமார வாழ்த்தி நிற்கின்றது.

11. வடமொழியிலும், தென்மொழியிலும், இவ்விரண்டும் விரவிய மணிப்ரவாளத்திலும், ஹிந்தி, தெலுங்கு முதலான பலபாஷைகளிலும் பலருக்கும் பாங்கான படியில் எழுதிப் பரவச்செய்யுமதைப் பார்க்கும் பாரோர்களெல்லாம் பரவிப் பணிந்தேத்தி நிற்கின்றனர்.

இச்சிறப்புக்கெல்லாம் காரணம் தேடிக்கண்டறிய வேண்டும் படியோவிருக்கிறது; பெரிய பிராட்டியாரும் நஞ்சீயரும், தம் அவதாரத்துக்குப் பாங்காகக்கொண்ட பங்குனி மாதம்; திருநாவீறுடைய பிரான் திருவவதரித்த திருவிசாக நக்ஷத்திரம்; *வேதாந்த தேசிக கடாக்ஷவிவ்ருத்த போதம்* என்று ஆரம்பித்துப் போற்றப்படும் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணனின் திருவம்சம்; வேறு என்னபாக்கியம் வேண்டும்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, மஹா வித்வானாய் மிகவும் மஹநீயராயிருந்த ஸ்ரீ ஜகத்குரு, காதி. அனந்தாசார்ய ஸ்வாமியின் பரமாநுக்கிரஹம் பெற்ற பரிசு.

இப்பெருமைகளை நோக்குமிடத்து, 'சேராதனவுளவோ பெருஞ்செல்வர்க்கு" என்கிற கம்பநாட்டாழ்வார் பாசுரமே கருத்தில் காட்சி கொடுக்கிறது.

இவ்வண்ணம் வரைந்த விஷயங்களெல்லாம்-நேரில் அநுபவித்த பலகடல்கள் போன்றவற்றில் சிறு திவலையேயாகும். அநுபவித்துப் பூர்த்தியாக எல்லைகாண முடியாதவற்றில் மேலும் முயன்றுதான் பயன் என்னே! என்று இத்துடன் நிற்கின்றனன்.

ஸ்ரீ ஸ்வாமி, பகவத் பாகவத ஆசார்ய கடாக்ஷங்களால் உத்தரோத்தரம் மிகுந்த ஆயுராரோக்யஸத்ஸந்தாநாதி ஸகல ச்ரேயஸ்ஸுகளுடன், நெடுங்காலம் எழுந்தருளியிருந்து, உலகினரனைவருமினிது வந்துய்யும் வண்ணம் திவ்யஸூக்தியபிவ்ருத்திகளைச் செய்துகொண்டு விளங்கவேண்டுமென, ஸ்ரீ கோமளவல்லீ நாதனும், ஸ்ரீவைதிக விமாநாதிஷ்டாதாவான ஆராவமுதாழ்வானை அநவரதமடி பணிந்திறைஞ்சுகின்றனன்

விக்ருதி, மாசிப், பூராடம்
33 நெ. கருணைக் கொல்லை அக்கிரஹாரம்,
திருக்குடந்தை

இளையவில்லி
தி. ஸ்ரீநிவாஸாசாரியன்.

ஸ்ரீமத். உ. வே. ந்யாய வேதாந்த வித்வான்.
காரப்பங்காடு. **வேங்கடாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீமுகம்.**

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

“ஜகதாசார்யர்”

ஸ்ரீவைஷ்ணவ உலகத்தில் ‘ஜகதாசார்யர்’ என்னும் திருநாமத்தைக் கேள்விப்படாதார் இல்லை என்றே சொல்லலாம். ஒப்பற்ற மஹிமையுடையவராய், நஞ்சீயராலே ‘நம்முடையபிள்ளை திருக்கலிகன்றிதாஸர்’ என்று அபிமாநிக்கப்பட்டவராய், ‘நம்பிள்ளை கோஷ்டியோ? நம்பெருமாள் கோஷ்டியோ? என்று விகல்பிக்கலாம்படி மஹாஸம்ருத்தியுடையராய் எழுந்தருளியிருந்த நம்பிள்ளையே ‘ஜகதாசார்யர்’ என்று கொண்டாடப்படுகிறார். இம்மஹானுடைய திருவடிகளில் ஆச்ரயித்திருந்த பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் ஸப்ரஹ்மசாரிகளாக வாழ்ந்து ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் கற்றறிந்தவராவர்கள்; ஸூக்ஷ்மதர்சிகளான இவ்விரு ஆசிரியர்களையும் ‘நம்பிள்ளைக்கு நயநத்வயம்’ என்பர் ஆன்றோர்.

இம்மூன்று மஹான்களாலும் இவ்வுலகுக்கு விளைந்த மஹோபகாரம் அபரிமிதம் என்று தான் பேசலாம்.

மணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில் :—

“தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையறிவாரார்
அருளிச்செயலை யறிவாரார்—அருள்பெற்ற
நாதமுனி முதலாநந் தேசிகரையல்லால்
பேதைமனமே யுண்டோ பேசு”

என்னும் பாசுரத்தில்—பரமபுருஷனுடைய பரம க்ருபையால் சிறந்த அறிவு பெற்றுள்ள ஆழ்வார்கள் பெருமையை அறியத்தக்கவராா? அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய ப்ரபந்தங்களின் மஹிமையை அறியத்தக்கவரார்? அவர்கள் க்ருபைக்குப் பாத்ரபூதரான நாதமுனிகள் முதலான நம் பூர்வாசார்யர்களை யொழிய ஆராகிலுமுண்டோ?

உண்டாகில் சொல்லிக்காண்'' என்று ஆழ்வார்கள் அருளிச்செயல்கள், ஆசார்யர்களுக்குள்ள பெருமையைப் பேசியனுபவித்து அதன்பின்,

நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிட''
''தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை''

என்னும் பாசுரங்களில் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரான நம்பிள்ளை தம்முடைய குளிர்ந்த அருளாலே திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்யானம் பண்ணுமென்று நியமித்தருள பெரியவாச்சான் பிள்ளை அதை அனுஸரித்து அந்த திவ்ய ப்ரபந்தத்திற்கு இருபத்து நாலாயிரப்படி அருளிச்செய்ததையும் வடக்குத் திருவீதிப் பிள்ளை ஈடுமுப்பத்தாறுயிரம் அருளிச்செய்ததையும் அருளிச்செய்திருக்கிறுர்.

பெரியவாச்சான் பிள்ளை அநுக்ரஹித்த ஸகல அருளிச்செயல்களின் வ்யாக்யாநங்களையும், ஸ்ரீராமாயணத்தில் பல பல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வ்யாக்யானங்களையும் ஸ்தோத்ர ரத்நாதி வ்யாக்யாநங்களையும் அனுபவிக்குங்கால் ஸ்ரீ வைஷ்ணவ உலகத்திற்கு இம்மஹான் செய்த மஹோபகாரங்கள் அதிப்ரஸித்தங்களென்று உபபாதித்துச் சொல்லவும் வேண்டுமோ?

மணவாள மாமுனிகள் 'வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை' என்று அருளிச்செய்திருக்கிறுர். ஸமகாலத்திலவர்களை யொழிய, பின்புள்ளாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி ஈடுமுப்பத்தாறுயிரம் என்னும் க்ரந்தத்தை உபகரித்த ஔதார்யத்தையே புகழ்ந்து வள்ளல் என்றும், ஆழ்வார் ஊருநாடுமுலகமுந் தம்மைப் போலிருக்கும்படி திருவாய்மொழி பாடினுற்போல் இவர் நாட்டிய ஈடுநன்குரைத்தது என்றும் கொண்டாடுகிறுர்.

இவ்வாறு தாமும், தமக்கு நயநத்வயமான சிஷ்யர்கள் முகமாகவும் ஸ்ரீ வைஷ்ணவ உலகத்திற்குப் பரமோபகாரத்தைச் செய்தருளிய ஜகதாசார்யரான நம்பிள்ளையின் திருவவதாரமே ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதியா யெழுந்தருளியிருக்கிற காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி என்னும் விஷயம் உலகறிந்ததேயாம்.

நம்பிள்ளை ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே கற்றறிந்து அந்தப்பாண்டித்யம் முழுவதையும் அருளிச் செயலுபந்யாஸங்களிலே உபயோகப்படுத்தி வந்தார் என்பது ப்ரஸித்தம். பெரியவாச்சான் பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை ஆகிய இம்மஹான்களின் அருளிச்செயல் வ்யாக்யாநங்களிலும் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் நாமனுபவிக்கிறேம்.

நம் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்வாமி உபந்யாஸங்களிலும், பெரியவாச்சான் பிள்ளையைப் போலவே உபகரித்த திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை என்னும் அருளிச்செயல் வ்யாக்யானங்களிலும் பஞ்சஸ்தவம் முதலான ஸ்தோத்ர வ்யாக்யானங்களிலும் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் ப்ரத்யக்ஷமாக அனுபவிக்கும்படி பாக்யம் பெற்றுள்ள நமக்கு ஸ்ரீ ஸ்வாமியின் அவதாரத் தன்மை ப்ரத்யக்ஷஸித்தம்.

நாளது பங்குனி விசாகம் ஸ்ரீ ஸ்வாமி திருவவதரித்த நன்னாளாகும். ஸ்ரீஸ்வாமியின் பெருமைக் கனுகுணமாயும் சிஷ்யகணங்கள் பலவற்றின் அன்புக்குச் சேரவும் ஷஷ்டி அப்தபூர்த்தி மஹோத்ஸவம் காஞ்சியிலும் சென்னைமா நகரத்திலும் கொண்டாடப்படவிருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமி இவ்வுலகில் எண்ணிறந்த ஷஷ்டி அப்தபூர்த்தி மஹோத்ஸவங்களைக் கண்டருளி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை ப்ரவசனமுகங்களாலும் க்ரந்தமுகங்களாலும் ஓங்கித்தழைக்கச்செய்து எழுந்தருளியிருக்க ஸ்ரீ பார்த்தஸாரதி அருள்க.

வெங்கடாசாரி, காரப்பங்காடு.

॥ श्रीरस्तु ॥

॥ श्रीमते रामानुजाय नमः-श्रीमद्वरवरमुनये नमः ॥

श्रीकाञ्ची प्रतिवादिभयंकर अण्णङ्गराचार्यस्वामिपाद

वैभवसंग्रहात्मिका

(श्रीकैरविणीनिवासिना अ. मु. श्रीनिवासाचार्येण प्रणीता ।)

॥ आचार्यवैभवद्विशती ॥

— पूर्वशतकम् —

अभिवाद्य सद्गुरूणामङ्घ्रिसरोजातयुगलमभिरामम् ।
अण्णङ्गरार्यचर्यामृतमिदमवतारयामि बुधभोग्यम् ॥1॥

काञ्चीवादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यशुभचर्याम् ।
उपवर्ण्य तद्गुणौघप्रवणानां हृत्प्रहर्षयिष्यामि ॥2॥

सर्वे पूर्वाचार्यास्संमिलितास्सन्त इह समाजग्मुः ।
अण्णङ्गरार्यमूर्त्येत्यभिनन्दद्भ्यो नमोऽस्तु विद्वद्भ्यः ॥3॥

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின்
வைபவங்களைச் சுருக்கமாகவுரைக்குமதான

ஆசார்ய வைபவ த்விசதியின் தமிழ்க் கருத்துரை.

திருவல்லிக்கேணி. அ. மு. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியது.

பூர்வ சதகம்.

—:o:—

1. பூர்வாசாரியர்களின் இணையடியையிறைஞ்சி அவர்களின் அருளைக்கொண்டு அண்ணங்கராசார்ய சர்யாம்ருத மென்னுமிந்த க்ரந்தத்தை வித்வான்களுக்கு உணவாக அளிக்கின்றேன்.

2. ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் பெருமைகளைப் பேசி, அவருடைய திருக்குணங்களி லீடுபட்டிருக்கும் பெரியார்களின் உள்ளத்தை உகப்பிக்கப் புகுகின்றேன்.

3. நம்முடைய ஸம்ப்ரதாயத் தலைவர்களான ஸகல பூர்வாசார்யர்களும் திரண்டு வந்து அண்ணங்கராசார்ய ஸ்வாமியாக அவதரித்தார்களென்று கொண்டாடும் வித்வான்கள் பலருளர்; முன்னம் அவர்களைத் தொழுதிறைஞ்சுவோம்,

शठरिपुयतिपतिवरवरयमिनां पर्यायभूत एवासौ ।
गुरुरिति कृतशपथानां सूनृतवाचां सतां वृणे चरणौ ॥4॥

हस्त्यद्रिनाथशर्मा प्रथितो वाण्यां हि योऽत्र गैर्वाण्याम् ।
अण्णङ्करार्यनाम्ना त्रिभुवनविदितस्स एव गुरुवर्यः ॥5॥

" काञ्चीसौम्यवरोपयन्तृयमिराट्कारुण्यसंपादितश्रीमद्द्राविडवेदभाष्यविशदज्ञानामृतास्वादनम् ।
वात्स्यश्रीमदनन्तदेशिककृपासंप्राप्तभाष्यामृतं वन्दे वादिभयङ्करार्यकुलजं हस्त्यद्रिनाथं गुरुम् ॥ "

इति शिष्यबृन्दनित्योद्गीतसुपद्योक्तशुभगुणोल्लसितम् ।
वत्सान्ववायसिन्धोः कौस्तुभमण्णङ्करार्यगुरुमीडे ॥6॥

अण्णङ्करार्यगुरुणा रचितान् सद्ग्रन्थतल्लजान् फणिराट् ।
अपि नहि संख्यातुमलं, प्रथितो भुवने प्रभाव एषोऽस्य ॥7॥

वयमिह तद्गुरुसूक्तिप्रचयैराकृष्टमानसा विवशाः ।
तद्गुणपयोधिकणिकास्वादनहेवाकतः प्रवृत्तास्स्मः ॥8॥

स्वामिप्रभावमतुलं प्रातस्सायं च चिन्तयितुमिच्छा ।
विलसति येषां तेषां प्रहर्षपुष्ट्यै च नः प्रवृत्तिरियम् ॥9॥

---

4. ஆழ்வாரெம்பெருமானார் ஜீயரென்னும் ஆசார்ய சிகாமணிகள் மூவரும் நம் ஸ்வாமியாகத் திருவுருக் கொண்டபடியே யென்று ஆணையிட்டுக் கூறுகின்ற மெய்ம் மொழியாளர்களின் திருவடிகளையே தஞ்சமாகக் கொள்ளுகின்றேன்.

5. வடமொழியில் ஸ்ரீஹஸ்த்யத்ரி நாத சர்மா வென்று வழங்கப்பட்டுவரும் ஸ்வாமி அண்ணங்கராசார்ய ரென்று உலகம் யாவுமுணர நிற்கின்றார்.

6. " காஞ்சீ ஸௌம்யவரோபயந்த்ருயமிராட்காருண்யஸம்பாதித
ஸ்ரீமத்த்ராவிட வேதபாஷ்ய விசதஜ்ஞாநாம்ருதாஸ்வாதநம்,
வாத்ஸ்ய ஸ்ரீமதநந்த தேசிகக்ருபாஸம்ப்ராப்த பாஷ்யாம்ருதம்
வந்தே வாதிபயங்கரார்ய குலஜம் ஹஸ்த்யத்ரிநாதம் குரும். "

என்று அடியார்கள் நிச்சலுமநுஸந்திக்கும் தனியனில் விளங்கும் பெருமை பொலிந்து ஸ்ரீவத்ஸகுலதிலகராய்த் திகழும் நம் ஸ்வாமியைத் துதிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

7. ஸ்ரீஸ்வாமியருளிச் செய்த மிகச்சிறந்த க்ரந்தங்கள் ஆயிரவாய் படைத்த ஆதிசேஷனுலு மெண்ணப்போகாதவை ; இப்படிப்பட்ட பெருமை நம் ஸ்வாமிக்குள்ள தென்பது உலகமுழுது முணர்ந்ததேயாம்.

8. அப்படிப்பட்ட நம் ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்திகளில் நாம் ஈடுபட்டுள்ள தனாலேயே அவரது குணக்கடலில் சில திவலைகளைப் பருகிக் களிப்போமென்று குதூஹலந்தூண்டக் கிளம்புகின்றோம்.

9. இப்படிப்பட்ட நம் ஸ்வாமியின் நிகரற்ற பெருமையை அல்லும்பகலு மநு ஸந்திக்க விருப்பமுடையாரை உகப்பிக்க வேண்டியும் இப்பெருமைநூல் பணிக்கப் படுகின்றது.

यतिपतिदर्शनतत्त्वं वरवरयोगीन्द्रसूक्तिहृदयं च ।
यस्य वचोभिरनर्घैस्सन्तो जानन्ति स गुरुरयमेव ॥10॥
श्रीमल्लोकाचार्यत्रय्यन्ताचार्यसूक्तिबृन्दानि ।
अधिगत्य निर्विशेषं सारग्राही स एष गुरुवर्यः ॥11॥
यस्य तु हृदयं सततं निरवद्यानेव समुचितानर्थान् ।
प्रतिपद्यते तमेनं प्रवदन्ति गुरुं बुधाः प्रशस्तधियम् ॥12॥
येनाविष्कृतमर्थं सन्तस्सर्वेऽपि सादरं शिरसा ।
मनसा चात्यभिनन्दन्त्येष गुरुर्लसति शाश्वतजयश्रीः ॥13॥
त्रिशताभ्यधिकसुचारुप्रबन्धनिर्माणनैपुणीभूम्ना ।
आसेतुशीतशैलं प्रथितो गुरुवर्य एक एवैषः ॥14॥
* सिद्धमिति देशिकोक्तिप्रतिपादितलक्षणस्य पौष्कल्यम् ।
एतस्मिन् खलु सूरावेकस्मिन् वीक्ष्य मोदते भुवनम् ॥15॥
शठरिपुकलिजित्प्रमुखप्रणीतदिव्यप्रबन्धबृन्दानि ।
यद्व्याख्याभिर्विशदान्यासन् गुरुरेष निस्तुलो विद्वान् ॥16॥

---

10. எம்பெருமானார் தரிசனத்தி னுண்மையையும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் ஆழ்பொருளையும் நம் ஸ்வாமியின் அரிய பெரிய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே உலகம் அறியப் பெறுவதனால் ஸ்வாமி யொருவரே தூமொழி வல்லவர்களில் தலைவராவர்.

11. பிள்ளைலோகாசார்யர் வேதாந்தாசார்யர் ஆகிய பேராசிரியர்களிருவருடையவும் ஸ்ரீஸூக்திகளை யெல்லாம் ஒருங்கேயதிகரித்து ஸாராஸாரவிவேகம் பண்ணி ஸாரத்தைக் கடைப்பிடித்தவர் நம் ஸ்வாமி.

12. நம் ஸ்வாமியின் திருவுள்ளமானது எப்போதும் தீதற்ற ஏற்ற பொருள்களையே கொள்ளுமேயல்லாது ஆகரஹத்தினால் அபார்த்தங்களைக் கொள்ளுவதென்பது ஒரு போதும் கிடையாது.

13. ஸ்வாமி வெளியிட்டருளும் அர்த்தங்களை ஸாத்விகர்கள் யாவரும் ஸர்வாத்மநா ஆதரித்துக் கொண்டாடுவதனால் எப்போதும் குறையாத வெற்றிப்புகழ் நம் ஸ்வாமியினுடையதேயாகின்றது.

14. முந்நூறுக்கு மேற்பட்ட மிகவுயர்ந்த க்ரந்தங்களையருளிச் செய்திருக்குந் திறமையினால் இமவந்தந்தொடங்கி இருங்கடலளவும் புகழ்பெற்ற மஹாசார்யர் நம ஸ்வாமி யொருவரேயாவர்.

15. தேசிகருடைய ந்யாஸ விம்சதியில் *ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம்* என்கிற ச்லோகத்தினால் தெரிவிக்கப்பட்ட ஆசார்ய லக்ஷணம் முழுவதும் நம் ஸ்வாமி யொருவர் பக்கலிலேயே அமைந்துள்ளதென்று யாவருங் கண்டறிந்து களிக்கும்படியுள்ளது.

16. நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்கள் யாவருமருளிச் செய்த திவ்யப்ரபந்தங்களின் சீரிய பொருள்கள் நம் ஸ்வாமியின் வியாக்கியானங்க

श्रीयामुनार्ययतिपतिकूरेशतदात्मजादिगुरुकृतिषु ।
यद्व्याख्ययैव तत्त्वं विदन्ति विद्वांस एष गुरुरिन्धाम् ॥17॥

यस्सर्वशास्त्रसागरकूलंकषधीविलास इति सर्वैः ।
विबुधैरभिनन्द्यस्सन् विलसति सर्वज्ञ एव गुरुरेषः ॥18॥

दुर्वादिवादतूलानल इति शंसन्ति यं बुधास्सततम् ।
अन्वर्थवादिभीकरविरुदस्सूरिस्स एष गुरुसिंहः ॥19॥

यन्मुखनिर्गतसूक्तिषु लवलेशकलां बुधा उपादाय ।
उद्घाट्य सदसि सपदि प्रख्यातिं यान्ति सोऽयमसमानः ॥20॥

दुर्वादिभीकरत्वं यस्मिन्नन्वर्थमनुभवन्त्यार्याः ।
तं प्रतिपक्षिभिरपि च स्तुत्यं नित्यं स्तवानि गुणविद्धः ॥21॥

यस्य गुणेन क्रीता अनसूयाः प्राज्ञपरिवृढाः प्रेम्णा ।
सूक्त्यनुरक्तास्सततं मोदन्ते, सोऽयमभिनवश्शठजित् ॥22॥

களைக் கொண்டே விளக்கமாக அறியக்கிடக்கின்றமையால் ஸ்வாமியை ஒப்புயர்வற்ற வித்வானென்று உலகம் போற்றுகின்றது.

17. ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளின் உண்மைப் பொருள்களையும் நம் ஸ்வாமியின் வியாக்கியானங்களைக்கொண்டே அறியவேண்டியிருப்பதால் ஸ்வாமிக்கு நாம் பல்லாண்டு பாடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

18. ஸகல சாஸ்த்ரக் கடல்களையும் கரைகண்ட மஹாபுத்திமானென்று உலகம் போற்ற நிற்பவர் நம் ஸ்வாமி.

19. அன்றியும், துர்வாதிகளின் துர்வாதங்களையெல்லாம் தீயினில் தூசாக்கவல்ல நம்ஸ்வாமி ப்ரதிவாதி பயங்கரரென்று பரம்பரா ப்ராப்தமான பிருதை அந்வர்த்தமாகக் கொண்டவர்.

20. ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து வெளிவந்த ஸ்ரீஸூக்திகளினின்றும் மிகச் சில பகுதிகளையே திரட்டிக்கொண்டு இதர பண்டிதர்கள் அவற்றைச் சபைகளிற் பேசிப் புகழ்பெறுகின்றனர்.

21. சிலபண்டிதர்கள் பொறாமையினால் ஸ்வாமியிடம் எதிரம்பு கோக்கவந்து உடனே பராஜயமடைந்து போவதனால் நம் ஸ்வாமியையே வாதிபயங்கரரென்னத் தகுமென்று எதிரிகளும் கையெழுத்திடும்படியாகவுள்ளது; அப்படிப்பட்ட ஸ்வாமியின் பெருமையை நாம் எடுத்துரைக்கவேண்டுவது அவசியமன்றோ.

22. அஸூயைக்கு வசப்படாத பண்டிதோத்தமர்கள் யாவரும் ஸ்வாமியின் திருக்குணங்களில் துவக்குண்டு ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளிலு மீடுபட்டு 'ஸாக்ஷாத் நம்பிள்ளையின் அபராவதாரமேயிவர்' என்று என்றென்றும் கொண்டாடுகின்றனர்.

यस्य मुखकमलनिर्गतसूक्तिसुधापानमुदितहृत्सकलम् ।
भुवनं विभाति सोऽयं प्रत्यक्षो भट्टपादगुरुरेव ॥23॥

चतसृषु भाषास्वपि च प्रतिमासं पत्रिकाः प्रकाशयता ।
गुरुणाऽनेन धरित्री निखिलाऽपि पवित्रिता स्वसूक्तिभरैः ॥24॥

मात्सर्यभरितचित्ता अपि यत्कृतिरत्नबृन्दमाराध्य ।
अन्तर्हृष्यन्तितमां गुरुरयमेको हि सत्यवैदुष्यः ॥25॥

भुवि विकृतिशरदि मीने वकुलाभरणार्यभे शुभे काञ्चयाम् ।
रङ्गार्यपुत्रभावेनोदितमेनं वदन्ति कारिसुतम् ॥26॥

यस्य कुलवैभवं श्रीमुडुम्बिनम्ब्याख्यगुरुवरोपज्ञम् ।
अप्यष्टदिग्गजौघे परिगणना चेति, गुरुरसौ मान्यः ॥27॥

चौलोपनयनमुख्यान् संस्कारान् प्राप्य समुचिते वयसि ।
द्राविडसंस्कृतविद्या निरवद्या अग्रहीद्गुरुस्सोऽयम् ॥28॥

विद्याधीशाचार्येत्याख्याविख्यातमाध्वबुधवर्यात् ।
तद्भ्रातृरामचन्द्राचार्यादात्मीयतातपादेभ्यः ॥29॥

---

23. ஸ்வாமியின் முகாரவிந்தத்தில் நின்றும் வெளிவந்த அமுதம்போன்ற ஸ்ரீஸூக்திகளைப் பருகிப்பருகி உலகமெல்லாம் உள்ளம்பூரித்திருக்கின்றது; இப்பேராசியர் ஸாக்ஷாத் பட்டரேயாவர்.

24. தமிழ் ஸம்ஸ்க்ருதம் தெலுங்கு ஹிந்தியாகிய நான்கு பாஷைகளிலும் மாதப்பத்திரிகைகள்வெளியீடுமுகமாகத் தம்முடைய புனிதமான ஸ்ரீஸூக்திகளை ஸ்வாமி உலகமெங்கும் பரவவிடுவதனால் இவ்வுலகம் முழுவதும் ஸ்வாமி ஸ்ரீஸூக்திகளினாலேயே தூய்மைபெற்று விளங்குகின்றது.

25. மாச்சரியங்கொண்ட மனத்தவருங்கூட நம்ஸ்வாமியின் நூல்களை மிகவாதரித்து இவரொருவரே உண்மையான பாண்டித்யம் பெற்றவரென்று உள்ளம் பூரிக்கின்றனர்.

26. விக்ருதியாண்டு பங்குனித்திங்கள் விசாகாநக்ஷத்திரத்தில் காஞ்சீமஹாபுரியில் ரங்காசார்ய ஸ்வாமிக்குத் திருக்குமாரராக இந்நிலவுலகில் திருவவதரித்த நம் ஸ்வாமியை ஸாக்ஷாத் நம்மாழ்வாருடைய அபராவதாரமென்றே அறிஞர் கூறுவர்.

27. எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் ஒருவரான முடும்பைநம்பியின் திருவம்சத்தில் தோன்றி, மணவாளமாமுனிகள் நியமித்தருளின அஷ்டதிக்கஜங்களில் பரிகணனைபெற்ற குலப்பெருமை நம் ஸ்வாமியினுடையது.

28—31. சௌளம் உபநயனம் முதலிய சடங்குகளைக் காலகாலத்தில் பெற்றுத் தென்மொழிக்கல்விகளையும் வடமொழிக்கல்விகளையும் நன்குபயின்றவர் நம் ஸ்வாமி. த்வைதஸம்ப்ரதாயத்தில் வித்யாசார்யரென்று ப்ரஸித்தரான பண்டிதர், அவருடைய ஸஹோதரர் ராமசந்த்ராசார்யர், தமது திருத்தகப்பனார், இளங்காடு ரங்கநாதாசார்யர், இளையவில்லி ஸ்ரீநிவாஸவரதாசாரியர், பூர்வாச்ரம மாதாமஹரான ஜீயர்ஸ்வாமி, உலகம்

वालवनरङ्गनाथाचार्येभ्यो बालधन्विसूरिभ्यः ।
मातामहचरणेभ्यो विख्यातानन्तसूरिपादेभ्यः ॥30॥

काव्यालंकृतिनाटकतर्कव्याकरणमुख्यबहुविद्याः ।
अधिगत्य, वयसि विंशे निरुपमविद्वत्प्रथामसौ लेभे ॥31॥

सार्थं द्राविडवेदं बाल्येऽधीत्य प्रसिद्धिमभ्यधिकाम् ।
विन्दन् गुरुरयमिन्धे वेदद्वयमर्मवेदिनामग्र्यः ॥32॥

बाल्येऽनन्तगुरूत्तमपाराधीन्यं प्रपद्य संवृद्धः ।
दीपादिव प्रदीपस्संजातो भाति गुरुरसौ धरणौ ॥33॥

मातामहयतिचरणग्राहितसद्द्राविडोक्तिसर्वस्वम् ।
गुरुमिममाहुरशेषः साक्षात्परिदृश्यकुम्भसंभूतिम् ॥34॥

कम्बकवीन्द्रसदुक्तिषु तथाऽन्यलक्ष्यप्रबन्धसंदोहे ।
लक्षणकृतिषु च लब्धप्रावीण्यस्सत्यमद्वितीयोऽसौ ॥35॥

ख्यातचतुर्विध कविताचातुर्यनिधिं निधिं सुविद्यानाम् ।
हृद्यानर्घमहागुणमत्यादरतस्स्तुवन्ति कवय इमम् ॥३६॥

நிறைந்த புகழாளரான காதி அனந்தாசார்யஸ்வாமி ஆகிய இப்பெரியார்களிடமிருந்து காவ்யாலங்கார நாடக தர்க்க வ்யாகரணம் முதலிய பல கலைகளையும் கற்று, இருபது திருநக்ஷத்திரத்திலேயே சிறந்த வித்வானென்கிற புகழைப்பெற்றார் ஸ்வாமி.

32. தமிழ்வேதமாகிய நாலாயிரதிவ்யப் பிரபந்தம் முழுவதையும் இளம்பிராயத்திலேயே அர்த்தத்தோடுங்கூட அதிகரித்து ஸ்ர்க்கத்தி பரீக்ஷை கொடுத்துத் தேறி நிகரற்ற புகழ்படைத்தவர் நம் ஸ்வாமி; [பிறகு வடமொழிவேதத்தையும் குறையறவோதி] உபயவேதங்களிலும் ஆழ்ந்தவர்களிலும் ஒப்பற்றவரென்று கொண்டாடத் தக்கவராயினர்.

33. இளமையில் காதிஅனந்தாசார்ய ஸ்வாமியின் ஆதீனத்திலிருந்துகொண்டு நம்ஸ்வாமிவளர்ந்தவராதலால் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல விளங்காநின்றார்.

34. தமக்குப் பூர்வாச்ரம மாதாமஹரும் இருந்தமிழ்நூற் புலவருமான ஸ்ரீமத் பரமஹம்ஸ: (ஷஷ்டி ஜீயரென்று ஸுப்ரஸித்தரான) அழகிய மணவாள ராமாநுஜஜீயர் ஸ்வாமியின் திருவருளால் தமிழ்நூற்புலமைபெற்ற நம் ஸ்வாமியை வண்டமிழ் மாமுனியாகிய அகஸ்த்யரே வடிவெடுத்து வந்தவராகத் தமிழறிஞரனைவருங் கூறுவர்.

35. கம்பராமாயணம், பிள்ளைப் பெருமாளையங்கார் அஷ்டப் பிரபந்தம் முதலிய இலக்கிய நூல்களிலும் நன்னூல் முதலான இலக்கண நூல்களிலும் நிகரற்ற புலமை பெற்றவர் நம் ஸ்வாமி.

36. ஆசுகவி, சித்ரகவி, மதுரகவி, விஸ்தாரகவி என்று சொல்லப்படும் நால் வகைக் கவிதைகளிலும் நிபுணராய் ஸகலகலாவல்லபராய் மிகச்சிறந்த திருக்குணங்களமைந்தவரான நம் ஸ்வாமியை, கவித்திறமையில் ஈடுபடும் கவிகள் யாவரும் கொண்டாடுகின்றனர்.

द्राविडसंस्कृतकवितासरणावेतस्य गुरुवरेण्यस्य ।
पदलालित्यं निरुपममतिभोग्यमिति स्तुवन्ति रसिकाग्र्याः ॥37॥

निखिलविपश्चिदपश्चिमहृदयंगमगद्यपद्यरचनाभिः ।
बाल्यात्प्रभृति समृद्धो यशसा विमलेन गुरुरसाविन्धे ॥38॥

काञ्चीसौम्यवराभिधयतिवरपादाब्जसन्निधौ स्थित्वा ।
निखिलद्रमिडोपनिषद्रस्यरहस्यार्थनिधिमसौ लेभे ॥39॥

ख्यातजगद्गुरुबिरुदश्रीमदनन्तार्यगुरुकुले स्थित्वा ।
श्रीभाष्यादि गृहीत्वा गुरुरयमासीत्प्रबोधनिधिनामा ॥40॥

तस्य स्वाचार्यमणेस्सुगुणान् पञ्चामृताख्यकृतिरत्नैः ।
प्रख्याप्य धन्यभावं निन्ये स्वात्मानमेष गुरुवर्यः ॥41॥

तेषामेव गुरूणां दक्षिणबाहुप्रथामसौ प्राप्य ।
जगदुपकारककृत्यान्यमितानि चिरं स्म निर्वहत्यार्यः ॥42॥

विश्वप्रसिद्धयशसा सुदर्शनाचार्यदेशिकेन्द्रेण ।
वेदाध्ययनसुसंपदमनघां गुरुरेष लम्भितो लसति ॥43॥

---

37. தென்மொழி வடமொழிக் கவிதைகளில் நம் ஸ்வாமி, விவக்ஷிதாம்சம் அனைவர்க்கும் எளிதாகப் புரியும்படி மிகவும் லலிதமாகவே பதங்களைத் தொடுக்கிற சதிர் கண்டு அவ்வினிமையிலே யீடுபட்ட ரஸிகர்கள் மிகவும் மெச்சுகின்றார்கள்.

38. ஸகல பண்டிதோத்தமர்களும் மனமகிழ்ந்து கொண்டாடும்படியான கத்ய காவியங்களையும் பத்ய காவியங்களையும் நம் ஸ்வாமி இளமை முதலாகவே மிக இயற்றி உலகமெங்குமோங்கின பெரும் புகழ் பெற்றவர்.

39, 40. கீழே குறித்த ஸ்ரீமத்பரமஹம்ஸ ஜீயர் ஸ்வாமி ஸந்நிதியில் ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபமும் நாலாயிர வியாக்கியான [பகவத்விஷய] காலக்ஷேபமும், ஸ்ரீமத். காதி அனந்தாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபமுஞ் செய்து உபயவேதாந்த வித்யாநிதியென்று புகழ்பெற்றவர் நம்ஸ்வாமி.

41. வித்யாவிஷயத்தில் தமக்குப் பரமோபகாரகரான அந்த அனந்தாசார்ய ஸ்வாமியின் பெருமைகளைப் பஞ்சாம்ருதமென்று பெயருள்ள ஐந்து ஸ்துதி ப்ரபந்தங்களினால் வெளியிட்டு க்ருதார்த்தரானவர் நம்ஸ்வாமி.

42. அந்த அனந்தாசார்ய ஸ்வாமிக்கு வலக்கைபோன்றிருந்து லோகோபகாரமாக நெடுங்காலம் நம்ஸ்வாமி செய்தருளின அரியபெரிய காரியங்கள் மிகப் பல. [மஞ்ஜுபாஷிணீஸம்பாதநம், சாஸ்த்ர முக்தாவளீநிர்வாஹம் முதலியன.]

43. தேசமெங்கும் திகழும் திவ்ய கீர்த்திபெற்ற ஸ்ரீமத். மாம்பள்ளம் திருமலை விஞ்சிமூர் ஸ்ரீஸுதர்சநாசார்ய ஸ்வாமி ஸந்நிதியிலே வேதாத்யயனமுஞ் செய்தவர் நம்ஸ்வாமி,

वयसो द्वाविंशात्परमधीत्य वेदं क्रमान्तमतिभक्त्या ।
तत्र च पाटवममितं प्राप्य प्रख्यातवैदिकोऽयमभूत् ॥44॥

वेदाध्ययनसुसंपत्सैषा स्वस्येव भवतु सुबहूनाम् ।
इत्याशयैष गुरुराट् बहुभिस्साकं त्रयीमधीतेस्म ॥45॥

अध्ययनसंपदेषा जीयादाचन्द्रतारकं काञ्च्याम् ।
इति विपुलहृदयधृत्या गुरुरेष चकार कृत्यमतिमर्त्यम् ॥46॥

वेदान्तवैजयन्तीसमाख्यया ख्यातिमनुपमां प्राप्य ।
भान्तं विद्यानिलयं स्थापितवानेष वैदिकोत्तंसः ॥47॥

वैदिकविद्यावृद्धिं विशेषतः कर्तुमनिशमुत्साहः ।
तनुधनमनोभिरस्य प्रथितो भुवनेषु गुरुवरेण्यस्य ॥48॥

वैदिकलक्षणकृतिततिनिर्माणेन प्रथामतिप्रबलाम् ।
प्राप्य प्रकाशमानं गुरुमिममाहुः पराशरात्मभवम् ॥49॥

वैदिकपदततिगोचरविचारतत्परमहाकृतीः प्रणयन् ।
परिषत्स्वनमयदचिरादसूयुविद्वच्छिरांसि गुरुरेषः ॥50॥

---

44. இருபத்திரண்டு வயதுக்குமேல் வேதமோதப் புகுந்து மிகுந்த ஊக்கத்துடன் யஜுர்வேதத்தை க்ரமாந்தமாக வோதித் தலைக்கட்டி அந்த வேதத்திலும் தட்டுத் தடங்கலில்லாத ஸாமர்த்தியம் பெற்று 'இந்த வேதமொன்றேயோ இவ்ரோதினது' என்னும்படியான புகழ்பெற்றவர் நம்ஸ்வாமி.

45, 46. இந்த வேதாத்யயனச் செல்வம் தம்மளவிலே நில்லாமல் தமக்குப் போலவே மற்றும் பலர்க்கும் வாய்க்கவேணுமென்கிற விருப்பத்தினால் பலரோடுஞ் சேர்ந்து அத்யயனம்பண்ணி, ஸ்ரீகாஞ்சீபுரியில் வேதாத்யயனச் செல்வம் நீடூழி விளங்க வேணுமென்கிற விசால ஹ்ருதயத்தோடு ஸ்வாமி செய்தருளியிருக்கிற அதிமாநுஷ க்ருத்யங்கள் அனைவர்க்கும் ப்ரத்யக்ஷமானவை,

47. (1913-ஆம் வரு ப்ரமாதீச ஸம்வத்ஸரத்தில்) "ஸ்ரீவேத வேதாந்த வைஜயந்தி" யென்னும் பெயர்பூண்ட வைதிகபாடசாலையை ஸ்தாபித்தருளினவர் நம்ஸ்வாமி

48. உடல்பொருளாவி யெல்லாவற்றாலும் வைதிகவித்யாபிவிருத்தியை விசேஷமாகச் செய்துபோருவதில் நம்ஸ்வாமிக்குள்ள உத்ஸாஹத்தை உலகமெல்லா முணர்ந்துளது.

49. வேதாத்யயந ஸர்வஸ்வம் முதலான வேதலக்ஷண க்ரந்தங்கள் பலவற்றையுமியற்றி அதன்மூலமாகவும் புகழ்பரவப்பெற்ற நம் ஸ்வாமி 'அபரவ்யாஸரோ இவர்!' என்று கொண்டாட நிற்கின்றார்.

50. வடமொழி வேதத்திலுள்ள பதங்களைப்பற்றிய லக்ஷண விசாரத்தில் வாதப்ரதிவாதங்கள் நேர்ந்து அதற்காக அநேக க்ரந்தங்களையுமியற்றி வெளியிட்டு. ஸபைகள்மூலமாக விசேஷ சர்ச்சைகள் நேர்ந்த காலத்திலும் எதிரம்புகோத்த பண்டிதர்களைத் தலைவணங்கிப்போம்படி செய்தவர் நம்ஸ்வாமி,

श्रीकुम्भघोणनगरीसंभववैदिकजनप्रकाशितया ।
कीर्त्या सुमहत्याऽञ्चितमाचार्यमिमं स्तुवन्ति वेदघनाः ॥51॥

यद्रचितवेदरक्षाप्रबन्धवृन्दं विराजते सततम् ।
वैदिकशिरस्सु, सोऽयं विस्मयनीयप्रभाव इह जयति ॥52॥

विद्वद्घनपाठिवरैरतीव संश्लाघितप्रभावानाम् ।
वैदिकसद्ग्रन्थानां निर्माता जयतु गुरुरसौ सुचिरम् ॥53॥

कृत्स्नद्राविडवेदप्रबन्धदिव्यार्थबोधमिह विश्वे ।
यद्व्याख्ययैव सत्यं विन्दन्ति गुरुस्स एष चिरमिन्धाम् ॥54॥

दिव्यार्थदीपिकाख्या दिव्यव्याख्या हि दिव्यवेदस्य ।
गुरुणाऽनेन निबद्धा शाश्वतयशसोऽस्य सा जयस्थूणा ॥55॥

तादृग्विवृतिमहार्णवमध्याद्रत्नानि कतिचिदुपगृह्य ।
व्याहृत्य सदसि बहुमतिमीप्सन्ति बुधा इतीह पश्यामः ॥56॥

तादृग्व्याख्यानानां गाम्भीर्यौदार्यमुख्यगुणपुष्टिम् ।
वीक्ष्य बहु विस्मयन्ते द्राविडवाङ्मर्मसारवेत्तारः ॥57॥

---

51. திருக்குடந்தை மன்னார்குடி முதலான விடங்களில் தோன்றிய வைதிக ப்ராஹ்மணர்களின் மூலமாகப் பரவிய அப்புகழ்களெல்லாம் நம்ஸ்வாமியின் க்ரந்தங்களிலும் ஏடேறிக் கிடக்கின்றன.

52. அப்போது வேதரக்ஷையாக நம்ஸ்வாமி பணித்த க்ரந்தங்கள் இற்றைக்கும் அநஸூயுக்களான வைதிகர்களினால் உச்சிமேல்வைத்து மெச்சப்படுகின்றன.

53. வித்வான்களாலும் கனபாடிகளாலும் மிகவும் கொண்டாடப்பட்ட பெருமைவாய்ந்த வேதரக்ஷா க்ரந்தங்கள் பலவற்றைப் பணித்தருளின நம்ஸ்வாமி நீடூழி வாழ்க.

54. தமிழ்வேதமென்று போற்றப்படுகின்ற நாலாயிர திவ்யப் பிரபந்தங்களுக்கும் நம்ஸ்வாமிபணித்த வியாக்கியானங்களே உலகில் யாவரும் எளிதாகப் பொருளுணர்ந்துகொள்ள ஸாதனமாயிருக்கின்றன.

55. திவ்யப்ரபந்தங்கள் முழுமைக்கும் திவ்யார்த்ததீபிகையென்கிற பெயரால் ஸ்வாமியருளிச் செய்துள்ள வியாக்கியானமானது ஸ்வாமியின் நீடூழி நிலவும் பெரும் புகழ்க்கு ஒரு வெற்றித் தூணாக விளங்குகின்றது.

56. நம்ஸ்வாமி பணித்த அப்படிப்பட்ட வியாக்கியானம் முதலிய க்ரந்தங்களாகிற பெருங்கடலில் நின்றும் சிலதிவலைகளை மாத்திரமே யெடுத்துக்கொண்டு ஸபைகளில் உபந்யஸித்துச் சிலபண்டிதர்கள் மேன்மைபெறப் பார்க்கின்றார்களென்பதை நாம் கட்கூடாகக் காணுகின்றோம்.

57. அப்படிப்பட்ட நம்ஸ்வாமியருளிய வியாக்கியானங்களின் பலவகைப்பட்ட பெருமைகளையுங் கண்டு தமிழ்விரகர்கள் யாவரும் மிக மிக வியக்கின்றனர்.

पूर्वाचार्यव्याख्याप्रवचननिरताश्च गुरुवरा अधुना ।
व्याख्यानमस्य सूरेरवलम्ब्यैव हि विशन्ति गुरुपीठम् ॥58॥

ईर्ष्यावशाद्बहिः केप्युल्बणकटुवाग्विसर्गकर्तारः ।
अपि, नियतमन्तरेनं स्तुवन्ति गुरुवर्यमुपकृतिध्यानात् ॥59॥

यासां दिव्यकृतीनां व्याख्यानं नावतीर्णमस्य गुरोः ।
तासां प्रवचनकृत्ये प्रायो रुचिमत्र न दधते विबुधाः ॥60॥

अन्धपरम्परया नः प्राप्तानां हेयपाठबृन्दानाम् ।
परिहृतिरस्यैव खलु व्याख्याभिर्भवति महितमतिभूम्नः ॥61॥

लक्षणलक्ष्यनिदर्शनभूम्ना वैशद्यदायिनी व्याख्या ।
अस्यैव जगति कृत्स्ने विख्याता, सूरिरद्वितीयोऽयम् ॥62॥

वकुलाभरणमुनीन्द्राद्यशेषसूरीन्द्रवैभवं हृद्यम् ।
निरवद्यमेष सूरिः प्रथयामास प्रबन्धरत्नैः स्वैः ॥63॥

श्रीमन्नाथमुनीन्द्राद्यखिलाचार्यप्रभावमतिभोग्यम् ।
बह्वीभिरनघकृतिभिः प्रख्यापितवानसौ गुरुप्रवरः ॥64॥

---

58. இக்காலத்தில் பூர்வாசார்ய வியாக்கியானங்களை ப்ரவசனஞ்செய்தருள விரும்பும் பெரியார்களும் நம்ஸ்வாமியின் வியாக்கியானங்களை யுதவிகொண்டே ஆசார்ய பீடத்தை யலங்கரிக்கப் புகுகின்றார்கள்.

59. பொறாமையினால் சிலர் வெளியில் நிந்தித்துக்கொண்டே போதுபோக்கினாலும் நம்ஸ்வாமியிடமிருந்து பெற்றிருக்கும் ஞானவுதவியை மறக்கமுடியாமையினால் உள்ளுக்குள்ளே புகழ்கின்றார்கள்.

60. எந்த க்ரந்தங்களுக்கு நம்ஸ்வாமியின் வியாக்கியானம் இன்னமும் அவதரிக்கவில்லையோ அந்த க்ரந்தங்களை யெடுத்து ப்ரவசனஞ்செய்யப் பண்டிதர்கள் பெரும்பாலும் முன்வருவதில்லை.

61. ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளில் குருட்டுப் பரம்பரையாக நேர்ந்திருக்கின்ற பிழையான பாடங்களையெல்லாம் நம்ஸ்வாமியின் வியாக்கியானங்களைக்கொண்டு போக்கிக் கொள்ளுமவர்கள் ஸ்வாமியின் ஆராய்ச்சி அற்புதமானதென்று புகழ்கின்றனர்.

62. தமிழ்ப் பிரபந்தங்களை வியாக்கியானிக்கும்போது ஆங்காங்கு இலக்கணவிலக்கியங்களைக் காட்டியும், ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை வியாக்கியானிக்கும்போது ஆங்காங்கு வியாகரண ப்ரக்ரியையையும் ப்ரயோகரீதிகளையு மெடுத்துக்காட்டியும் நம்ஸ்வாமி வியாக்கியானங்கள் பணித்திருக்குமழகு நிகரற்றது.

63, 64. நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களனைவருடையவும் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான ஆசார்யர்களனைவருடையவும் ஸ்ரீஸூக்திப் பெருமைகளை - விசேஷார்த்தரத்னநிதி, பக்தாம்ருதம், பன்னிரு திங்களநுபவம் முதலான பலபல நூல்களினால் வெகு அற்புதமாக வெளியிட்டருளினவர் நம்ஸ்வாமி.

पूर्वाचार्यकथास्वथ तत्सूक्तिभरेषु चाप्रतिद्वन्द्वम् ।
प्रेम दधतोऽस्य सूरेरतिमानुषमेव कृत्यसर्वस्वम् ॥65॥

पूर्वसदुक्तिसदर्थप्रपञ्चनश्रद्धयैव गुरुरेषः ।
या याः कृतीर्वितेने ताः कृत्स्नायुषि न कोऽपि पठितुमलम् ॥66॥

श्रीमत्सरोमुनीन्द्रप्रणीतदिव्यप्रबन्धहृद्यार्थम् ।
यद्व्याख्ययैव विशदं विदन्ति विश्वे स एष गुरुरिन्धाम् ॥67॥

श्रीभूतयोगिफणितिस्वादुतमार्थान् यदुक्तिभिर्विशदम् ।
विज्ञो विद्वन्मण्डलसंश्लाघितसूक्तिरेष इह नान्यः ॥68॥

महदाह्वयेन मुनिना प्रणीतमतुलं प्रबन्धमनवद्यम् ।
व्याख्याय लब्धकीर्तिं वाग्मिमहासिंहमेनमुपनमत ॥69॥

श्रीभक्तिसारयोगिप्रणीतदिव्यप्रबन्धयुगलार्थम् ।
गहनश्रुत्यर्थमयं व्याचक्षाणोऽयमार्य इह मान्यः ॥70॥

श्रीमच्छठारिदृष्टा वेदचतुष्टयसमाश्वतस्रोऽपि ।
कृतयोऽस्य विपुलविवृतिभिरद्भुतसौरभमवाप्य विलसन्ति ॥71॥

---

65. பூர்வாசார்யர்களின் திவ்யவைபவங்களிலும் திவ்ய ஸ்ரீஸூக்திகளிலும் நிகரற்ற அன்புபூண்டு நம்ஸ்வாமி செய்தருளியிருக்கிற காரியமெல்லாம் அதிமாநுஷமென்ன வேண்டு மத்தனை.

66. பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளின் அழகிய பொருள்களை விவரிக்கவேணுமென்கிற ஊக்கமொன்றே கொண்டு நம்ஸ்வாமி பணித்திருக்கிற க்ரந்தங்களையெல்லாம் ஒருவன் தன்னுடைய வாழ்நாளுக்குள் வாசித்து முடிப்பதென்பது முடியாத காரியம்.

67. பொய்கையாழ்வா ரருளிச்செய்த முதல் திருவந்தாதியின் ஆழ்பொருளை மிகத் தெளிவாக யாவருமுணரும்படி நம் ஸ்வாமி வியாக்கியான மருளி யுள்ளார்.

68. பூதத்தாழ்வாரருளிச்செய்த இரண்டாந் திருவந்தாதியின் அமுதினுமினிய அரும் பொருளை நம் ஸ்வாமி தமது வியாக்கியானத்தினுல் வெளியிட்டதற்காக வித்வான்கள் மிகவுமுகக்கின்றனர்.

69. பேயாழ்வாரருளிச் செய்த மூன்றாந் திருவந்தாதிக்கு நம் ஸ்வாமி பணித்த வியாக்கியானம் ஸ்வாமிக்குப் பெரும் புகழை விளைத்திருக்கின்றது.

70. திருமழிசைப்பிரா னருளிச்செய்தவையாய் வேதாந்த விழுப்பொருள் நிரம்பியவையா யிராநின்ற நான்முகன் திருவந்தாதி திருச்சந்த விருத்தமென்னு மிரண்டு திவ்யப்ரபந்தங்களையும் நம் ஸ்வாமி மிகவுமினிதாக வியாக்கியானம் செய்தருளினதற்காக உலகம் மெச்சுகின்றது.

71, நம்மாழ்வாரருளிச்செய்த நான்கு வேதஸமமான திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி யென்னும் நான்கு திவ்ய ப்ரபந்தங்களையும் மிக விரிவாக வியாக்கியானித்தருளியுள்ளார் நம் ஸ்வாமி.

मधुरकविसूक्तितत्त्वं मधुरतमोक्त्या महिष्ठया निजया ।
विशदीकृतवानेष हि वादिभयङ्करकुलाब्धिमणिरार्यः ॥72॥

कुलशेखरार्यसूरिप्रणीतदिव्यप्रबन्धमधुरार्थम् ।
मधुरतरवाग्विलासैः प्रख्यापितवानसौ गुरुस्सुमहान् ॥73॥

श्रीभट्टनाथसूरिप्रणीतदिव्यप्रबन्धयुगलार्थम् ।
अतिरुचिरवाग्विलासैः प्रख्यापितवन्तमार्यमिममीडे ॥74॥

गोदादेवीसूक्तद्वयार्थतत्त्वं दिदेश यद्व्याख्या ।
स जयतु वादिभयङ्करसूरिस्सचित्तपद्मकृतवासः ॥75॥

भक्ताङ्घ्रिरेणुसूरेः कृतियुगलस्यार्थमधिकभोग्यगिरा ।
व्याख्यातवन्तमेनं गुरुमभिवन्द्यैव पावनी जगती ॥67॥

श्रीमन्मुनिवाहनमुनिसूक्तिं वेदार्थसम्भृतां स्वाद्वीम् ।
अनघवचोभिरनघैः व्यवृणुत गुरुरेष निस्तुलप्रज्ञः ॥77॥

परकालसूरिवर्यप्रणीतदिव्यप्रबन्धषट्कार्थम् ।
अतिमधुरैरतिविशदैर्व्याख्यानैरेष सूरिराचख्यौ ॥78॥

---

72. மதுரகவிக ளருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பின் உட்பொருளை ப்ரதிவாதிபயங்கரக் குலமணியான நம் ஸ்வாமி மிகச் சிறப்பாக வியாக்கியானித்தருளி யுள்ளார்.

73. ஸ்ரீ குலசேகரப் பெருமாளருளிச் செய்த பெருமாள் திருமொழியினும் பொருளைத் தேனினினிய திருவாக்குக்களாலே விவரித்தருளினவர் நம் ஸ்வாமி.

74. பெரியாழ்வாரருளிச் செய்த திருப்பல்லாண்டு திருமொழிகளின் சீரிய பொருள்களை மிகச்சிறந்த வியாக்கியானத்தினால் வெளியிட்டருளின நம் ஸ்வாமி உலகம் புகழ நிற்பவர்.

75. ஆண்டாளருளிச்செய்த திருப்பாவை திருமொழிகளின் அரியபெரிய பொருள்களை நம் ஸ்வாமி அற்புதமாக வியாக்கியானித்தருளினதற்காகப் பெரியார்க ளெல்லாரும் மிகவுமீடுபட்டிருக்கின்றனர்.

76. தொண்டரடிப் பொடியாழ்வாரருளிச் செய்த திருமாலை திருப்பள்ளியெழுச் சிகளுக்குப் பரமபோக்யமான வியாக்கியானமிட்டருளின நம் ஸ்வாமியைத் தொழுது உலகமெல்லாம் தூய்மைபெற்று விளங்கா நின்றது.

77. "பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொரு ளென்று பரவுமின்கள்" என்று தேசிகர் பேசினபடியே வேதவிழுப்பொருள் மலிந்த திருப்பாணாழ்வாருடையதான அமலனாதிபிரானைச் சிறப்புற வியாக்கியானித்தருளின நம் ஸ்வாமியின் ப்ரஜ்ஞாவிலாஸம் போற்றத்தக்கது.

78. * மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங் கூறவந்த திருமங்கையாழ்வார் அருளிய ஆறு திவ்வியப் பிரபந்தங்கட்கும் அருமருந்தன்ன வியாக்கியானங்களை யருளி யவர் நம் ஸ்வாமி.

अमृतकविफणितिरत्नं प्रपन्नगायत्र्यभिख्यकृतिरत्नम् ।
अतिरुचिरविवृतिमहितं कृतवान् गुरुरेष सत्यममृतोक्तिः ॥79॥

उपदेशरत्नमालाव्याख्याविख्यातकीर्तिभरभरितम् ।
वादिभयङ्करवंशाम्बुधिहिमकिरणं गुरुं स्तुवन् धन्यः ॥80॥

श्रीशठकान्तादिकृतिं सहस्रगीत्यर्थसारसौरभिणीम् ।
व्यवृणुत रसघनवाग्भिर्गुरुरयमत्यद्भुतोक्तिविन्यासः ॥81॥

आर्तिप्रबन्धमद्भुतवाग्गुम्भोदञ्चदतिशयं सोऽयम् ।
गुरुरनघवाग्भिरीड्यो व्यवृणोद्यतिराजकीर्तिमुपबृंह्य ॥82॥

प्रथितां मुकुन्दमालां विशदं व्याख्याय विमलयशसाढ्यम् ।
अनघवचसां वरेण्यं वादिभयङ्करगुरुं श्रिता धन्याः ॥83॥

श्रीयामुनार्ययोगिप्रसादित स्तोत्रयुग्महृद्यार्थम् ।
करतलबदरसमानं कृतवन्तं सूरिमिममुपाश्रयत ॥84॥

कञ्चीपूर्णमुनीन्द्रप्रोक्तं हस्त्यद्रिनायकस्तोत्रम् ।
व्याख्यातवन्तमार्यं तमिमं प्राज्ञाग्रगण्यमाश्रयत ॥85॥

---

79. திருவரங்கத் தமுதனாரருளிச் செய்த ப்ரபந்நகாயத்ரி யென்று பேர் பெற்ற இராமானுச நூற்றந்தாதிக்கு மிகவழகிய வியாக்கியான மருளிச்செய்த நம் ஸ்வாமியின் திருவாக்கு அமுதமேயாம்.

80. மணவாள மாமுனிகளருளிச்செய்த உபதேசரத்தினமாலைக்கு உலகம் புகழும் வியாக்கியானத்தை யிட்டருளின நம் ஸ்வாமியைத் துதிப்பாருடைய நாவே ஸபலமாகும்.

81. திருவாய்மொழியாயிரத்தின் ஆழ்பொருளைக் கவர்ந்துள்ள திருவாய்மொழி நூற்றந்தாதியின் உட்பொருளை மிகவினிதாக வுரைத்தருளின நம் ஸ்வாமியின் திருநாவீறு மிக வியக்கத்தக்கது.

82. அற்புதமான சொல்தொடையினழகுவாய்ந்த ஆர்த்திப் பிரபந்தத்தை எம்பெருமானாருடைய பெருமைக்குத் தகுதியாக மிகவு மினிதாக வியாக்கியானித் தருளினார் நம் ஸ்வாமி.

83. உலகமெல்லாமநுஸந்திக்க நின்ற முகுந்தமாலையை மிகத் தெளிவாக வியாக்யானித்துப் புகழ்பெற்ற நம் ஸ்வாமியைப் பணிந்து வாழ்வாரே வாழ்வார்.

84. ஆளவந்தாரருளிச் செய்த ஸ்தோத்ர ரத்னம், சதுச்ச்லோகி யென்னுமிரண்டு ஸ்துதிகளையும் மிக வெளிதாக வியாக்கியானித்தருளிய நம் ஸ்வாமியே நமக்குத் தஞ்சம்.

85. திருக்கச்சி நம்பி யருளிச்செய்த தேவராஜாஷ்டகத்திற்கு வியாக்கியான மருளிய நம் ஸ்வாமியைப் பணிந்து வாழுங்கள்.

गद्यत्रयार्थतत्त्वख्यापनविख्यातपाण्डितीख्यातिम् ।
विख्यातविद्वदग्रिममाचार्यमिमं बुधाः प्रशंसन्ति ॥86॥

यत्कृतविपुलविवृत्या विशदार्था कूरनाथगुरुरचिता ।
पञ्चस्तवी समिन्धे तमिमं पार्थिवबृहस्पतिं प्राहुः ॥87॥

श्रीभट्टपादरचितामष्टश्लोकीं यदीयटीकैव ।
चक्रे विशदार्थभरां गुरुरयमेको हि मन्त्रतत्त्वज्ञः ॥88॥

श्रीरङ्गराट्स्तवस्य व्याख्यामतुलां विलोकयन्तोऽस्य ।
सशपथमाचक्षत इदमवनावसदृशविपश्चिदयमेव ॥89॥

श्रीहेतिराजशतकं गहनार्थमसौ गुरुर्विशेषेण ।
व्याख्यातिस्म तदेतद्विदुषां तु विशिष्य विस्मये हेतुः ॥90॥

श्रीवाग्भूषणतत्त्वत्रितयरहस्यत्रयार्थसद्ग्रन्थान् ।
अतिललितपद्यबन्धैर्निबद्धवानेष गुरुरमेययशाः ॥91॥

श्रीवचनभूषणीयं सारांशं सम्यगेव बोधयितुम् ।
तद्ग्रन्थसारमनघं व्याहृतवानेष गुरुरतिप्राज्ञः ॥92॥

---

86. எம்பெருமானாரருளிச்செய்த கத்யத்ரயத்தின் ஆழ்பொருளை வெகு அழகாக வியாக்கியானித்தருளின நம்ஸ்வாமியைப் பண்டிதோத்தமரென்று பண்டிதர்கள் யாவரும் புகழ்கின்றனர்.

87. கூரத்தாழ்வானருளிச் செய்த பஞ்சஸ்தவத்திற்கு நம்ஸ்வாமி பணித்துள்ள அமுதிலுமாற்ற வினிய வியாக்கியானங்களை ஸேவிப்பவர்களெல்லாரும் ஸ்வாமியை பூலோக ப்ருஹஸ்பதியென்றே அறுதியிட்டுக் கூறுகின்றார்கள்.

88. பட்டர் அருளிச்செய்த அஷ்டச்லோகிக்கு நம்ஸ்வாமி பணித்த விசதமான வியாக்கியானமானது ரஹஸ்யார்த்த தத்வஜ்ஞானத்தில் ஸ்வாமிக்குள்ள அப்ரதிமமான மேதையை விளக்குகின்றது.

89. பூர்வசதகமென்றும் உத்தரசதகமென்றும் இரண்டு பகுதியாகவுள்ள ஸ்ரீரங்கராஜஸ்தவத்திற்கு நம்ஸ்வாமி பணித்திருக்கும் வியாக்கியானத்தைக் காண்பவர்கள் 'இப்பூமண்டலத்தினுள் நிகரற்ற வித்வான் இவரொருவரே' என்று ஆணையிட்டுரைக்கின்றனர்.

90. ஸ்ரீகூரநாராயண ஸ்வாமி பணித்த ஸுதர்சநசதகமானது எப்படிப்பட்ட பண்டிதர்களுக்கும் பொருளறிய நிலமல்லாதது; அந்த க்ரந்தத்திற்கு நம்ஸ்வாமி பணித்த வியாக்கியானத்தைக் காண்பவர்கள் யாவரும் ஸ்வாமியின் பாண்டித்யத்தில் விசேஷித்து வியப்புறுகின்றனர்.

91. ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி ஆகிய மூன்று ரஹஸ்யங்களையும் மிகவுமினிய ஸம்ஸ்க்ருத ச்லோகங்களாக மொழி பெயர்த்து ரஹஸ்யரத்நமாலிகா என்னும் க்ரந்தமாக வெளியிட்டிருக்கின்ற நம்ஸ்வாமியின் புகழ் அளவிடமுடியாதது.

92. நம்ஸ்வாமிபணித்த ஸ்ரீவசநபூஷணஸாரமென்கிற க்ரந்தத்தினால் ஸ்ரீவசநபூஷணத்தின் சிறந்த பொருள்களை யாவரும் கதைபோலுணர்ந்து மகிழ்கின்றார்கள்.

तत्त्वत्रयार्थमनघं तत्त्वविदां भोग्यमनुगृहीतवता ।
अण्णङ्गरार्यविदुषा विद्वद्बृन्दं सनाथमिह सर्वम् ॥93॥

अष्टाक्षरादिकानि त्रीणि रहस्यानि वरमुनेर्व्याख्याम् ।
अनुसृत्य ललितवाग्भिर्विशदीकृतवानसौ महानार्यः ॥94॥

लोकाचार्यायेति प्रसिद्धपद्याक्षरानुपूर्व्याऽयम् ।
लोकाचार्यस्तोत्रं प्रणीय लोकानशेषतो ह्यपुनात् ॥95॥

आचार्यहृदयसारग्रन्थं सुमनोमनोहरं त्रेधा ।
प्रादुर्भावितवन्तं परवादिभयङ्करार्यमहमीडे ॥96॥

वरवरमुनिरेवैको जगति स्तोत्रस्य पात्रमिति यस्य ।
भाति दृढाध्यवसायस्तमेनमाचार्यवर्यमानमत ॥97॥

श्रीमत्सुन्दरगुरुवरशुभविग्रहपूजनैकनिष्णातम् ।
अभिनववरवरमुनिरिति विख्यातं सूरिमेनमुपनमत ॥98॥

---

93. தத்வத்ரயமென்கிற ரஹஸ்யத்திலுள்ள மிகச்சிறந்த பொருள்களையெல்லாம் தத்வஜிஜ்ஞாஸுக்களுக்கு மிகவினிதாக எடுத்துரைத்தருளிய நம்ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவவுலகமெல்லாம் தலைவராகக்கொண்டு களிக்கின்றது.

94. திருமந்த்ரார்த்தமென்கிற முமுக்ஷுப்படியின் அரும்பெரும் பொருள்களையெல்லாம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தை யநுஸரித்து முமுக்ஷுப்படி ஸாரமென்கிற க்ரந்தத்தினால் மிகவினிதாக அருளிச்செய்தவர் நம் ஸ்வாமி.

95. "லோகாசார்யாய குரவே" என்று ப்ரஸித்தமாகவுள்ள பிள்ளைலோகாசார்யர் தனியனிலுள்ள ஒவ்வோரக்ஷரத்தின் வரிசையாக லோகாசார்யஸ்துதியை நம்ஸ்வாமி பணித்து உலகத்தையெல்லாம் புனிதமாக்கியருளினர்.

96. ஆசார்யஹ்ருதயக்ரந்தத்தின் அரியபெரிய பொருள்களை நம் ஸ்வாமி மூன்றுவகையான நூல்களினால் மிகவெளிதாக வகுத்துள்ளார். ஆசார்யஹ்ருதயஸாரம் என்னும் பெயரால் சுருக்கமான ஒருரையும் விரிவானவோருரையும் வெளிவந்துளது; ஆசார்யஹ்ருதயப்பதவுரை மூன்றாவதான க்ரந்தம்.

97. உலகில் மணவாளமாமுனிகளொருவரே ஸ்தோத்ரங்களுக்குரிய ஆசார்ய ஸார்வபௌமரென்று திண்ணமாக வெண்ணியுள்ள நம் ஸ்வாமியின் திருவடிகளே தஞ்சம்.

98. ஸ்வாமியின் திருமாளிகையில் முன்னோர்கள் பரம்பரையாக வீதியார வருவானென்கிற கண்ணபிரானுடைய திருக்கோலத்தை ப்ரதாந ஆராத்ய தேவதையாகக்கொண்டு திருவாராதனம் செய்துவந்தார்கள்; நம்ஸ்வாமி, மணவாள மாமுனிகளின் திருக்கோலத்தையே ப்ராதாந்யேந திருவாராதனம் செய்தருளி வருகிறார்; இவரை மணவாள மாமுனிகளின் அபராவதாரமென்றே உலகம் மதிக்கின்றது.

पादूसहस्रमभिनवमाचार्यवरस्य वरवरस्य नुतिम् ।
अद्भुतसंदर्भेण प्रणीतवानेष गुरुरनर्घवचाः ॥99॥
यस्य प्रबन्धबृन्दं प्रायो वरयोगिवैभवैस्सुरभि ।
अनितरसाधारणधीविलासमाचार्यमेनमुपयानि, ॥100॥
यतिराजविंशतिं यो विशदव्याख्यानसुरभिमांतेने ।
सोऽयं यतिपतिदर्शननिर्वाहधुरन्धरो गुरुस्स्तुत्यः ॥101॥
वरमुनिदिनचर्यादिस्तोत्रव्याख्यानरचनया सोऽयम् ।
वरमुनिपदाब्जभक्तिप्राचुर्यं स्वं प्रसिद्धमातनुते ॥102॥
आचार्यहृदयमथ च श्रीवाग्भूषेति कृतियुगादन्यत् ।
शास्त्रं न किमपि जगतीत्यतिदृढमभिलिख्य जयति गुरुरेषः ॥103॥
रङ्गेशवेङ्कटेश्वरहस्तिगिरीशानविषयकस्तोत्रैः ।
यद्व्याख्यातैरेव प्राज्ञा हृष्यन्ति गुरुरसौ श्रेयान् ॥104॥
शठरिपुयतिपतिवरवर मुनिविषयस्तोत्रनिकरमतिमधुरम् ।
यद्व्याख्यातं दृष्ट्वा सन्तो हृष्यन्ति सूरिरयमीड्यः ॥105॥

---

99. மணவாளமாமுனிகளுக்கு ஸ்தோத்ரமாக ஆயிரம் ச்லோகங்களைப் பணித்துள்ளார் நம்ஸ்வாமி; ஸ்ரீசைலேச பாதுகாஸஹஸ்ர மென்னும் பெயர் பூண்டது அந்த ஸ்தோத்ர க்ரந்தம், ஸ்ரீசைலேசரென்று திருவாய்மொழிப்பிள்ளையின் திருநாமம்; அவருடைய பாதுகை—மணவாள மாமுனிகள்: அவரைப்பற்றின ஸஹஸ்ரம்—ஸ்ரீசைலேச பாதுகா ஸஹஸ்ரம் என்க.

100. நம்ஸ்வாமியின் க்ரந்தங்களெல்லாம் பெரும்பாலும் மணவாள மாமுனிகளின் பெருமைகளைப் பேசியே பரிமளம் பெற்றிருக்கும்: அந்தமாமுனிகளின் க்ருபையினால் மஹாமதியாக விளங்குகின்ற நம்ஸ்வாமியே நமக்குத் தஞ்சம்.

101. மணவாளமாமுனிகளின் யதிராஜவிம்சதிக்கு விசதமான வியாக்யானத்தை யருளிச் செய்திருக்கின்ற நம்ஸ்வாமி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண துரந்தரரென்று போற்றுதற்குரியர்.

102. மணவாள மாமுனிகளின் திநசர்யை முதலான ஸ்தோத்ரங்களுக்கும் வியாக்யானங்களைப் பணித்து மாமுனிகளின் திருவடிகளில் தமக்குள்ள பக்தி விசேஷத்தை விளக்கிக்கொண்டனர் நம்ஸ்வாமி.

103. ஆசார்யஹ்ருதயம் ஸ்ரீவசநபூஷணம் என்கிற இரண்டு திவ்யக்ரந்தங்களுக்கு மேற்பட்ட சாஸ்த்ரம் உலகில் எதுவுமேயில்லை யென்கிற உண்மைப் பொருளை வெளியிட்டு வெற்றி பெறுமவர் நம் ஸ்வாமி.

104. கோயில் திருமலை பெருமாள்கோயி லெம்பெருமான்கள் விஷயமாக நித்யாநுஸந்தேயமாய் அமைந்த ஸ்தோத்ரங்களை அழகிய வியாக்கியானங்களோடு பதிப்பித்தருளிய நம்ஸ்வாமி ப்ராஜ்ஞர்களுக்குப் பரமானந்த கந்தமாகவுள்ளார்.

105. ஆழ்வாரெம்பெருமானார் ஜீயரென்னும் ஆசாரியர்கள் மூவர் விஷயமாய் அமைந்த நித்யாநுஸந்தேய ஸ்தோத்ரங்களையும் வியாக்கியானங்களோடு உபகரித்தருளினர் நம்ஸ்வாமி.

वेदान्तसारसर्वस्वाख्यं कृतिरत्नमेष विरचय्य ।
यतिपतिदर्शनसारं सुष्ठु प्राबोधयद्बुधान्विबुधः ॥106॥

यस्तर्कशास्त्रसारं सुहृदोस्संवादरूपमभिरच्य ।
हर्षप्रकर्षविवशान् विदुषस्तेने स एष गुरुरीड्यः ॥107॥

द्वादशभिरूर्ध्वपुण्ड्रैश्शुभ्रैरतिशोभमानदिव्याङ्गम् ।
विद्वद्भागवताग्रिमपरिषत्सु गुरुं चिरं प्रपश्येम ॥108॥

इत्याचार्यवैभवद्विशत्यां पूर्वशतकं समाप्तम् ॥

अथ उत्तरशतकम्

हर्तुं तमोऽखिलानां हार्दं वादीभकेसरी सूरिः ।
अण्णङ्गरार्यवर्यो भुव्यवतीर्णस्स एष जयतु चिरम् ॥1॥

अस्मिन् भूतलजीवे जीवति दुर्वादिवाद ईषदपि ।
नालं जीवितुमिति हि प्राज्ञाः प्रवदन्ति गुरुरसौ जयतु ॥2॥

---

106. வேதாந்தஸர்வஸ்வ மென்னும் வடமொழி க்ரந்தமொன்றையியற்றி அதனுல் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸாரங்களை வித்வான்கள் எளிதிலுணரும்படி செய்தருளினர் நம்ஸ்வாமி.

107. இரண்டு ஸுஹ்ருத்துக்களின் ஸம்பாஷணையாக அமைத்து தர்க்கசாஸ்திர ஸர்வஸ்வ மென்கிற கிரந்தத்தினுல் தர்க்கசாஸ்திர ப்ரமேயத்தின் ஸாரத்தை வெளியிட்டு வித்வான்களை யுகப்பித்தவர் நம்ஸ்வாமி.

108. பன்னிரு திருநாமமணிந்து விளங்குந் திருமேனியையுடைய நம்ஸ்வாமியை வித்வத்பரிஷத்துக்களிலும் பாகவத கோஷ்டிகளிலும் முன்னணியில் நெடுங்காலம் ஸேவித்து மகிழ்ந்திருப்போமாக. ... ... *

ஆசார்ய வைபவத்விசதியில் பூர்வசதகம் முற்றிற்று.

உத்தர சதகம்.

1. இவ்வுலகத்தவர்களின் அகவிருளைத் தொலைப்பதற்கென்றே அவதரித்த அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் பெருமைகளை இன்னமும் பேசுவோம்.

2. இவ்வுலகில் தோன்றிய ப்ருஹஸ்பதி யென்னலாம்படியான இப்பேராசிரியர் [நம்ஸ்வாமி] வாழ்ந்திருக்கையில் துர்வாதிகளின் வாதங்கள் சிறிதும் தலைகாட்டமாட்டாவென்று பெரியார்கள் கூறுவர்.

ये : निम्बवृत्तय इति प्रथितास्तद्वर्जमितररसिकवरैः ।
अन्यैर्नक्तंदिवमप्यास्वादितसूक्तिरेष गुरुरिन्धाम् ॥3॥

त्र्य्यन्तसूरिहृदयं परपक्षक्षेपपूर्वकं सुष्ठु ।
येन प्रपञ्चितमभून्नानाग्रन्थेषु स गुरुरिह जयति ॥4॥

सत्संप्रदायसरणिप्रतीपवादान्निरस्य कृतिविततिम् ।
प्राज्ञैकहृदयभोग्यां विनिर्ममे सोऽयमद्भुतप्रज्ञः ॥5॥

श्रीमल्लोकगुरूत्तमसिद्धान्तविरुद्धवादनिरतानाम् ।
निरसनमेव हि नित्यं कृत्यं वादीन्द्रभीकृतोऽस्य गुरोः ॥6॥

श्रीमल्लोकगुरुद्वयकृष्णगुरुद्वयवरोपयन्तृमुनीन् ।
ध्यायंध्यायं तेषां सूक्तीर्विवृणोति गुरुरसौ नान्यः ॥7॥

मधुपानकुतुकभाजां प्राप्तो ननु मक्षिकानिरास इति ।
नीत्या प्रत्यर्थिततीर्निरस्य तत्सूक्तिमधु पिबत्येषः ॥8॥

---

3. ஒட்டகம் காக்கை முதலிய ஜந்துக்களுக்கு வேப்பிலையும் வேப்பங்காயும் ருசிப்பதுபோல் தீய விஷயங்களை ருசிக்கப்பெற்ற அரஸிகர்கள் தவிர மற்ற ரஸிகர்கள் யாவரும் பரமபாக்ய வசத்தினால் இரவும் பகலும் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளையே பரமபோக்யமாகக் கொள்ளுகின்றார்கள்.

4. ஸ்ரீவேதாந்த தேசிகருடைய திருவுள்ளத்தை உள்ளபடி யெடுத்துரைத்து அதில் பிறர் தவறாகக் கூறும் விஷயங்களைக் கண்டித்து ஸ்வாமி பலபல க்ரந்தங்களைப் பணித்திருக்கின்றார்.

5. ஸத்ஸம்ப்ரதாய நெறிக்கு மாறுபாடாகத்தோன்றும் வாதங்களையெல்லாம் மறுத்து ஸ்வாமியருளிச்செய்திருக்கின்ற திவ்ய க்ரந்தங்களின் இனிமையை அனுபவித்து ஆனந்திக்க வித்வான்களே தகுதியுடையார்.

6. பிள்ளை லோகாசார்யருடைய ஸித்தாந்தத்திற்கு முரணாகத் தோன்றும் வாதங்களை மறுப்பதையே நித்யக்ருத்யமாகக் கொண்டவர் நம்ஸ்வாமி.

7. நம்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை பிள்ளை லோகாசார்யர் மணவாளமாமுனிகள் ஆகிய இப்பரமாசார்யர்களை தியானித்துக் கொண்டே அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளையெல்லாம் விசதப்படுத்துவதற்கென்றே அத்விதீயராகத் தோன்றியவர் நம்ஸ்வாமி.

8. மதுபானம் பண்ணவேண்டியவர்கள் ஈக்களையோட்டியேயாக வேணுமென்பதுபோல் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளாகிற மதுவைப்பருக விரும்பிய நம்ஸ்வாமியும் அதற்கு இடையூறான ப்ரதிபக்ஷிகளை நிரஸித்துக்கொண்டே மதுபானம் பண்ணியருளுவது யுக்தமேயன்றோ,

श्रीमालामिधकृत्याम् अष्टमगाथोक्तपद्धतिं सुदृढम् ।
गुरुरेष लोकदेशिकवैरिषु कलयन् प्रशस्य एव सताम् ॥9॥

व्यर्थाशयैव येये स्पर्धाश्रद्धाबलेन दुर्वादान् ।
चक्रुस्तेते सद्यस्सद्यो भग्ना गुराविह प्रवणाः ॥10॥

युगपत्प्रतिपक्षिशतं प्रस्पर्धितुमुज्जिहानमपि सद्यः ।
चतुरकृतिरत्नसृष्ट्या क्षणेन भग्नं करोति गुरुरेषः ॥11॥

कुत्सितवादविसृत्वरबुद्धिबलोद्दण्डधूर्तजनदर्पम् ।
हन्तुमवतीर्ण एको गुरुरयमित्याहुरार्यमिममार्याः ॥12॥

सद्यः परिभवभाजस्ताम्यन्ति गुरोरमुष्य भौमरवेः ।
श्रीसूक्तिनिवहदीपे शलभीभूता ह्यसूयवः केचित् ॥13॥

गात्रे निजे गलद्भिर्जम्बालैर्व्योम लिम्पतो मूर्खान् ।
अनुकुर्वन्तो मूढा गुरुमिममुद्दूष्य हास्यतां यान्ति ॥14॥

---

9. "யதாசக்தி நிக்ருஹ்ணீயாத் தேவதாகுருநிந்தகாந்" என்கிற சாஸ்த்ரத்தையடியொற்றித் திருமாலையில் "குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை யாங்கே யறுப்பதே கருமங்கண்டாய்" என்றருளிச் செய்திருப்பதை நம்ஸ்வாமி பிள்ளைலோகாசார்ய ஸூக்தி தூஷகர்களிடத்திலே கொண்டு எழுதும் மறுப்புரைகள் மிக வுகக்கத் தக்கவையே.

10, பலர் ஸ்வாமியிடத்தே எதிர்வாதஞ்செய்து பங்கப்பட்டொழிவதைக் கட்கூடாகக் கண்டுவைத்தும் தம்முடைய வாதங்களினால் ஸ்வாமியை வென்றுவிடலாமென்று வீணான ஆசைகொண்டு எதிரம்புகோக்கவரும் துர்வாதிகளும் உடனுக்குடனே பங்கமடைந்து ஸ்வாமிபக்கலிலே ப்ராவண்யமே கொண்டு "ப்ரத்யஸ்த்ரமஞ்ஜலிரஸௌ தவ நிக்ரஹாஸ்த்ரே" என்கிற தேசிக ஸூக்தியின் அநுஸந்தானமே புகலாக நிற்கின்றார்கள்.

11. நூற்றுக்கணக்கானபேர்கள் ஏககாலத்திலே எதிர்வாதஞ் செய்யத் திரண்டு வந்து தோன்றினாலும் க்ரந்தங்களை உடனே அருளிச்செய்து அவர்களை யெல்லாம் பங்கமடைவிப்பதே நம்ஸ்வாமியின் இயல்பு.

12. குத்ஸித வாதங்களிலேயே பரந்த புத்தியையுடையவர்களாய் சாஸ்த்ரவரம்புக்கு அடங்காமல் தோன்றினபடியே பேசுவது மெழுதுவதுமாக வுள்ளவர்களின் செருக்கை யடக்குவதற்கு நம்ஸ்வாமி யொருவரே வல்லவரென்று பெரியார் துணிந்து கூறுகின்றனர்.

13. விளக்கில் விட்டில்விழுந்து மடிவதுபோல, பூலோக ஸூர்யனென்று பேர் பெற்ற நம்ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளாகிற விளக்கிலே தாமாகவே வந்துவிழுந்து மடிந்து பரிபவமடையும் பொறாமையாளர்கள் சிலருளர்.

14. ஒரு தூஷணையும் ஏறமாட்டாத நம்ஸ்வாமிகளின்மீது தூஷணைகளைச் சொரியுமவர்கள், நிர்மலமான ஆகாசத்திலே சேற்றை வாரியிறைத்துத் தம் தலையிலே அந்தச்சேற்றை வழியவிட்டுக் கொண்டு நிற்பார்போன்று பரிஹஸிக்கத் தக்கவர்களாய் வருந்திக் கிடக்கும்படியைக் காணாநின்றோம்.

अस्य गुरोः खलु मुखतो भङ्गो बहुधा बभूव मत्सरिणाम् ।
तेते प्रकारभेदा स्संक्षेपेणात्र संप्रदर्श्यन्ते ॥15॥

पूर्वाचार्यसदुक्तिप्रत्याख्यानप्रकोपजो भङ्गः ।
तासु सदुक्तिषु विपरीतार्थविलेखननिमित्तको भङ्गः ॥16॥

मान्यमहाकविफणितिष्वसंगतार्थोक्तिमूलको भङ्गः ।
प्राचेतसादिमुनिवरफणितिष्वसदर्थवर्णनाद्भङ्गः ॥17॥

वेदान्तदेशिकाशयविरुद्धविषयोपवर्णनाद्भङ्गः ।
भगवद्गुणातिशायनसहिष्णुताविरहमूलको भङ्गः ॥18॥

भगवद्वैभवकथनासहनातिशयोत्थलेखनाद्भङ्गः ।
पूर्वप्रबन्धकर्तृषु नामविपर्यासहेतुको भङ्गः ॥19॥

प्रामाणिकाभ्युपेयप्राज्यार्थविदूषणार्थको भङ्गः ।
एवं बहुतरहेतुभिराचार्येऽस्मिन्महाप्रदीपनिभे ॥20॥

प्रासशलभायितानां भग्नानां हन्त पण्डितेन्द्राणाम् ।
नामावली तु विद्वद्गोष्ठीषु भृशं प्रसिद्धिमापन्ना ॥21॥

तादृग्भिरपि च विबुधैरशिथिलीकृतदन्तदन्दशूकनिभैः ।
अभिवन्दितांघ्रिकमलद्वन्द्वो गुरुरेष सूर्यसदृगिन्धे ॥22॥

15—21. ஸ்வாமி பக்கலிலே மாச்சரியங்கொண்டு எதிர்த்துப் பங்கமடைந்தவர்கள் எந்தெந்த காரணங்களினுல் பங்கமடைந்தார்களோ அந்தக்காரணங்களை யிங்குச் சுருக்கமாகத் தெரிவிப்போம்; பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளை தூஷிப்பது, அந்த ஸ்ரீஸூக்திகளிலே அபார்த்தங்களை யேறிட்டெழுதுவது, மஹாகவிகளின் வாக்குக்களுக்கு அஸங்கதமான அர்த்தங்களைக் கூறுவது, வான்மீகி முதலான மஹர்ஷிகளின் திருவாக்குக்களில் ஏலாதபொருள்களை ஏற்றிக் கூறுவது, வேதாந்த தேசிகருடைய திருவுள்ளத்திற்குப் பாங்கல்லாத விஷயங்களைப் பகருவது, எம்பெருமானுடைய திருக்குணங்களையும் வைபவத்தையும் வெளியிடக் கண்டு பொருமல் எழுதுவது, பூர்வக்ரந்தங்களிலே கர்த்தாக்களின் நாமத்தை வேறுபடுத்துவது, ப்ராமாணிகர்கள் இசையக்கூடிய சிறந்த அர்த்தங்களை மறுப்பது, ஆக இங்ஙனேயான பலபல காரணங்களினுல் நம் ஸ்வாமிபக்கலிலே அவரவர்கள் பங்கமடைந்திருக்கிருர்கள். அப்படி பங்கமடைந்த பண்டிதர்களின் திருநாமப்பட்டி பண்டித கோஷ்டிகளில் மிகவும் ப்ரஸித்தி பெற்றதே.

22. அப்படிப்பட்ட பண்டிதர்களும் பல்லைப்பிடுங்கின பாம்புபோல் செருக்குக் குலைந்து ஸ்வாமி திருவடிகளிலேயே தலைவணங்கி நிற்கப் பெறுகின்றபடியாலே நம் ஸ்வாமியைக் கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்தவராகவே மதிப்பர் மாண்மதியோர்.

प्रतिपक्षिपक्षलवनप्रसङ्गसंजातलेखनेऽस्य गुरोः ।
नानाप्रबन्धबृन्दे कतिचिदुदाहृत्य हर्षये भक्तान् ॥23॥

देशिकविरचितपादूसहस्रजन्मनि निदानमयथार्थम् ।
लिखितमविवेकिभिर्गुरुरयमतिरमणीयगीर्भिरलुनीत ॥24॥

स्तोत्रव्याख्यानकृतौ श्रीकृष्णगुरूत्तमैरसल्लिखितम् ।
इति लिखितवन्तमल्पं सूरिरनल्पोक्तिभिर्निरास्थदसौ ॥25॥

ब्रह्मव्याप्तिपरिष्कृतिकृतिरलख्यापनेन लक्ष्मीशे ।
अघटितघटनाशक्तिं निरूप्य कुमतीन्निरास्थदार्योऽयम् ॥26॥

प्रतिपक्षिभिक्षुलिखितां समस्यमानेतिदुर्वचोविवृतिम् ।
श्लोकैर्द्विशताभ्यधिकैस्सव्याख्यैरेष गुरुरपाचक्रे ॥27॥

तिरुपतितिरुवादिमुखस्थलस्थविबुधैः प्रकाशितान् सुबहून् ।
दुर्वादघननिबन्धान् सुदूरमुत्सार्य गुरुरसौ जयति ॥28॥

---

23. கீழே விவரித்த விதமாக ப்ரதிபக்ஷிபக்ஷ ப்ரதிக்ஷேபம் ப்ராப்தமான அவஸரங்களில் ஸ்வாமி யருளிச் செய்த க்ரந்தங்கள் பலபலவுண்டு; அவற்றுள் சிலவற்றை யீண்டெடுத்துக்காட்டி அன்பர்களை உகப்பிக்க விரும்புகின்றேன்.

24. தேசிகர் அருளிச்செய்த பாதுகாஸஹஸ்ரம் உண்மையில் எந்தக்காரணத்தினால் அவதரித்ததோ அந்தக் காரணத்தை மறைத்து வேறொரு கல்பனையான காரணத்தை யெழுதிப் பூர்வாசார்யர்களை நிந்தித்தவர்களைப் பாதுகாஸஹஸ்ராவதாரதத்வம் முதலிய வடமொழி நூல்களினால் கண்டித்தருளினர் நம்ஸ்வாமி.

25. ஸ்தோத்ரரத்ன வியாக்கியானத்தில் பூருவர்கள் தவறுதலாகச் சில விஷயங்களை யெழுதிவிட்டார்களென்று ப்ரமித்து எடுத்துக் காட்டிய துர்வாதியை ஸ்தோத்ர வ்யாக்கியான சோதனம் என்னும் க்ரந்தத்தினால் கண்டித்தருளினர் நம்ஸ்வாமி.

26. எம்பெருமானுடைய அகடிதகடனா சக்தியில் குறைகூறினவர்களைக் கண்டித்து ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா என்று ச்லோகமயமான க்ரந்தத்தை விவரணத்தோடு மருளிச் செய்தார் நம்ஸ்வாமி.

27. "ஸமஸ்யமான ...." என்றாரம்பித்து ஒரு பண்டிதர் மிகவும் அஸம்பத்தமாக எழுதியிருந்த பூர்வாசார்ய தூஷணத்தை ஸங்கதமாக்குகிறேனென்று கிளர்ந்தவொரு யதியின் க்ரந்தத்திற்கு ப்ரத்யக்ஷரகண்டனமாக ஸமஸ்யமானோக்தி ஸௌஷ்டவ விமர்சமென்று இருநூற்றுச் சொச்சம் ச்லோகங்கள் கொண்ட மஹா க்ரந்தத்தைத் தமிழுரையுடனுமருளிச் செய்திருக்கின்றார் நம்ஸ்வாமி.

28. மேற்குறித்த விஷயத்திலும் இதர விஷயங்களிலும் திருப்பதி திருவையாறு முதலியவிடங்களிலிருந்து காலேஜ் ப்ரொபஸர்கள் பலர் வெளியிட்ட துர்வாதங்களை யெல்லாம் ஸ்வாமி "ரக்ஷாவிமர்சசிக்ஷா" "தேசிகஸூக்தி பரிமளம்" முதலான தமது பல க்ரந்தங்களினால் நெடுந்தூரத்திலே தள்ளி யொழித்திருக்கின்றார்.

रसिकरसायनमुख्यैर्बहुभिर्विद्वद्वृतंस्यकृतिरत्नैः ।
दुर्वादिगर्वहन्ता विख्यातख्यातिरेष गुरुरीड्यः ॥29॥

अद्भुतशक्तिप्रमुखैः स्वकृतैः प्रतिपक्षिपक्षभङ्गकरैः ।
भगवद्वैभवनिधिभिर्निबन्धरत्नैरसौ गुरुः प्रथितः ॥30॥

भगवद्वात्सल्यगुणे दोषोद्घाटनमहापचारेण ।
दग्धं प्रतिपक्षिगणं सुखेन चिक्षेप गुरुरसौ श्रेयान् ॥31॥

भगवद्दयाप्रशस्तिं द्विशताधिकहृद्यपद्यमयकृत्या ।
अभिनवदयाशताख्याजुषा प्रतिष्ठाप्य सूरिरयमिन्धे ॥32॥

रक्षाविलोचनार्थप्रकाशिकाभिख्यदिव्यकृतिविजयः ।
प्रतिपक्षिवृन्दकृतिभिः प्रतिष्ठितो लसति गुरुवरस्यास्य ॥33॥

---

29. ரஸிகரஸாயநம் முதலிய மற்றும் பல க்ரந்தங்களையும் மஹாவித்வான்களின் மதிப்புரைகளோடுங்கூட வெளியிட்டருளி துர்வாதி கர்வத்வம்ஸம் செய்தருளியிருக்கிறார் நம்ஸ்வாமி.

30. எம்பெருமானுடைய அத்புதசக்தி விசேஷத்தினால் பொருந்தக்கூடிய ஸர்வ வ்யாப்தியை இல்லைசெய்த பிறருடைய நூல்களை அத்புதசக்தி யென்கிற நூலினாலும் அதற்குச் சார்பாக அவதரித்த மற்றும் பல நூல்களினாலும் கண்டித்தருளினார் நம் ஸ்வாமி.

31. எம்பெருமானுடைய வாத்ஸல்ய குணமாவது—தோஷங்களிலும் குணத்வ புத்தியே யென்று ச்ருதப்ரகாசிகாசார்யர் முதலானோர் ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கும் அர்த்தத்தை மறுத்து பகவத் குணத்திலே குறைகூறி மஹாபசாரமடைந்த துர்வாதிகளை ச்ருதப்ரகாசிகாரக்ஷா, வாத்ஸல்யார்த்த விஜய த்வஜம் முதலிய க்ரந்தங்களினால் பாற்றியருளினர் நம்ஸ்வாமி.

32. எம்பெருமானுடைய தயையாவது பரதுக்க துக்கித்வமேயாகுமென்று எம்பெருமானார் பட்டர் முதலான ஸகல பூர்வாசார்யர்களுமருளிச்செய்த மஹார்த்தங்களைப் பழித்துப் பிறர் எழுதிய நூல்களை அபிநவதயாசதகம் என்று இருநூற்றுச் சொச்சம் ச்லோகங்களும் அவற்றுக்கு வியாக்கியானமான கத்யராசியுங்கொண்ட மஹா க்ரந்தத்தினாலும், பரதுக்க துக்கித்வபரமார்த்தரக்ஷா முதலிய மணிப்ரவாள நூல்களினாலும் மறுத்தருளினார் நம் ஸ்வாமி.

33. ஸ்வாமியின் நூல்களுள் ரக்ஷாவிலோசந பாவப்ரகாசிகா என்கிற ஸம்ஸ்க்ருத நூல் மிகச் சிறந்தது; இது தமிழ் விவரணத்தோடுங்கூடி வெளிவந்திருக்கின்றது. ரக்ஷா என்பதனால் ஸச்சரித்ரரக்ஷா க்ரந்தமும், விலோசந மென்பதனால் ஸுதீவிலோசநமென்கிற தர்மசாஸ்த்ர நிபந்தமும் விவக்ஷிதம். இவ்விரண்டு க்ரந்தங்களையும் பற்றி விபுலமான ஆராய்ச்சியுள்ளது இந்நூலில். முடிவாக பிரதிபக்ஷிகளின் க்ரந்தங்களினாலும் இதற்கு வெற்றியே பலித்து நின்றது.

देशिकसिद्धाञ्जनकृतिटीकावाक्छकलदौःस्थ्यविवृतिचणा ।
रत्नपरीक्षा गुरुणाऽनेन ग्रथिता विभाति बुधमूर्ध्नि ॥34॥

शरणागतिमर्मज्ञाध्यकेऽदृष्टार्थकृत्यसर्वस्वम् ।
गुरुरयमभिज्ञपरिवृढशिरोवतंसं गुणोत्तरग्रन्थम् ॥35॥

लक्ष्म्यास्तत्त्वं व्यवृणुत गुरुस्सदाचार्यसूक्तिरक्षाख्याम् ।
कृतिमारचय्य सोऽयं वरवरयोगीन्द्रसूक्तिसक्तात्मा ॥36॥

देशिकसूक्तिजयध्वजमालासिद्धाञ्जनादिकृतिरत्नैः ।
दुर्वादिगर्वभङ्गे वैचक्षण्यं विशेषतोऽस्य बभौ ॥37॥

महितपरमार्थरक्षाभिधानकृत्या बुधाभिनन्दितया ।
सत्संप्रदायसरणिं संरक्षितवानसौ गुरुप्रवरः ॥38॥

आसीत्सभा भुजङ्गी त्रय्यन्तगुरोरिति स्थितामुक्तिम् ।
अतिहृद्यपद्यशतकाद्व्याचक्षाणं गुरुं स्तुवन्ति बुधाः ॥39॥

---

34. தேசிகனருளிச் செய்த நியாயஸித்தாஞ்ஜனத்திற்கு ரத்நபேடிகை யென்றொரு வியாக்யானமிட்ட திருப்புட்குழி பண்டித ஸ்வாமியொருவர் அதில் ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸாபாஷ்யத்திலுள்ள சில பங்க்திகளுக்குக் கண்டனமெழுதியுள்ளார்; அந்த பண்டிதருண்டைய ஞானத்தெளிவு எப்படிப்பட்டதென்பதை மூதலிக்க ஸ்வாமி ரத்நபரீக்ஷா என்றொரு ஸம்ஸ்க்ருத பத்ய க்ரந்தம் விவரணத்தோடுங்கூட அருளிச் செய்திருக்கிறார், அதில், ஸம்ப்ரதாய விவாதாஸ்பதமான விஷயத்தை யெடுத்துக்கொள்ளாமல் ஸர்வஸம்ப்ரதிபந்நமானதொரு விஷயத்தையே யெடுத்துக்கொண்டு ஸகல வித்வந்மனோஹரமான விமர்சம் காட்டப்பட்டுள்ளது.

35. நவீநமான சரணாகத்யநுஷ்டாநத்தைப் பற்றின விமர்சமாக அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வ மென்கிற க்ரந்தம் ஸ்வாமியால் பணிக்கப்பட்டுள்ளது. அது பெரும்பாலும் தேசிக ஸ்ரீஸூக்தி விவரணமாகவே அமைந்திருப்பதால் ப்ராமாணிகமே யென்று ப்ராஜ்ஞர்களால் கொண்டாடப்பட்டிருக்கின்றது.

36. ஸதாசார்ய ஸூக்திரக்ஷா என்கிற மிகச் சிறந்த க்ரந்தத்தினால் பிராட்டியின் தத்துவங்களை நன்கு விமர்சித்திருக்கின்ற நம் ஸ்வாமி மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளில் மிகவுமாழ்ந்தவர்.

37. தேசிக ஸூக்தி ஜயத்வஜமாலா, தேசிக ஸூக்தி ஸித்தாஞ்ஜனம் முதலிய பல க்ரந்தங்களையும் ஸந்தர்ப்ப விசேஷங்களில் நம் ஸ்வாமி யருளிச்செய்து துர்வாதி வாதங்களைப் பொடிபடுத்தி யருளின பெருமை உலகமறிந்தது.

38. பலரும் கொண்டாட நின்ற பரமார்த்தரக்ஷா என்னும் திவ்ய க்ரந்தத்தை யருளிச் செய்து ஸத்ஸம்ப்ரதாயார்த்த தத்துவங்களை யெல்லாம் ஸம்ரக்ஷித்தருளி யுள்ளார் நம் ஸ்வாமி.

39. வேதாந்த தேசிகருடைய ஸ்துதியொன்றில் "ஸம்பாவநா யஸ்ய ஹி கால கூடஃ ஸபா புஜங்கீ குணபம் தருண்யஃ" என்றுள்ள ச்லோகத்தில் "(ஸபா புஜங்கீ" என்றிருக்கின்றது; தேசிகர் ஸபையை அணுகமாட்டார் என்பது இதன் கருத்து. ஏந்தஸபையை அவர் அணுகமாட்டாரென்று விசாரம் வந்தகாலத்தில் மிகவிரிவான

श्रीरामकृतसमुद्रप्रपत्तिकालिकवचोऽर्थयाथात्म्यम् ।
बहुभिर्निबन्धरत्नैः प्रकटीकृतवानसौ गुरुर्मान्यः ॥40॥

परिपन्थिपञ्चभङ्गीनाम्ना प्रथितां कृतिं प्रणीयैषः ।
कतिपयवैयाकरणभ्रान्तिमपास्यन् गुरूत्तमो जयति ॥41॥

रसिकबुधरञ्जनाख्यामुपदेशरसायनाह्वयां च कृतिम् ।
निर्माय मायिकलभे केसरिवृत्तिं चकार गुरुरेषः ॥42॥

तत्त्वहितसदुपदेशावतारतत्त्वप्रकाशिकादिकृतीः ।
प्रादुर्भाव्य समिन्धे गुरुरयमुद्धूतदुर्मतध्वान्तः ॥43॥

परदुःखदुःखितात्मकमुत्तमगुणमच्युते विदूषितवान् ।
कुमतिजनोऽस्य वचोभिर्वेदसमानैर्विधूयतेस्म गुरोः ॥44॥

भक्तजनदोषभोग्यत्वात्मकगुणमिन्दिरापतौ केचित् ।
असहिष्णवो यदाहुस्तदभञ्जयदेष गुरुरनर्घोक्त्या ॥45॥

ஆராய்ச்சியைச் செய்து நம் ஸ்வாமி நூறு ச்லோகமுடைய இரண்டு ஸர்க்கங்கள் கொண்ட ஸபாபுஜங்கீ ஸர்வஸ்வம் என்னும் க்ரந்தத்தைப் பணித்துள்ளார். அதனைப் பண்டிதர்களனைவரும் மிகவும் புகழ்கின்றனர்.

40. ஸ்ரீராமபிரான் ஸமுத்ரசரணாகதி செய்தருளின காலத்தில் தோன்றியுள்ள 'அத்ய மே மரணம்' என்னும் ச்லோகத்தின் உண்மைப் பொருள் விளக்கம் செய்யப் புகுந்த நம்ஸ்வாமி இது ஸம்பந்தமாகப் பல நூல்களையருளிச் செய்து புகழ்பெற்றிருப்பது உலகப்ரஸித்தம்.

41. சாந்தஸபதங்களுள் பரிகணிதமான பரிபந்தி யென்னும் ஸம்ஸ்க்ருதபதமொன்று கவிகளால் உலகத்திலும் பிரயோகிக்கப்பட்டு வருவதைப்பற்றி ஸ்வாமி ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ள பரிபந்தி பஞ்சபங்கீ என்னும் ஸம்ஸ்க்ருதக்ரந்தமானது சில வையாகரணர்களின் ப்ராந்தியைப் போக்கடித்து வெற்றிபெற்று விளங்குகிறது.

42. ரஸிகபுதரஞ்ஜனம், உபதேசரஸாயனம் முதலிய நூல்களை யியற்றி வாதிகலப கண்டீரவமென்று போற்ற நிற்கின்றார் நம் ஸ்வாமி.

43. தத்வஹிதோபதேசம், ந்ருஸிம்ஹாவதாரதத்வம் முதலிய பல நூல்களை வெளியிட்டருளி துர்வாதிகளின் துர்வாததிமிரங்களைப் பாறவடித்து ஸூர்யன்போல் விளங்குபவர் நம் ஸ்வாமி.

44. பரமகாருணிகனான ஸர்வேச்வரனிடத்தில் விளங்கும் பரதுஃக்கதுஃக்கித்வமென்கிற குணத்தைச் சில குசோத்யங்களினால் தூஷித்த த்ரமிடோபநிஷத் குத்ருஷ்டிகளை நம் ஸ்வாமி "பரதுக்க துக்கித்வ பரமார்த்தரக்ஷா" முதலிய க்ரந்தங்களினால் நிரஸித்தருளினார்.

45. வத்ஸலனான ஸர்வேச்வரனிடத்தில் விளங்கும் பக்தஜநதோஷ போக்யத்வமாகிற மஹா குணத்தைப் பொறாமல் தூஷித்தவர்களை வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகா, வாத்ஸல்யார்த்த விஜயத்வஜம், ச்ருதப்ரகாசிகாரக்ஷா முதலிய தென்மொழி வடமொழி க்ரந்தங்களினால் தகர்த்தவர் நம் ஸ்வாமி,

लक्ष्मीतत्त्वविनिर्णयनाम्ना ग्रन्थेन पद्मनिलयायाम् ।
विभुतोपायत्वादीन् संशोधितवानसौ गुरुर्जयति ॥46॥

विधवाकेशविसर्जनमुख्याचारान् विचारयन् कृतिभिः ।
प्रामाणिकार्थवर्णनपटुरिति गुरुरेष पप्रथे जगति ॥47॥

श्रीशैलेशदयेतिप्रसिद्धपद्यप्रभावमसमानम् ।
असहिष्णुवैरिवादिक्षेपपुरस्सरमसौ गुरुर्न्यदधात् ॥48॥

श्रीमान्वेङ्कटपद्यप्रभावलोपैकहेतुपद्यस्य ।
नूतनकल्पिततां च प्राबोधयदेष गुरुरनर्घोक्त्या ॥ 49 ॥

गुरुरेष पाठशोधनपरीक्षणाख्येन निजनिबन्धेन ।
पूर्वसदुक्तिविदूषणधूनकैङ्कर्यमद्भुतं तेने ॥ 50 ॥

प्रणमनपौनःपुन्याचारविचारे प्रमाणसिद्धार्थम् ।
प्रामाणिकोपमोघ्यं प्राचीकशदेष पण्डितप्रवरः ॥ 51 ॥

---

46. லக்ஷ்மீதத்வவிநிர்ணய மென்கிற க்ரந்தத்திஞல் பிராட்டியின் உபாயத்வம் முதலியவற்றைப் பற்றின சிறந்த ஆராய்ச்சிகளை வெளியிட்டருளியுள்ளார் நம் ஸ்வாமி.

47. விதவாவபநம் முதலிய ஆசாரங்களைப் பற்றின விசாரம் விளைந்தகாலத்தில் ப்ராமாணிகஹ்ருதயங்கமமான விமர்சங்களை யெழுதி வெளியிட்டுப் பரமப்ராமாணிக ரென்ற புகழைப்பெற்றவர் நம் ஸ்வாமி.

48. ஸ்ரீசைலேசதயாபாத்ர மென்னும் தனியன் உலகம்போற்ற நின்ற பெருமையை ஸ்வாமி பலக்ரந்தங்களிஞல் நிதிகாப்பதுபோல் காத்தருளி யிருக்கின்ருர். இவ் விஷயத்தில் பொருமையாளர்களான எதிரிகளின் வாதங்களையும் அற்புதமாகத் தகர்த் திருக்கின்ருர்.

49. "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:" என்கிற ஜகத் ப்ரஸித்தமான சிறந்த தனியனுடைய பெருமையைக் குலைக்கத் தோன்றிய சண்டைத்தனியனென்று மிகவும் நவீனமே யென்பதை நம் ஸ்வாமி மிகச்சிறந்த க்ரந்தங்களிஞல் நிலைநாட்டியுள்ளார்.

50. ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலான திவ்யக்ரந்தங்களிலுள்ள யுக்தமான பாடங்களையும் தப்புப்பாடமென்று தூஷித்துப் பிறர் எழுதி வெளியிட்டிருந்த பாடசோதநம் என்னும் க்ரந்தத்தை விமர்சித்துப் பாடசோதநபரீக்ஷா என்னும் க்ரந்தத்தை யருளிச் செய்த நம் ஸ்வாமியின் தொண்டு மிகவும் மெச்சத்தகுந்தது.

51. பலமுறைப் ப்ரணமம் செய்வதாகிறவொரு ஆசாரத்தைப் பற்றின விசாரம் விளைந்த காலத்தில் நமஸ்காரதத்வம் நமஸ்காரதத்வவிஜயத்வஜம் என்னும் க்ரந்தங்களை நம் ஸ்வாமி வெளியிட்டு ப்ராமாணிகர்களை மகிழ்வித்தனர்.

कमलापतिकरुणायां निर्हेतुकता कदापि नहि घटते ।
अनुपायताभिधानं नहि प्रपत्तौ कदाऽपि संघटते ॥ 52 ॥
न प्रापकान्तरेषु स्वरूपवैरित्ववाद उपपन्नः ।
स्वगतस्वीकारादप्यतिरिक्तस्याभिधानमुचितं न ॥ 53 ॥
नहि खल्वात्मानुभवे मोक्षत्वोक्तिः प्रमाणशरणानाम् ।
सप्रणवाष्टाक्षर्या नहि खलु सर्वाधिकारता युक्ता ॥ 54 ॥
एवंविधान् परेषां वादान् प्रामाणिकाध्वना सोऽयम् ।
सूरिः प्रत्याचख्यौ प्रबन्धरत्नैर्निजैः प्रसिद्धतरः ॥ 55 ॥
कृतिभिर्भजन्ति भङ्गं केचित् केचित्तु वाचिकैर्वादैः ।
मानसिकैरपचारैरन्ये हन्तैवमीक्ष्यते लोकः ॥ 56 ॥
मूढा दुष्कृतिनोऽपि च नराधमा आसुरं श्रिता भावम् ।
इति गीतासु सुगीता महानुभावा हि जाग्रतीह सदा ॥ 57 ॥
भगवदवतारहेतुर्यथा ह्यभूद्दैत्यरक्षसां दौष्ट्यम् ।
अस्य गुरोरवतारे तद्वद्धेतुः कुदृष्टिजनदौष्ट्यम् ॥ 58 ॥
रावणभगिनीतारामन्दोदर्यादिवैखरीस्वततम् ।
संस्मारयन्ति ते ये विद्वांसोऽस्मिन् गुरौ दधुर्वैरम् ॥ 59 ॥

52—55. எம்பெருமானுடைய நிர்ஹேதுக் க்ருபையைப் பற்றியும் இது போன்ற மற்றும் பல ஸத்ஸம்ப்ரதாயஸித்தாந்த விஷயங்களைப்பற்றியும் நம் ஸ்வாமி ப்ராமாணிகார்த்தங்களை வெளியிட்டு எழுதியிருக்கும் நூல்கள் ப்ரஸித்தமானவை.

56. இப்படிப்பட்ட க்ரந்தங்களை ஸேவித்து வாழ்ந்துபோவார் பலர் இருக்க, எதிரம்புகோத்து மாய்ந்து போவாரும் பலருளர். க்ரந்த மூலமாக மாய்ந்துபோவார் சிலர்; நேரில் வாதாடிப் பங்கமடைந்து போவார் சிலர்; மானஸிகமாக அபசாரப்பட்டு மடிந்துபோவார் சிலர். அந்தோ! இவையென்ன வுலகியற்கை!.

57. கீதையில் * நமாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயா அபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா:* என்கிற ச்லோகத்தினால் கீதாசார்யனால் வெறுக்கப்பட்ட அதிகாரிகள் எக்காலத்திலு முள்ளார்களன்றே.

58. அஸுரராக்ஷஸர்களின் தௌஷ்ட்யமே எம்பெருமானுடைய திருவவதாரத்திற்குக் காரணமானதுபோல, குத்ருஷ்டி ஜனங்களின் தௌர்ஜந்யமே நம் ஸ்வாமியின் திருவவதாரத்திற்கு ஹேதுவாயிற்றென்பது மருமமுணர்ந்தவர்களின் கொள்கை.

59. நம் ஸ்வாமியினிடத்தில் பகைமை பூண்டவர்களும், வையவந்த வாயாலே வாழ்த்தும்படியாகவே நேர்ந்துவிடுகிற படியால் பெரும்பாலும் சூர்ப்பணகை தாரை மந்தோதரி ஆகிய இவர்களைப்பற்றின நினைவே உலகுக்கு அடிக்கடி வரும்.

ते नश्यन्तु यथेच्छं भाग्याधिक्येन भोक्तुमर्हाणाम् ।
सुधियां भोगाय मुदा गुरुणा कृतमेव भूयश्शृणुत ॥ 60 ॥

त्रय्यन्तसूरिरचितग्रन्थेषु बहून् स्वटीकया महितान् ।
कृतवान् गुरुरयमनघप्रतिवादिभयङ्कराह्वयो जगति ॥ 61 ॥

निगमान्तसूरिविषयस्तोत्रकृती यस्य टीकया धन्ये ।
सोऽयं परगोष्ठीष्वपि विश्रुतवैदुष्यवैभवो गुरुराट् ॥ 62 ॥

श्रीमान्वेङ्कटपद्याक्षरानुपूर्व्या स्तुतिप्रबन्धमसौ ।
वेङ्कटनाथार्याय प्रदाय भक्तिं निजां प्रदर्शितवान् ॥ 63 ॥

वेदान्तसूरिचरितं प्रामाणिकहृद्यमसकृदभिलिख्य ।
सूरेस्तस्य यथार्थं वैभवमयमेव विश्रुतं चक्रे ॥ 64 ॥

भगवत्कथामृतादिप्रबन्धरत्नानि गुरुरसौ रचयन् ।
भगवद्भक्तिधनानां सतां मनस्येव सततमुल्लसति ॥ 65 ॥

विष्णोस्सहस्रनामस्तुतेर्गभीरार्थममृतसदृशीभिः ।
द्राविडसूक्तिझरीभिर्व्याचख्यावेष सुप्रसिद्धयशाः ॥ 66 ॥

---

60. அப்படிப்பட்ட கருவிலேதிருவிலாதார் கிடக்க; ஸுக்ருத வசத்தினால் நல்ல அர்த்தங்களை நன்றாக அநுபவிக்கப் பிறந்த மஹநீயர்களின் அநுபவத்திற்கு உரியதாக நம் ஸ்வாமி பணித்த திவ்ய க்ரந்தங்களையே இன்னமும் தெரிவிக்கக் கேண்மின்.

61. வேதாந்த தேசிகர் பணித்த க்ரந்தங்களுள் பலவற்றுக்கு நம் ஸ்வாமி இயற்றிய வியாக்கியானம் ப்ரஸித்தமானது; இதனால் ப்ரதிவாதிபயங்கர பிருது நம் ஸ்வாமிக்கே தகுமென்று சொல்லுவர் பெரியோர்.

62. வேதாந்ததேசிகர் விஷயமான மங்களாசாஸநம், பிள்ளையந்தாதி ஆகிய இரண்டு க்ரந்தங்களுக்கும் நம் ஸ்வாமி பணித்த வியாக்கியானம் பிறருடைய கோஷ்டியிலும் புகழப்படாநின்றது.

63. 'ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:' என்கிற தேசிகன் தனியனிலுள்ள அக்ஷரங்களின் வரிசையாக முப்பத்திரண்டு ச்லோகங்களை உரையோடுங்கூட அருளிச்செய்த நம் ஸ்வாமியின் தேசிக பக்தி பாராட்டத்தகுந்தது.

64. வேதாந்த தேசிகருடைய உண்மையான ஜீவிய சரித்திரத்தை ப்ராமாணிக ஹ்ருதயங்கமமாக நம் ஸ்வாமி பல பாஷைகளிலும் வெளியிட்டுள்ளார்.

65. பகவத் கதையமுதம் முதலான சிறந்த நூல்களைப் பணித்து எம்பெருமானுடைய திவ்விய சரிதைகளை வெளியிட்டிருக்கிற நம் ஸ்வாமியை பக்திச் செல்வமுடையார் நிச்சலும் சிந்தையிற்கொண்டு சிந்திக்கின்றனர்.

66. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்திற்கு பட்டரருளிச் செய்த பாஷ்யத்தைப் பெரும்பாலுந்தழுவி மிகவும் ஸாரமாக நம் ஸ்வாமி யருளிய மொழிப்புரையானது உலகமெல்லாம் கொண்டாட விளங்கா நின்றது.

अतिहृद्यपद्यबन्धैः द्रमिडोपनिषन्महार्थतत्त्वानि ।
प्रख्यापयन्तमेनं प्रख्यातप्राज्ञपरिबृढं नौमि ॥ 67 ॥

पूर्वाचार्यकृतिभ्यो व्यङ्ग्यार्थविशेषबृन्दमतिचारु ।
संगृह्य संप्रकाश्य प्रहर्षयन्नेष गुरुवरो जयति ॥ 68 ॥

मधुरकविसूरिनिष्ठां श्रीवाग्भूषार्थशेखरीभूताम् ।
अधिकृत्य सुबहु विलिखन्नसौ गुरुस्संप्रदायमर्मज्ञः ॥ 69 ॥

शठरिपुयतिपतिवचसोस्समकण्ठत्वं महिष्ठबहुवाग्भिः ।
व्यवृणुत गुरुरयमनितरसाधारणशेमुषीविलासनिधिः ॥ 70 ॥

गीताभाष्ये श्रीमति भाष्ये च श्रीशठारिफणितिरसाः ।
जाग्रति भूयांस इति प्रथयन् गुरुरेष सूक्तिसारज्ञः ॥ 71 ॥

अखिलभुवनेतिसूक्तौ शठकोपमुनेः प्रभावसर्वस्वम् ।
साधुसमन्वितरीत्या निरूपयन्नेष सूरिरतिवाग्मी ॥ 72 ॥

---

67. ஆழ்வாரருளிச் செயல்களிலுள்ள அழகிய பொருள்களை ஸாரமாக வெடுத்துப் பல ச்லோகங்களை யியற்றி திவ்ய ப்ரபந்தார்த்தங்களை எங்கும் பரவச் செய்திருக்கின்ற நம் ஸ்வாமி வித்வான்களில் தலைவரென்று உலகமெங்கு மோங்கிய புகழ் பெற்றிருக்கின்றார்.

68. அருளிச் செயல்களிலும் அவற்றின் வியாக்கியானங்களிலும் உள்ளுறை பொருளென்கிற ஸ்வாபதேசார்த்தங்கள் பலபல விளங்குகின்றனவன்றே ; அவற்றை யெல்லாம் திரட்டி ஸ்வாபதேசார்த்தகலாகர மென்னும் சிறந்த நூலினால் வெளியிட்டு மஹான்களை ஆனந்தப்படுத்தியிருப்பவர் நம் ஸ்வாமி.

69. ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்திற்கு உயிராகிய மதுரகவி நிஷ்டையை [சரம பர்வ நிஷ்டையைப்] பற்றிப் பலபல உபந்யாஸங்களை யெழுதி வெளியிட்டிருக்கின்ற நம் ஸ்வாமியே ஸதஸம்ப்ரதாய மருமங்களை நன்குணர்ந்தவர்.

70. திருவாய்மொழிக்கும் ஸ்ரீபாஷ்யத்திற்குமுள்ள ஐககண்ட்யத்தை இதுவரையில் ஒருவரும் வெளியிட்டிராதவகையில் நம் ஸ்வாமி பலமுகமாக வெளியிட்டிருக்கின்றார்.

71. கீதாபாஷ்யத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ஸ்வாமி யெம்பெருமானார் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தி ரஸங்களை ஆங்காங்கு புகவிட்டிருக்குமழகை நம் ஸ்வாமியே விவரித்தருளியுள்ளார்.

72. * அகில புவநஜந்மஸ்தேம பங்காதிலீலே * என்கிற ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தில் ஒவ்வொரு விசேஷணத்தினாலும் நம்மாழ்வாருடைய பெருமையே வெகு ஆச்சரியமாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறதென்று நம் ஸ்வாமி விரிவான வியாக்கியான மருளியுள்ளார்.

दिव्यप्रबन्धगाथा बह्वीस्सुरवाचि पद्यरूपेण ।
दण्डकरूपेणापि प्रथ्नन् गुरुरेष सत्कविश्रेष्ठः ॥ 73 ॥

त्वंमेऽहंमेसूक्तिं श्रीभट्टारकगुरोर्गरिष्ठार्थाम् ।
अतिसुभगविवृतिमहितां कृतवान् गुरुरेष रसिकभोग्यवचाः ॥ 74 ॥

प्राचेतसप्रणीतश्रीरामायणमहाकथासारम् ।
द्राविडनिबन्धमुखतः ख्यापितवानेष गुरुरमेयात्मा ॥ 75 ॥

श्रीरामायणदण्डककर्णामृतमुख्यनुतिततीर्बह्वीः ।
निर्माय रामभक्तिं प्रकाशयन्तं स्तवानि गुरुमेनम् ॥ 76 ॥

गीतामृतादिबहुलस्तोत्रप्रख्यापनेन गोविन्दे ।
भक्तिमनघां प्रकाश्य प्रहृष्टहृदमेनमार्यमानमत ॥ 77 ॥

अमृतलहरीसमाख्यप्रसिद्धसत्पत्रिकामुखात्सुबहून् ।
सत्संप्रदायसिद्धान्तार्थान् प्रदिशन्नसौ गुरुः श्रेयान् ॥ 78 ॥

श्रीरामानुजनाम्नीं प्रतिमासं पत्रिकां प्रकाशयता ।
गुरुणाऽनेन सुधामयसूक्तिपयोदेन शिशिरिता जगती ॥ 79 ॥

---

73. திவ்யப் ப்ரபந்தப் பாசுரங்கள் பலவற்றை அப்படியப்படியே ஸம்ஸ்கிருத ச்லோகமாகவும், திருவாசிரியம் திருவெழு கூற்றிருக்கை யென்னும் திவ்ய ப்ரபந்தங்களை ஸம்ஸ்கிருத தண்டகமாகவும் மொழி பெயர்த்திருக்கின்ற நம் ஸ்வாமி கவிகளிற் சிறந்தவர்.

74. பட்டரருளிச் செய்த * த்வம்மேஹம்மே * என்கிற ச்லோகத்தின் ஆச்சரியமான பொருளை அழகாக விவரித்து வியாக்கியான மிட்டருளியிருப்பவர் நம்ஸ்வாமி.

75. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை உத்தரகாண்ட பர்யந்தமாக [கதாஸாரமாய்] வசன நடையில் வெளியிட்டிருக்கின்ற நம் ஸ்வாமியின் பெருமை அளவு கடந்தது.

76, 77. ஸ்ரீராமாயண தண்டகம், ஸ்ரீராமபத்ரகர்ணாம்ருதம் முதலிய பல ஸ்துதிகளையும், கோவிந்த கீதாம்ருதம், கோபால பக்தாம்ருதம் முதலிய பல ஸ்துதிகளையுமருளிச்செய்து ஸ்ரீராம க்ருஷ்ணர்களிடத்தில் தமக்குள்ள பரமபக்தியை வெளியிட்டுக் கொண்டவர் நம் ஸ்வாமி.

78. அம்ருதலஹரி என்னும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை முகமாக ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்கள் பலவற்றையும் உலகுக்கு ஊட்டியருளும் நம் ஸ்வாமி ஆசிரியர்களுள் தலைவராவர்.

79—82. தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் மாதப் பத்திரிகைகள் நான்கையும் வெகுகாலமாக வெளியிட்டு வருகின்ற நம் ஸ்வாமி நாற்றிசையிலுமுள்ள நல்லோர்களை நன்கு உகப்பித்து வருகின்றார்.

वैदिकमनोहराभिधसंस्कृतपत्रीप्रकाशनादेषः ।
उत्तरदक्षिणदेश्यान् सर्वांश्च बुधान् धिनोति गुरुवर्यः ॥ 80 ॥

श्रीरामानुजपत्रीमान्ध्रब्राह्मीमयीमयं सूरिः ।
सुचिरात्प्रकाशयन् सन् आन्ध्रान् सुजनानतीव मोदयते ॥ 81 ॥

वैष्णवसुधाभिधानां हिन्दीभाषामयीं सतीं पत्रीम् ।
प्रतिमाससमुत्सृजन् सन् उत्तरभारतजनान् प्रहर्षयते ॥ 82 ॥

आन्ध्रद्राविडहिन्दीसंस्कृतवाणीषु निर्विशेषमहो ।
दिव्यप्रबन्धटीकाः प्रख्यापयतोऽस्य वैभवं विपुलम् ॥ 83 ॥

भगवद्रामानुजकृतशारीरकभाष्यसारसर्वस्वम् ।
ललितद्राविडकृतितः प्रकाशयन्नेष गुरुरनल्पयशाः ॥ 84 ॥

दिव्यप्रबन्धवृन्दाद्भगवन्नामावलीमहामालाम् ।
उपकल्प्य भक्तवर्गायोपचकारैष सूरिरतिभोग्याम् ॥ 85 ॥

सद्ग्रन्थसंप्रकाशनसभां प्रतिष्ठाप्य तन्मुखादपि च ।
बहुसत्प्रबन्धवृन्दं प्रकाशयन्नेष गुरुवरो जीयात् ॥ 86 ॥

गुरुरेवमेवमनुदिनमनवधिसत्कृत्यरचनया कालम् ।
सोऽयं क्षिपति महात्मा मोदाय सतां, द्विषां न खेदाय ॥ 87 ॥

---

83. மேற் குறித்த நான்கு பாஷைகளிலும் திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்களையுமெழுதி வெளியிட்டருளா நின்ற நம் ஸ்வாமியின் பெருமை உலகமெங்கும் பரவியது.

84. ஸ்ரீபாஷ்யத்தின் ஸாராம்சங்களைத் தெளிவாக அனைவருமுணரும்படி ஸ்ரீபாஷ்ய ஸாரார்த்த ஸங்க்ரஹமென்னும் தமிழ் நூலை நம் ஸ்வாமி பணித்து நிரம்பிய புகழ் பெற்றுள்ளார்.

85. நாலாயிர திவ்யப் பிரபந்தங்களுள் எம்பெருமானுக்குத் திருநாமங்களாகத் தேறுகின்றவை யெல்லாம் திவ்யப்ரபந்தத் திருநாம மாலை யென்னும் அற்புதமான நூல் வாயிலாக அன்பர்களுக்கு அளித்துள்ளார் நம் ஸ்வாமி.

86. சென்னைமாநகரில் 'ஸத்க்ரந்தப்ரகாசந ஸபை' யென்றொரு ஸபையை ஸ்தாபித்து அதன் மூலமாகவும் பலபல ஸத்க்ரந்தங்களை [தமிழிலும் தெலுங்கிலும்] வெளியிட்டு வருகின்றார் நம் ஸ்வாமி.

87. இப்படி லோகோபகாரமான காரியங்களை நாடோறும் நிரவதிகமாகச் செய்துகொண்டு ஸத்துக்களை மகிழ்வித்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றார் நம் ஸ்வாமி. இதில் சிலர் பொறாமைப்பட்டு மடிந்தால் அது யாருடைய குற்றமோ ?

गुरुरयमुपरि च काले निर्मास्यति हन्त कति कृतीः कृपया ।
तदिदं भगवानेको विज्ञातुमलं चिरं जयत्वार्यः ॥ 88 ॥

सर्वैः पूर्वाचार्यैः रचितान् ग्रन्थानशेषतस्सुष्ठु ।
संशोध्य बुधमनोज्ञं संमुद्रितवानसौ कथं स्तुत्यः ॥ 89 ॥

विद्यालयार्थभवनं विपुलमनर्घं सुचारु निर्माप्य ।
शाश्वतकीर्तिस्तम्भं स्थापितवानेष गुरुवरः स्वस्य ॥ 90 ॥

अभ्यागतातिथीनां स्थितिसौकर्यार्थधर्मशाले द्वे ।
स्थानद्वितये स्थापितवन्तममुं धार्मिकाग्रिमं प्राहुः ॥ 91 ॥

सकलश्रुतीतिहासद्रमिडोपनिषद्गुरूक्तिकविवचसाम् ।
अहमहमिकयाऽस्य गुरोर्मुखतो गलतां प्रभावमभ्यधिकम् ॥ 92 ॥

भगवत्कथाप्रसङ्गाभिख्यसभामण्डपे महापुर्याम् ।
सिंहासनोपवेशानेहसि पश्यन्ति सुकृतिनस्सुधियः ॥ 93 ॥

तत्र सभायां सुचिरात् श्रीरामायणमहार्थराशीनाम् ।
गीताश्रीभागवताद्यर्थानां दिव्यसूक्तिभावानाम् ॥ 94 ॥

---

88. ஸ்வாமி இதுகாறும் இயற்றி வெளியிட்டுள்ள க்ரந்தங்களே அபரிமிதமாயிருக்கின்றன; இனிமேலும் எவ்வளவு க்ரந்தங்களை யருளிச்செய்வரோ, அது எம்பெருமான் திருவுள்ளத்திற்கே தெரியவரும். இன்னமும் அநேகமாக க்ரந்தங்களையருளிச் செய்துகொண்டு ஸ்வாமி நீடுழிவாழவேணும்.

89. ஸ்வாமி தாம் க்ரந்தங்களை அபூர்வமாக இயற்றுவதும் தவிர, பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள திவ்ய க்ரந்தங்களையெல்லாம் பரிஷ்கரித்துப் பதிப்பித்தருளுமழகும் வாசாமகோசரம். அதைப்பற்றி நம்போல்வார் பேசவே முடியாது.

90, 91. ஸ்வாமிதாம் ஏற்படுத்தியருளின வேத வேதாந்தவைஜயந்தீ பாடசாலைக்காக மிகவுயர்ந்த கட்டிடம கட்டியிருப்பதும், தேசாந்தரிகள் தங்குவதற்காக மிகச் சிறந்த இரண்டு தர்மசாலைகளை ராமாநுஜகூடமென்கிற பெயராலும் நம்பிள்ளை நிலயமென்கிற பெயராலும் ஏற்படுத்தியிருப்பதும் ஸ்வாமியினுடைய பரமதார்மிகத்வத்தை விளக்குவன.

92, 93. ஸகல ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராண திவ்யப்ரபந்த பூர்வாசார்ய ஸூக்திகளும் காவ்ய நாடகாலங்கார ச்லோக ஜாலங்களுக்கும் நம் ஸ்வாமியின் திருமுக மண்டலத்தில் கங்காப்ரவாஹமபோல் வெளிவருமழகை சென்னைமாநகரில் பகவத்கதா ப்ரஸங்க ஸபையில் சீரிய சிங்காசனத்து வீற்றிருக்குங் காலத்திலே பாக்யசாலிகளான மஹான்கள் ஆனந்தமாக அநுபவித்து வருகிறார்கள்.

94—98. மேற்குறித்த ஸபையில் நெடுநாளாக ஸ்ரீராமாயணம் பகவத் கீதை, ஸ்ரீபாகவதம், அருளிச் செயல்கள், ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யங்களாகிய இவற்றின் ஆழ்பொருள்களை ஸ்வாமி உபந்யஸித்தருளக் கேட்டுக் களிப்பவர்கள் ஆயிரக்கணக்கான

अन्यान्यबहुलदिव्यग्रन्थार्थानां च कथ्यमानानाम् ।
कृतिनः परस्सहस्रा भोक्तारो भान्ति भाग्यसीमस्थाः ॥ 95 ॥

तैः प्रेमविवशहृदयैरनुपमभक्तिप्रकर्षशेवधिभिः ।
सततं स्तुतशुभमहिमा गुरुरयमण्णङ्गरार्य इह जयतु ॥ 96 ॥

गोदादेवीसूक्तिर्नवनवमुन्मेषमद्भुतं याति ।
सूरेरमुष्य गङ्गाझरीसरीतिभिरनर्घसूक्तिभरैः ॥ 97 ॥

यन्मुखनिस्सृतगोदासूक्तिमहार्थान् परस्सहस्रजनाः ।
असकृन्नवनवरीत्या श्रुत्वा हृष्यन्ति सोऽयममितयशाः ॥ 98 ॥

भद्राशासनमीशे सूरिस्तनुते स्म भट्टनाथाख्यः ।
सकलमपि भुवनमस्मिन् गुरावजस्रं हि भद्रमाशास्ते ॥ 99 ॥

आद्यजगदार्यकलिजिद्गुरुवरदिव्यालयं प्रतिष्ठाप्य ।
नित्योत्सवादिपद्धतिमतिरमणीयां गुरुश्चकारैषः ॥ 100 ॥

आचार्यवर्यदिव्यायतनस्यैतस्य कलसिरतिभोग्या ।
गुरुमिममाचार्येषु ध्रुवमन्यतमं निरूपयन्तीन्धे ॥ 101 ॥

श्रीमत्कृष्णसमाह्वयगुरुवरयुगलस्य कलिजितश्च गुरोः ।
अत्यद्भुतोत्सवानां धुरंधरोऽयं गुरुश्चिरं जीयात् ॥ 102 ॥

गुरुचरणमन्दिरेऽस्मिन् सततं श्रुतिभोग्यदिव्यवाग्जृम्भम् ।
गुरुणाऽनेन नियन्त्रितमहरहरिन्धानमेव पश्येम ॥ 103 ॥

---

*ரஸிகர்கள். அவர்களே மஹாபாக்யசாலிகள். அப்படிப்பட்ட மஹான்கள் நம் ஸ்வாமி பக்கலிலே மிக்க ஈடுபாடுடையவர்களாய் * பொலிக பொலிக பொலிகவென்று பேசும் புகழுரைகள் கர்ணாம்ருதமாகக் கேட்கத்தக்கவை. மேற்குறித்த ஸபையில் இருபது வருஷகாலமாக வருஷந்தோறும் மார்கழியில் திருப்பாவையுபந்யாஸம் நடைபெற்று வருவதானது 'எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப் பொழுதென்னாராவமுதமே' என்று பக்தர்களால் உள்குழைந்து உகக்கப்பட்டுவருவது.*

99. பெரியாழ்வார் எம்பெருமானுக்குப் பல்லாண்டுபாடியதுபோல, ஸகல லோகங்களும் ஸதாஸர்வதா நம் ஸ்வாமிக்குப் பல்லாண்டுபாடக் கடமைப்பட்டுளது.

100—105. கீழே விவரித்த பெருமைகளெல்லாவற்றுக்கும் சிகரமாக நம் ஸ்வாமி தேவப்பெருமாள் ஸன்னிதிவாசலில் நம்பிள்ளை ஸன்னிதியை ஏறியருளப் பண்ணி அதில் நித்யோத்ஸவாதிகளை நடத்தியருளுமழகு நிகரற்றது. இந்த ஸன்னிதியின் அமைப்பு மிகவற்புதமானது. நம் ஸ்வாமியும் ஆசார்யர்களுள் ஒருவர் என்னுமிடத்தை நன்கு மூதலிக்கின்றது, இந்த ஸன்னிதியினமைப்பு. வடக்குத் திருவீதிப் பிள்ளையோடும் பெரியவாச்சான் பிள்ளையோடும் நம்பிள்ளை யெழுந்தருளியிருக்கப்

द्रामिडसंस्कृतवेदस्तोत्ररहस्यादिकीर्तनध्वनिना ।
नित्यं विजृम्भमाणेनैतन्मन्दिरमनारताभ्युदयम् ॥ 704 ॥

कृत्वा नन्दधुममितं विन्दन्तं हृदि महागुरुं त्वेनम् ।
भाग्याधिका महान्तो नमन्ति चार्चन्ति संस्तुवन्त्यनिशम् ॥ 105 ॥

जगदाचार्यमहालयसंस्थापनरूपदिव्यकृत्येन ।
जगदाचार्यमहासनपतिरिति बिरुदेन भूषितोऽयमभूत् ॥ 106 ॥

अभ्यागतातिथीनामनुपमसत्कारसंभृतोत्साहम् ।
अण्णङ्गरार्यगुरुमिममनिशं पश्येम वर्धमानगुणम् ॥ 107 ॥

नित्यं विविधविचित्राण्यतिमानुषचेष्टितानि संकलयन् ।
नान्यो गुरोरमुष्मात्कालत्रितयेऽपि कश्चिदिह दृश्यः ॥ 108 ॥

द्रव्यमुपार्ज्य कुटुम्बकपोषणनिरता जना असंख्येयाः ।
गुरुरयमेको धनमिह विनियुङ्क्ते सर्वलोकसंतुष्ट्यै ॥ 190 ॥

श्रीदिव्यसूरिगीतान् दिव्यान्देशान्मुहुस्समासेव्य ।
तत्रच तत्रच सूक्तीरसकृद्वर्षन्नसौ गुरुर्लसति ॥ 110 ॥

பெற்ற இந்த ஸன்னிதியில் ஆசிரியர் மூவர்க்கும் உத்ஸவங்கள் நடைபெறுமழகு நம் ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாடுவிக்கின்றது. இந்த ஸன்னிதியில் உபயவேதங்களும் ரஹஸ்யங்களும் ஸ்தோத்ரங்களும் இடையறாது அநுஸந்திக்கப்பட்டு வருமாறு ஸ்வாமி செய்தருளியிருக்கு மேற்பாடுகள் லோகவிலக்ஷணமானவை. இப்படியே நீடூழி நிலவ வேணுமென்று மங்களாசாஸனம் செய்வதே நம் போலியர்க்குற்ற கடமையாகும். இப்படிப்பட்ட அதிமாநுஷ கார்ய விசேஷங்களைச் செய்துகொண்டு ப்ரஹ்மானந்த பரிபூர்ணராய் விளங்கும் நம் ஸ்வாமியை பாக்யசாலிகளான மஹான்கள் தொழுவதும் ஆராதிப்பதும் துதிப்பதுமாயிருந்து ஸத்தை பெறுகின்றார்கள்.

106. ஜகதாசார்யரான நம்பிள்ளைக்கு திவ்யாலய ப்ரதிஷ்டையாகிற இப்படிப்பட்ட சிறந்த தொண்டு செய்தருளினதற்காக நம் ஸ்வாமிக்கு ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி யென்கிற விருதை மஹான்கள் அளித்துள்ளார்கள்.

107—109. தேசாந்தரங்களிலிருந்து வரும் அதிதிகளை "ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி" என்கிற கணக்கிலே ஆந்தனையும் ஸத்கரிப்பது முதலான பல வகைப்பட்ட நற்காரியங்களைச் செய்து போருமவர் முக்காலத்திலும் நம் ஸ்வாமி யொருவரே யாவர். பொருளை யீட்டித் தம்தம் குடும்ப போஷணம் செய்வார் பலருளர்; ஈட்டின பொருள்களை ஸர்வலோக ஸந்தோஷகரமான காரியங்களிலே விநியோகிப்பவர் நம் ஸ்வாமி யொருவரே யாவர்.

110. ஆழ்வார்கள் உகந்தருளின திவ்ய தேசங்களை அடிக்கடி அலங்கரித்து ஆங்காங்கு அமுதமொழிகளை வர்ஷித்து வருகிற பெருமையும் நம் ஸ்வாமிக்கே அஸாதாரணமானது.

भगवद्दिव्यायतनेष्वादरभूमा हि परथे यावान् ।
कलिजित्सूरेः, तावान् ततोऽधिकश्चास्य गुरुवरस्यास्ते ॥ 111 ॥

उत्तरदक्षिणदिव्यक्षेत्रमहातीर्थसेवनान्यसकृत् ।
कुर्वन्तमनघयशसं वन्देयाण्णङ्करार्यगुरुमेनम् ॥ 112 ॥

नित्यं प्रभातसमये सद्भिश्छात्रैश्च सह महानेषः ।
वेदाध्ययनपरिक्रमगोष्ठीभूषायितश्चिरं जयतु ॥ 113 ॥

शुभगुणमालामेनामाचार्यवरस्य बिभ्रतां हृदये ।
सर्वार्थसिद्धिरनघा प्रबोभवीतीति सर्वमनवद्यम् ॥ 114 ॥

इत्याचार्यवैभवद्विशती समाप्ता ॥

111, 112. *உகந்தருளின நிலங்களிலே திருமங்கையாழ்வார்க்கு எவ்வளவு ப்ராவண்யமோ, அவ்வளவும் அதற்கு மேற்படவும் நம் ஸ்வாமிக்கு உள்ளதனால் தென்னாட்டுத் திருப்பதிகளையும், வடநாட்டுத் திருப்பதிகளையும் மற்றுமுள்ள க்ஷேத்திர தீர்த்தங்களையும் பலகால் ஸேவிக்கும் பாக்கியமும் நம் ஸ்வாமிக்கே உரியது.*

113, 114. *ஸ்வாமி வேதாத்யயனம் செய்து தலைக்கட்டினவுடனே நாள்தோறும் ஸுப்ரபாத ஸமயத்தில் தேவப்பெருமாளுடைய திருவீதி வலம்வரும் வேதபாராயண கோஷ்டியை ஏற்படுத்தி முப்பது வருஷ காலமாக அவிச்சின்னமாய் நடத்தியருளும் பரிசு நெஞ்சால் நினைப்பரிதால். அந்த திவ்ய கோஷ்டிக்கு அணிகலனாக ஸ்வாமி பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு விளங்கி "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்றாப்போலே உபய விபூதி நிர்வாஹகராய் எழுந்தருளியிருக்கவேணுமென்று ஆசாஸித்து இந்த வைபவப்ரகாசிகையைத் தலைக்கட்டினோமானோம். இந்த வைபவ விசேஷங்களை நிச்சலும் சிந்தை செய்வார்க்கு நித்ய ஸ்ரீர்நித்ய மங்களம்.* *

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவல்லிக்கேணி.

அ. மு. ஸ்ரீநிவாஸாசார்யர் இயற்றிய

ஆசார்யவைபவ த்விசதீயின் மூலமும்

பொழிப்புரையும் முற்றிற்று.

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्याणां वैकुण्ठवासिनां श्रीगरुडपुरयतीन्द्रस्वामिपादानां पूर्वाश्रम-ज्येष्ठपुत्ररत्न.

तिं. ईच्चम्बाडि वरददेशिकार्यसमर्पिता

अभिनन्दनपद्यमालिका ॥

१. अण्णङ्गराचार्यगुरूत्तमानां षष्ट्यब्दपूर्त्याख्यमहोत्सवोऽयम् ।
काञ्चीनगर्यामतिवैभवेन प्रवर्तते सज्जनलालितस्सन् ॥

२. प्रतिवादिभयङ्करान्ववाये ह्युदभूत्सूरिरयं यथार्थनामा ।
श्रुतधीसदनुष्ठितिप्रचारैर्निजवंशानुगुणं प्रसिद्धिमाप्तः ॥

३. उभयत्रयन्तरसान् रसज्ञकर्णेषु पूरयन्नेषः ।
सरसोपन्यासरसैरनुभवति हरिं प्रमोदपूर्णात्मा ॥

४. वैष्णववृन्दे चोभयवेदान्ताचार्यबिरुदमुल्लसति ।
यद्यपि, तथाऽपि चास्मिन् प्राज्ञे मुख्यत्वमाप बिरुदं तत् ॥

५. वेदद्वितयप्रवचनसंवर्धनमुख्यकृत्यनिरतोऽसौ ।
सद्ग्रन्थलेखनाद्यैस्सर्वं कालं सदा क्षिपन् जयति ॥

६. प्रत्यहमहर्मुखेऽसौ निद्राहिमशीतजाततन्द्रादीन् ।
निर्धूय निरवशेषं सन्तोषोत्साहभरितचित्तस्सन् ॥

७. प्रतिबोध्य वैष्णवौघान् गोदादेवीव तैर्वृतो नित्यम् ।
श्रुतिपारायणघोषैर्हस्तिगिरीशं प्रदक्षिणीकुरुते ॥

८. सन्तोष्य देवराजं प्रभातनिद्रां विमोच्य विप्राणाम् ।
निष्पिष्य कर्णविवरे श्रुतिशुद्धसुधाम् अघं नुदन् जयति ॥

९. अध्ययनवासरेषु श्रुतिघोषमथेतरेषु दिवसेषु ।
आचार्यसूक्तिघोषं चारभयन्नेष लसति विमलयशाः ॥

१०. काञ्चीं वैदिकविद्यानिधिभिः पूर्णां विधाय संतुष्यन् ।
संतोषयंश्च सकलान् सूरिरसौ जयति धन्यनिजजन्मा ॥

११. वपुषि च मनसि च दार्ढ्यं दीर्घायुष्यं च वित्तवृद्धिं च ।
दद्यादभीष्टसिद्धिं भगवानस्मै च मङ्गलं वरदः ॥

१२. गरुडपुरवरददेशिकनामा सूरिः प्रहर्षविवशस्सन् ।
अण्णङ्गरार्यसूरेः षष्ट्यब्दमहे व्यजिज्ञपत्तदिदम् ॥

इति ति. ई. गरुडपुर वरददेशि

काञ्ची-सन्निधिवीथीनिवासी. (6—3—51)

ஓர் குதூஹல ஈடுபாடு

கீதாரத்னம் ஸ்ரீ நல்லப்பா ஜீயப்பங்கார், B.A.

(ஸ்ரீ காஞ்சீ யதோக்தகாரி ஸன்னிதி தர்மகர்த்தா)

ஸ்ரீ காஞ்சீபுரம் ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி உ. வே. மஹாவித்வான், உபந்யாஸகேஸரி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியிடம் அநேக வருஷங்களாக நெருங்கிப்பழகும் பாக்யத்தைப் பெற்றவர்களில் அடியேன் ஒருவன். இம்மாதிரியே தென்னாசார்ய ஸம்பிரதாயத்தையும் வடவாசார்ய ஸம்பிரதாயத்தையும் சேர்ந்த அநேக மஹான்களுடனும் நெருங்கிப்பழகும் பாக்யம் அடியேனுக்குண்டு. இந்த ஸ்வாமி எல்லா வித்வான்களுக்கும் மேல் உயர்ந்த சிகரமாய் விளங்குபவர் என்பதை வித்வான்களோடு பாமரர்களோடு வாசியற எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். "வேதம், உபநிஷத், பூர்வாசார்யர்களின் ஸ்தோத்ராதி ஸகல ஸ்ரீஸூக்திகள், ரஹஸ்யங்கள், வியாக்யானங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து திரண்டு உருவெடுத்திருக்கும் ஓர் அபூர்வ வ்யக்தியல்லவோ இவர்" என்று (காலஞ்சென்ற) மயிலாபூர் ப்ரபல வக்கீல் ஸ்ரீ உ.வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் அடிக்கடி அடியேனிடம் சொல்லிக் கொண்டாடுவது வழக்கம். அந்த வக்கீல் ஸ்வாமி *சைவம் கற்றோம் சமணம் கற்றோம் என்கிற கணக்கில், மேல்நாட்டுத் தத்வ விஷயமானாலும் சரி, நம்முடைய பரந்த ஹிந்து மத விஷயமானாலும் சரி, அவர் பார்த்திராத க்ரந்தமும் கிடையாது, கேட்டிராத வித்வானும் கிடையாது. அவரிடத்தில் சில நுண்ணிய விஷயங்களையறியச் சில பெரிய வித்வான்களும் நாடினதை அடியேன் கண்டிருக்கிறேன். அவர் மதராஸில் ஸ்ரீ ஸ்வாமியின் உபந்யாஸமென்றால் அரைமணி முன்பாகவே சில நண்பர்களுடன் வந்து காத்துக்கொண்டிருப்பது வழக்கம். இவ்வளவு வ்ருத்தாப்யத்திலும் இந்த ச்ரம மேதுக்கென்று ஒரு நாள் தொண்டை மண்டல சபைவாசலில் அடியேன் ப்ரஸ்தாபித்தபோது "அடா, நீயும் என்ன இப்படிக் கேட்கிறாயே? வியாசர், பராசார், வால்மீகி முதலிய ரிஷிகளென்ன, பொய்கையார், பூதத்தார், பேயார், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களென்ன, ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், இராமானுஜர், பட்டர், நம்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் முதலிய நம் பூர்வாசார்யர்களென்ன, இவர்களில் ஒருவர்கூட விடாமல், எல்லோரும் புத்துயிர் பெற்றெழுந்து ஒன்றுகூடியல்லவோ ஓரிடத்தில் உபந்யஸிக்கிறார்கள்! விஷயமும் மிச்சிறந்த விஷயமாயிருக்கிறது! ஒலிபரப்பும் கருவியும் தேவையில்லை! என்றால் இதைக் கேட்க எத்தனையாயிரம் மைல்தான் வரக்கூடாது, எவ்வளவு காலம் முன்னாடியாகத்தான் வந்து காத்துக்கொண்டிருக்கக்கூடாது; *பொலிக பொலிக பொலிகவென்று, நாம் மாத்திரமல்ல, ஆழ்வாரும் மங்களாசாஸனம் பண்ணவேண்டிய வ்யக்தியல்லவோ இவர்! ஒரு விநாடியில் நம்மை இப்பூதவுடலினோடேயே நித்ய விபூதியிலல்லவோ கொண்டுவைத்து, அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாக விஷயங்களைப் பொழிந்து தாமும் அநுபவித்து நம்மையும் அநுபவிப்பிக்கிறார்; இப்படித் திரும்பினால் ஓர் அபூர்வமான ப்ரமாணம், அப்படித் திரும்பினால் ஓர் ஆச்சரியமான சாஸ்திரார்த்தம், இந்த விநாடி கல்மனதையும் உருக்கும் ஓர் அரிய ஐதிஹ்யம், அடுதத விநாடி பாலர்களையும் சிரிப்பூட்டும் ஓர் அதிசயக்கதை; இப்படியே இரண்டு மணியானாலும் சரி நான்கு மணியானாலும் சரி, ப்ரமாணத்தின் மேல் ப்ரமாணமாய், சாஸ்திரார்த்தத்தின்மேல் சாஸ்திரார்த்தமாய், ஐதிஹ்யங்கள் மேல் ஐதிஹ்யங்களாய், வாக்யார்த்தத்தின் மேல் வாக்யார்த்தமாய், ரஹஸ்யங்கள்மேல் ரஹஸ்யங்களாய், ஸ்வாபதேசத்தின்மேல் ஸ்வாபதேசமாய் ஒன்றின்மேல் ஒன்று அடித்துக்கொண்டு கங்கா ப்ரவாஹமாகக் கொட்டுகின்றனவே! பகவத் குணங்கள் இவரிடமிருந்து புதைபாணங்கள்போல் கிளம்பி மின்னல் வெடிகள் போலல்லவோ ப்ரகாசிக்கின்றன! நம் பூர்வாசார்யர்களின் அபூர்வ ஆத்மகுணங்களானவை வைரங்கள் பூரிப்பது போலல்லவோ இவர் திருவாக்கிலிருந்து ஜ்வலிக்கின்றன; இவர் நமக்குப் பகவத் பாகவத குணங்களைத் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாக வர்ஷிக்க, நாம் அப்படியே ஸ்தம்பித்து, இதுவென்ன நாமிருப்பது வைகுந்த மாநகரோ, மண்ணு

வடமதுரையோ, திருக்குருகூர் திருப்புளியடியோ, திருவரங்கம் திருப்புன்னையின் கிழலோ வென்றென்று மோஹிக்கும்படியாகி விடுகிறதே; இத்தகைய அனுபவம் நமக்கு எங்குக் கிடைக்கும்?" என்றார். பக்கத்திலிருந்த நான்கு ஐந்துபேர்களும் "ஆம், ஆம், ஒவ்வோர் வித்வானிடத்தில் ஒவ்வோர் குணம் ப்ரகாசிக்கும்; இவரிடம், எல்லாக்குணங்களும் புஷ்கலங்கள்!" என்றார்கள். இது ஸ்ரீ ஸ்வாமியின் உயர்யாஸ சக்தியொன்றை அவர் கொண்டாடியபடி.

ஸ்ரீஸ்வாமியின் க்ரந்தங்கள் உலகறிந்தவை. இவை மலைபோல் வளர்ந்து நம் தேசமெங்கும் பரவியவை. இவைகளே ஓர் மாபெரும் புத்தகசாலை யாகும். மிகச் சிறுபிராயத்திலேயே இவர் தம்முடைய திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையை வெளியிடத்தொடங்கி மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களின் திருவாக்கில் "செந்தமிழ்ச் செல்வர்" என்கிற விருதைப் பெற்றார். இருபது வயதிற்குமேல் வேதத்தையோதி முடித்து, சிறந்த கனபாடிகளும் பெரிய வித்வான்களும் ஆச்சரியப்படும்படியாக தம்முடைய வேதலக்ஷண விசார க்ரந்தங்களை வெளியிட்டார். காலதத்வம் தொடங்கினது முதல் எவராலும் சாதிக்கமுடியாமலிருந்த அரிய விஷயம் இது என்று (கீர்த்தி மூர்த்தியான) மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமியும் மற்றும் பலபெரிய வித்வான்களும் இதைக்கொண்டாடியுள்ளார்கள். இது போன்றவை இவருடைய ஸம்ஸ்க்ருத பாண்டித்யத்தையும் ஆராய்ச்சி வல்லமையையும் நன்கு விளக்கும். வியாஸபராசரர்கள்கூட இத்தகைய பணியைச் செய்யக் கனவிலும் எதிர்பார்த்திரார்கள்!

ஸ்ரீ ஸ்வாமியாற்றிய மற்றோர் அரியபெரிய பணி இவருடைய பதிப்பான க்ரந்தமாலைகள். ஸ்ரீ ராமானுஜர், நம்பிள்ளை, வேதாந்த தேசிகர் மணவாள மாமுனிகள் என்கிற இந்த நான்கு பேராசிரியர்களின் ஸகல க்ரந்தங்களையும் பரிசோதித்து வெகுசீர்த்தியாக ஓர் கோவையாக ப்ரசுரித்து இந்த நான்கு மஹாசாரியர்களுக்கும் இதுவரையில் எவரும் இட்டிராத மாலைகளை இவரிட்டு உலகுக்கெல்லாம் ஓர் மஹோபகாரத்தைச் செய்துள்ளார். இப்படியே ஸ்ரீஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் இயற்றியிருக்கும், இயற்றிக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான க்ரந்தங்களையும் இவர் ஆற்றிவரும் நினைத்தற்கரிய மற்றபெரிய பணிகளையும் புத்தகம் புத்தகமாக விவரித்துக்கொண்டே போகலாம். இவைகளைத் திருவல்லிக்கேணி பண்டித ஸ்ரீ. உ. வே. அ. மு. ஸ்ரீநிவாஸாசாரியரியற்றிய "ஆசார்ய வைபவ த்விசதீ" என்னும் நூலில் சுருக்கமாகக்காணலாமாகையால் ஸ்ரீஸ்வாமியிடம் அடியேன் கண்டு கொண்டாடும் சில வைபவங்களை இங்கு விவரிக்க விரும்புகின்றேன்.

ஸ்ரீ ராமானுஜர், நம்பிள்ளை, வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் போன்ற மஹாசார்யர்கள் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் நுண்ணிய உண்மைகளை விளங்கச்செய்தற்பொருட்டு இயற்றிய அபரிமிதமான சிறந்த கிரந்தங்களையும் அவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைத் தேசமெங்கும் பரவச்செய்ய ஆற்றிய அரியபெரிய பணிகளையும் நோக்கும்போது ஒரு புருஷாயுஸ்ஸில் இவைகளை இவர்கள் சாதித்திருக்கக் கூடுமாவென்கிற சந்தேகம் நம்போல்வார்க்கு உதிக்கக்கூடும்; ஸ்ரீஸ்வாமி தோன்றி நமது கண்முன் சாதித்துக்கொண்டிருக்கும் அளவுகடந்த ஆச்சரியமான பணிகளைப் பார்க்கும்போது இத்தகைய சந்தேகம் கிளம்புவதற்கு நியாயமேயில்லை என்று ஆப்தர்களுடன் அடிக்கடி அடியேன் கொண்டாடி மகிழ்வதுண்டு. ஸ்வாமியின் குடும்ப யோகக்ஷேமங்கள் எப்படி நடக்கின்றனவென்பது ஸ்வாமிக்கு இளமை தொடங்கியே தெரியாது. ஸ்வாமி ப்ரசுரிக்கும் நூற்றுக்கணக்கான அரிய க்ரந்தங்களுக்கும் ஸ்வாமி ஆற்றிவரும் நூற்றுக்கணக்கான பெரிய பணிகளுக்கும் திரவியம் எங்கிருந்து எப்படி வரும் என்பது ஸ்வாமிக்கும் தெரியாது. "தேஹிமே ததாமிதே" என்கிற முறையில் ஒரு அணுகூட எவரிடமும் ஸ்வாமி அபேக்ஷித்ததை அடியேன் போல்வார் கண்டதில்லை. ஆனால் அச்சிடும் க்ரந்தங்களோ மலைபோல் குவிகின்றன! ஆற்றிவரும் பணிகளோ பெருக்காறுகள் போல் பாய்ந்து தேசமெங்கும் பரவுகின்றன!!

ஸ்ரீ ஸ்வாமி க்ரந்தம் எழுதும்போது சில சமயங்களில் அடியேன் நெருங்கியிருக்க நேர்படுவதுண்டு. பேனாவை எடுப்பதுதான் தாமதம், மணிக்கு முப்பது நாற்பது பக்கங்கள் கீழே நழுவிக்கொண்டேயிருக்கும்! தம்மைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் போர்போராக

அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் ஒன்றையாவது எதற்காவது எடுத்துப்பார்க்கவேண்டும் என்கிற அவசியமேயிராது. அவைகளை எந்தவயதில் எப்போது பார்த்திருப்பர் என்பதும் பால்யம்முதல் இவருடன்கூடவே பழகிவரும் அந்தரங்கர்களுக்கும் தெரியாது. இவருடைய ஞாபகசக்தி கூரத்தாழ்வானையே நமக்கு நினைவூட்டும். எழுதியதை மறுபடியும் திருத்துவது என்பதும் ஸ்வாமியிடம் கிடையாது. எழுதியவுடனே கற்றைகற்றையாக மடித்து அப்படியே அச்சாபீசுக்கு அனுப்பிவிடுவார். அவைகளில் ஒருவரியிலாவது ஒருகுறில் நெடில்கூட விடுபட்டிராது. ஓரிடத்திலும் ஒரெழுத்தும் அடிபட்டுமிராது. ஸ்வாமி அச்சுப்பிழைகளைத்திருத்தும் (Proof Correction) தன்மையை நாம் காசுகொடுத்துப் பார்க்கவேண்டும். சாதாரணமாக எல்லாரும் ஆரம்பம் முதல் வரிவரியாக வல்லவோ பிழைகளைக்கண்டு திருத்துவது வழக்கம். ஸ்வாமியிடம் இந்த ரீதிகிடையாது. பிழைகள் ஸ்வாமிகண்முன் 'என்னைக்கொள், என்னைக்கொள்' என்று கீழது மேலாகவும் மேலது கீழாகவும் தோன்றி ஒரு நொடிப்பொழுதில் ஒன்றுகூட விடாமல் அடிபட்டுப்போவது வழக்கம். இத்தகைய சக்தியில்லாவிடில் இவருடைய பெரியபெரிய க்ரந்தமாலைகளானவை, இவர் இயற்றிவரும் மற்ற நூற்றுக்கணக்கான க்ரந்தங்களின் நடுவிலும், இவர் தேசமெங்கும் அடிக்கடி சுற்றிச் செய்துவரும் உபன்யாஸங்களின் மத்தியிலும், இவர் ஆற்றிவரும் மற்ற அநேகபணிகளின் இடையிலும் எப்படி இரண்டு மூன்று வருஷங்களுக்குள் வெளியாகி ஸ்ரீவைஷ்ணவவுலகம் குதூஹலிக்க முடியும்?

ஸ்ரீஸ்வாமியிடம் அடியேன் கண்ட மற்றோர் அதிசயத்தையும் இங்குப் பிரஸ்தாபிக்கிறேன். இவருக்கு ஞானசாரியராகவிருந்த உலகம் நிறைந்த புகழாளரான ஜகத்குரு ஸ்ரீ அனந்தாசாரிய ஸ்வாமியிடம் தற்காலத்திய ஆரோக்ய சாஸ்திரத்திற்கனுகுணமாய்ச் சில கடுமையான ஆஹார நியதிகளும் உயர்ந்த தேஹாப்யாஸ முறைகளும் இருந்தன. இவரிடமோ, ப்ராதக்கால அனுஷ்டானம் த்வாதச ஊர்த்வபுண்ட்ர தாரணம் முதலிய நம் பூருவர்களின் ஆசாரணகளைத் தவிர, நவீனமுறையில் ஆரோக்யத்தைக் காக்கும்படியான (பானுதிகள் என்று சொல்லக் கூடியவை உள்பட) எவ்வித பழக்கவழக்கமும் புகுந்ததில்லை. தமது சொந்த க்ருஹத்திலே யானாலும் சரி, வேறு இடங்களிலே யானாலும் சரி, அவ்வப்போது அகப்பட்டதை ஸ்வீகரித்துத் தமது அரிய பெரிய பணிகளைச் செய்துவருவர். மேல் நாட்டில் ஆரோக்யத்திற்கு அத்யாவச்யக மென்று நவீனசாஸ்திர ஆராய்ச்சியைக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஜீவசத்துக்கொள்கைகளும் (Vitamin Theories) கலப்பு உணவுமுறைகளும் (Methods of Mixed or Balanced Diet) இவரிடத்தில் என்னவாயின வென்று வைத்திய நிபுணர்கள் ஆச்சரியப்படத்தான் வேண்டும். ப்ராசீனமாக நமது குடும்பங்களில் ஏற்பட்டிருக்கும் வாராவார எண்ணெய் ஸ்நானம், மாதா மாத விரேசனம் முதலிய ஸர்வ சாதாரண ஆரோக்ய முறைகளும் இவரிடம் கிடையாது. இவைகளைப்பற்றி அடியேன் ஒருகால் இவரிடம் வற்புறுத்தியபோது "தொட்டில் பிராயத்தில் தாயார் ஏதாவது விளக்கெண்ணெய் முதலியது கொடுத்திருந்தால் இருக்கலாம். பிறகு இவை ஏற்பட இடமில்லையே" என்று அடியேனுக்கும் இடந்தரவில்லை. *உண்ணும்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் நம் கண்ணனையும் நம்மாழ்வாரையும் நம்பிள்ளையையும் நம் ஸ்வாமிக்கு க்ரமேண இருக்கும்போது இவையெல்லாம் எதற்கு!

பொன்னுருகக் காயும் வெய்யிலாயிருந்தாலும் மண்ணுருகப் பெய்யும் மழையாயிருந்தாலும் எம்பெருமானின் திருவீதிப்புறப்பாடுகளில் கோஷ்டியலங்கரிப்பதை இவர் விட்டகலகில்லார். ஸ்ரீ ஸ்வாமியில்லாத கோஷ்டியும் இவர்சேராத பாராயண அனுஸந்தானங்களும் கோயிலில்லா ஊராயும் நீறில்லா நெற்றியாயுமே இருக்கும் என்பது காஞ்சீநகரவாசிகளான எல்லோருடைபவும் அனுபவம்.

ஒருநாள் மாலை 8 மணிக்கு [தேவப்பெருமாளின் பல்லவோத்ஸவ காலமென்று ஞாபகம்] ஒரு ஸ்வாமி ஓடிவந்து "ஸ்ரீ ஸ்வாமிக்கு ஜுரம்போல் தெரிகிறது. திருவடி கோயிலுக்கு, அதாவது இயல் கோஷ்டி தொடங்குமிடத்திற்கு வண்டியில் எழுந்தருளிக்கொண்டிருக்கிறார்; கொஞ்சம் தர்மாமீட்டரை எடுத்துக்கொண்டுவந்து ஜுரம் எவ்வளவென்று பார்க்கவேணும்" என்று அழைத்தார். அடியேன் போவதற்குள் வண்டி திருவடி

கோயில்சென்று சேர்ந்து விட்டது. அருகாமையிலுள்ள ஒருவீட்டுத் திண்ணையில் ஸ்வாமி சயனித்துக்கொண்டிருந்தார். தர்மாமீடரைக் கையின் கீழ் வைத்தெடுத்ததும் அடியேனைத் தூக்கிவாரிப்போட்டது. டிக்ரி 106! இன்னும் ½ அல்லது 1 டிக்ரி ஏறினால், வைத்திய சாஸ்திரத்தின்படி, மூளைகொதித்து ரத்தக்குழாய்கள் வெடிக்க ஆரம்பிக்கவேண்டும். ஸ்வாமிக்கு ஞாபகம் இருப்பதும் இராததுமான நிலை. இத்தருவாயிலும் ஸ்வாமிக்குக் கோஷ்டியில் அன்வயிக்கும் அவா விட்டபாடில்லை. தம்மையுமறியாமல் தேஹம் கிளம்புகிறது, திருவடிகள் நடக்க முயல்கின்றன. ஆனாலும் ஐந்தாறு பேர்களின் உதவியைக் கொண்டு ஸ்வாமியைக் கட்டியணைத்து மறுபடியும் வண்டியேற்றி க்ருஹத்திற்குக் கொண்டு சேர்த்தோம். மறுநாள் மதராஸில் நடக்கவேண்டியிருந்த உபன்யாஸத்தை நிறுத்தத் தந்தி கொடுக்கப்பட்டது. சிரஸில் ஐஸ் வைத்துக்கட்டி தகுந்த மருந்துகளையும் கொடுத்து ஜுரம் 104க்கு இறங்கியபின், அடியேன் குடிசைக்கு விடைகொண்டேன். அப்போது இரவு மணி 12. மறுநாட்காலை ஸ்வாமியின் தேஹம் எப்படியிருக்கிறதோவென்று மிகுந்த விசாரமுடன் ஸ்வாமியின் திருமாளிகைக்குள் நுழைந்ததும் அங்கிருந்தவர்கள் "ஸ்வாமி மதராஸ் எழுந்தருளியாச்சு" என்று சொன்னதை நம்பமுடியவில்லை. இவர் விஷயத்தில் வைத்திய சாஸ்திரம் தவிடுபொடியென்று சொல்லிக்கொண்டே அடியேன் குடிசைக்குத் திரும்பினேன். இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் ஸ்வாமி என்ன எம்பெருமானின் தவப்பயனோ, நம்பிள்ளையின் புனரவதாரமோ என்கிற எண்ணங்கள் மனதில் வலிதாகக் கிளம்பும். சதாசித் ஸ்வாமிக்குத் திருமேனி பாங்கில்லை என்பார்கள்; ஆனால் ஸ்வாமி முப்பது வருஷகாலமாக ஸ்ரீ காஞ்சியில் நித்திய க்ருத்யமாக நிர்வஹித்தவரும் ப்ராதக்கால பிரதக்ஷிண வேத கோஷ்டியிலிருந்து அன்றை மறுநாட்காலையே ஸ்வாமியின் கம்பீரமான கண்டத்வனி, யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதைப் போல், இரண்டு பர்லாங்குக்குமுன் ஊடுருவிச்சென்று அங்கு உறங்குகிறவர்களைக் கிளப்பும்.

ஸ்ரீ ஸ்வாமியின் பகவத் விஷய காலக்ஷேப நிர்வாஹமோ வாசாமகோசரம். இவருக்கு முன் சில வித்வான்கள் "பகவத் விஷயம்" என்கிற விருதைத் தங்கள் பெயர்கள் முன் கூட்டிக்கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டொருவரிடம் அடியேன் அநேக பாசுரார்த்தங்களைக் கேட்டதுண்டு. அவர்கள் ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் இரண்டொரு நாட்களாவது அன்வயிக்கப்பெற்றிருந்தால், அருளாளப் பெருமாளெம்பெருமானார் எம்பெருமானாரிடம் ஈடுபட்டதுபோலவும், நஞ்சீயர் பட்டரிடம் ஈடுபட்டதுபோலவும் ஸ்வாமியிடம் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். விஷயமோ பகவத்விஷயம்; பாசுரங்களோ பராங்குசருடையவை; "ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம்", "த்ராவிட வேதஸாகரம்" என்கிற ப்ரஸித்தியைப் பெற்றவை; இதற்கு வியாக்கியானம் சாதித்தவரோ ஸகல கலாவல்லபரான நம்பிள்ளை; இதைப் பட்டோலை கொண்டருளிய காலமோ 600 வருஷங்களுக்கு முற்பட்டது; இதில் அரும்பதஉரைகாரர்களென்று கீர்த்திபெற்றவர்கள்கூட அநேகவிடங்களில் இடம்வலம் தெரியாமல் திகைத்திருக்கிறார்கள். இத்தகைய ரத்னாகரத்திற்குள் ஸ்ரீ ஸ்வாமி நம்மை அழைத்துச்சென்று, "இதோ பாருங்கள், இது முத்து, இது கெம்பு, இது பச்சை, இது நீலம், இது ஒரு சிறந்த கோமேதகம், இது ஓர் உயர்ந்த வைடூர்யம், இது ஒரு விலையில்லா மாணிக்கம், இதோ பாருங்கள் ஒரு ஆயிரம்கோட் வைரம்; இன்னமும் பாருங்கள், இதன்பெயர் 'முத்துக் கெம்பு!', இது 'கெம்புப் பச்சை!', இது 'பச்சைநீலம்!', இது 'நீலகோமேதகம்!', இது 'கோமேதக வைடூர்யவைரம்!', இதைப்பார்த்தீர்களா? இது ஸ்ரீ கௌஸ்துபத்திற்குச் சமானமான ஓர் "கெம்பு நீலரத்ன வைரமணி!"; அதோ அந்த ஆச்சரியத்தைப் பாருங்கள் 'நீரிலே நெருப்பு!' அதன்பக்கத்திலேயே பாருங்கள் 'நெருப்பிலே நீர்'! என்றென்று, அன்று அர்ஜுனனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணன் காட்டிய விச்வரூபத்தைப்போல், பகவத் பாகவதகுணங்களைத் தம்முடைய நிரங்குச ஞானஒளியைக்கொண்டு வீசியும், நிகரற்ற மிகக் கூர்மையான ஆராய்ச்சிவல்லமையைச் செலுத்தியும், நாமெல்லாம் மயிர்க்கூச்செறிவுடன் ஆனந்தப்பட்டும், *நினைந்து நைந்து உள் கரைந்துருகியும் ஈடுபடும்படி ப்ரகாசிப்பித்து நம்மைக் குதூஹலப்படுத்துகிறார்.

ரூபாய் ஐம்பதும் நூறுமான டிக்கெட் வாங்கிக் கேட்கவேண்டிய சில சிறந்த கோகிலகான சங்கீதக் கச்சேரிகளையும் அடியேன் கேட்டதுண்டு; உலகிற் சிறந்த சிலபெரிய ஸர்க்கஸ், ஜாலவித்தை, எக்ஸிபிஷன் முதலிய அற்புதக் கண்காட்சிகளையும் கண்டதுண்டு. உலகப்பிரஸித்தமான சில அரிய சொற்பொழிவுகளையும் ஆங்கிலத்தில் கேட்டதுண்டு. சமீபகாலத்தில் உலகிலேயே முதல்தரமான பேசும்படம் என்று அநேக தங்கமெடல்கள் அளிக்கப்பெற்ற ஷேக்ஸ்பியரின் 'ஆமலதன்' (Hamlet) உள்பட சில உயர்ந்த ஸினிமாக்களையும் பார்த்ததுண்டு. ஆனால் இவை யொன்றிலும் நம் ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் உண்டாகுமனுபவங்களில் பதினாயிரத்தில் ஒருபங்குகூட உண்டாகாதென்று திண்ணமாய் ஆணையிட்டுச் சொல்வேன். "பக்தாம்ருதம்", "விச்வஜனானுமோதனம்" என்று நித்யஸூரிகளும், இன்னும் அப்படியே ஸர்வேச்வரனும் மண்டி ஈடுபடும்படியல்லவோ நம் சடகோபரின் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளின் அர்த்த விசேஷங்களை நமது பூர்வாசார்யர்கள், ஸ்திரீ பாலர்களும் ஈடுபடும்படி, ஸகல சுவைகளையும் வெகு அற்புதமாக அமைத்தல்லவோ நமக்குக் காட்டியுள்ளனர். இவைகளில் தலைசிறந்ததல்லவோ நம்பிள்ளையின் "ஈடு"; இதன் ஆழ்பொருள்களை நம் ஸ்வாமியிடத்திலல்லவோ நாம்கேட்டு ஈடுபட்டு ஆனந்திக்கவேண்டும். இந்த மாபெரும்பாக்யத்தை அடியேன்போல்வார் காஞ்சீபுரத்தில் நம்பிள்ளை ஸந்நிதியில் தினப்படியாக அனுபவித்துவர ப்ராப்தமாயிருப்பதுதான் இந்த குதூகல ஈடுபாட்டுக்கு மூலகாரணமாயமைந்தது.

ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில், ஒவ்வோரிடத்தில் "இத்தகைய வியாக்யானம் நம்பிள்ளையைத்தவிர வேறு எவராலும் சாதித்திருக்கமுடியாது" என்கிற உணர்ச்சியும் "இதை ஸ்ரீ ஸ்வாமியைத் தவிர வேறு எவராலும் அறிந்து இப்படிப் பாமரர்க்கும் நன்றாகப் புரியுமாறு விளக்கமுடியாது" என்கிற மகிழ்ச்சியும், பெரிய வித்வான்களுக்கும், வாய்வெருவும்படி உண்டாவது ப்ரதிதின அனுபவம். ஸகல சாஸ்திரங்களிலேயும் ஸ்ரீ ஸ்வாமிக்கிருக்கும் ஞானம் ஒருவிதத்திலேயும் நம்பிள்ளையின் ஞானத்தைவிடக் குறைந்ததன்று என்கிற உணர்ச்சியும் அநேக தடவைகளில் உண்டாகும். அடியேன் முதலில் ப்ரஸ்தாபித்த மயிலாபூர் ஸ்ரீ. உ. வே. கோபாலஸ்வாமி ஐயங்கார் சொல்லியபடி வேதம், உபநிஷத், இதிஹாஸபுராணங்கள், திவ்யப்ரபந்தங்கள், ஸ்தோத்திரபாடங்கள், ரஹஸ்யங்கள் இவை யெல்லாவற்றிற்கும் நம் பூர்வாசார்யர்களிட்டிருக்கும் அற்புத வியாக்யானங்கள் இவையெல்லாவற்றையும் கரைத்துக்குடித்து, கூரத்தாழ்வானுடைய ஞாபக சக்தியும் வாய்க்கப்பெற்று, தர்க்க வியாகரண மீமாம்ஸை முதலிய ஸகல சாஸ்திரங்களிலேயும், காவிய நாடகாதி ஸகல ஸாஹித்யங்களிலேயும் பரிபூர்ண பாண்டித்யமும் பெற்றிருந்தாலொழிய பகவத் விஷய காலக்ஷேபத்தைக் குறைவற நிர்வஹிக்க முடியாது. இவைகளில் ஒன்று குறைந்திருந்தாலும் இந்த காலக்ஷேபத்திற்குச் சோபை குன்றியே தீரும். இவையெல்லாம் ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் புஷ்கலங்களாய் இருப்பதைப்போல் வேறு எந்த வித்வானிடத்தில் காணமுடியும்?

ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கொருமுறை அவதரிக்கும் மஹாசாரிய கோஷ்டியைச் சேர்ந்தவர் நம் ஸ்வாமி. இவருடைய காலத்தில் நாம் பிறந்திருந்து இவருடைய க்ருபா கடாக்ஷத்திற்கும் இலக்காயிருப்பது பெறுதற்கரிய பாக்யமே. நாம் உடையவர் காலத்தில் பிறந்திருக்கவில்லையே! நம்பிள்ளையின் கோஷ்டியில் அன்வயிக்கக் கொடுத்துவைத்திருக்கவில்லையே! என்கிற இழவுதீர எம்பெருமான் ஸ்ரீ ஸ்வாமியை நமக்கு அனுக்ரஹித்திருக்கிறான். இப்படியே இவர் தம் அளவிலாப் பெருமைகளுடனும், குறையிலாச் சிஷ்யவர்க்கங்களுடனும் இவ்விபூதியில் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருந்து, உலகம் உய்ய, நாம் உய்ய, பக்த பரம்பரைகள் உய்ய, தம்முடைய பணிகளை மேன்மேலும் பெருக்கிக் கொண்டிருக்குமாறு அனுக்ரஹிக்க எம்பெருமானை ப்ரார்த்தித்து அடியேனுடைய இச்சிறிய குதூஹல ஈடுபாட்டிற்குத் தற்சமயம் முற்றுப்புள்ளி கொடுக்கிறேன்.

Rathnam Press, 11, Badrian Street, Madras—1.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

மதுரைத் தமிழ்ச் சங்ககலாசாலைத் தலைமையாசிரியரும் செந்தமிழ்ப் பத்திரிகை யாசிரியருமான திரு. கி. இராமாநுஜையங்கார் இயற்றிய வாழ்த்துப்பாக்கள்.

தாழிசை.

பூவிலுயர் பலநாடும் பொருவின்றிச் சான்ருேர்கள்
மேவியுறை சிறப்பெய்தும் வியன்தொண்டை மண்டலமே!
அன்னதனுக் கெழின்முகமாம் அணிகாஞ்சித் திருநகரின்
மன்னுபெரு மாண்பனைத்தும் வழுத்தலரி தரிதம்மா!
மற்றதனுட் பிரதிவாதி பயங்கர மண்ணு மரபாய்க்
கொற்றவர்கள் பாராட்டும் குடியொன்று விளங்கிடுமே.
செப்பும் அந்தக் குலகிரியிற் சீரங்கா சாரியர்பால்
இப்புவியில் இருளிரிய எழுந்துளதோர் இயற்கதிரே.
ஒப்புயர்வில் அண்ணங்க ராரியரென் றுலகுபுகழ்
இப்பரிதி மாண்பனைத்தும் இயம்பவெனக் கெளிதாமோ.
முத்தமிழும் நான்மறையும் முறைமுறையே மயலறக்கற்
ருெத்தவொழுக் கழும்வாய்ந்த வுபயகுலோத்தமனிவனே.
ஆழ்வார்கள் செய்கலையும் ஆன்றவட மொழிமறையும்
ஏழ்பாரும் உய்யஇவன் போலிசைப்பார் இலையிலையே.
செய்யதமிழ் மறைப்பொருளைச் சீர்த்தவட மொழிமறையோ
டையமறத் தெளித்துதவும் அறிஞர்பிரான் மற்றிவனே.
சாத்திரமும் தோத்திரமும் தமிழ்மறையும் உரையுமென
ஆத்திகர்கள் மனமகிழ அளித்தநூல் அளப்பிலவே.
வம்பில்லை யினியிந்த மாநிலத்தி லெனவந்த
நம்பிள்ளை சந்நிதியை நாட்டியதும் இவன்செயலே.
இன்னமுத மெனக்கற்பார் எளிதுணர அரியபொருள்
மன்னும் இராமாநுசனூல் வழங்கலிவன் மாண்பாமே.
சொற்பொழிவும் கட்டுரையும் துகளறுநூல்களும்தூய
நற்பனுவல் களுநாளும் நல்கலிவன் செயலன்ருே!

வேறு

நூலாசிரியன் நுவலருஞ்சீர் உரையாசிரியன் நுண்மதியன்
தோலாமொழியன் பலகேள்வித் துறையும் பலகாற் ருேய்ந்தோனே.
மல்லாண் டுயர்ந்த வரைத்திண்டோள் மணிவண்ணன்சீர் வாழ்த்துமிவன்
நல்லாண் டாறுபத்தினிது நண்ணுதிருநாள் இந்நாளே.
மறையவர்பல் லாண்டிசைப்ப மங்கைமார் வாழ்த்தெடுப்ப
நிறைபுலவோர் புகழேத்த நிலவுவதித் திருநாளே.
இந்நாளேபோல் எந்நாளும் இனிதுவாழி இவனென்று
மெய்ந்நா மனத்தால் இறைதிருத்தாள் மேவிவாழ்த்தி வணங்குதுமே.

கி. இராமாநுஜையங்கார், மதுரை. (செந்தமிழ்ப்பத்திராதிபர்.)

ஸ்ரீ :

"அபிநவ பெரியவாச்சான் பிள்ளை"

(அன்பில். சே. ஸௌம்யநாராயணாசார்யர் "ஜோதிர்பூஷண"—ஸ்ரீரங்கம்.)

திருமாலடியார்களைப் பூசித்தும் போற்றியும் அவர் தம் புகழ் பாடியும் நற்போது போக்குவது பாக்கியவான்களுக்கே வாய்ப்பதொன்றாகும். அத்தகைய பாக்கியம் இன்று நமக்கு வாய்த்தது பங்குவின் தலையில் கங்கை பாய்ந்தது போன்றதே. ஸ்ரீ வேதவ்யாஸபகவானைத் திருமாலின் மற்றுமொரு திருமேனியென்றதற்குச் சான்றாக அவருடைய அதிமானுஷதிவ்ய சேஷ்டிதங்களைக் கூறுமிடத்து "கோஹ்யந்யோ புவி மைத்ரேய ! மஹாபாரத க்ருத் பவேத்" என்றார் பெரியோர். அவ்வழியே நாமும் ஆராயுங்கால் ஸ்ரீமதித்யாதி. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியவர்களோ வென்றால் ஆபால்யம் இறைப்பொழுதும் இடைவீடின்றித் திருமாலின் புகழை வாய்மொழியாகப் பல மேடைகளிலிருந்து பரப்பியும் புதிய கிரந்தங்களியற்றியும் முன்னோர் தம் ஸ்ரீ ஸூக்திகளைப் பிழையற ஆராய்ச்சி முறையில் அச்சிடுவித்தும் அவைகளுக்கு அருமையான வியாக்கியானங்களை எல்லோருக்கும் எளிதில் பயன்படுமாறு எழுதியும் செய்து வரும் மஹத்தான அதிமானுஷவ்யாபாரங்களை உள்ளபடி நினைந்திட்டால் அடியார் நிலாகின்ற வைகுந்தமோ ! வையமோ ! இவரது உறைவிடம் என்றே விகற்பிக்கலாம்.

திருமாலின் சீர்மைக்குச் சிறுமைகாட்டமுயலும் புறச்சமயத்தோர் புறம்காட்டியோடும் வண்ணம் யுக்தியுக்தமான பல வாதப் போர்களை நிகழ்த்தியும் பின்னரும் ஆங்கிலாக அணிந்து பரவாதிகளைக் கண்டு அஞ்சா வண்ணம் எம்பெருமானாருடைய சமயத்தைத் திறம்படக் காக்கும் காவலராகும்படி செய்யவல்ல அந்த ஸூக்திகளை அச்சிட்டு உதவியருளிய நம் ஸ்வாமியானவர் பிரதிவாதி பயங்கராசார்யர் திருவம்சத்தில் அவதரித்தருளியதின் ரஹஸ்யம் ரஸிக ஜனஹ்ருதயங்கமமாகும்.

எங்குமிடங்கொள்ளும்படி பரவிப் பெருகும் திருமாலடியார்களது பெருங்குழுவை மண்மேல் தோற்றுவிக்கும் ஆழ்வார்களது அருளிச்செயல்களை யுரைசெய்த பரம காருணிகரான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் சீரியவியாக்யானங்களது சைலியை தற்காலம் யதாவத்தாக அனுபவிப்போர் அருமையானது கண்டு, பண்டிதரும் பாமரரும் ஒருங்கேகற்று ரஸித்து உய்யுமாறு திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையின் மூலம் உலகிருள் நீக்கிய நம் ஸ்வாமியை "அபிநவ பெரியவாச்சான் பிள்ளை" யென்றே யாவரும் கூசாது பேசும் பாசுரமாகும்.

எம்பெருமானார் தம் அந்திமதசையில் தன்னடியார்க்குச் செய்யவேண்டுவதாக ஆஜ்ஞையிட்ட அசேஷகைங்கர்யங்களையும் ஸ்ரீ ஸ்வாமியொருவரே முன்னின்று நிர்வஹிக்கும் பெருமை யாவரும் கண்டு வியக்கத்தக்க தொண்டாகும்.

உகந்தருளிய திவ்யதேசங்களிலே கரை புரண்ட பக்தி யதிசயத்தால் (தென்னாடும் வடநாடு மாகவுள்ள) பல நாட்டுத்திருப்பதிகளையும் பலகால் அடியார் குழாங்களுடன் கூடி நின்று மங்களாசாஸனம் செய்தும் பிறரும் அவ்வாறே அர்ச்சாவதாரத் தெம்பெருமான்களை யனுபவிக்க ஸுலபமாகும்படி வழிகாட்டி நூல்களைப் பலபாஷைகளிலுமியற்றியுள்ள நம் ஸ்வாமியின் பகவத் பக்தியை யுலகேயறியும்.

பிறதர்மாசாரியர்கள் தேசகால ஸ்திதியைக் காரணமாகக் காட்டித் தாம் சோம்பி நிற்பதை ஸமர்த்திக்கும் இக்காலத்திலும் அழகிய யுக்தி உபன்யாஸங்களாலும் லௌகிக மேற்கோள்களாலும் யாவருடைய மனதும் ஈடுபட்டு நாஸ்திகனும் "நாராயண பராயண" னாகும்படி செய்து நிற்கும் ஸ்ரீஸ்வாமியின் ஸத்ப்ரஸங்காம்ருதவர்ஷங்களினால் கலியும் கெட்டுப் பெரிய க்ருதயுகம் தோன்றிப் பேரின்ப வெள்ளம் பெருகுவதற்குச் "சென்னையும் தொண்டை மண்டலமுமே" ஸாக்ஷ்யம் கூறும்.

தாமனுபவிப்பதும் பிறரை அனுபவிக்கச் செய்வதுமான பல வேறுகார்யங்களினிடையே அதிவிஸ்த்ருதமான தம் மடியார்களது குழாத்தினருடன் நேசமாகப் பழகி அவர்களது குடும்ப யோகக்ஷேமங்களில் அத்யாதரம்தோற்றக் குசலப்ரச்னங்கள் செய்து போரும்நம்ஸ்வாமி "பௌராந்ஸ்வஜநவத் நித்யம் குசலம் பரிப்ருச்சதி" என்று அனுஷ்டித்தும் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" என்று பேசியும்நின்ற ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனையும் "தேந மைத்ரீ பவது தே" என்ற ஸீதாபிராட்டியையும் அடியொற்றிவாழ்வது அவரது பெருமையை இன்னும் பெருக்கவல்லதாம்.

ஸ்ரீஸ்வாமியின் அனந்த கல்யாண குணங்களையும் ஸ்ரீவைஷ்ணவ உலகிற்குச் செய்துவரும் பரம உபகாராதிசயங்களையும் நாமெல்லோரும் ஒன்று கூடி அனுபவிக்கும் வண்ணம் முழுவதும் பேசும் திறமையும் அவகாசமும் ஸங்குசிதமாயிருத்தலால் இந்த அளவில் ஸ்ரீஸ்வாமியின் புகழ்பேசும் கைங்கர்யத்தில் அன்வயித்துப் பரம ஸந்துஷ்டராய் உபரதராகிறோம்.

அன்பில். சே. ஸௌம்ய நாராயணாசார்யன்.

"ஜோதிர் பூஷண."

ஸ்ரீரங்கம். 4-3-1951.

AN APPRECIATION

by Rao Sāhib S. Rangaswami Iyengar, Pensioner, 91, Iyengar Street Kumbakonam,

பெருமாள்கோயில் ஜகதாசார்ய ஸிம்மாஸநாதிபதி ஸ்ரீ உபய. வே மஹாவித்வான் P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் குணானுபவங்களை எடுத்துரைக்க அடியேன் முயல்வது "மதியின்மையால் பயிலும் கவிகளில் பத்தியில்லாத வென் பாவி நெஞ்சால் அவர்தம் பெருங்கீர்த்தி மொழிந்திட முயன்றது" போலேயிருக்கிறது. ஆனாலும் வாளாவிருக்க முடியாதவனாய் ஏதோ பிதற்றுகின்றேன். இதில் சிற்சில நற்சொற்களிருந்தால் எடுத்துக்கொண்டு மற்றதை உபேக்ஷிக்குமாறு ப்ரார்த்தித்துக்கொள்கிறேன். ஸ்வாமி திருவடிகளிலும் ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளிலும் அடியேனுக்குள்ள ப்ரதிபத்தி 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் மாறாது. இரவும் பகலும் ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திகளையே உணவாகக்கொண்டு பொழுது போக்குகிறவன் அடியேன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஜனித்த ஒவ்வொரு வ்யக்தியும் ஸ்வாமியினிடத்தில க்ருதஜ்ஞதையும் பக்தியும் வஹியாதிருக்க முடியாது. ஸ்வாமியால் உலகத்திற்கு எவ்வளவு உபகாரம் நேர்ந்திருக்கிறது; நம் தர்சனத்திற்கு எவ்வளவு மஹோபகாரங்களைச் செய்திருக்கிறார்! உலகத்தின் இருள்களை ஹாஹா! எவ்வளவு போக்கடித்திருக்கிறார் என்பதெல்லாம் உலகமறிந்ததே. ஸ்வாமி உடலாலும், பொருளாலும், வாயா

னும் மனத்தாலும் நித்ய கைங்கர்யமாக நம் ஸம்ப்ரதாய அபிமானத்தையும், தர்க்க வேதாந்த சாஸ்த்ர ஞானத்தையும், உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யர்களுக்கன்றித் தெரியவரிதான வடமொழி வேதாந்தப்பொருள் நிரம்பிய தமிழ்வேதமென்று போற்றப்படுகிற திவ்ய ப்ரபந்தங்களின் ஆராய்ச்சியையும், பண்டிதர் பாமரர்கள் என வாசியற, ஸ்த்ரீ புருஷர்கள், பால வயோதிகர்கள் யாவருக்கும் மிகச்சுலபமாகவும் ஸ்பஷ்டமாகவும் தெளிவிக்கும் ஸ்வாமியின் அமுதமயமான மொழிகளை க்ரந்தமூலமாகவும் உபந்யாஸமூலமாகவும் சுமார் இருபது ஸம்வத்ஸரங்களாக 'தேனே பாலே கன்னலே யமுதே யென்று அடியேன் அனுபவிக்கப் பெற்றிருக்கிறேன். சமீபத்தில் திருச்சேறை என்கிற க்ஷேத்திரத்தில் நம் ஸ்வாமி வந்து நடத்திய "ஸ்ரீராமனும் கிருஷ்ணனும்" என்ற உபந்யாஸத்தை ஸகுடும்ப பரிவாரனாய்ப் போயிருந்து ச்ரவணம் பண்ணி ப்ரஹ்மாநந்தத்தை அத்யத்புதமாக அனுபவித்து வந்தேன். ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தி ஒவ்வொன்றும் பகவத்குணானுபவத்தாலல்லது போது போக்கவறியாத முமுக்ஷுக்களுக்கு ரஸாயனமாயிருக்கிறது. பகவத்விஷயத்தில் பேசாமல் பாஹ்ய விஷயங்களைப் பற்றிப்பேசினாலுங்கூட ஸ்வாமியின் உபந்யாஸ வியாக்யானங்கள் மிக மிக அதிசயிக்கத் தக்கதாகவே யிருக்கின்றன வென்பதும் உலகமறிந்ததே.

ஆஸேது ஹிமாசல பர்யந்தமான பாரத பூமி முழுவதும் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யராய் எழுந்தருளி ஆத்மதாரக ஸுலபோபாயத்தை ப்ரசாரம் செய்தும், ப்ரதி மனிதனின் ஸந்தேகங்களை நீக்கி, ஸித்தாந்தப் பொருள்களை அறிவித்தும், லௌகிகம், அலௌகிகம், தேஹம் ஜீவன், பரமாத்மா இவைகளினுடைய தத்வங்களைப் பூர்த்தியாக அறிவித்து ஸமன்வயப்படுத்தியும் வருவது "மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர் அண்ணலண்ணு வந்து தோன்றியவப் பொழுதே நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணர்க்காயினரே" என்னும்படியாகவிருக்கிறது. இதையொட்டியே

"ஜகதாசார்ய மஹாலய ஸம்ஸ்தாபனரூப திவ்யக்ருத்யேந
ஜகதாசார்ய மஹாஸந பதிரிதி பிருதேந பூஷிதோயமபூத்"

என்று அன்பர்கள் வெளியிட்டபடி காஞ்சியில் தேவப்பெருமாள் ஸன்னிதி வாசலில் அமைத்திருக்கிற ஜகதாசார்ய ஸிம்ஹாஸனத்தை உலகமெல்லாம் கண்ணாரக்காணு நிற்கிறது. அந்த திவ்யஸிம்ஹாஸனத்திற்கதிபதியானது பற்றியே நம் ஸ்வாமிக்கு "ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி" யென்று பெரியார் விருது சாற்றியிருக்கிறார்கள்.

குருபரம்பராப்ரபாவத்தின்படி புருஷோத்தமனாகிய ஸ்ரீமத் நாராயணன் கிருஷ்ணாவதாரம் செய்தருளி மண்ணின் பாரத்தை நீக்கித் தருமநெறிகளை நிலைநிறுத்தித் தன்னடிச்சோதிக் கெழுந்தருள, உடனே இப்புவியில் கலிபுருஷன் செங்கோல் செலுத்தப் புகுந்து அதர்மம், அவிவேகம், அநாசாரம் முதலியவற்றை மெல்ல மெல்ல ஜனங்களிடத்தில் உண்டுபண்ணிக்கொண்டு வந்து நெடுநாள் வரையில் முற்றிவிட்டான். இங்ஙனம் கலி முற்ற முற்ற ஜனங்கள் அல்பாயுஸ்ஸுள்ளவர்களானார்கள்; சரீரத்தில் வளர்த்தியும் வலிவும் குறைந்து, அழகும் தெளிவும் தேஜஸ்ஸும் அடியோடு அழிந்து அல்பபுத்திகளாகவும் ஆசார ஹீனர்களாகவும் கல்வியற்றவர்களாகவும் மாறிக்கொண்டு பாவிகள் எல்லையில்லாமல் நிற்கவாரம்பித்தார்கள். இப்படித் தன் அவதாரபலன் வியர்த்தமானதைக்கண்டு எம்பெருமான், மிருகம் பிடிப்பார் தீபகத்தையிட்டுப் பிடிப்பதைப் போலே மனுஷ்ய ஸஜாதீயரான ஆழ்வார்களாக ஸ்ரீவத்ஸ, கௌஸ்துப, வைஜயந்தீ, வநமாலைகளையும், ஸ்ரீபூமி நீளைகளையும், ஸ்ரீபஞ்சாயுதாழ்வார்களையும், அநந்த, கருட, விஷ்வக்ஸேனப்ரப்ருதிகளையும் அவதரிக்கும்படி செய்து, அவ்வாழ்வார்களுக்கு "மயர்வறமதிநலமருளி" அவர்கள் முகமாக ஸர்வாதிகாரமான த்ரவிட வேதரூப திவ்யப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித்தருளினான்.

அப்படியும் அஜ்ஞானாந்தகாரமான இருள் நீங்காமை கண்டு அதைப்போக்க "புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச, ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜதிவாகர:" என்றபடி எம்பெருமானாராகிய விலக்ஷண ஸூர்யனை இவ்வுலகில் திருவவதரிப்பித்து, "கடலளவாய திசையெட்டினுள்ளுங் கலியிருளே, மிடைதரு காலத்தி ராமாநுசன்—மிக்க நான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரையுடையவன் நாரணனென்று அறிவாரில்லை யுற்றுணர்ந்தே" என்ற அமுதனார் அருளிச்செயலின் படியே மஹோபகாரம் செய்தருளும் படியாயிற்று. தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான்மறையும் நிற்கக்குறும்பு செய்நீசரும் மாண்டனர் நீணிலத்தே, பொற்கற்பகம் எம்மிராமாநுச முனி போந்தபின்னே" என்கிறபடியே ஸம்ஸ்க்ருத வேதபாஹ்ய குத்ருஷ்டிகளை யெல்லாம் தம் ஸூக்தி சரங்களாலே நிரஸித்தருளி, "வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்னும் படியாக ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் ப்ரவர்த்திப்பித்தருளி திவ்ய தேசங்களை உத்தரிப்பித்து ஒருவாறு அவதார க்ருத்யத்தைத் தலைக்கட்டிக்கொண்டு சுடரொளிச் சோதிக்கு எழுந்தருளின பின் சில காலத்திற்குள்ளேயே கலியின் மாகாத்ம்யம் பெருகக்கண்டு தாமே மீண்டும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்து முன்னவதாரத்திற் செய்தருளின மஹோபகாரங்களிற் காட்டிலும் பன்மடங்கு அதிசயித்த க்ஷேமங்களைச் செய்தருளி இவ்விருள் தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாகத் திருத்திப் பணிகொண்டு திரு அடிச்சோதிக்கு எழுந்தருளினார் என்பது புராண ப்ரஸித்தம். இவ்வாசார்ய பரம்பரை இவரோடு முடிவுற்றதாகப் பெரியார் அபிப்பிராயம்.

ஆனால் தற்காலத்திலுள்ள கலியின் கோலாஹலங்கள் முன்னிருந்ததுபோல் பன்மடங்கதிகமா யிருக்கின்றன வென்பது மஹநீயர்கள் அறிந்ததே. இக்கோலாஹலங்களைக் கண்டித்துத் தர்மத்தை நிலை நிறுத்த மாமுனிகளுக்குப்பின் பல பல ஆசார்யர்கள் திருவவதரித்திருந்த போதிலும் நம் ஸ்வாமிக்கு ஒப்பானவர் ஒருவரும் இல்லை யென்றும், மாமுனிகளின் தர்சனத்தை அழகாக வளர்த்தருளுவதற்காகவே அமுதிலும் மாற்ற வினிய திவ்ய ஸூக்திகளைத் திருவாய் மலர்ந்தருளி ஸ்ரீராம க்ருஷ்ணாதி விபவாவதாரங்கள் பூமியிலே அவதரித்து சஞ்சரித்தபோதிருந்த ஸகல பக்தர்களுக்கும் எப்படி உஜ்ஜீவிக்க உபயோகப்பட்டனவோ அப்படியே உபயவேதாந்தக் கடலைக்கடைந்து எடுத்த சிறந்த அமுதத்தை இப்போதிருக்கும் நம் போலுள்ள பாக்கியசாலிகளுக்கு முமுக்ஷுப்படி ஸ்ரீவசனபூஷணம், ஆசார்ய ஹ்ருதயம், ஸ்ரீபாஷ்யபகவத்விஷயம் முதலிய திவ்ய க்ரந்தங்களின் அரிய பெரிய ரஹஸ்யார்த்த தத்வமாக ப்ரத்யக்ஷத்தில் வாசாமூலம் அளித்தருளியும், ஹஸ்த மூலமாக வெளியிட்டருளியும் இந்நிலவுலகைப் புனிதமாக்கி வருகிறார். ஸ்வாமியினுடைய ஸர்வதோமுகமான வைதுஷ்யமும், உபந்யாஸத்திலும் ஹஸ்தலேகனத்திலும் அப்ரதிமமாக இவருக்கு அமைந்திருக்கிற திறமையும், ஸ்வாமியின் அருளிச்செயல்களும் "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே' என்று வித்வான்கள் இனிதாகப்பருகிவரும் லோகோபகார க்ரந்தநிர்மாணமும் ஸ்வாமி மணவாள மாமுனிகளின் அபராவதாரமாய் ஸேவை ஸாதிக்கிறார் என்றே நிரூபிக்கின்றன.

நம் ஸ்வாமி இதுகாறும் செய்திருக்கிற—இன்னமும் செய்துகொண்டிருக்கிற ஒவ்வொரு மஹாகார்யமும் மாமுனிகளின் அபராவதார மல்லாத ஆசார்யர் செய்யமுடியுமா வென்பதை மஹநீயர்கள் பராமர்சிக்கவேணும். முடியாது, முடியாது, முடியாது என்று அடியேன் குடப்பாம்பில் கையிடுவேன். ஸகலபூர்வாசார்யர்களும் திரண்டு திருவவதரித்தருளினபடியாக ஸுப்ரஸித்தராய்த் தென்னாடும் வடநாடும் குணானுபவங்களைச் செய்யுமாறு கலியிருளை நீக்கி நம் ஸித்தாந்த ஸ்தாபனம் நெடுந்தூரம்

வேரூன்றித் தழைத்தோங்கவும் திவ்ய தேசங்களை உத்தரிப்பிக்கவும் ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டாக வாழ்ந்து அவதார க்ருத்யத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கவேணு மென்று ஸ்ரீபெருந்தேவி மணாளனை அனவரதமும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

S. ரெங்கஸ்வாமி.
திருக்குடந்தை-ஐயங்கார் தெரு.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் பெருமை.

(கோயமுத்தூர், அட்வொகேட் C. R. ராமஸ்வாமி ஐயங்கார்.)

பரம காருணிகனான எம்பெருமான் பாரத நாட்டின் தென்பாரிசத்தில் உள்ள மக்கள் ஈடேறித் தன்னை அடைய ஹேதுவாக அர்ச்சாவதார ரூபியாய் அனேக திவ்ய தேசங்களிலே எழுந்தருளி ஸேவைஸாதித்து அவர்கள் உணர்ந்து உஜ்ஜீவிக்கப் பெறுமை யாலே அவர்களை ஆட்கொண்டு திருத்திப்பணிகொள்ளுவதற்காகத் தன் நிர்ஹேதுகக்ரு டையாலே தன் அம்சாவதாரமாக ஆழ்வார்களை அவதரிப்பித்து, அவர்கள் அருளிச் செயல் அமுதங்களாலே ஜீவரக்ஷணம் செய்து விசிஷ்டாத்வைதத்தைப் பரப்பியிருந்தும், காலக்கிரமத்தில் ஜனங்கள் தேவதாந்தர உபாயாந்தரங்களில் அஜ்ஞானத்தாலே மண்டிக் கிடக்க அங்கங்கே ஓரோர் மகான்கள் வம்சத்தினர் அதை நலியவிடாமல் பாதுகாத்து வர, ஸ்ரீமந் நாதமுனிகளை அவதரிப்பித்து ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத்தை யும் ப்ரபந்தப்படுத்தி அவருடைய திருப்பேரனான ஸ்ரீ ஆளவந்தார் மூலமாக அதை விமர்சிப்பித்து அவருக்குப் பரமபக்தசிகாமணிகளாயும் ஆசார சீலராயும் பின்னுளர்க்குப் பரமாசாரியர்களாக இருக்கக் கூடிய மகான்களை சிஷ்யராக்கி அவர்கள் மூலமாக தர் சனத்தை வளர்ப்பித்தும், அதுவும் போதாமையாலே நித்ய ஸூரிகளைக்கொண்டு ஸ்ரீ ராமாநுஜராக அவதரிப்பித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை இந்நாட்டில் ஸ்தாபித்தருளினான். அதற்கு எம்பெருமானார் தரிசனம் என்றும் பேரிட்டருளினான்.

இவ்விராமானுஜரிடம் ஆச்ரயித்த எம்பார் கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலான முதலிகளும், அவர்களிடம் ஆச்ரயித்த ஸ்ரீ பட்டர் முதலான பூர்வாசார்யர் களும் அவர்கள் சிஷ்யபரம்பரையாய் ஓராண்வழிபாடாய் வந்துள்ள பூர்வாசார்யர் களாலும் அனேக வியாக்கியானங்களும் தத்வார்த்த ஸ்ரீ ஸூக்திகளும் அவதரிக்கப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவ மதம் விசிஷ்டாத்வைதம் தான் என்று வேரூன்றித் தழைத் தோங்கிப் பூத்துக் கனியுடன் செழிப்புற்று இருந்ததும் அன்றி ஸ்ரீஎம்பெருமானரை ஸ்ரீ மணவாள மாமுனிகளாயும் அவதரித்து பின்னும் இந்த தரிசனம் பூர்த்தியாகுமாறு இருந்த வைபவம் குருபரம்பராப்ரபாவமுகமாக யாவரும் அறிந்தவிஷயம்.

இந்த ஸ்ரீயானது காலக்ரமத்தில் மறுபடி பல்வேறு காரணங்களால் க்ஷீணிக் கவே, ஆழ்வார்கள் அருளிச் செயல்களும், பூர்வாசாரியர்கள் இயற்றிய க்ரந்தங்களும் ஸ்ரீ ஸூக்திகளும் அவற்றின் ஞானமும் எங்கும்தழைத்தோங்கி நிற்கவேண்டுமென்று திரு வுள்ளம்பற்றி, எம்பெருமானர் திருவாராதனமான தேவப் பெருமாள் ஸந்நிதி கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமாள் கோவிலிலேயே ஸ்ரீ மணவாள மாமுனிகள் அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணஸ்வாமியின் திருவம்சத்தில் ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமி என்னும் திரு நாமத்துடன் நம் முடைய பூஜாபலமாக நம் ஸமகாலத்தில் அவதரிப்பித்து ஸர்வசாஸ்த்ர பண்டிதராய்

மகா வித்வானாகி பூர்வாசார்யர்கள் ஓரான்வழியாக ஸ்தாபனம் செய்த தர்சனத்தை முற்றும் கசடறக்கற்று ப்ரவசனம் செய்து அருளும்படியாக நியமித்து அவரைக் கொண்டு இப்பெருங் கைங்கர்யத்தை நடப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்பது திண்ணம். பூர்வாசார்ய க்ரந்தங்கள் கிடைப்பதே அரிதாயும் அதை மற்றவர் அறியும்படி ப்ரவசனம் செய்யும் வித்வான்களும் ஆசாரியர்களும் அரிதாயும் போய்க்கொண்டிருக்கும் காலத்தில் பழைய ஸ்ரீ கோசங்களையும் அங்கங்கே கிடைத்தவையும் கேட்டவையுமான விஷயங்களையும் விடாமல் ஒன்று சேர்த்து பழைய வியாக்கியானங்கள் அறிவுக்குறைவாலே கிரஹிக்க சக்தியற்றவர்கள் மலிந்து கிடக்கும் இந்நாளில் எல்லாரும் அறியும்படி எளிய தமிழ் நடையில் பூர்வாசாரியர்களின் வழி முறை தவறாமல் க்ரந்தங்களுடையவும் வியாக்கியானங்களுடையவும் ஸாராம்சங்களை எழுதி வியாக்கியானங்கள் வெளியிட்டருளுங் கைங்கர்யம் யாவராலும்கொண்டாடப்படுகிறது. தவிர வடமொழியில் ஸ்ரீ ஆளவந்தார், கூரத்தாழ்வான், பட்டர்முதலானோர் அருளிச் செய்த ஸ்ரீ ஸூக்திகளின் அருமை பெருமைகளை பாமரரும் அறியும்படி வியாக்கியானங்கள் ஈந்தருளியிருக்கும் பெருமை நம் ஸ்வாமிக்கே சேரும். இவைகளுக்கு இணையான க்ரந்தங்கள் அவதரிக்கவேயில்லை என்று மனப்பூர்வமாக எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டியதே

வடமொழி தமிழ்மொழி இரண்டிலும் அபார பாண்டித்தியம் பெற்றிருப்பது போலவே இன்னும் மற்றும் சில பாஷைகளிலும் பாண்டித்யம் பெற்று அந்த பாஷைகளில் ஆழ்வார்கள் அருளிச் செயல்களின் மேம்பாட்டையும் அர்த்த விசேஷங்களையும் பெருமையையும் பரவச் செய்துவரும் பெருமை இவருக்கே சேர்ந்தது. இம்மாதிரியாக பல்வேறு பாஷைகளிலும் இவர் க்ரந்தங்கள் 300க்கு மேலிருக்கும் என்றால் இவருடைய விடாமுயற்சியும் உழைப்பும் எண்ணற்கரிதன்றோ.

ஸ்ரீ ஸ்வாமியினுடைய பெருமையைப் பற்றியும் பாண்டித்யத்தைப் பற்றியும் அறிவிலியான யான் எடுத்துரைப்பது ஸாத்யமன்று ; முற்றும் அசக்தன்.

ஸ்ரீ ஸ்வாமிகளை அடியேனுக்கு நேரில் அதிகமாகப் பரிசயம் கிடையாது. மூன்று தடவைகள் தான் நேரிலே பார்த்துக்கொண்டிருக்கிறேன். சில வருஷங்களுக்கு முன் முதலாவதாக அவர் திருமாளிகையில் ஸேவித்துக்கொள்ளச் சென்றபோது அவரை ஸேவிக்க அவகாசம் கிடைக்காதென்று சிலர் சொல்லியும் ஒரு நண்பர் புருஷகாரமாக முன் எச்சரிக்கையில்லாமல் அவர் மாடிப்படியேறி சென்று ஸேவிக்கப் பாக்யம் பெற்றேன். மகா வித்வானாகிய அன்னாரிடம் பேசக்கூட அறியாதவன். பிரக்யாதி பெற்ற மகா வித்வான் அடியேனிடம் உகந்து பேசுவாரோ என்று பயந்துகொண்டே போனேன். ஆனால் ஸ்ரீ ஸ்வாமிகள் அடியேனை நெடுநாள் பழகினவர்போல் வரவேற்று ஸுலபராய் ஸம்பாஷித்து அடியேன் கோரியவைகளுக்கு வேண்டிய விஷயங்களைச் சொல்லி பிரசன்ன முகராய் வழி அனுப்பித் தந்தருளினார். மறுபடி மன்னார்குடியில் ஸேவித்துக்கொண்டபோது உபன்யாஸம் முடிந்து அவசரமாக கார் ஏறும் சமயம், அடியேனை அறிமுகப் படுத்திக்கொள்ளலாமோ என்று நினைத்திருக்கையில் அடியேனை மறக்காமல் அருகில் வந்து முன் சந்தித்ததைப் பற்றி வார்த்தையாடிச் சென்றார். அதற்குப்பின் நீண்டகாலம் கழித்து ஸமீபத்தில்தான் கடித மூலமாகத் தொடர்பு ஏற்பட்டது. ஒவ்வொரு ஸ்ரீமுகமும் அடியேனுக்கு அன்னாருடைய பெருமையை விளக்கியது. சமீபத்தில் மலை நாட்டுத் திருப்பதி யாத்ரா மார்க்கமாக எழுந்தருளுவதாகவும் கோயமுத்தூரில் தாமேவந்து ஸேவைஸாதிப்பதாகவும் ஸ்ரீ முகம் ஸாதித்தார். யாத்ருச்சிகமாகக் கிடைத்த பேற்றைப் பெரும் பாக்கியமாகக்கருதி கோயமுத்தூரில் தங்கியிருந்த சில மணி நேரமும் போதாது என்று அவருடனேயே யாத்ரையில் கலந்துகொண்டு சில நாள் கூடவேயிருந்து சில திருப்பதிகளை அனுபவித்துக்களித்தேன்.

ஸர்வர்க்கும் ஸுலபர், எல்லாவிஷயங்களையும் பெரிது சிறிது என்று பாராமல் கேட்போருக்குத் தகுந்தபடி பதில் சொல்லி திருப்தி அளித்தருளுகிறார். தம்மிடம் வாதம்

செய்பவரிடம் மனத்வேஷம் சிறிதும் பாராமல் பெருந்தன்மையுடனும் நேர்மையுடனும் விஷயங்களை எடுத்துக்காட்டி வெற்றி பெறுபவர். எதிராளியும் அவரிடம் வர்தம் செய்து முடிவில் அவரைப் புகழும்படி செய்யும் ஆற்றலுடையவர். அளவுக்கே எடுத்த விஷயத்தை நிர்த்தாரணம் செய்து, நிஷ்கரிஷம் செய்யும் ஆற்றல் உள்ளவர். ஆவாரையும் ஆகாதாரையும் மனம்கோணுமல் சிலாகிப்பவர். எம்பெருமானாருடைய திருக்குணங்களைக் கடைப்பிடித்து தாமே உதாரணபூதராக இருந்து வழிகாட்டுபவர், அவர் பெருமைகளைச்சொல்லப் புகுந்தால் வாசாமகோசரம்.

ஒரு சமயம், ஸ்வஸ்தானத்தில் இருந்தால் தமது காரியங்கள் தடைபடுகிறதென்றும் யாத்திரையாகப் புறப்படால் யாத்ரை முடிவது மாத்திரமன்றி, அனேககாலமாக பாக்கி கட்டிவைத்திருக்கும் ஸ்ரீகோசங்கள் முடிவுபெறுகிறதென்றும் ஒரு ஸ்ரீமுகத்தில் பொறித்திருந்தார். அது சாததியமாகுமா என்று நான் யோஜித்ததுண்டு. இப்போது மலைநாட்டு யாத்திரையில் நேரில் பார்த்தபோது அதன் உண்மை புரிந்தது. பலருடன் உரையாடிக்கொண்டே தபால் பதில் எழுதுவது, வியாசங்கள் அச்சுப்பிழை பார்ப்பது, புது கட்டுரைகளை எழுதுவது முதலிய ஸகலகாரியங்களையும் சொந்தகாரியங்களையும் கவனித்துக்கொண்டே போவது காண ஆச்சரியமாய் இருந்தது. அவருடன் கூட இருந்து அனுபவித்ததை எழுத்தில் காட்டஸாத்யமில்லை. மனத்தில் தேர்ச்சி; ஆயுள் பரியந்தம் நினைவுபடுத்தி மகிழ்வேன்.

பாதகண்டம் பூராவும் திக்விஜயம் செய்து ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தை உபதேசித்து விசிஷ்டாத்வைதமதத்தின் உண்மைகளைப் பரப்பி மேலோங்கி நிற்கும்படி ஸ்ரீஸ்வாமிகள் செய்திருக்கும் பணி அதற்கென்றே ஏற்பட்டிருக்கும் மடாதிபதிகள் கூட செய்யவில்லை என்று சொல்லலாம். இதுவும் அவதார விசேஷமே. நம் நாட்டிற்கும், சமூகத்திற்கும், முக்கியமாய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் வழிகாட்டியாய் இருந்து ஸத்ஸம்ப்ரதாயத்தை நிலைநிறுத்தியது மன்றி வடகலை தென்கலை என்னும் வித்தியாசமின்றி சமரச நோக்கத்துடன் சமூகமே மேம்பாடு அடையும்படி உழைத்துவரும் பெரியார் இவர் ஒருவரே ஆவர். சிலர் மாறுகச்சொல்லக் கேட்டிருந்ததால் இதை முக்கியமாய்க் குறிப்பிட்டேன்.

ஸ்ரீஸ்வாமிக்கு அடியேனிடம் உள்ள அன்பின் எல்லையை சில நாட்களுக்கு முன்வரை அறிந்தேனில்லை; சில தினங்களுக்குமுன் ஸ்ரீஸ்வாமிகள் பொறித்த ஸ்ரீமுகம் ஒன்றை அடியேன் ஸேவித்துக்கொண்டபோது புளகாங்கிதமடைந்தேன். அறிவிலியான அடியேனை ஒரு பொருளாக்கி விசேஷித்துக் கடாக்ஷித்திருப்பது அடியேன் செய்த பாக்யம், பாகவத கடாக்ஷம் என்ன என்பதை அறிந்தேன். இப்போது என்றும் பெரும் பேறுகக் கருதுகின்றேன். இதேபோல் மற்றும் பலரும் சில சமயங்களில் அனுபவித்திருக்கலாம்.

ஸ்ரீஸ்வாமிகள் இவ்வவதாரத்தில் எம்பெருமானாரைப்போலவே ஸ்ரீவைஷ்ணவ தர்சன்ப்ரவர்த்தகராய், இவ்விபூதியிலே பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து யாவரையும் உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு. ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயுடன் எழுந்தருளியிருக்கும் பாக்கியத்தை ஸ்ரீஸ்வாமிகளுக்கு எம்பெருமான் அளித்தருளுமாறு பிரார்த்திப்போமாக.

பல வித்வான்களும் மகான்களும் ஸ்ரீஸ்வாமிகளைப்பற்றி விசேஷமாய் விமர்சிக்கத்தகுந்தவர்கள் இருக்கும்போது அடியேன் சிற்றறிவிற்குத் தோன்றியதை அடியேனுடைய சமர்ப்பணமாக இங்கே குறித்திருக்கிறேன். அடியேனுடைய குறைகளை க்ஷமித்து, இதை அங்கீகரித்தருளுமாறும் பிரார்த்திக்கின்றேன்.

ஸேவா நிலயம்
கோயமுத்தூர் **ஸி. ஆர். ராமஸ்வாமி ஐயங்கார்**, B.A., B.L.
28-2-51

"நமது குலக்கொழுந்து"

ஸ்ரீமான் டாக்டர் V. ராமையங்கார் எழுதுகிறார்.

ஸ்ரீமான் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரைப்பற்றி, தென்னிந்தியாவிலும் வட இந்தியா முக்கிய ஸ்தலங்களிலும் அறியாதவர்கள் அநேகமாக இருக்கமாட்டார்கள் என்று நினைக்கின்றேன். சென்ற 30 அல்லது 35 ஆண்டுகளாக தத்வ விஷயங்களைப்பற்றி அநேக இடங்களில் உபந்யாஸம் செய்து கீர்த்தி பெற்றவர் இவர். பிரஸங்கம் மட்டும் அல்லாமல் அநேக உயர்ந்த க்ரந்தங்களை ஸம்ஸ்கிருதத்திலும், தெலுங்கிலும், தமிழிலும் எழுதியும் மொழி பெயர்த்தும் அச்சிட்டு உள்ளார். இவைகளைக் கணக்கிட்டால் தொகை அபரிமிதமாகவே இருக்கும். இந்த காரியம் சாதாரணமாக ஒரு மனிதனால் செய்யக்கூடிய காரியம் அல்ல. பலர் கூடியும்செய்யக் கூடாத காரியங்களை, இந்த ஸ்வாமி, தன் தனி முயற்சியினாலும் வித்தையினாலும் செய்து முடித்து வருகிறார். இந்த கைங்கர்யம் மிகவும் சிலாகிக்கத்தக்கது. வாழிவாழி.

தற்கால உலகப்போக்கு, வைதிக ச்ரத்தையைக் குறைத்துக்கொண்டே வருகிறது. லௌகிக வாழ்க்கையை நடத்துவதிலேயே ஜனங்களின் முழு நோக்கம். முழு கருத்து. வாழ்க்கை ச்ரமங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. ஆகவே தான் என்ன என்பதையும், 'தனது என்ன' என்பதைப்பற்றியும் சிந்திக்கக்கூட அவகாசம் ஏற்படுகிறதில்லை. இம்மாதிரி வாழ்க்கையை நடத்துவது, மேல் நாட்டாரின் நோக்கு, பாரத நாட்டின் தர்மம் வேறு. வாழ்க்கையின் இலட்சியங்கள் வேறு. இதைப்பற்றி மஹான்கள் அனேக காலங்களிலும், அனேக விதமாகவும் தத்துவ உபதேசங்கள் நமது நாட்டில் செய்து வந்து இருக்கின்றனர். பகவானே அவதரித்து கீதையை உபதேசித்து இருக்கிறார். எனினும் மானிட ஜன்மம் இவ்வித தத்துவ விஷயங்களில் மனதைச் செலுத்தத் தயங்குகின்றது. நமது தேசத்தில் தத்துவங்களுக்குக் குறைவு இல்லை. பாமர மக்களுக்கு இவைகளை ஆராயவும், இவைகளை அறிந்து கொள்ளவும் சக்தி இல்லை, ருசியும் இல்லை, பயன்படுத்துவதும் முடிவதில்லை எனினும் பரோபகார சிந்தனையுடன், சுயநலத்தைச் சிறிதும் கருதாமல், சில மஹான்கள், உலக நன்மைக்காகவே, தம் வாழ்நாட்களை ஸத்காலக்ஷேபத்தில் கழித்துவருகிறார்கள். இந்த மஹான்களில் தலைவர் நம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமி, வித்தையில் இவர் யாருக்கும் குறைந்தவரல்லர். பெரிய விஷயங்களை எளிதாக எடுத்து உரைக்கவும், மனதைக் கவரும்படியான வழியில் சொல்லவும் இவருக்கு இணை இல்லை என்றே சொல்லிவிடலாம். எந்த பெரிய ஸபையிலும், ஒலிபரப்பு இல்லாமல் யாவரும் கேட்கக்கூடிய வாக்குத் தொனியைப் பெற்றவர். கேட்டு, கேட்டு கிடப்பதே ஆனந்தம் என்ற கொள்கையில், அவரது உபந்யாஸங்கள் பிரமிக்கச் செய்து ஈடுபடுத்தும். இம்மாதிரி இவரது உபந்யாஸத்தில் ஈடுபட்டவர்கள் அனேக ஆயிரம் பேர் நமது தென்னாட்டில் இருக்கிறார்கள். அதில் நானும் ஒருவன். ஷஷ்டியப்தபூர்த்தி கொண்டாட்டத்தில், சிறுவர்கள் பெரியோர்களை வாழி கூறுவதற்கு இடம் உண்டு, உரிமை உண்டு. இந்த சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது, எனது பெரும் பாக்கியம் என்றே கருதுகிறேன். நம்ஸ்வாமி இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்து நம்மை எல்லோரையும் உய்விக்குமாறு அவருக்கு மேன்மேலும் இன்னும் எல்லா மங்களங்களும் உண்டாக வேண்டுமென்று நானும் உங்களுடன் சேர்ந்து கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

டாக்டர். வ. ராம அய்யங்கார், தியாகராயநகர்.

"எங்கள் குடிக்கரசு."

(ஸ்ரீமான் ஸி. நரஸிம்ஹாசாரியர் B A., B L., திருவல்லிக்கேணி.)

1. நம்மாழ்வார் ஸாதித்த த்யாஜ்ய கோடிகளில் முதலாவது "அஸேவ்ய ஸேவநம்" நரஸ்துதி. "மன்னுமனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்." அப்படியிருந்தும் அவர் பாகவதர்களைக் கண்டவுடன் "பொலிக பொலிக பொலிக" என்று மங்களாசாஸனம் பண்ணி ஆடி அலற்றுகிறார். இதுதான் பாகவதர்கள் பெருமை.

2. ஸ்ரீமான் காஞ்சீபுரம் அண்ணங்கராசார்யஸ்வாமியின் வைபவத்தைச் சொல்ல அடியேன் எல்லா விதத்திலும் அசக்தன். ஒரு வேதாந்தமும் தெரியாதவன். "நோற்ற நோன்பு இலேன் நுண்ணறிவு இலேன்" ஆயினும் குதூஹலம் தூண்ட எழுதுகிறேன், குற்றம் குறைகளை க்ஷமிக்கவேண்டும்.

3. இவருடைய திருத்தகப்பனார் ஸம்ஸ்க்ருத வித்வான். பாடசாலையில் உபாத்தியாயராய் இருந்தார். மஹா சாந்த குணசீலர். அவர் திருமேனி வயிர உருக்கு. அவர் திருமேனியும் திருமண்காப்பின் அழகும் என் கண்ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே. இவர் மாதாமஹன் பெரிய தமிழ் வித்வான். பாடசாலையில் சிலகாலம் உபாத்தியாயராய் இருந்து பிறகு ஆச்ரமஸ்வீகாரம்பெற்று அழகிய மணவாள ஜீயர் மடத்தில் மடாதிபதியாய் வெகுகாலம் விளங்கினார். பகவத் விஷயப்பெருவிரகர். அந்த பங்க்திகள்

4. இவர் பால்யத்திலேயே மஹாமேதாவியாய் இருந்தார். வேதம் அசீதித்வ தற்கு இடம் உண்டு, உரிமை உண்டு. இந்த சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது, எனது பெரும் பாக்கியம் என்றே கருதுகிறேன். நம் ஸ்வாமி இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்து நம்மை எல்லோரையும் உய்விக்குமாறு அவருக்கு மேன்மேலும் இன்னும் எல்லா மங்களங்களும் உண்டாக வேண்டுமென்று நானும் உங்களுடன் சேர்ந்து கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

5. இவர் காஞ்சீபுரத்தில் ஒரு பாடசாலையை ஏற்பாடு பண்ணி விசேஷ திரவ்யம் செலவு செய்து சிறு பிள்ளைகளை உபய வேதாந்தமும் கற்கும்படி செய்கிறார். அனேகருக்கு மாதச்சம்பளம் கொடுத்துப் படிக்கச் செய்கிறார். இவரிடம் அத்யயனம் பண்ணினவர்கள் அநேகர். அவர்கள் திவ்ய தேசஉத்ஸவாதிகளில் வேத பாராயணமும் திவ்யப்பிரபந்த பாராயணமும் செய்து வருகிறார்கள். ஸம்பிரதாய க்ரந்தங்கள் இவர் எழுதி அச்சிட்டது கணக்கில்லை.

6. காஞ்சீபுரம் ஸன்னிதிவீதியில் இவர் ஒரு ஸந்நிதி கட்டி அதில் நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை பெரியவாச்சான் பிள்ளைகளை எழுந்தருளப் பண்ணி நித்யோத்ஸவாதிகளும் சிறப்பாக நடத்தி வருகிறார். "நம்பிள்ளை கோஷ்டியோ நம் பெருமாள் கோஷ்டியோ" என்று சொல்லும்படியாய் மஹாஜ்ஞாதாவாய் ஈட்டுக்கு ப்ரவர்த்தகாரன நம்பிள்ளைக்கு இவர் ஒரு ஸன்னிதி கட்டினது வியப்பே.

7. அடியேன் வயதில் முதிர்ந்தவனானாலும் சிறிய ஞானத்தன். மங்களாசாஸனம் பண்ண அதிகாரி அன்று. ஆயினும் அந்த ஸ்வாமியினிடம் உள்ள "பொங்கும் பரிவாலே" அவர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து ஸ்ரீவைஷ்ணவ உலகை உய்விக்கவேணும் என்று அமரர்கள் அதிபதியின் துயரறு சுடரடியைத் தொழுதெழுகிறேன்.

(திருவல்லிக்கேணி. அட்வொகேட் ஸி. நரஸிம்ஹாசாரிய ஸ்வாமி.)

A BRIEF ESTIMATE OF A GREAT PERSONALITY.

The publication of a brief account of the life and work of Sri Ubhve. Maha Vidwan Prativadi Bhayankaram Annangarachar Swami gives me an occasion, of which I gladly avail myself to give expression to the high esteem in which I have held him and to my appreciation of his work and worth. I have been privileged to know him for more than 25 years and I can claim a fairly close knowledge of the nature and extent of the work he has been doing for the propagation of Hindu religion, particularly the religious philosophy of Sri Ramanuja. I have all along felt that Hindus in this part of the country, particularly those in and around the city of Madras, owe a deep debt to two scholars, (late) Mahamahopadhyaya Sri Setlur Narasimhachariar swami and Sri Ubhve. Maha Vidwan P. B. Annangarachar Swami, for the hold which Sri Ramanuja's philosophy has over the educated classes here. Each of these great scholars (who happen to belong to different sub-divisions of the Vaishnavite community) has strongly held and often has given very emphatic expression to the respective tenets of the two well-known Vaishnavite Acharyas; but I am here concerned with the general contribution which both have made to the spread of Sri Ramanuja's philosophy.

It is common knowledge that our learned Pandits prefer to avoid town life; this denies to the educated classes who are obliged to live in cities, the opportunity of benefiting by the learning of these great men. But the two gentlemen above mentioned have almost taken a vow to devote their time and life to the spread of Hindu religion and culture, even at the risk of violating the well established tradition in favour of a peaceful life away from town. Their life has been one of incessant activity in teaching, in delivering lectures, in publishing books and journals and in every other way possible, calculated to achieve this end. In all these respects, Sri Ubhve, Prativadi Bhayankaram Swami has fortunately enjoyed some advantages which were denied to Sri Setlur Swami, particularly by reason of the latter's impaired health.

Sri Ubhve Annangarachar Swami has a remarkable capacity to hold large audiences spell bound and his Upanyasams are very well attended. He can address huge audiences in Sanskrit, in Tamil or in Telugu, and I believe he has latterly been acquiring a knowledge of Hindi also. The task, which he has quite successfully accomplished, of publishing the collected works of four great Vaishnavite Acharyas, namely, Sri Ramanuja, Sri Nampillai, Sri Vedantha Desika, and Sri Manavala Mahamuni, is itself magificent; but this is only a part of his publishing activities, because his time is taken up with numerous journals published by him in Hindi, in Sanskrit and in Tamil, containing learned articles and discussions on religious topics and orginal compositions or commentaries of his own.

I shall conclude this brief note with a prayer that Providence may be pleased to spare him in health and strength for many more years and enable him to continue his labours for the spiritual advancement of our community.

S. VARADACHARIAR.

II

EMBODIMENT OF VAISHNAVISM

(Sri. D. Ramaswami Iyengar, Advocate, Madras.)

It has been said that a true Vaishnavite lives for one or more of three objects. The first of them is to teach to others the principles, precepts, and practices of Sri Vaishnavism and to propagate on proper lines Srivaishnava philosophy and religion. The next is to write and publish treatises embodying for the benefit of generations to come the great principles and lofty ideals of that Siddanta and Sampradaya. And the third is to revel in the enjoyment of the Archa forms of the Lord in Temples dedicated to His worship and consecrated by the mystic outpourings of the Alwars. If there is one person, who has attained and achieved in a very large measure all the aforesaid three objects of a true Vaishnavite's life, that person is Sri Prathivadi Bayankaram Annangarachariar Swami of Kancheepuram, whose Sastiabdapurti is being celebrated by all Vaishnavites this month. His reputation as a profound scholar in the scriptures, Sanskrit and Tamil, and as a brilliant lecturer on religious topics is so wide that it is unnecessary to dwell upon it here. The services he has rendered to the cause of Vaishnavism throughout Bharata Varsha and in a marked measure in Madras State, not to speak of Madras City as a separate unit, are unparalelled in recent years. He has carried the banner of Vaishnavism to distant Badari in the north and to Cape Comorin in the south. Wherever he goes, he becomes a centre of a wide range of activities in regard to religion. In his own place, Kancheepuram, he has established a Patasala and a Publishing House. The Vidyarthis turned out of the former and the books issued from the latter bear eloqueut testimony not only to his zeal in the cause of religion but to his capacity for organisation and sustained endeavour. It is difficult to name another person to day who spends more of his time each day for religious propaganda. Endowed with indefatigable energy, the Swami works for almost 16 or more hours per day and all in the cause of the Vaishnavite religion. Among the great gifts that God has endowed the Swami with, particular mention has to be made about his voice which with its volume and cadence has enabled him to keep spell-bound large audiences for hours on end. In matter and manner the Swami's lectures have set a standard in recent times. His mastery of Telugu has enabled him to convey the message of Ubhaya Vedanta to Telugu speaking persons also. In regard to the publications—he must have some hundreds to his credit—there is none to beat him either for the quickness with which he writes and publishes, or for the knowledge that he brings to bear on any topic dealt with by him. The topics themselves are so varied and diverse, at least they were very varied and diverse in the earlier days. Controversy had always a fascination and grip over the mind of the Swami and for that reason a lot of not very pleasant literature has come into being both by and in respect of the Swami. As can be expected, the Swami's powerful personality has been the target for hostile and adverse criticism from several quarters. It must be said to his credit that he never felt vanquished in any verbal warfare and would always have the last word on any subject,–there have been several such,– in a very telling manner. All that apart, the service that he has rendered and is rendering to the cause of Vaishnavism is immeasurable. The thanks and gratitude of several thonsands of Vaishnavites all over the country are being paid to him in ever increasing measure. The prayer of those thousands of Vaishnavites will go up on this special occasion of the celebration of the Swami's Sastiabdapurthi that God may be pleased in His bounty to preserve the Swami for several more decades, full of energy and enthusiasm even as on the present day, to serve well and truly the case of true Vaishnavism.

D. RAMASWAMY.

III
OUR SWAMY A GENIUS.

Sriman Annangaracharya Swamy is a genius in Ubhaya Vedanta or the Divine Science, like what the famous Ramanujam was in Mathematics, Beethoven in music, Kalidas in Kavya, Michael Angeio in art, Abraham Lincoln in statesmanship, Newton in Physics, and Einstein is in Relativity. The title Ubhaya Vedantacharya has rather been hackneyed by indiscriminate application to all and sundry, and has therefore lost its full significance. But if we listen to our Swamiji's lectures, we then realise how the title is applied to others merely as an *aupacharika vachakam*. His lectures are brimful of rare quotations from both the lores, sublime truths full of pathos, rich thoughts elevating us to a high plane, and we are, in spirit, transported to lofty regions. Their effect upon us, is manifold, and while we feel that something is happening within us, we are unable to describe what it is. We are conscious, in a mystic manner, of having been benefited somehow.

Like other geniuses, there is a certain amouut of mystery as to how and when our Swamiji acquired all his vast knowledge in both the lores, and one distinguished lawyer friend has actually doubted whether he ever sat with folded hands before a guru. This only adds to his greatness, and also distinguishes him as a genius.

It is simply wonderful how his genius comes into play in expounding Bhagavad-vishaya and Acharya-hrudaya, especially the latter. Acharya-hrudaya is a science by itself. The master-mind of Alagiya Manavala Nayanar has evolved this science out of the mystic experiences of Saint Sathakopa *i. e.* he has done the impossible of reducing to an analysis the Saint's spiritual experiences which baffle description. It is not possible to understand and grasp the full significance of this great work, unless one studies in orthodox style, all the prabandhams and the essential Sanskrit Vedanta works. Even then a person studying Acharya-hrudaya under an ordinary Vidwan would get lost in the midst of the various quotations without coming back to the text. I have actually seen certain persons getting bored in the process. Expounded by our Swamiji in his masterful fashion, without having to refer to the text or the commentary or the quotations, we the listeners, get a solid vision of the truths propounded ; we feel as if a film has been projected to show us the Saint Sathakopa in his varying bhavas, and the numerous visions of God which he had, as if a great drama were enacted before us.

This Shastiabda Poorthi Commemoration is indeed a great event in the history of Sri Vaishnavaites, and it is a landmark in our Guruparampara prabhavam duly projected. Indeed we should rank it as one of the foremost events after the period of Sri Manavala Mamuni. In that sense it is worthy of celebration with great elact, but I personally feel this is not an occasion to rejoice. The date only reminds us how we should hurry up, if we want to derive the maximum benefit out of this genius of our Swamy. Not that he has not done enough. He has done much to our community of Sri Vaishnavaites, has delivered thousands of lectures, has produced commentaries which will be equal in volume to those of Pariya Vachan Pillai, and has been publishing journals, articles etc. incessantly. His followers have received the benefit of his kind heart in various ways. He has been working himself out at the rate of eighteen to twenty hours a day, and it is high time we thought of conserving this force. Just as a State nationalises its great scientists, physicsts, artists engineers and the intellectual giants in other fields, and make them produce works for the benefit of the nation, so we, the Sri Vaishvanaite Community as such, have a right over this genius of our Swamy ; more so because of our birthright to the heritage we have inherited from the holy feet of Sri Ramanuja. It is, therefore, a sacred duty of the organisers of this great Comme-

moration and other followers, to devise ways and means by which the sacred energies of our Swamy will be conserved and canalised strictly in the direction of the maximum benefit to our Community, and will not be wasted in any other direction. That will be a Kainkarya greater in spiritual value, than building halls and temples. This is what a humble devotee earnestly feels, and he prays to God that He may grant another span of sixty years of life to our great and kindhearted Swamy.

A. K. SATAGOPAN. B.A.,
Deputy Secretary, Govt. of Bombay.

IV

THE MOST EMINENT OF ALL ACHARYAS

"It is well known that Bhagavad Gita was popularised at Madras, for the first time, by the late lamented Pandit T. Lakshmanacharyaswami during the early part of this century. There is now no Hindu family in Madras and suburbs which does not posess at least a single member who knows Bhagavat Gita at least to chant. After his death several other lecturers enlightened the Madras audiences with lectures on Bhagavat Gita and Prabandams of Vyshnavite literature. Without meaning any disparagement of those illustrious lecturers I can without fear of contradiction say that Sriman Acharya Swami is the most eminent of all.

His vast knowledge of Vedas, Srutis, Smritis, Itihasas and Puranas is equalled only by his incisive knowledge of Sri Prabandas and Sri Visishtadwaita philosophy. Again his powers of exposition and command of languages—Sanskrit, Tamil and in a small measure, Telugu—have placed him on a high pedestal amongst teachers and vast is the number of disciples and hearers who have gained from his lectures.

It is my humble and devout prayer that Sri Acharya Swami will live long in the best of health and continue to do the meritorious services to the ignorant and faithful 'mumukshoos'.

SAMI VENKATACHELAM CHETTY,
Madras.

V

'ANOTHER RAMANUJA"

On the occasion of the clelebration of the Shastiabdapurthi of Srimath Ubayavedantha Mahavidwan Prathivathi Bhayankaran Annangaracharya Swami, one is tempted to take stock of the Swami's good deeds. Vidya Danam is the highest charity. The great wealth of a man is his knowledge which increases as he distributes. This great personality was endowed with great treasures of knowledge even in his youth which he began to distribute in his 18th year. I am a great admirer of his capacity and I shall always stand at a distance observing and worshipping his brilliant Murthi Sevai. His gunas captured me. I am his humble devotee. He is really an Avathara Purusha. He has dived deep into the hearts of Nammalwar and other Alwars and the great Rishis and brought forth secret treasures for wide distribution. He has proved himself to be another Ramanuja in distributing knowledge to me and all. In fact he is a great reformer or missionary who has brought many erring people to be humble, followers of our Darsana. As a Darsana Pravarthaka at this time, he is doing

yeoman service for the cause of Sri Vaishnavas and has placed souls under deep debt of gratitude. Surely his treatises, annotations and commentaries do lead me to a life of bliss in these difficult days in my age of 74.

We shall be grateful to Lord Sriman Narayana and pray that the Swami shall ever shine as a star and make this Leela Vibhuti a Nithya Vibuthi as well.

Rao Bahadur, Maneeshimanya. R. NARASIMHA AIYANGAR,
President, Sri Vaishnava Sat Sampradaya Sabha, Madurai.

VI

A DIVINE PERSONALITY.

"I see in him the guiding hand of the Lord in lifting me up towards His Lotus feet.

I see in him all the Acharyas incorporated from Emberumanar to Manavala-Ma Munigal. By his (services) favours done to the world he is really a Lokacharya.

His dominating personality and the ringing voice while he lectures could never get out of our minds. I bow to the Lord that gave the Swamiji to us.

With a prayer to the Lord for His boon of allowing the Swamiji to remain amidst us for ever."

V. V. AYENGAR.
Grindlays Bank Ltd., Bombay.

VII

SRI MAHAVIDWAN P. B. ANNANGARACHARIYA SWAMIGAL.

A Jothi from the far off South was seen in all brilliance on the horizon by Sri Mathurakavigal while he was touring in the north of Bharathavarsha. He moved to the South with that glow as his beacon light and found Alwar in his Yoga at Alwar Tirunagari. He easily became his disciple and witnessed the incarnation of Thiruvoimozhi. But this illumination began to fade in course of time and Sriman Nathamunigal rekindled it into brilliance and to shed its lustre as Nalayira Prabandham. It was kept burning with greater illumination by Sri Ramanuja, Nambillai and others by their Commentaries in the Sri Vaishnava world. But once again it began to fade for various reasons. The sacred writings of Alwars and Poorwacharyars were guarded by some learned persons and handed over from generation to generation to select disciples. In the latter half of the 19th century an attempt was made to publish some of them in print and spread their knowledge to a wider field. The attempt was not kept alive for want of encouragement and this literature almost became a sealed book to ordinary devotees. There were only a very few who had stored up this great literature.

This Twentieth Century found another Jothi issuing from the sun arising at Kanchipuram. Born in a reputed family of Maha Vidwans and Acharya Purushas, Sri. P. B. Annangaracharya Swamigal became a great scholar both in Sanskrit and Tamil and mastered the entire literature in a short time. He began rewriting the commentaries in a style easily understandable by our generation without losing the spirit and merit of the old Vyakhyanams. He relit the torch of Alwar and raised it to heavens high above. This Jothi shed its brillinance on all four sides North, East, South and West (not only northwards as that of Alwar). The torch lit the homes of all Sri Vaishnavas. He carried this torch throughout the length and width of India by his

Digvijayas and Upanyasams and his publications in Sanskirt, Tamil, Telugu and Hindi and other languages and brought them within the easy reach of Sri Vaishnava devotees. He stands high above all Vidwans and Pandits in this great land of ours. May this Jothi be spreading its brilliance for ever and ever over a wider field with ever increasing flame.

May Lord endow him with long life to enjoy this Sri Vaishnava Shri with the ever growing multitude of his devotees. May this celebration of this year be the beginning of such celebrations annually to show our reverence and gratitude to him and his greatness.

Bhattar Thirumaligai Coimbatore. — Srimath. Vedavyasa Bhattar. THIRUMALAI IYENGAR.

VIII
A TOWERING SPIRITUAL PERSONALITY

Sri P. B. Annangaracharya Swami is a towering personality in the spiritual world of to-day. When he sits to lecture to congregations, one is reminded of the famous stanza of Sri Vedanta Desikar regarding Sri Ramanuja in his Yathiraja Sapthathi—"Upaveethinam Oordhwa pundravantham" etc. When he begins to expound Sri Bhashya or any other concept of obstruse Sri Vaishnava Siddhanta in his own masterly and inimitable style, our mind goes back to 1,000 years when the great Acharya of the Siddhanta similarly acted in furtherance of the mission of his life. When we hear his torrential eloquence, keeping the audience spell bound for hours together, our mind again goes back to 500—600 years when the great disciple of the great Master, namely, Sri Manavalamamuni, is stated to have kept thousands of people in earnest attention and enthusiastic raptures over long periods. The style of Sri Annangaracharya and his method of exposition are forceful, clear, majestic, logical and appealing alike to the head and the heart. His knowledge of Ubhayavedanta is very deep and in his lectures quotations from both Sanskrit and Tamil scriptures flow with astonishing facility. I can say without the fear of contradiction that he is by far the most powerful and eloquent exponent of Sri Vaishnava Siddhanta during modern times.

With all that, his catholicity is something admirable. Though he is a strict follower of Tennacharya Sampradayam, he is one of the greatest admirers of Sri Vedantha Desikar and never fails to quote him in his lectures and expositions. For the resurrection of Sri Vedanta Desikar's writings, no man has rendered greater service than he by the publication of the complete works of the great Master. Not only that; while strong in his convictions of Visishtadwaita, his intellect is broad enough to accommodate the other two systems of philosophy, namely Adwaita and Dwaita. Sri P. B. Annangaracharya, as Sri Vedanta Desikar has shown himself to be in his works like Satha Dhushani, is a strong controversialist. But he will enter into a controversy only on important matters and again only when absolutely necessary. On such occasions he is never afraid to be hit hard nor does he hesitate to hit back with vigour and persistency and with arguments which will never fail to convince and carry the world with him as is evident in the recent controversy over Paranda Rahasyam. But he is essentially a man of peace and a lover of unity and concord. It was with extreme delight that I heard him expounding the other day in New Delhi that

Visishtadwaita was capable of sitting in the centre with its one arm round the neck of Adwaita and the other round that of Dwaita and embracing both in perfect concord and happiness.

His literary contribution is prodigious and monumental. I have seen him working at this age of his life for more than 18 hours a day—writing, writing, writing, or speaking, lecturing and expounding. His Annotation of Tiruvoimozhi is an outstanding contribution which has been mainly instrumental in spreading the gospel of the Alwars far and wide amongst the lay public. His other works are also equally valuable. It would be no exaggeration to say that by his untiring efforts Visishtadwaita literature has been resurrected, popularized and made to live for eternity in the form of printed books.

All devotees of this great personality like my humble self should join in praying to Sriman Narayana to grant long life and robust health to Sri Annangaracharya so that he can continue to serve the cause of Visishtadwaita with the same amount of zeal and enthusiasm with which he has served it during the last 40 years.

10, Asoka Road,
New Delhi,

S. R. S. RAGHAVAN,
Editor, Commercial Publications,
Ministry of Commerce.

IX

"A GREAT MASTER"

It is a matter of great pride and gratification for me to participate in the function by writing a letter of appreciation on this memorable occasion of Shashtiabda Purthi of Sriman Ubhaya Vedanta Vidwan Prativadi Bhayankaram Annangaracharya Swamy to take place on the 27th instant.

He is a great Vidwan in Veda and Vedantas and possesses unsurpassed knowledge in Tarka, Vyakarana and other Sastras. He has several times visited Melkote and during his visit he has delivered many thought-provoking and inspiring lectures on Sanathana Dharma and has thus established himself as a great torch-bearer of Vedic knowledge, culture and character.

He is bestowed with a musical tone and possesses oratorical talents. His ellucidation of the subjects is of a high order and he has a powerful and audiable voice. He has a loud incessent flow of words suited for his deep knowledge.

His love of Philosophy is so great that he has been pleased to present a number of Philosophical and other works to the Library of the Melkote Sanskrit College. I need not say that a large number of students are making the best use of this Library, especially so of his books presented, which are very useful.

He has established his fame and name by preaching Sanathanadharma to and spreading Vedic knowledge among the desciples. Thus both by precept and practice, he has proved himself to be a great master. Words however fail to mention and praise his various good qualities. I only sincerely pray to Sree Chelva Thirunarayana Swami to shower the choicest blessings on him on this occasion and bestow on him long life and prosperity and eagerly wish that the Centenary Commemoration is also celebrated, with great success.

May the Celebration flourish and prosper more and more.

With my sincere respects and felicitations.

H. SRINIVASACHARYA VIDWAN,
Principal, Sanskrit College, Melkote.

(மேலே வெளியிட்ட ஆங்கில வியாஸங்களின் மொழி பெயர்ப்பு)

I

ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான். ப்ரதிவாதி பயங்கரம். அண்ணங்கராசாரிய ஸ்வாமியின் வாழ்க்கையைப் பற்றியும் இவர் செய்திருக்கும் பணியைப் பற்றியும் ஓர் சுருக்கமான வெளியீடு ப்ரசுரிக்கப்படுகிறது. இது இந்த ஸ்வாமியின் குணங்களைப் பற்றியும் இவர் செய்துவரும் பணி விஷயத்திலேயும் எனக்கிருக்கும் உயர்ந்த மதிப்பை விளக்கிக் காட்ட ஓர் சந்தர்ப்பம் அளிப்பதால் அதை நான் சந்தோஷமாகப் பயன் படுத்திக்கொள்கிறேன். இந்த ஸ்வாமியை 25 வருஷங்களுக்கு மேலாகவே நான் தெரிந்து கொண்டிருக்கும் பாக்யத்தையுடையேன். ஹிந்து மதத்தை, முக்கியமாக ஸ்ரீ ராமானுஜரின் வைதிக சித்தாந்தத்தைப் பரவச்செய்தற் பொருட்டு இவர் ஆற்றிவரும் பணியின் இயல்பையும் இதன் அளவையும் நான் சிறிது நெருங்கிய பழக்கத்துடன் அறிந்து கொண்டிருக்கிறேன் என்றே சொல்லலாம். நாகரீக முறையில் படித்திருப்பவர்கள் மனத்திலேயும் ஸ்ரீ ராமாநுஜ சித்தாந்தத்தை நன்ருக வேரூன்றும்படி நிலை நாட்டிய இரண்டு வித்வான்கள் விஷயத்தில், அதாவது (காலஞ் சென்ற) ஸ்ரீ. ம. ம. சேட்லூர் நரஸிம்மாசாரிய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. மஹா வித்வான் P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமி இவ்விருவர்களிடத்தில், நம் தேசத்தவர், முக்கியமாக சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ளவர்கள் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளனர் என்கிற உணர்ச்சி வெகு நாட்களாக எனக்குண்டு. இவ்விரண்டு பெரிய வித்வான்களும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் ஏற்பட்டிருக்கும் இரண்டு உபஸம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்கள்; தங்கள் தங்கள் சம்பிரதாயத்தைச் சேர்ந்த உலகறிந்த பெரிய ஆசார்யர்களின் கொள்கைகளையே இவர்கள் வற்புறுத்தி விளக்கிக்கொண்டு போனாலும், நான் இங்கு முக்கியமாகக் கருதுவது இவர்கள் ஸ்ரீ ராமானுஜ சித்தாந்தத்தை நன்கு பரவச் செய்த ஒரு பெரிய பணியையே யாகும்.

நமது படித்த வித்வான்கள் நகர வாசத்தை விலக்குவதிலேயே நோக்க முடையவர்கள் என்பது நாம் நன்கறிந்த விஷயம். இது, நகரங்களில் வசிக்க நேர்ந்திருக்கும் கல்வி வாய்ந்த வகுப்பினர்க்கு இப்பெரியார்களின் ஞானத்தைப் பயன்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்காதபடி யாக்கிவிடுகிறது. ஆனால் மேல்சொன்ன இரண்டு வித்வான்கள், தொன்று தொட்டு நகரங்களுக்கு வெகு தூரத்தில் இருந்து கொண்டு தங்கள் வாழ்க்கையைச் சாத்வீகமாக நடத்துவது என்கிற நல்ல முறையைத் துணிந்து மீறி தங்களது வாழ்க்கையையும் காலத்தையும் — ஹிந்து மதத்தையும் அதன் வாழ்க்கை முறைகளையும் பரவச் செய்வதற்கென்றே பிரதிஜ்ஞை கொண்டவர்கள். உபதேசத்தாலும், உபன்யாஸங்களாலும் புத்தகரூப வெளியீடுகளாலும், இன்னமும் வெவ்வேறு மார்க்கங்களாலும் இப்பணியைச் செய்வதிலேயே இவர்களது வாழ்நாட்கள் சுறுசுறுப்பாய் நடந்துகொண்டு செல்கின்றன. இவ்விஷயங்களில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கர ஸ்வாமிக்கு அதிர்ஷ்ட வசத்தால் ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமிக்குமேல் சில நல்ல வாய்ப்புகளுண்டு. இதன் முக்கிய காரணம் பின் சொல்லப்பட்டவரின் தேஹ அனுரோக்கியமே.

ஸ்ரீ. உ. வே. வித்வான் அண்ணங்கராசாரிய ஸ்வாமியிடம் பெரிய சபைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அதிசய சக்தியுண்டு. இவரது உபன்யாசங்களைக் கேட்கப் பெரிய கூட்டங்கள் சேருவது வழக்கம். பெரிய சபைகள் முன் இவர் ஸம்ஸ்க்ருதத்திலும்,

தமிழிலும், தெலுங்கிலும் உபந்யசிக்கவல்லவர்; சிலகாலமாக ஹிந்தீ பாஷையையும் இவர் பழகுவதாகத் தெரிகிறது. இவர் மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்த ஓர் மிகப் பெரிய பணி என்ன வென்றால், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ நம்பிள்ளை, ஸ்ரீ வேதாந்த தேசிகர், ஸ்ரீ மணவாளமாமுனிகள் இந்நான்கு பெரிய ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் கிரந்தங்களை யெல்லாம் தொகுத்து ஒரு கோர்வையாக வெளியிட்டதே. இது இவர் சாதித்த ஓர் அரிய பெரிய காரியமாகும். ஆனால் இது இவருடைய வெளியீடுகளின் ஓர் பகுதியேயாகும். ஏனென்றால் ஹிந்தியிலேயும், ஸம்ஸ்க்ருதத்திலேயும் தமிழிலேயும் அறிவு பொருந்திய வியாசங்கள், சர்ச்சைகள், மத விஷயங்கள், தமது சொந்த கற்பனைகள் அல்லது வியாக்கியானங்கள் இவைகளைக்கொண்ட அநேக பத்திரிகைகளை வெளியிடுவதிலேயே இவருடைய காலம் சென்று கொண்டிருக்கிறது.

இவருடைய காலம் இத்தகைய பணிகள் செய்வதிலேயே மேன் மேலும் வளர்ந்து நம்முடைய சமுதாயம் ஆத்மீய விஷயங்களில் விருத்தியடையும்படி இவருக்குத் தகுந்த தேஹாரோக்யத்தையும் சக்தியையும் அளிக்கும்படி ஸர்வசக்தியுள்ள எம்பெருமானைப் பிரார்த்தித்து இச் சுருக்கமான மதிப்புரையை முடித்துக்கொள்கிறேன்.

ஸர். S. வரதாசாரியர்,

பெடரல் கோர்ட் ஜட்ஜ், (ரிடைர்ட்)

II

ஸ்ரீ வைஷ்ணவமே வடிவெடுத்தவர்

ஓர் உண்மை ஸ்ரீ வைஷ்ணவன் மூன்றுவித நோக்கங்களுடன் உயிர் வாழ்கிறான். ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தையும் கொள்கைகளையும் பிறருக்குப் போதிப்பதும் தேசமெங்கும் பிரசாரம் செய்வதும் முதலாவதாகும். பின்புள்ளார் கற்றறிந்து ஆசரிக்கைக்காக அச்சித்தாந்தத்தின் உயர்ந்த கொள்கைகளையும் உன்னத நோக்கங்களையும் கிரந்த ரூபமாக எழுதி வெளியிட்டு பிரசுரம் செய்வது இரண்டாவதாகும். கடைசியாக, ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டு ஆங்காங்கு அர்ச்சாரூபியாய்த் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களின் வடிவழகில் ஈடுபட்டுப் பணி செய்தல். இம்மூன்றுவகை வைஷ்ணவ நோக்கங்களுக்காக முறையே பாடுபட்டுப் பெரிதாக வெற்றியடைந்தவர் உளரேல் அவர் ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி ஒருவரே யாவர். இவருடைய ஷஷ்டியப்தபூர்த்தி இம் மாதம் எல்லா வைஷ்ணவர்களாலும் தேசமெங்கும் கொண்டாடப்படுகிறது. ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய உபய வேதாந்தத்திலும் இந்த ஸ்வாமிக்கிருக்கும் அபார ஞானம், ஆச்சரியமான உபன்யாஸ சக்தி இவைகளைப்பற்றிய கீர்த்தி தேசமெங்கும் பரவியிருப்பதால் நான் அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. பரத கண்டத்தில் முக்கியமாக சென்னை மாகாணத்தில், அதனிலும் முக்கியமாக மதராஸில் ஸ்ரீவைஷ்ணவத்திற்காக இவர் செய்திருக்கும் பணிகள் சமீப காலங்களில் இணையற்றதாகும். ஸ்ரீவைஷ்ணவக் கொடியை இவர் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையில் வெற்றிகரமாக நாட்டியிருக்கிறார். இவர் எங்குச் சென்றாலும் அங்கு மத சம்பந்தமான நடவடிக்கைகளில்

சூழப்பட்டு ஓர் பிரகாசமான நக்ஷத்திரம்போல் விளங்குகிருர். இவருடைய சொந்த நகரமான காஞ்சிபுரியில் ஓர் பாடசாலையையும் க்ரந்த ப்ரசுராலயத்தையும் ஸ்தாபித்திருக்கிருர். இவருடைய பாடசாலையிலிருந்து வெளியேறும் வித்யார்த்திகளும் ப்ரசுராலயத்திலிருந்து வெளியாகும் க்ரந்தங்களுமே மத விஷயத்தில் இவர்க்கிருக்கும் ஆர்வத்துக்கும், நிர்மாண திறமைக்கும், விடாமுயற்சிக்கும் சிறந்த அத்தாட்சிகள். இன்றைக்கும் ஒரு நாளைக்குப் பதினறு மணிகளுக்குமேல், சிறிதும் குன்ருத வீர்யத்துடன், ஸ்ரீவைஷ்ணவத்துக்கே பாடுபடும் நபர் ஸ்வாமியைத் தவிர வேறு கிடையாது. கம்பீரமான வங்கலகண்டத்வனியுடன் மணிக் கணக்காக கேட்போர் மனங்களை வசீகரித்து அப்படியே ஸ்தம்பிக்கச் செய்யும் சக்தியே எம்பெருமான் இவருக்களித்திருக்கும் குணதிசயங்களில் முதன்மையாகும். சொல்லப்படும் விஷயங்களிலும் எடுத்துரைக்கும் ரீதிகளிலும் இவரையே மற்றவர் தற்காலத்தில் பின்பற்றுகின்றனர். தெலுங்கு பாஷையில் இவருக்கிருக்கும் புலமை தெலுங்கு நாடுகளிலும் உபய வேதாந்தத்தின் உண்மைகளை இவரால் பரவச்செய்துவிட்டது. அந்தந்த காலத்தில் க்ரந்தங்களை எழுதி ப்ரசுரிப்பதிலேயோ—இவை இப்போது நூற்றுக்கணக்காகவேயிருக்கவேண்டும்—எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அந்த விஷயத்தில் இவர் காட்டும் ஞானத்திலேயோ இவரை வெல்பவர் கிடையாது. இவர் கையாண்ட விஷயங்களோ அனேகம்; இவை பல துறைகளிலுள்ளவை என்பதையும் இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

வாதப் போர் நடத்துவதில் ஸ்வாமிக்கு வெகு உற்சாகம். இதனுல் ஸ்வாமியாலும் ஸ்வாமி விஷயமாகவும் அனேக ரஸமில்லாத கிரந்தங்கள் உற்பத்தியாகியிருக்கின்றனவென்ருலும் இவற்றுக்கெல்லாம் காரணம் ஸ்வாமியின் அதி சக்தி வாய்ந்த குணதிசயமென்றே சொல்லவேண்டும். இவ்வளவு சக்திவாய்ந்த ஒரு மஹாபுருஷர் விஷயத்தில் அசூயையையும் பொருமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர்பார்க்கலாம். ஆனுல், எவ்வித வாதப்போரிலும் ஸ்வாமி பின்வாங்கவேமாட்டார், இவருடைய வாதமே கடைசியாக ஓங்கி நிற்கும். இந்த ரீதியில் அனேகம் உள்ளன. விஷயங்களைத் தேங்காய் உடைப்பது போல், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று உடைத்துக் காட்டுவர்! இவை ஒரு பக்கம் கிடக்கட்டும். ஸ்ரீவைஷ்ணவத்திற்காக இவர் செய்திருக்கும் செய்துகொண்டிருக்கும் பணி கணக்கிட முடியாதது. நம் தேசமெங்கும் ஆயிரக் கணக்கிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவருக்கு மேன்மேலும் வணங்கிக்கொண்டும் நன்றி செலுத்திக்கொண்டு மிருக்கின்றனர். இவர்கள் எல்லாருடைய பிரார்த்தனைகளும், ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி நடக்கும் இத்தருவாயில், இவர் பல்லாண்டு பல்லாண்டாக குன்ருத ஆரோக்யத்துடன் ஸ்ரீவைஷ்ணவத்திற்கு தொண்டாற்ற வேண்டுமென்று எம்பெருமானிடம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

D. ராமஸ்வாமி அய்யங்கார்.

III

நம் ஸ்வாமி ஓர் மேதாவியே.

கணித உலகில் ப்ரபஸர் ராமானுஜம், சங்கீத உலகில் பீதோவன், நாடகக் காவியத்தில் காளிதாஸன், சித்திரத்தில் மைகல் ஏஞ்சலோ, அரசியல் தந்திரத்தில் அப்ரஹாம்லிங்கன், பௌதிகசாஸ்திரத்தில் நியூடன், ஈன்ஸ்டின் முதலியோர் மாபெரும் மேதாவிகளாய் விளங்குவதைப் போல் உபயவேதாந்தத்தில் ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஒப்பற்ற மேதாவியாய் விளங்குகிறார். இவருடைய உபன்யாசங்களைக் கேட்ட பிறகு மற்றவர்களை உபயவேதாந்தாசாரிய ரென்று சொல்வது ஔபசாரிக மென்றே தோன்றும். மற்றமேதாவிகளைப் போலே இவர் யாரிடத்தில் எப்போது எப்படி இவ்வளவு ஞானம்பெற்றார் என்று நாம் வியக்கத்தான் வேண்டியிருக்கிறது. பகவத்விஷயம், ஆசார்ய ஹ்ருதயம் போன்ற காலக்ஷேபங்களில் இவருடைய ஞானமும் மேதையும் எல்லாரும் ஆச்சரியப்படும் வண்ணமாய் ப்ரகாசிக்கின்றன. ஆசார்யஹ்ருதயம் என்பது ப்ரமாணத்துணுக்குகளையே கொண்டு தொகுக்கப்பட்டு நம்மாழ்வாரின் ஹ்ருதயத்தில் உதித்த சகல பாவங்களையும் விளங்கச்செய்யும் ஓர் அற்புத க்ரந்தம். இதை ஸ்ரீகோசங்களின் உதவியைக்கொண்டே உபந்யசித்தாலும் மற்ற வித்வான்களின் மேதை காடுபாய்வது திண்ணம். நம்ஸ்வாமி ஒரு ஸ்ரீகோசத்தையும் கையில் வைத்துக் கொள்ளாமல் கங்காப்ரவாஹமாக விஷயங்களையும் பாவங்களையும் ஸினிமாத்திரையில் காட்டும் ரீதியாக நமக்கு விளக்கிவைப்பதை நான் கண்டு ஆச்சரியப் பட்டேன். இவருடைய ஷஷ்டியப்த பூர்த்தி ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குச் செய்திருக்கும் நினைத்தற்கரிய பல நன்மைகளை, நாம்-கோயில்களையும் ஹால்களையும் கட்டுவதோடு நிற்காமல்-எப்படி பயன் படுத்திக்கொள்ளப் போகிறோமென்றுதான், இவருடைய எளிய பக்தனை அடியேன் ஹ்ருதய பூர்வமாகக் கருதுகிறேன். எம்பெருமான் இவருக்கு மற்றொரு ஷஷ்டியப்த பூர்த்தியைக்கடாக்ஷிப்பானாக.

பம்பாய் — A. K. சடகோபன்,
3—3—1951 — டெபுடி செகிரிடரி, பம்பாய் கவர்ன்மெண்டு.

IV

ஸகல ஆசார்யர்களுக்கும் சிகரமாய் விளங்குபவர்.

இந்த நூற்றாண்டின் ஆதியில் பண்டித லக்ஷமணாசாரிய ஸ்வாமிகள் பகவத்கீதையை மதராஸிலுள்ள எல்லா ஹிந்து குடும்பத்திலேயும் ஊடுருவச் செய்த பிறகு, அனேக வித்வான்கள் பகவத்கீதையையும் ப்ரபந்தங்களையும் சென்னையில் உபன்யசித்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரிலும் நமது (அண்ணங்கராசாரிய) ஸ்வாமிகள் தலைசிறந்தவராய் விளங்குகிறார் என்பது நிராக்ஷேபமாக ஒத்துக் கொள்ள வேண்டிய விஷயம். ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸபுராணங்கள் முதலிய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் இவருக் கிருக்கும் ஞானத்திற்கு, ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்கள் முதலிய தமிழ்க் கலைகளில் இவருக்கிருக்கும் ஞானத்தைத்தான் ஒப்பிட முடியும். ஸம்ஸ்க்ருதம்,

தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளில் இவர்க்கிருக்கும் உபன்யாசசக்தி இவரை ஓர் உயர்ந்த ஆசார்ய பதவியில் கொண்டுவைத்து இவருடைய சிஷ்ய கோஷ்டிகளைப் பெருக்கிவிட்டது. திடகாத்திரராய் இவர் இன்னும் அனேக ஆண்டுகள் ஸ்ரீவைஷ்ணவ உலகத்தொண்டு புரியுமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

ஸாமி வெங்கடாசலம் செட்டி.

V

மற்றொரு இராமானுஜர்

கல்விச் செல்வமே சிறந்த செல்வமாகும்; வித்யாதானமே பெரிய தானமாகும். இத்தகைய சிறந்த செல்வத்தை ஸ்ரீகாஞ்சி உ. வே. மஹாவித்வான் P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமி பால்யத்திலேயே திரட்டி பிறருக்கும் தானம் செய்யத் தொடங்கிவிட்டார். இவர் ஓர் அவதார புருஷராகவே விளங்குகிறார். இவரை நான் அணுகி அனுபவிப்பதிலுங் காட்டிலும் தூரத்திலிருந்துகொண்டே இவரது திருமேனியழகையும் குணாதிசயங்களையும் கண்டு ஆனந்திப்பது வழக்கம். ரிஷிகள் ஆழ்வார்கள் முதலியோரின் ஹ்ருதயங்களில் முழுகி ஆழங்கண்டு ஆங்காங்கு சிதறியிருக்கும் ரத்னங்களை நமக்கு இவர் வாரியிறைக்கும் இந்த ரீதியில் இவர் மற்றொரு இராமானுஜராகவே விளங்குகிறார். இவருடைய வியாக்கியைகளும் வியாசங்களுமே என்னுடைய இந்த எழுபத்திநான்காவது வயதில் எனக்கு ஆனந்தமூட்டுகின்றன. இந்த நக்ஷத்திரம் இன்னும் வெகு காலம் ப்ரகாசித்து இந்த லீலாவிபூதியை நித்யவிபூதியாக்க வேணுமென்று எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

R. நரசிம்ம ஐயங்கார்,
மதுரை.

VI

ஓர் தெய்வீக மஹாபுருஷர்.

எம்பெருமான் இவர் மூலமாக என்னைத் தன் திருவடிவாரத்துக்கு இழுப்பதை நான் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறேன். எம்பெருமானார் தொடக்கமாக மணவாள மாமுனிகள் முடிவாகவுள்ள ஸகல ஆசார்யர்களையும் இவரிடம் நான் உயிருடன் பார்க்கிறேன். உலகுக்கு இவர் செய்திருக்கும் பல நன்மைகளினால் லோகாசார்யராகவே விளங்குகிறார். இவருடைய கம்பீரமான திருமேனியழகும் இனிமையான உபந்யாஸத்வனியும் நம்முடைய மனதை விட்டு அகலுமோ? இத்தகைய ஸ்வாமியை நமக்களித்த எம்பெருமானை வணங்குகிறேன்! நம்மைவிட்டு என்றைக்கும் நம்ஸ்வாமி பிரியாதிருக்க அவனைப் பிரார்த்திக்கிறேன்.

வி. வி. அய்யங்கார், பம்பாய்.

VII

ஓர் பெரிய ஜோதி

அன்று நமது பரதகண்டத்தின் வட பாகங்களில் திரிந்து கொண்டிருந்த மதுர கவிகள் தென் திசையில் ஓர் மாபெரும் ஜோதியைக் கண்டு ஆழ்வார் திரு நகரிக்கு வந்து சேர்ந்து நம்மாழ்வாரை ஸேவித்து திருவாய்மொழி உதயமானதைக் கண்டு களித்தார். அச்சோதி நாளடைவில் மழுங்கிற்று. ஸ்ரீமந் நாதமுனிகள் அவதரித்து அதை மறுபடியும் பிரகாசிக்கச் செய்தார். பிறகு அதை இராமானுஜர், நம்பிள்ளை முதலிய ஆசார்யர்கள் தங்களுடைய அரிய வியாக்கியைகளினால் மிகவும் விளங்கச் செய்தார்கள். ஆனால் அவை சிலருக்கே பயன் தரும் வண்ணமாயிருந்தன. இருபதாவது நூற்றாண்டில் மற்றொரு ஜோதி காஞ்சீபுரியில் உயர்ந்த குலத்தில் தோன்றி பூர்வாசார்யர்களின் ஸகல க்ரந்தங்களையும் மிகவும் எளிய நடையில் ஆக்கினதால் யாவரும் உஜ்ஜீவிக்கும் படியாயிற்று. தென் தேசங்களிலோ வட தேசங்களிலோ, கிழக்கிலோ மேற்கிலோ உள்ள ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்திலேயும் இவர் மூலமாய் வைஷ்ணவ ஸ்ரீ ப்ரகாசிப்பதை நாம் இப்போது காண்கிறோம் இவருக்குச் சமானமான வித்வானையோ பண்டிதரையோ நாம் காணமுடியாது. எம்பெருமான் இவருக்குத் தீர்க்காயுளை யளிப்பானாக; இவரது ஷஷ்டியப்த பூர்த்தியை நாம் இப்போது கொண்டாடும் வண்ணமே பிரதி வருஷமும் இவருடைய ஆண்டு நிறைவைக் கொண்டாடுவோமாக.

கோயம்புத்தூர்
பட்டர் திருமாளிகை

திருமலையய்யங்கார்,
வேதவ்யாஸபட்டர்.

VIII

ஒளிபொருந்திய ஞானிகளின் சிகரம்.

ஸ்ரீ. **P. B.** அண்ணங்கராசார்யர்ஸ்வாமி தற்காலத்திய ஆத்மஜ்ஞானிகளில் சிறந்த சிகரமாக விளங்கும் ஒரு மஹா புருஷர். மாபெரும் சபைகளிடை இவர் உபந்யசிக்கும்போது, ஸ்ரீ வேதாந்ததேசிகர் தம்முடைய யதிராஜ ஸப்ததியில் ஸ்ரீ ராமானுஜரைப்பற்றி அருளிச்செய்த **"உபவீதிநம் ஊர்த்வ புண்ட்ரவந்தம்"** என்று தொடங்கும் சுலோகம் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீ பாஷ்யத்தைப்பற்றியானாலும் சரி, இன்னமும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அழுந்திக் கிடக்கும் எந்த நுண்ணிய விஷயத்தைப் பற்றியானாலும் சரி, இவர் தம்முடைய ஒப்பிலா நடையில் மிகவும் ஸாமர்த்தியமாக விளக்கிக் கொண்டுபோகும் ரீதியைக் கண்டால், ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன் இம்மதத்தைத் திடமாக ஸ்தாபித்து தேசமெங்கும் பரவச் செய்து தம்முடைய வாழ்க்கைப் பணியைப் பூர்த்தி செய்த ஓர் பெரிய ஆசாரியரே (இராமானுஜனே) ஞாபகத்திற்கு வருகிறார். கேட்போர் மனதை அனேக மணி காலம் ஸ்தம்பிக்கச் செய்யும்படி இவர் சரமாரியாகப் பொழியும் அமுத மொழிகளைக் கேட்கும் போது, 500 அல்லது 600 வருஷங்களுக்கு முன் இதே ரீதியாகத் தம்முடைய சிஷ்ய வர்க்கங்களின் மனதைக் கவர்ந்து அவர்களைக் குதூஹலிக்கச் செய்த ஸ்ரீ மணவாள

மாமுனிகளென்னும் பெரிய ஆசாரியரே நமது மனக்கண் முன் வந்து நிற்கிறார். ஸ்ரீ அண்ணங்கராசாரியரின் உபன்யாசங்கள் மிகவும் தெளிவாகவும் கம்பீரமாகவும் அதி சக்தி வாய்ந்தவையாகவும், யுக்திக்கனுகுணமாகவுமிருந்து நமது ஹ்ருதயத்தைக் கவர்கின்றன. உபய வேதாந்தத்திலேயும் இவர் மிகவும் ஆழ்ந்த ஞானம் படைத்தவர். இவருடைய உபந்யாஸங்களில், ஸம்ஸ்க்ருதம், தமிழ் இவ்விரண்டு பாஷைகளிலுமுள்ள ஸகல கிரந்தங்களி லிருந்தும் மேற்கோள்கள் மிகச்சுலபமாக, நாம் ஆச்சரியப்படும் வண்ணம் கொட்டுகின்றன. தற்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை அதிக சக்தியுடன் ப்ரகாசிக்கச் செய்பவர்களில் முதன்மையாக நிற்பவர் இவர் ஒருவரே என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது என்று நான் நிச்சயமாகவும் தைரியமாகவும் சொல்வேன்.

மேலும் இவரது தாராளகுணம் போற்றத் தக்கது. இவர் தென்னாசாரிய சம்பிரதாயத்தைத் திடமாகத் தழுவி யிருந்தாலும், ஸ்ரீ வேதாந்த தேசிகனை இவர் மிகவும் உகந்து அவரது ஸ்ரீ ஸூக்திகளைத் தமது உபன்யாஸங்களில் அதிகமாகக் கையாளுவதில் தயங்குவதில்லை. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் க்ரந்தங்களைப் புதுப்பித்து அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து (ஸ்ரீ தேசிக கிரந்தமாலா வென்னும்) ஓரே பதிப்பாக இவர் ப்ரசுரித்த ஒரு மாபெரும் உதவியைப்போன்ற பணி வேறு ஒருவரும் செய்யவில்லை. தவிர இவர் விசிஷ்டாத்வைத மதத்தை முழு நம்பிக்கையுடன் தழுவியிருந்தாலும், அத்வைதம் துவைதம் என்னும் மற்ற இரண்டு சித்தாந்தங்களுக்கும் தமது விசாலமான புத்தியில் சினேகபாவத்துடன் இடந்தந்திருக்கிறார்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் சததூஷணி முதலான வாதக்ரந்தங்களையும் எழுதியிருப்பதுபோல் நம் P. B. A. ஸ்வாமியும் வாதக்ரந்தங்களையும் எழுதுவதிலும் மிக்க ருசியும் வல்லமையுமுள்ளவர். மிகவும் அவச்யமான விஷயங்களிலேயே இவர் வாத க்ரந்தங்கள் எழுதியுள்ளார். ஷை வாதங்களில் பிறர் கடினமாகத் தாக்கினாலும் இவர் சிறிதும் அஞ்சமாட்டார். ஒழுங்கு தவறாமல் எதிர்வாதங்களை யெழுதி தன் வாதத்தையே உலகம்மெச்சும்படியாகச் செய்துகொள்வது இவருடைய இயல்பு. ஸமீப காலத்தில் "பரந்த ரஹஸ்யம்" என்கிற க்ரந்த விஷயமாக நடந்த சர்ச்சையே இதை நன்கு விளக்கும். ஆனாலும் இவர் ஹ்ருதயபூர்ணமாக சமாதானத்தையும் ஒற்றுமையையுமே விரும்புபவர். இவர் புது டெல்லியில்வந்து செய்த உபந்யாசத்தில் "விசிஷ்டாத்வைத மதமானது அத்வைதத்தை ஒரு கையாலும் துவைதத்தை மற்றொரு கையாலும் தழுவி அணைத்துக்கொண்டு, அவைகளுடன் சாந்தமாகவும் சந்தோஷமாகவும் நடக்கவல்லது" என்பதையே அதிக சாமர்த்தியமாக விளக்கிக்கொண்டு போனது எனக்குப் பேரானந்தத்தை விளைவித்தது.

இவருடைய க்ரந்த பிரசுரங்கள் மிகவும் அதிகமானவை, மலைபோலுள்ளவை. இந்த வயதிலும் இவர் தினந்தோறும் 18 மணிகளுக்கு மேலாக க்ரந்தங்களை மேன்மேலும் எழுதுவதிலேயும், சாஸ்திர விஷய சம்பாஷணைகளிலேயும், உபன்யாசங்களிலேயுமே தம்முடைய பொழுதைப் போக்குவதை நாம் பார்க்கிறோம். இவரது திவ்யப்ரபந்த வியாக்யானம் இவர் நமக்களித்த ஓர் பேருதவியாகும். ஆழ்வார்களின் திவ்ய உபதேசங்களை நாடு நகரமும் நன்கறியப் பரவச்செய்வதற்கு இதுவே ஓர் பெரிய பணியாகும். இவர் செய்திருக்கும் மற்ற பணிகளும் மிகமிக மதிப்பு வாய்ந்தவை. விசிஷ்

டாத்வைத மதத்தின் சீரிய க்ரந்தங்கள் இவருடைய விடா முயற்சியினாலேயே புத்துயி ரளிக்கப்பெற்று, எல்லோரும் அறியும்படி பரவச் செய்யப்பட்டு, நேர்த்தியான புத்தகங் களாய்ப் பதிப்பிக்கப்பட்டு, காலதத்துவமுள்ள வரையிலும் வாழ்விக்கப்பட்டதென் றால், இது மிகையாகாது.

நடந்த நாற்பது வருஷங்களாக இவர் விசிஷ்டாத்வைத மதத்திற்காகப் பணி செய்து வந்த வண்ணமே இன்னமும் அதிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மேன் மேலும் பணிசெய்து நம்போல்வாரை வாழ்விக்கும்படி, இவருடையகாலம் தேஹா ரோக்யத்துடன் பல்லாண்டு பல்லாண்டாய்ச் செல்லவேண்டு மென்று, இம்மஹாபுருஷ ரிடம் ஈடுபடும் அடியேனைப் போன்ற பக்தர்கள் எல்லோரும் கூடி ஸ்ரீமந்நாராயணனைப் ப்ரார்த்திப்போமாக.

10, அசோகா வீதி
புதுடெல்லி,

S. R. S. ராகவன்,
பதிப்பாசிரியர், வர்த்தக வெளியீடுகள், வர்த்தகமந்திரி சபை.

IX

ஓர் பெரிய ஆசார்யர்.

உபய வேதாந்த மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கரா சார்ய ஸ்வாமியைப் பற்றியெழுத எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததற்கு மிகவும் களிக் கிறேன். வேதத்திலோ வேதாந்தத்திலோ, தர்க்கம், வியாகரணம் முதலிய சாஸ்திரங் களிலோ இவருக்கிருக்கும் ஞானம் ஒப்பற்றது. இவர் மேல்கோட்டைக்குப் பலதடவை விஜயம் செய்து நமது ஸநாதன தருமத்தைப் பற்றித் தமது ஆழ்ந்த ஞானத்துக்குத் தக்கபடியுள்ள கம்பீரமான சாரீரத்துடன் அனேக சக்தி வாய்ந்த, கவர்ச்சி கரமான உபன்யாஸங்களைச் செய்தும், மேல்கோட்டை ஸம்ஸ்க்ருத கல்லூரிக்கு அனேக புத்தகங் களை நன்கொடையாகத் தந்தும் உபகரித்திருக்கிறார். இவருடைய குணாதிசயங்களைத் தக்கபடி வருணிக்கப் பதங்கள் கிடைப்பதரிது. ஞானத்தாலும் அனுட்டானத்தாலும் இவர் ஓர் பெரிய ஆசார்யராகவே விளங்குகிறார். செல்வத்திரு நாராயணன் இவர்க்குத் தீர்க்காயுளையளித்து ஷஷ்டியப்த பூர்த்தியைப் போலவே இவரது சதாப்த பூர்த்தியும் செவ்வனே நிறைவேறுமாறு அருள் புரிவானாக.

மேல் கோட்டை
4—3—1951

H. ஸ்ரீநிவாஸாசாரியர்,
மேல் கோட்டை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபல்.

Preface to Bhakthamrita, one of Sri Swami's works
T. S. NATESA SASTRIAR, B.A., B.L., ADVOCATE.
Vice-president, Madras Bhagavath Katha Prasanga Sabha.

It is now over 50 years since "The Bhagawad Katha Prasanga Sabha", was established. Upanyasams and Harikathas of several vidwans, such as, my elder brother, Brahma Sri Panchapagesa Sastrigal, Pandit Lakshmanachar etc, have, in the past, been held in the Thondamandalam School Hall, under the auspices of the Sabha.

In July 1931, we requested Sri P. B. Annangaracharya Swamigal of Sri Kanchi to deliver some Upanyasams in our Sabha. With aboundig love, he acceded to the request and first delivered 6 Upanyasams in connection with Sri Ramanuja Vaibhavam. Those that listened to them were so entranced that they expressed a keen desire that the Swamigal should be requested to deliver Upanyasams uuder the auspices of the Sabha every Saturday and Sunday for as long a time as possible and that the necessary arrangments should be made therefor. By the grace of God, Upanyasams have been continuing from that day until to-day.

The following are the details of the Upanyasams of our swamigal delivered in the Thondamandalam School Hall since July 1931 upto date.

1.	Sri Ramanuja Vaibhavam	6
2.	Siria (Little) Thirumadal	11
3.	Sri Ramayanam	265
4.	Alavandar Sthothra Rathnam	39
5.	Chathusloki	5
6.	Tiruppallandu	13
7.	Amalanathipiran	11
8.	Kanninun Chiruthambu	13
9.	Thirumanthrartham (Mumukshuppadi)	42
10.	Sri Bhagavatham Dasamaskandam	73
11.	Mahabharata Saram	44
12.	Bhagawad Gita saram	37
13.	Ashtasloki	9
14.	Bhagawad Vishayam	409
15.	Thiruppavai (held in Margazhi of every year).	

In addition to the above, upanyasams have been delivered on special occasions on the Vaibhavams of Theva Perumal, Thiruvengadamudaian, Sri Ranganathar, Alawandar, Kurathalvan, Bhattar, Nampillai, Desikar and Manavala Mahamunigal and Paduka Sahasram.

The first series of Sri Ramayana upanyasams was completed and pattabhishekam was celebrated in 1935. As the Bhakthas were anxious to enjoy the same over again, the Sri Ramayana Upanyasams were recommenced and are being held every Saturday for the last 1½ years. At present Aranya Kandam has been reached. On Sundays, Bhagawad Vishaya Upanyasams are being conducted and 470 Pasurams (stanzas) have so for been done. Apart from those who regularly attend and enjoy these upanyasams, many great men from the City and from outside often attend and

partake of the enjoyment. There is a strong general opinion that it is necessary to make these upanyasams reach and benefit not only those that are outside residents but also future generations.

Although the several Granthams on which our Swamigal has delivered upanyasams in our sabha have almost all been explanatorily dealt with by him in his various publications in Tamil, Telugu and Hindi, still, since all the matters explained in Upanyasams cannot be found in these publications and since certain matters have to be separately and fully treated, several Bhaktas and Pandits have felt that separate publications on these matters would be most welcome. The late Mahamahopadhyaya Dakshinathya Kalanidhi Swaminatha Aiyer Avergal who frequently used to attend our Swami's upanyasams gave vent to the same idea during all his visits. Sir S. Varadachariar Swamigal and Justice Patanjali Sastrigal used to do the same. It is in accordance with the above opinion that, Viseshartha Ratnanidhi, Swapadesartha Sagaram, etc., were published by our Swamigal.

I felt that Bhaktas should be provided with similar rich repasts. I have been enjoying the Swami's upanyasams for a long time without any break. During the past one year, however, owing to ill-health, I have been denied that pleasure as I have had to remain indoors resting myself on the contemplation of Bhagawad Gunas. It is, therefore, for my personal enjoyment and that of other Bhakthas that this book called "Baktha Amirtham" has been prepared.

Although our Swamigal is born in and is an ardent exponent of the Sri Vaishnava Sampradayam he has absolutely no prejudice against others. In fact, the Swamigal's habit is to deliver upanyasams which would be liked and eagerly enjoyed by people of all sects. I believe that the present publication will be greatly useful in making us understand the esoteric Thathvas of Sri Vishnava Sampradayam.

Bhaktas are aware that any number of such books cannot do full justice to the Swami's upanyasams. It is to be hoped that by the Grace of God, several such books will come out in the future. Our Swamigal also should have the full span of life and glorify our sabha for a long time. Bhagawad Bhakthi and Bhagawatha Bhakthi should increase and Dharma should get firmly established. This is my humble prayer.

6–5–1947.

Extract from Sriperumbudur Sanskrit College Golden Jubilee
COMMEMORATION VOLUME

Srimad Vedamarga Prathishtapanacharya Ubhaya Vedanta Mahavidwan Prativadi Bhayankaram Annangarachariar Swamy of Kanchi is one of our great contemporaries—heir to the richest heritage of classical learning and scholarship, nurtured in the finest traditions of our ancient religion and culture, and skilled in the most modern method of exposition thro' the press and platform, he is easily one of the great savants of our time.

He was born in 1891 in one of the great Prativadi Bhayankaram families in Kanchi apostolic descendant from their original founder Prathivadi Bhayankaram Anna, who in turn was in direct apostolic descent from Sri Ramanuja himself through Mudumbai Nambi, one of his seventy-four Simhasanathipathis.

He started his educational career under his own father Sreeman Anna Rangachar Swami, a Sanskrit scholar of great repute. Having lost his father at the early age of 14, he came under the guardianship of the late Jagatguru Anantachar Swamy who initiated his ward and disciple in the Chatus Sastras. During the several periods of absence of the Jagatguru in Northern India young Annangaracharya's education was left in the care of able exponents of the Sastras in and round Kanchi. The assiduous pupil was quick to gain mastery not only of the sastras, but also of the most delicate structure of Sampradaya on which the philosophy of Srivaishnava rests. He also acquired, after regular courses of study, a sound knowledge of Tamil Literature.

It is not surprising therefore that Sri Annangaracharya was acclaimed as one of the leading exponents of the Visistadvaita Vedanta even at the early age of 25. His mastery of Tamil Language and Literature made him equally proficient for the task of Dravidamnaya Pravachana (propounding of Bagavad Vishaya). His career, therefore, as the traditional exponent of the Ubaya Vedantas, has been brilliant throughout. His lectures on the Divya Prabandas of the Alwars and their commentaries, and the Rahasya Granthas have always been as popular as they have been instructive.

As an author, Sri Annangaracharya is justly famous both for his creative treatises and interpretative works. The former consist of original researches on Vedic literature and poetic compositions of rare merit, while the latter consist chiefly of commentaries on the Stotras and Prabandhas and easy rendering of the various traditional commentaries of our Acharyas on the Nalayira Divya Prabandhas in easy and flowing Tamil Prose style. His works both in Sanskrit and Tamil are so numerous and so varied as to make one feel that he has already compressed the work of a generation of scholars in a life time. And more is to come from the facile pen of this prolific writer on the religion and philosophy of Ramanuja. Great as have been the achievements of the Maha Vidwan, greater is the ideal for which he has been constantly and unflinchingly striving. It is the ideal of a true Sri Vaishnava i.e. an ideal of true service to humanity, and what service can be better and greater than the dissemination of culture?

It is solely in pursuit of that ideal that he has founded the Veda Vedanta Vaijayanti Patasala in his native home of Kanchi. A good part of his earnings through his lectures and writings is set apart for the maintenance of this institution which bids fair to become a great centre of Sanskrit culture even in Kanchi, which has been the home of such culture from times immemorial.

Sriman Annangarachariar Swamy combines in himself the thoroughnes of ancient traditional learning and the soundness of modern critical scholarship. Though advancing in age, he retains his youthful personality. That God may be pleased to

bestow on the Swamy long life and prosperity is the earnest prayer of all lovers of culture and enlightenment.

We, in Sriperumbudur are particularly grateful to him for his genuine sympathy and active support to our institution. He has always been ready to come to our midst and give us the benefit of his thoughtful discourses on the varied aspects of Sri Ramanuja's philosophy. He has presented the College Library with an entire set of his valuable works. He has been for many years a true friend, philosopher and guide to those of us here who have been endeavouring to run this institution on sound lines.

He has published already about 200 books on various subjects.

ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு.

ஸ்ரீ ஸ்வாமியின் பக்தாம்ருத மென்கிற புத்தகத்திற்கு

(காலஞ்சென்ற) **பிரஹ்மஸ்ரீ, T. S. நடேச சாஸ்திரியார்,** B.A., B.L.,

(சென்னை பகவத்கதாப்ரஸங்க ஸபையின் உப அக்ராஸநாதிபதி.) அவர்கள் எழுதிய

முகவுரை :—

சென்னை மாநகரத்தில் பகவத் கதாப்ரஸங்க ஸபையென்று ப்ரஸித்திபெற்ற ஸபையொன்று ஏற்பட்டு 50 வருஷங்களுக்கு மேலாகிறது. என்னுடைய தமயனுரான ப்ரஹ்மஸ்ரீ, பஞ்சாபகேச சாஸ்திரியாரவர்கள், பண்டிட். லக்ஷ்மணுசார் அவர்கள் முதலான அனேக வித்வான்களுடைய உபன்யாஸங்களும் ஹரிகதைகளும் இந்த ஸபையின் மூலமாகத் தொண்டமண்டலம் ஸ்கூல் ஹாலில் நடந்திருக்கின்றன. அது 30 வருஷங்களுக்கு முந்தின ஸங்கதி: நமது ஸ்வாமிகளான ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளை 1931 ஜுலை மாதத்தில் ஷெ ஸபைக்கு வரவழைத்துச் சில உபந்யாஸங்கள் செய்யும்படி கோரினேம். ஸ்வாமிகளும் அந்த கோரிக்கையை அன்போடு ஏற்றுக் கொண்டு முதலில் ஸ்ரீராமாநுஜர் வைபவம் விஷயமாக 6 உபந்யாஸங்கள் செய்தார்கள். அவைகளை யநுபவித்த அன்பர்கள் யாவரும் அளவுகடந்த ஆனந்தமடைந்து இந்த ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் இந்த ஸபையில் சனி ஞாயிறுதோறும் நீண்டகாலம் நடந்து வருமாறு பிரார்த்திக்க வேண்டு மென்றும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் விரும்பினுர்கள். பகவானுடைய ஸங்கல்பமும் அதற்கு ஒத்திருந்த படியால் அன்று முதல் இன்று வரையில் அப்படியே நடந்துவருகிறது.

1931ஹு ஜுலைமீ முதற்கொண்டு இதுவரையில் நமது ஸ்வாமிகளால் ஷெ ஸபையில் [தொண்டமண்டலம் ஹைஸ்கூல் ஹாலில்] நடத்தப்பட்ட உபந்யாஸங்களின் விவரணம் :—

1.	ஸ்ரீராமாநுஜர் வைபவம் விஷயமான	உபந்யாஸங்கள்	6
2.	சிறிய திருமடல்	„	11
3.	ஸ்ரீராமாயணம் (முதல் தடவை)	„	265
4.	ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம்	„	39
5.	ஷெ சதுச்லோகீ	„	3
6.	திருப்பல்லாண்டு	„	13
7.	அமலனுதிபிரான்	„	13

8.	கண்ணிநுண் சிறுத்தாம்பு	உபந்யாஸங்கள்	13
9.	திருமந்திரார்த்தம் (முமுக்ஷுப்படி)	,,	42
10.	ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம்	,,	74
11.	மஹாபாரதஸாரம்	,,	34
12.	பகவத்கீதையின் ஸாரம்	,,	37
13.	அஷ்டச்லோகீ	,,	9
14.	பகவத் விஷயம் (இதுவரையில்)	,,	409
15.	திருப்பாவை உபந்யாஸங்கள் வருஷந்தோறும் மார்கழி மாதத்தில் நடந்துவருவது.		

மேற்கண்ட வுபந்யாஸங்கள் தவிர சில சில ஸமய விசேஷங்களில் தேவப்பெருமாள் வைபவம், திருவேங்கடமுடையான் வைபவம், ஸ்ரீரங்கநாதர் வைபவம்; ஆளவந்தார் வைபவம், கூரத்தாழ்வான் வைபவம், பட்டர் வைபவம், நம்பிள்ளை வைபவம், தேசிகர் வைபவம், மணவாளமாமுனிகள் வைபவம், ஹம்ஸ ஸந்தேச ஸாரம், பாதுகா ஸஹஸ்ரஸாரம்—என்றிப்படிப்பட்ட உபந்யாஸங்களும் பல நடந்திருக்கின்றன. முதலில் ஸ்ரீராமாயண வுபந்யாஸங்கள் நடந்துவந்து 1935-வது வருஷத்தில் பட்டாபிஷேகம் நடந்து முடிந்தது. மறுபடியும் அதையனுபவிக்கவேணுமென்று பக்தர்கள் விரும்பின படியால் சென்ற வருடத்திலிருந்து சனிக்கிழமை தோறும் இது நடந்து வருகின்றது. இப்போது ஆரணியகாண்ட வுபந்யாஸம் நடைபெறுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் பகவத்விஷய வுபந்யாஸம் நடக்கிறது. இதுவரையில் 470 பாசுரங்கள் உபந்யாஸமாகியிருக்கிறது. இந்த வுபந்யாஸங்களைத் தவறாமல் அனுபவிப்பவர்கள் தவிர அடிக்கடி பல பெரியார்கள் உள்ளூரிலிருந்தும் பல வெளியூர்களிலிருந்தும் வந்து அநுபவிப்பதுண்டு. அநுபவிப்பவர்கள் யாவரும் ஸ்ரீ ஸ்வாமிகளின் இவ்வரிய பெரிய உபந்யாஸங்கள் பிற்காலத்தவர்களுக்கும் உபயோகப்படும் படியாகவும், இவ்வுபந்யாஸங்களை நேரில் ச்ரவணம் செய்ய ஸௌகரியமில்லாத இதரவூர்களிலுள்ளவர்களுக்கும் பயன்படும் படியாகவும் செய்யவேண்டியது அவசியமென்று அபிப்ராயம் கொடுப்பது பெரும்பாலுமுண்டு.

ஸ்ரீஸ்வாமிகளால் நமது ஸபையில் உபந்யாஸம் செய்யப்பட்ட க்ரந்தங்களுக்கெல்லாம் அநேகமாக ஸ்வாமிகளே வியாக்கியானங்கள் செய்து தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் வெளியிட்டிருந்தாலுங்கூட உபந்யாஸங்களில் வருகிற விஷயங்களெல்லாம் அந்த வியாக்கியானங்களில் காணமுடியாதாகையாலும், உபந்யாஸங்களினிடையில் ப்ரஸங்கவசாத் சொல்லப்படுகிற பல் வேறு விஷயங்களைத் தனியாகவே வெளியிட்டாக வேண்டியிருப்பதாலும் இதற்கென்று தனியே சில புத்தகங்கள் வெளி வந்தால் நலமாயிருக்குமென்று பல பக்தர்களும் பல பண்டிதர்களும் பலகால் சொல்லுவதுண்டு. காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, சாமி நாதையரவர்கள் நமது ஸ்வாமிகளின் உபந்யாஸங்களுக்கு அடிக்கடி வந்திருந்ததுண்டு; அந்த ஸமயங்களிலெல்லாம் மேற்குறித்த அபிப்ராயத்தையே அவர் ஸபையில் வெளியிட்டிருந்தார். ஸர். எஸ். வரதாசார்ய ஸ்வாமிகளும், ஜஸ்டிஸ். பதஞ்சலி சாஸ்திரியாரவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் நமது ஸபைக்கு வரும் போதுகளில் இவ்வபிப்ராயத்தையே வெளியிடுவதுண்டு. ஏற்கெனவே ஸ்வாமிகள் வெளியிட்டிருக்கிற புத்தகங்களில் விசேஷார்த்தரத்ன நிதி, ஸ்வாபதேசார்த்த ஸாகரம் முதலிய சில நூல்கள் மேற்குறித்த அபிப்ராயத்திற்கிணங்கவே வெளிவந்திருக்கின்றன. அவைபோல பெரிய உணவாக பக்தர்களுக்கு அளிக்கவேணுமென்றும் எனக்குத் தோன்றிற்று. ஸ்வாமிகளின் உபந்யாஸங்களை நான் வெகுகாலம் விடாமல் அநுபவித்து ஆனந்தித்தவன். ஒரு வருஷ காலமாய் நான் ஆரோக்

யக் குறைவினுல் அந்த ஆனந்தத்தை யிழந்து க்ருஹத்திலேயேயிருந்து குறைநுபவம் செய்துவருகிறேன். என்னுடைய ஸொந்த அநுபவத்திற்கும் ஏனைய பக்தர்களின் அநுபவத்திற்குமாகவே பக்தாம்ருதமென்கிற இப்புத்தகம் ஸித்தம் செய்யப்பட்டது.

நமது ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் தோன்றி அந்த ஸம்பிரதாயத்தையே பிரவசனம் செய்பவராளுலும் இதர ஸம்பிரதாயங்களில் பகையோ பழிப்போ சிறிதும் உடையவரன்று. எல்லா மதத்தினர்களும் விரும்பி ஆவலோடு கேட்கும்படியான உபந்யாஸங்களையே ஸ்வாமிசெய்வதுவழக்கம். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திலுள்ள மருமமான தத்துவங்களை யுணருவதற்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமானதென்று என்னுடைய நம்பிக்கை. ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் இப்படி எத்தனை புத்தகங்கள் வெளியிட்டாலும் முடியாதவையென்பது பக்தர்களுக்குத் தெரியும். பகவத் க்ருபையினுல் இப்படியே அநேக புஸ்தகங்களும் மேன்மேலும் வெளிவரவேணும். ஸ்வாமிகளும் தீர்க்காயுள் வாய்ந்து நீண்ட காலம் நமது சபையைச் சிறப்பிக்கவேணும். உலகில் பகவத் பக்தியும் பாகவத பக்தியும் ஓங்கி தருமமும் நிலைபெற வேணும். இதுவே எனது பிரார்த்தனை.

(6—5—47)

ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத காலேஜ் தங்கவிழா வெளியீட்டிலுள்ள
ஆங்கில வியாஸத்தின் மொழிபெயர்ப்பு.

ஸ்ரீ. உ. வே மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தற்காலத்துப் பெரிய வித்வான்களில் ஒருவர். உயர்ந்த படிப்பாளி. கலைகளில் வல்லவர். சாஸ்த்ர அர்த்தங்களைத் தெளிவாக எடுத்துரைப்பதிலும், க்ரந்தங்கள் மூலமாக அச்சிட்டு வெளியிடுவதிலும் சிறந்த ஸாமர்த்தியமுள்ளவர்.

இவர் 1891-ஹுல், ஸ்ரீ ராமாநுஜருடைய 74 சிம்மாசனுதிபதிகளில் முடும்பை நம்பி வம்சத்தில் பிரதிவாதி பயங்கரம் அண்ணுவை மூல புருஷராகக்கொண்டு தோன்றியவர். இவர், தமது திருத்தகப்பனுராகிய ஸம்ஸ்க்ருத வித்வான் ஸ்ரீ. உ. வே. அண்ணுரங்காசாரியர் ஸ்வாமியிடத்தில் பால்யத்தில் வாசித்து வந்தார். 14-வது வயதில் பிதா பரமபதமடைந்தபின், (காலஞ்சென்ற) ஸ்ரீமத் ஜகத்குரு, காதி. அனந்தாசாரியர் ஸ்வாமியிடத்தில் இவர் நான்கு சாஸ்த்ரங்களையும் கற்றுக்கொண்டார். ஷை ஜகத்குரு ஸ்வாமி சிஷ்ய யாத்திரையாக வடக்கே போகும் ஸமயங்களில் சில இதர வித்வான்களிடத்திலும் இவர் சாஸ்த்ரங்கள் பயின்ருர்.

இவர் தமது ஊக்கத்தினுல் சாஸ்த்ரங்களில் நிபுணரானதுமல்லாமல் ஸ்ரீவைஷ்ணவ மதத்திற்குக் கடகால் போன்ற சம்பிரதாயத்தின் அதிநுட்பமான விஷயங்களையும் சுலபமாக அறியப்பெற்ருர். தவிர, விடாமல் படித்து தமிழ் நூல்களிலும் அபாரமான ஞானம் பெற்ருர்.

25 வயதுக்குள்ளேயே விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை விளக்கமாக எடுத்துரைப்பதில் மிகச் சிறந்தவராகக் கொண்டாடப்பட்டார். இவர் பகவத்விஷய ப்ரவசனத்திலே நிகரற்றவர். உபயவேதாந்தங்களையும் மிகத் தெளிவாக வியாக்கியானம் செய்வதில் சிறப்புற்றவர். ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்கள் அவற்றின் வியாக்கியா

னங்கள் ரஹஸ்ய க்ரந்தங்கள் இவைபற்றி இவருடைய காலக்ஷேபங்கள் மிகவும் கொண்டாடத் தக்கவையாயும் கேட்கக் கேட்க ருசிகரமாயும் பக்தி புகட்டும்படியாயுமிருக்கும்.

இவர், புஸ்தகங்கள் எழுதுவதிலும், துர்வாதங்களுக்குக் கண்டனங்கள் எழுதுவதிலும், விரிவுரைகள் எழுதுவதிலும் மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் வேதத்திலும் ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். அற்புதமான காவியங்களும் எழுதியுள்ளார். நாலாயிர திவ்யப்பிரபந்தங்களுக்கு பூருவாசார்ய வியாக்கியானங்களைத் தழுவித் தெளிய நடையில் விரிவுரைகளு மெழுதியுள்ளார். அநேக வித்வான்கள் ஒன்றுகூடி தங்கள் ஆயுள்காலம் முழுவதிலும் எவ்வளவு எழுதமுடியுமோ அவ்வளவும் இந்த அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஒருவரே இதுவரையிலும் தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் எழுதியிருக்கின்றார். ஸ்ரீராமாநுஜ தர்சனத்தைப் பற்றி இன்னும் அநேக நூல்கள் இவர் மூலம் வெளிவரும்.

இந்த மஹா வித்வான் செய்திருக்கும் லோகோபகாரங்களில் மிகவும் சிறந்தது காஞ்சீபுரத்தில் இவர் ஸ்தாபனம் செய்திருக்கும் வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலையாகும். இப்பாடசாலை மிக நன்றாக விளங்கக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. இவர் தமது உபந்யாஸங்கள் மூலமாகவும் சம்பாதிக்கும் பொருள்களில் பெரும் பகுதியை இப்பாடசாலைக்காகவே செலவு செய்கிறார். ஸம்ஸ்க்ருதத்திற்குத் தொன்றுதொட்டு பிரக்கியாதி பெற்றுவரும் காஞ்சீபுரியில் இவருடைய உழைப்பு நன்றாக பிரகாசிக்கின்றது.

இவர், ஸம்பிரதாய சாஸ்த்ரப்படிப்போடு தற்காலப்படிப்பிலும் சிறந்து விளங்குகிறார். வயது சென்றுகொண்டே யிருந்தாலும் பால்ய சுறுசுறுப்போடு உழைத்து வருகின்றவிவர் நீடூழி வாழவேண்டுமென்பதே கலையில் ஆசையுள்ள ஒவ்வொருவருடையவும் கோரிக்கை.

இந்த ஸ்வாமி எங்களுடைய ஸ்ரீபெரும்பூதூர் காலேஜுக்கு பல துறைகளில் ஆதரவு அளிப்பதால் நாங்கள் இந்த ஸ்வாமிக்கு என்றைக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த ஸ்வாமி தம்முடைய கூரியபுத்தியையும் பரந்த ஞானத்தையுங்கொண்டு ராமாநுஜ ஸித்தாந்த உண்மைப் பொருள்களையெல்லாம் எடுத்து எங்களுக்கு விரிவாக அனேக சமயங்களில் போதித்து வருவதற்கு நாங்கள் நன்றி பாராட்டுகின்றோம்.

இந்த ஸ்வாமி தாம் எழுதிய அரிய புஸ்தகங்களில் ஒவ்வொரு பிரதி எங்கள் காலெஜ் புஸ்தகசாலைக்கு அளித்திருக்கின்றார். இந்த காலேஜை சரியான மார்க்கத்தில் நடத்துவதற்கு இந்த ஸ்வாமி எங்களுக்கு அனேக வருஷமாக வழிகாட்டியுள்ளார்.

இந்த ஸ்வாமி இதுவரையில் சுமார் 200 நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ ஸ்வாமி 19-2-42ல் சேலத்தில் செய்தருளிய உபந்யாஸத்தின் முடிவில் அன்று அங்கு விஜயம் செய்திருந்த மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ்

ஸ்ரீ உ. வே. V. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி பேசியது

சேலம் நகரத்தவர்களால் அப்போது வெளியிடப்பட்டது.

"இந்த ஸ்வாமி காஞ்சீ நகரத்திற்குத் திலகமாகத் தோன்றிய மஹா வித்வான். நானும் காஞ்சீ மண்டலத்தைச் சேர்ந்தவனுதலால் இன்று இந்த மஹா சபையில் இந்த ஸ்வாமியின் பெருமைகளை எடுத்துரைக்க மிகவும் ஆவல் கொள்ளுகிறேன். இன்று எனக்கு இது மிகப்பெருத்த பாக்கியமென்றே சொல்லவேணும். இந்த ஸ்வாமியைப் போன்ற மஹா வித்வான்கள் மற்றும் சிலரோ, பலரோ இருக்கக்கூடுமென்றாலும் தாங்கள் படித்தறிந்த விஷயங்களைப் பிறர் மனதில் நன்ருகப் பதியவைத்து உபந்யாஸம் செய்யக்கூடிய வித்வான் இவரைப்போல வேறு யாரேனும் இருப்பாரா என்பது எனக்கு ஸந்தேஹமே. இது தவிரவும் இந்த ஸ்வாமி செய்துவரும் லோகோபகாரமான காரியங்கள் சாதாரணமாக எந்த மனுஷ்யராலும் செய்யமுடியாதவை என்று நான் உறுதியாய்ச் சொல்வேன். காஞ்சீபுரத்தில் இவர் ஒரு சிறந்த வித்யாசாலையை ஸ்தாபித்து அநேக வருஷ காலமாக அதில் உபய வேதாந்தங்களையும் ப்ரவசனம் செய்துவருகிற விஷயம் யாவரும் கொண்டாடக் கூடியது. அவ்விடத்தில் இவர் ஒரு ஸன்னிதி ஏற்பாடு செய்திருப்பதும் அப்படியே. இவை எல்லாவற்றுக்கும் மேற்பட இவர் ஸமீப காலத்தில் செய்திருக்கும் மிகப்பெரிய காரியத்தை இப்போது எல்லாருக்கும் வெகு குதூகலத்துடன் தெரிவிக்கின்றேன். அதாவது ஸ்ரீமத் வேதாந்த தேசிகருடைய கிரந்தங்களையெல்லாம் ஒரு மாலையாக அச்சிடவேணும் என்று பல மஹாதனிகர்களும் பண்டிதர்களும் பல கால் ஸபைகள் கூட்டி பல தடவை ஆரம்பம் செய்தும் பலனில்லாமலே போயிற்று. அப்படிப்பட்ட மிகப்பெரிய காரியத்தை இவர் த்ருடமான ஸங்கல்பத்துடன் எடுத்துக்கொண்டு ஒரு வருஷ காலத்திற்குள் முடித்திருக்கிருர். இதிலிருந்து இவருடைய சக்தியை அளவிட முடியாமலிருக்கிறது. காஞ்சீபுரம் பெருமாள் ஸன்னிதியில் பாராயண கோஷ்டிகளில் வெய்யில், மழை ஒன்றும் பாராமல் இவர் கைங்கர்யத்தில் ஊக்கமாயிருந்து வரும் விஷயமும் ஆச்சரியமானது. அந்த கோஷ்டியில் ஒரு நிமிஷம் இவர் இல்லையென்றால் 'ஸ்வாமி ஊரில் இல்லை, வெளியூர் போயிருக்கிருர்' என்பதை நிச்சயமாக நான் தெரிந்து கொள்வேன். இவர் ஊரிலிருந்தால் ஒரு நிமிஷம் கூட அந்த கைங்கர்யம் தவறவே மாட்டார். இதுவும் ஒரு சிறந்த சக்தியே. இன்னமும் இவருக்கு இப்படிப்பட்ட சக்திகள் மேன்மேலும் ஏற்பட்டு இவரால் உலகுக்குப் பல நன்மைகள் விளையுமாறு இவர் அரோகத்ருடகாத்ரராய் வெகு காலும் வாழவேணும் என்று நாம் எல்லோரும் கூடி மங்களாசாஸனம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம்."

ஸ்ரீஸ்வாமியெழுதிய பகவச்சாஸ்த்ரதத்வம், ந்ருஸிம்ஹாவதார ஹேதுநிர்ணயம், விபவாவதார சோகதத்வம் என்னும் நூல்களைப்பற்றி, ந்ருஸிம்ஹப்ரியா பத்திராதிபரான மாம்பலம் ஸ்ரீ.உ.வே. S. வாஸுதேவாசார்ய ஸ்வாமிகள் விடுத்த திருமுகம்:—

"குசலம். ஸைதாப்பேட்டை. ஆழிமழைக்கண்ணா

ச்ரியைநம:. ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

சரமாவதிதாஸனாகிய வாஸுதேவதாஸன் அனந்தஸுக்ருத ப்ரணாம பூர்வகமாகச் செய்யும்விண்ணப்பம்...... ..அடியேனுக்கு ஒருமாஸமாக உடம்பு அஸ்வஸ்தமாக இருந்து நாலுதினங்களாகக் கொஞ்சம் குணமாகிவருகிறது. ஒரு கருமத்தின் அநுபவம் ஏதாத்ருச துக்கத்தை விளைவித்த போதிலும் ஏதோ விசேஷித்ததொரு அஜ்ஞாதஸுக்ருதம் ஒரு பாக்கியவிசேஷத்தைக் கொடுத்து வியாதியினால் உண்டான சிரமத்தை மறக்கும்படி செய்தது. அந்த பாக்யமென்ன வென்றால் தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீகோசங்களின் ஸேவாலாபமே. பகவச் சாஸ்த்ரதத்வம், ந்ருஸிம்ஹாவதார ஹேது நிர்ணயம், விபவாவதார சோகதத்வம் என்னும் ஸ்ரீகோசங்களைத் தேவரீர்கள் மஹத்தான க்ருபையுடன் அனுப்பியிருந்தது. அவைகளை ஸேவித்துக்கொண்டே ச்ரமத்தையறியாமல் பொழுது போக்கினேன். அவைகளின் ஸ்வாதுத்வத்தை என்சொல்வேன்! ....ஸம்ஸாரமே அபவர்க்கமாக நினைக்கப்படுகிறது... இப்படிப்பட்ட ஸ்ரீகோசங்களை அநுக்ரஹிப்பதற்கான ப்ரீதி விசேஷம்மேன்மேலும் அபிவ்ருத்தமாகும்படி ஸ்ரீசரண்யன் அநுக்ரஹிக்க வேணுமென்பதே அடியேனுடைய ப்ரார்த்தனை.... ...

வாஸுதேவதாஸன். 19—12—47

ஸ்ரீஸ்வாமியெழுதிய ஸ்ரீமத்வால்மீகிராமாயண வசனகாவியத்தைப்பற்றி

மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர். ஊ. வே. சாமிநாதையர் அவர்கள் எழுதிய மதிப்புரை

மஹாகவியாகிய ஸ்ரீ வான்மீகி முனிவர் இயற்றியுள்ள ஸ்ரீமத் இராமயணம் மிகச் சிறந்த காவியமாக யாவராலும் கொண்டாடப்படுகிறது. வடமொழிப் பயிற்சியில்லாதவர்கள் அதன் பெருமையை அறிந்துகொள்ள முடியாமையால் அது பலரால் தமிழில் வசனரூபமாக மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக அமைந்திருக்கிறது.

சமீபத்தில் காஞ்சீபுரம் உபய வேதாந்த மகா வித்துவான் ஸ்ரீமத் பிரதிவாதி பயங்கரம். அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் இவ்வரிய காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இராமாயணத்தைப் பலவாறு ஆராய்ச்சி செய்திருக்கும் அவர்களுடைய இம்மொழி பெயர்ப்பு எல்லாவகையிலும் மிகச் சிறப்புற்று விளங்குகிறதென்பதை நான் சொல்வது மிகையாகும். இம் மொழிபெயர்ப்பு நூலில் உள்ள சிலசில பகுதிகளைப் படிக்கச்சொல்லிக் கேட்டேன். சரித்திரப்பகுதி வேறுவிஷயங்கள் கலவாமல் தனியே அமைந்திருப்பதும், யாவரும் சுலபமாகப் படித்தறிந்து கொள்ளுமாறு வசன நடை சிறு சிறு வாக்கியங்களாக இருப்பதும், அர்த்த புஷ்டியுள்ள பதங்களை அங்கங்கே அமைத்திருப்பதும், பக்தி ரசம் தோற்றும்படி விஷயங்களைப் பொருத்தி யிருப்பதும் மிகவும் பாராட்டற்குரியன. வான்மீகி இராமாயணத்துக்கும் வேறு இராமாயணங்களுக்கும் உள்ள ஒற்றுமைவேற்றுமைகளை நன்கு அறிந்து கொள்வதற்கு இம் மொழிபெயர்ப்பு மிக்க சாதனமாக இருக்கும். ஆதலின் தமிழ் மக்கள் அருமையான இம்மொழி பெயர்ப்பை வாங்கிப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகிறேன்.

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம்.

ஜகத்குரு. காதி. அனந்தாசார்ய ஸ்வாமி

(வைகுண்டவாஸி)

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்.

ஜகத்குரு காதி.

அனந்தாசார்யஸ்வாமி வைபவம்.

திருப்பதியில் ஜகத் ப்ரஸித்தராயெழுந்தருளி யிருந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமிக்கு பாகிநேயராய் அவருடைய திருமாளிகையில் ஸ்ரீமுக ஹூ மாசி மீ ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் காதி க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமிக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்து, மாதுலரான அந்த ஸ்வாமி ஸன்னிதியிலேயே சதுச்சாஸ்த்ரங்களையும் உபய வேதாந்த ஸம்ப்ரதாய ரஹஸ்யங்களையும் அடைவே அதிகரித்து மஹா மேதாவியாய் ஸர்வதோமுக ஜ்ஞாந ஸாம்ராஜ்ய ஸம்பந்நராய் இருபது திருநக்ஷத்திரத்திலே நாநாவித வித்யைகளிலும் விசாரதரானார்.

உத்தர பாரதத்தில் தமது முன்னோர்களின் திருவடி ஸம்பந்திகள் பலருண்டாதலால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி முதல் முதலாக (கி. பி.) 1895-ம் ஆண்டில் வட தேச யாத்திரை யெழுந்தருளி பதரிகாச்ரமம் பர்யந்தமாக மங்களாசாஸநஞ் செய்தருளி அத்யந்தம் அதிசயித சிஷ்ய ஸம்பத்துடனே 1898-ம் ஆண்டில் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளி, ஸந்நிதி வீதியில் புராதனமாயிருந்த தமது திருமாளிகையை மஹிதமஹாபவந ப்ரக்ரியையிலே உத்தரித்து, குல தனமான ஸ்ரீ வேணுகோபாலனை விசேஷ விபவங்கள் பொலிய ஆராதித்துக் கொண்டு, திருவடி பணிந்த ஸ்ரீவைஷ்ணவர்கட்கு ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை ப்ரவசநம் செய்துகொண்டு வாழ்ந்தருளாநிற்கையில், அறிவினால் குறைவில்லா அகன்ஞாலமென்ற இவ்வுலகின்கண் விலக்ஷணமான சாச்வத வித்யோபகாரங்களைச் செய்தருள விரும்பி, வேதாந்த வைஜயந்தீ என்கிற ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்தருளியும் ஸ்ரீ ஸுதர்சன முத்ராக்ஷர சாலை யென்கிற அச்சுக்கூடத்தை அமைத்தருளியும் தம்முடைய ஜ்ஞான விஜ்ஞான ஸம்பத்தியை உலகுக்குப் பெரிதும் பயன்படச் செய்யத் தொடங்கினார்.

அச்சுக்கூடத்தில் ஸ்ரீ ஸ்வாமி வெளியிடுவித்தருளிய ப்ராசீந க்ரந்தங்களும் ஸ்வப்ரணீத க்ரந்தங்களும் இவ்வுலக மெங்கும் பரவியிருக்கின்றன. தர்க்க வ்யாகரண தந்த்ர வேதாந்த பாஞ்சராத்ர இதிஹாஸ புராணாதிகளில் ஸ்ரீஸ்வாமி பரிஷ்கரித்து ப்ரகாசிப்பித் தருளியிருக்கும் க்ரந்தங்கள் ஒவ்வொன்றும் மிக முக்யமானவை. தர்க்க சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய வாதாந்தமுள்ள வாத க்ரந்தங்களத்தனையும் தேவநாகர லிபியில் ஸுஸம்ஸ்க்ருதமாக ஸ்ரீ ஸ்வாமியால் தான் முதன் முதலாக முத்ரிதமாயின. பாட்ட ரஹஸ்யம், மீமாம்ஸா கௌஸ்துபம், ஸேச்வர மீமாம்ஸை, மீமாம்ஸா பாதுகை இத்யாதிகளான மீமாம்ஸா சாஸ்த்ர ப்ரபந்தங்களும், ஸ்ரீ ஸ்வாமியால்தான் பரிசோதிக்கப்பெற்று ப்ரகாசிதமாயின. சண்டமாருத வியாக்யானத்துடன் கூடிய சததூஷணீ, பாராசர்ய விஜயம், பகவக் கீதைக்கு அபூர்வ வ்யாக்கியானங்கள் முதலான வேதாந்த உத்க்ரந்தங்களும் ஸ்ரீ ஸ்வாமியால்தான் சீர்மைபெற்று ப்ரகடிதமாயின.

மஞ்ஜுபாஷிணீ என்கிற ஸம்ஸ்க்ருத பத்ரிகையை ப்ரசுரிக்கத் தொடங்கி, சில மாதம் மாஸிக பத்ரிகையாகவும் சில வருஷம் பாக்ஷிக பத்ரிகையாகவும் பல வருஷங்கள் ஸாப்தாஹிக பத்ரிகையாகவும் இப்படி முப்பத்திரண்டு வருஷகாலம் நடத் ஸம்பாதனம் செய்தருளியிருக்கிறார்.

வரமாலிகா, ப்ரஹ்மவித்யா என்கிற இரண்டு தமிழ்ப் பத்திரிகைகளையும் ப்ரசுரித்தருளினார். வைதிக ஸர்வஸ்வ மென்கிற ஹிந்தீ பாஷா மாஸிக பத்ரிகையை இருபத்தைந்து வருஷ காலம் நடத்தி வந்தார். இவ்விதமாகப் பல வழிகளில் ஜ்ஞாந ப்ரதாநமும் தர்ம ப்ரசாரமும் ஸ்ரீ ஸ்வாமி உலகுக்குச் செய்தருளின முறைமை விலக்ஷணமானது.

ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, முதலிய பல பாஷைகளில் பண்டிதர்க்கும் பாமரர்க்கும் ஒருங்கே பயன்படுமாறு நீண்ட அழகிய அரிய பெரிய உபந்யாஸங்களைச் செய்தருளும் வல்லமை ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் அற்புதமாகக் குடிகொண்டிருந்தது. இத்தகைய உபந்யாஸங்களினால் ஸகல தேசங்களையும் ஸ்ரீஸ்வாமி ஸஞ்சார முகத்தாலே புனிதமாக்கியருளியிருப்பதால் இப்பெருமைகளைத் தெரிந்து கொள்ளாத நாட்டினர் மிகுதியாக இரார்கள்.

ஸ்ரீஸ்வாமி 1912-ஆம் வருஷத்தில் ஜகத்குரு பரக்யா திக்யாதியுடனே ஸௌவர்ண சிபிகா ரத கஜ துரக பரிஜனபரிபர்ஹபரிகர்மிதராய்ப் புறப்பட்டருளி நீண்டகாலம் திகந்த ஜைத்ர யாத்திரை செய்தருளுங் காலத்திலே வட இந்தியாவில் பல பல பகுதிகளில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய விஜய த்வஜம் நாட்டப்பட்டு ஆயிரக்கணக்கான புறமதத்தவர்களும் திருத்திப் பணிகொள்ளப்பட்டார்கள். நாநா மதாந்தரஸ்த பண்டித பரிப்ருடர்கள் ஆயிரக் கணக்காக மலிந்திருக்கப் பெற்றதான காசிமாநகரத்தில் ஸ்ரீஸ்வாமி எழுந்தருளி நம் தர்சனத்தை ஸ்தாபித்து வெற்றிக்கொடி நாட்டினர்.

ஸ்ரீஸ்வாமியின் ப்ரபிதாமஹராய்ப் பெரிய அநந்தாசாரியர் ஸ்வாமி யென்று புகழ்பெற்ற மஹாநுபாவரே முதன் முதலாக வடநாடுகளில் எழுந்தருளி நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை ஆங்காங்குப் புகவிட்டவர். அக்காலத்தில் அங்கு அங்குரிதமான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷ்மீ ஸாம்ராஜ்யமானது இவருடைய பிதாமஹரின் காலத்தில் பல்லவிதமாகி, திருத்தகப்பனாருடைய காலத்தில் கோரகிதமாகி, இந்தஸ்வாமியின் முதல் யாத்திரையிலே புஷ்பிதமாகி, அடுத்த மஹா யாத்திரைகளில் பலிதமாகப் பெற்றது.

இத்தனை சிறப்புக்களுக்கும் சிகரமாக ஸ்ரீஸ்வாமி வட இந்தியாவிற் பல விடங்களில் திவ்ய தேச ப்ரதிஷ்டைகள் செய்தருளியிருக்குந் திறனும் அதிமாநுஷ சேஷ்டித மென்னவுரியதே. மாளவ தேசம், மார்வாட தேசம் முதலிய விடங்களில் அநேக மந்திரங்களும் ஸந்நிதிகளும் அமைத்தருளி, பம்பாய் மஹாராஜதானியில் பனஸ்வாடி யென்னும் பகுதியில் அநேக லக்ஷம் ரூபாய்ச் செலவினால் திருவேங்கடமுடையான் ஸந்நிதியை ப்ரதிஷ்டிப்பித்து ப்ரஸித்த திவ்ய தேசங்களிற்போலவே விசேஷ விபவங்களுடன் பாஞ்சகாலிக ஆராதனங்களும் நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களும் நடைபெறுமாறு சாச்வதிக வ்யவஸ்தைகள் செய்தருளி யிருக்குமதைவும், அதிவிலக்ஷண ப்ராகார கோபுர மண்டப வாபீ கூப தடாக வாஹந திவ்ய பூஷண பரிச்சதாதிகளை ஒழுங்கு படுத்தி யிருக்கும் சீர்மையும் நெஞ்சால் நினைப்பரிது.

இப்படி மஹா வைபவத்துடனே இந்த விபூதியில் அறுபத்திரண்டு திருநக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்த இம்மஹாசார்யர் தாது ஸம்வத்ஸரம் ஆடி மாதத்தில் திருநாட்டுக்கெழுந்தருளினார். ஆனாலும் "யசஃ:காயேந ஜீவதி" என்கிற முதுமொழி இந்த ஸ்வாமி யொருவருக்கே அஸாதாரண மென்பது உலகமறியும்.



ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி.
தேரழுந்தூராண்டவனென்று ப்ரஸித்தரா
யெழுந்தருளியிருந்த
வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
(வைகுண்டவாஸி)

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி.
ஸ்ரீமதஹோபில படாதீச 42-வது பட்டம்
**ஸ்ரீரங்கசடகோபயதீந்திர
மஹாதேசிகன்**
(இஞ்சிமேடு ஸ்வாமி.)

வெகுகாலத்திற்குமுன்
ஸ்ரீ அஹோபில மடாஸ்தானத்தை
அலங்கரித்திருந்த
ஸ்ரீ சக்ரவர்த்தி ஸ்வாமி.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீகாஞ்சீ அழகியமணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி வைபவம்.

* தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவடித் தாமரைகளை யுடையராயிருந்த இந்த ஸ்வாமி தமது முப்பத்தைந்தாவது திருநக்ஷத்திரத்தில் ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி முப்பத்தேழு சாதுர்மாஸ்யங்கள் இவ்விபூதியில் அநுபவித்தருளினார். கலிவருஷம் 4947, கி. பி. 1846. விச்வாவஸு-வருஷ சித்திரை-மீ ரோகிணியில் திருவவதரித்து (1918வருஷம்) பிங்களநாமஸம்வத்ஸரம் தை-மீ கிருஷ்ணபக்ஷத்ருதீயையில் திருநாட்டுக்கெழுந்தருளினார். பூர்வாச்ரமத்தில் "ஷஷ்டி வடாதாசாரியர் ஸ்வாமி" என்ற திருநாமத்தினால் ப்ரஸித்தி பெற்றிருந்தவர். ஆச்ரமஸ்வீகார மான பிறகும் "ஷஷ்டி ஜீயர் ஸ்வாமி" என்றே சிலர் வழங்கிவந்ததுண்டு. "**சதுஷ்ஷஷ்டி கலா வல்லப:**" என்பது இந்த ஸ்வாமியின் குடும்பத்திற்கு ஏற்பட்ட ஒரு விருது. அதிலிருந்து ஏகதேசமாக 'ஷஷ்டி' என வழங்கி வருவதாகும்.

இந்த ஸ்வாமி ஸாமசாகையில் தோன்றியவர். ஸாம வேதத்தைப் பரிபூர்ணமாக அத்யயனம் செய்து, செவிக்கின்பமாக ஸாமகானம் செய்தருள வல்லவர். இளமையில் 'பச்சை பெருமாள் கோயில்' என்கிற முதலியாண்டான் ஸந்நிதியில் வெகு காலம் எழுந்தருளி யிருந்து அவ்விடத்திலேயே வேதம் ஓதி, திவ்யப்ரபந்தங்களும் அதிகரித்து வடமொழி தென்மொழிகளைக் கசடறக்கற்றார். தென்மொழியில் இலக்கண இலக்கிய நூல்கள் யாவும் இவர்க்கு வாசோவிதேயங்களாயிருந்தன. கம்பராமாயணம், திருக்குறள், பிள்ளைப் பெருமாளையங்கார் அஷ்டப் பிரபந்தங்கள், நன்னூல், யாப்பருங்கலம் முதலிய நூல்களை இந்த ஸ்வாமி கண்டபாடம் செய்திருந்த விதம் மிக அதிசயிக்கத்தக்கது. ஸங்கீத சாஸ்த்ரத்தில் மஹா நிபுணர்.

ஸ்ரீ காஞ்சியில் பேரருளாளன் ஸந்நிதி வஸந்தோத்ஸவ மண்டபத்தில் நடந்து வந்த சடகோப நிலயம் பாடசாலையில் எழெட்டு வருஷங்கள் தமிழ்த் தலைமையாசிரியர் பதவியை அலங்கரித்திருந்த இந்த ஸ்வாமிபக்கலில் அக்காலத்தில் தமிழ் வாசித்துத் தேறினவர்கள் பலர். ஸ்ரீ. உ.வே புன்னை ஸ்ரீநிவாஸாசாரியர், (ஸுப்ரஸித்தராயிருந்த) வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமி முதலானோர் இந்த ஸ்வாமியிடத்திலும் தமிழ் வாசித்தவர்களென்று ப்ரஸித்தி.

ஆச்ரமஸ்வீகாரமான பிறகு ஸ்ரீகாஞ்சீ. அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் மடத்தில் [13-ஆம் பட்டத்தில்] அபிஷிக்தரானார். தேவப்பெருமாளுடைய ஸந்நிதி வீதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. திருமலை எச்சம்பாடி நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி ஸந்நிதியில் உபயவேதாந்த ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபம் செய்தருளி, விளக்கில் கொளுத்தின தீவட்டிபோலே மஹா வ்யாபகராக எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமி நாலாயிர வியாக்கியானங்களையும் ரஹஸ்ய வியாக்கியானங்களையும் அநேக பர்யாயம் காலக்ஷேபம் ஸாதித்தருளினார். ஸகல தேசங்களிலும் ஸஞ்சாரம் செய்தருளி சிஷ்யோஜ்ஜீவனம் செய்தருளினார். இரண்டு மூன்று தடவை ஸ்ரீபதரிகாச்ரம யாத்திரையும் செய்தருளி எங்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்தைப் பாங்காகப் பண்ணியருளினார்.

இவருடைய திவ்ய மங்கள விக்ரஹம் வெகு கம்பீரமாயிருக்குமென்பது திருவுருவப் படத்தினாலும் விளங்கும். இந்த ஸ்வாமியின் வைபவ விசேஷங்கள் பெரும்பாலும் உலகமறிந்தவை மிக்க சிஷ்ய ஸம்பத்து உடையராயிருந்தவர். திருவல்லிக்கேணி, திருநாராயணபுரம் முதலான ஸ்தலங்களில் இந்த ஸ்வாமியின் மடங்கள் இருக்கின்றன.

இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளினது—தையில் மகத்தன்று. அன்று காலையில் திருவெஃகா ஸ்ரீயதோக்தகாரி பெருமாள் பன்னகப் பாய்சுருட்டித்திருநாள் கொண்டாட்டத்திற்காகத் திருவீதி அலங்கரிக்கும் போது இந்த ஸ்வாமியின் மடத்து வாசலில் எழுந்தருளுகையில் பெருமாளிடமிருந்து திருமாலை திருப்பரிவட்டம் ஸ்ரீ சடகோபன் மரியாதைகள் ப்ரஸாதிக்கப்பட்டவுடனே ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளினபடி மிக வியக்கத்தக்கதாயிருந்தது. கோயிலில் ஸ்ரீரங்க நாராயண ஜீயர் ஸ்வாமியாக எழுந்தருளி யிருந்தவரும், காரப்பங்காடு ஜீயர் ஸ்வாமி யென்றும் அயோத்யா ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி யென்றும் ஸுப்ரஸித்தருமான ஆசிரியர் இந்த ஸ்வாமியின் திருவடிகளில் ஆச்ரயித்து ஆச்ரமஸ்வீகாரம் பெற்று ஸகலார்த்த விசேஷங்களும் க்ரஹித்து க்ருதார்த்தரானார்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி.

ஸ்ரீகாஞ்சீ. அழகியமணவாள ராமாநுஜஜீயர் ஸ்வாமி

(வைகுண்டவாஸி)

— நம் ஸ்வாமியின் ஆசார்யர்களில் தலைவர். —

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய் எழுந்தருளி
யிருக்கும் ஸ்ரீ பேரருளாள ராமாநுஜஜீயர் மடாதிபதி
நாற்பத்தாறுவது பட்டம்

ஸ்ரீ சடகோப ராமாநுஜஜீயர் ஸ்வாமி.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி.

வானமாமலை சின்னராமாநுஜ ஜீயர்ஸ்வாமி.

(வர்த்தமான ஸ்வாமி; 27-வது பட்டம்)

மைஸூர் மஹாராஜ ஸம்ஸ்தான மஹாவித்வான் பண்டிதரத்னம்
ஸ்ரீமத் உ. வே. கஸ்தூரி ரங்காசாரியர் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

மைஸூர், ப்ரஹ்ம தந்த்ரபரகால மஹா
தேசிகாஸ்தாநாபிஷிக்த.
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீலக்ஷ்மீஹயவதந பாதுகாஸேவக அபிநவ
ரங்கநாத பரகால மஹாதேசிகன்
(வர்த்தமாநஸ்வாமி)



ஸ்ரீஸ்வாமியின் க்ரந்த மாலா கார்யாலய – க்ரந்த சோதகஸமிதி.

ஸ்ரீ. உ. வே. பண்டித
அ. மு. ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ. உ. வே. வித்வான் அக்காரக்கனி
ஸம்பத்குமாராசாரியர், M. A.

திருக்கண்ணபுரம்
வேதபாடசாலையில் பலர்க்கு
கனந்தம் வேதமோதுவித்த
ஸ்ரீ. உ. வே.
வி. வேங்கடாசாரியர் ஸ்வாமி.
(வைகுண்டவாஸி)

ஜ்ஞாநாநுஷ்டான நிதி ஸ்ரீ. உ. வே. மாம்பள்ளம்

திருமலை விஞ்சிமூர் ஸுதர்சநாசார்ய ஸ்வாமி.

ஸ்ரீகாஞ்சீ வேதாந்த வைஜயந்தீ வித்யாலயத்தில்
நம் ஸ்வாமி முதலான முப்பது திருநாமங்களுக்கு
வேதமோதுவித்த செப்பொற்கழலடிச் செல்வர்.
(வைகுண்டவாஸி.)

ஸ்ரீமத் உபயவேதாந்த வித்வான்

திருமலை விஞ்சிமூர் மாம்பள்ளம் ஸுதர்சநாசார்யர்ஸ்வாமி.

இந்த மஹாபுருஷர் திருநாட்டுக்கெழுந்தருளி 14 ஸம்வத்ஸரமே யாகிறது. உலகத்தில் மிகவும் ப்ரஸித்தமாக வழங்கிவருகின்றதான * ந பூதோ ந பவிஷ்யதி * [ந பூதோ ந பவிஷ்யதி] என்கிற வாக்கானது இந்த ஸ்வாமி ஒருவருக்கே தகுமென்பதை ஹ்ருதயம் ஸவே.

உலகத்தில் மற்ற மஹான்கள் ஸம்பாதிக்கும் யோக்யதைகள் மற்றும் பலரிடத்தும் காணக்கூடியவையே யாகும். இந்த ஸ்வாமி ஸம்பாதித்திருந்த யோக்யதைகள் முக்காலத்திலும் அதிஸாதாரணமென்பதை விஜ்ஞாபிப்பதற்கும் அடியேன் அநர்ஹன். தென்னாடு முழுவதிலும் இவருடைய யோக்யதைகள் நன்கு பரவியிருப்பதால் அடியேன் எடுத்துரைப்பது பிஷ்டபேஷணமேயாகும். வேதத்திலும், ஆழ்வாரருளிச் செயல்களிலும், ஆசார்ய திவ்ய ஸூக்திகளிலும், இதிஹாஸ புராணங்களிலும், காவ்ய நாடகாலங்காரங்களிலும் இந்த ஸ்வாமி பரிச்ரமப்பட்டு ஸம்பாதித்திருந்த யோக்யதை ஒருவர்க்கும் ஒரு புருஷாயுஸ்ஸில் ஸம்பாதிக்கக் கூடியவையல்ல என்பது ஸத்யம்.

இந்த ஸ்வாமி பெரும்பாலும் வித்யாக்ரஹணம் செய்தது ஸ்ரீபெரும்பூதூரில். திவ்ய தேச வாஸத்தையே பரம புருஷார்த்தமாகக் கொண்டு பலபல திவ்ய தேசங்களில் வாழ்ந்துகொண்டு நியதமுமத்தாணிச் சேவகம் புரிந்தார். நம்பெருமாள் ஸந்நிதியில் ஏழெட்டு ஸம்வத்ஸரம் எழுந்தருளி யிருந்து வேதபாராயண கைங்கரியம் நிர்வஹித்தருளினர். திருநின்றவூர், திருநீர்மலை, திருவல்லிக்கேணி, ஆழ்வார் திருநகரி முதலான பல தலங்களில் மாதக் கணக்கிலும் வருஷக்கணக்கிலும் எழுந்தருளியிருந்து உபயவேத கோஷ்டிகளையும் நிர்வஹித்தருளினர்.

பரீதாவி ஸம்வத்ஸரத்தில் (அதாவது 38 ஆண்டுகட்கு முன்பு) இந்த ஸ்வாமி திருவேங்கடமுடையானுத்ஸவம் ஸேவிக்கத் திருமலைக்கு எழுந்தருளியிருந்தார். அப்போது, ஜகத்ப்ரஸித்த வித்வத் வரிஷ்டரான திருமலை திருப்பதி அனந்தாண்பிள்ளை, புரிசை ஸ்ரீ ரங்காசாரியர் ஸ்வாமியும் அவ்விடம் எழுந்தருளியிருந்தார். அப்போது அந்த மஹாபுருஷர் இந்த ஸ்ரீ ஸுதர்சநாசார்யஸ்வாமியின் அப்ரதிம யோக்யதைகளிலே அதிமாத்ரம் ஈடுபட்டு வெகு நிர்ப்பந்தப்படுத்தி இவருடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரித்ததை அடியேன் ஸாக்ஷாத்கரித்தவன். ஸ்ரீமத் புரிசை ஸ்வாமியைக் காட்டிலும் இவர் இருபத்தைந்து திரு நக்ஷத்ரம் சிறியவர். அப்படியிருந்தும் "ஸ்ரீவைஷ்ணவத்வபூர்த்தியுள்ளது இவரொருவர்க்கே" என்று அந்த ஸ்வாமி நன்கு கண்டறிந்து வெகு பலாத்காரமாகவே இவருடைய ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்வீகரித்தருளினரென்றால் இதைவிட அதிகமாக இந்த ஸ்வாமியின் பெருமையைப்பற்றி எடுத்துரைக்க வேண்டுமோ? ஸ்ரீகாஞ்சியில் அடியேனை வியாஜமாகக் கொண்டு நடைபெற்றுவருகின்ற வேத வேதாந்த வைஜயந்தீ வித்யாசாலையை நிறுவிய மஹாநுபாவர் இவரேயாவர். இவர்தம்முடைய பொன்னடிக்கால் நலத்தினாலேயே காஞ்சியில் பலபலர் யோக்யதைகள் பெற்றார்கள்.

காஞ்சியில் அனேக திவ்ய தேசங்களில் அவிச்சின்னமாக வேதபாராயண கைங்கரியம் நடந்தேறும்படி பல வித்யார்த்திகளை க்ரமாந்த யஜுர் வேதத்தில் தேறினவர்களாம்படி அத்யயனம் செய்வித்தருளியவர் இந்த ஸ்வாமியே.

இவரே ஆழ்வார் திருநகரியிலும் இரண்டு ஸம்வத்ஸரம் எழுந்தருளி யிருந்து அவ்விடத்திலும் வேத பாராயண கைங்கர்யம் நடைபெற்றுவர முயற்சி செய்தருளினர். அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும்போது திருமேனியில் சிறிது ஆரோக்கியக் குறை யுண்டாகி ஸ்ரீ காஞ்சிக்கு மீண்டெழுந்தருளி தாது வருஷம் பங்குனி மாதத்தில் தம்முடைய திருமாளிகையில் திருநாட்டுக் கெழுந்தருளினர்.

இந்த ஸ்வாமி இடைவிடாது ஏற்றுக்கொண்டிருந்த வித்யாபரிச்ரமங்களைப் பார்க்கும் போது இவர் அமாநுஷர் என்றே அறுதியிடும்படி யிருந்தது. *பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமை கொண்டாய்* என்று பாவியேனும் அநுஸந்தித்து ஸத்தை பெறும்படி அடியேனை ஒரு பதார்த்தமாக்கி யருளின இம்மஹாசார்யர் திறத்தில் *எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கேநாமாட் செய்வோம்* என்கிற ஆசம் சை யல்லது மற்றொன்றுமறியேன்.

ஏற்றி மனத் தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும் மாற்றினவர்க்கொரு கைம் மாறு மாயனும் காணகில்லான் என்கிறபடியே கைம்மாறிலாத பேருதவி புரிந்தருளின இவ் வாசிரியர்க்குக் காஞ்சீ வாஸிகள் தலையல்லால் கைம்மாறிலாதவர்களத்தனை.

இந்த ஸ்வாமியின் திருவுருவப்படம், திருமேனி மிகவும் தளர்ந்திருந்த காலத்தில் எடுக் கப்பட்டதாகையால் பரம கம்பீர மநோஹரமாயிருந்த இவருடைய திருமேனித் தோற்றத்தை இதில் பூர்த்தியாகக் காண முடியவில்லை யென்கிற குறையுள்ளது.

—காஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரிய தாஸன்.

ஸ்ரீமதித்யாதி உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை

ஸர்வஜ்ஞ ஸார்வபௌமர் ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமி

இந்நிலவுலகில் பூருவாசாரியர்களின் காலத்திற்குப் பிறகு நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிர தாயத்தில் பல பல மஹநீயர்கள் அவதரித்திருந்தாலும், இப்பேராசிரியர் பூருவாசாரியர்களுள் ஒருவராகவே போற்றுதற்கேற்ற பெருமை வாய்ந்திருந்தவர்.

கலி ஷூ 4945 சோபக்ருத் ஸம்வத்ஸரம் பங்குனித் திங்களில் (கி. பி. 1843 மார்ச்சு-ஏப்ரல்) திருமூலநன்னிலில் இம்மஹாபுருஷர் திருமலை அனந்தாழ்வானுடைய திருவம்சத்தில் திருவவதரித்தார். எண்பத்திரண்டு திருநக்ஷத்திரங்கள் இவ்விபூதியில் எழுந்தருளியிருந்து உலகம் நிறைந்த புகழாளராய் விளங்கினர்.

இந்த ஸ்வாமிக்கு ஸஹோதரர்கள் மூவர். அனந்தாசார்யர் ஸ்வாமியும், பங்காராசார்ய ரென்று ப்ரஸித்தரான ஸ்ரீநிவாஸவரதாசார்யா ஸ்வாமியும் ஜ்யேஷ்ட ப்ராதாக்கள். குட்டி ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான ஸ்ரீவேங்கடாசார்யர் ஸ்வாமி கனிஷ்டப்ராதா. இந்த ப்ரா தாக்களும் மிகப் பெரிய வித்வான்களாக விளங்கினவர்கள்.

ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமியின் மேதையும் ப்ரதிபையும் அநந்யஸாமாந்யமாயிருந்தது. காவிய நாடக அலங்காரங்களில் மிகவும் ஆச்சரியமான ஞானம் பெற்றுப் பன்னிரண்டாவது திருநக்ஷத்திரத்தில் சாஸ்திரங்களிலே அவகாஹிக்கத் தொடங்கினர். நான்கு சாஸ்திரங்களிலும் நிகரில்லாத வித்வத்வரிஷ்டராய் விளங்கி வந்தார். "சதுர்த்தச வித்யா பாரங்கதர்" என்றே அக் காலத்தில் இந்த ஸ்வாமியை அனைவரும் வழங்கி வந்தார்கள்.

திருச்சானூர் என வழங்கப் பட்டுவரும் திருச்சுகனூரில் விக்ரஹம் திருவேங்கடா சாரியர் ஸ்வாமி யென்பவர் அக்காலத்தில் ஸுப்ரஸித்த மஹா வித்வானாக விளங்கி வந்தார். திருப்பதியிலிருந்து நாடோறும் அவ்விடத்திற்குச் சென்று அந்த ஸ்வாமி யிடத்தில் இவர் சாஸ்த் த்ரங்கள் பயின்றுவந்தார். பிறகு அந்த ஸ்வாமிக்கே இவர் சில உத்க்ரந்தங்கள் பாடம் சொல் லும்படியாக நேர்ந்தது என்றும் பெரியோர் கூறுவர். பதினெட்டு திருநக்ஷத்திரத்திலேயே இவர் சதுச்சாஸ்த்ர மஹா வித்வானென்று கீர்த்தி பெற்றார். ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்

ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசார்யஸ்வாமி
சதுச்சாஸ்த்ர பாராவாரபாரங்கதர்.
(வைகுண்டவாஸி.)

ஸ்ரீ ஸ்வாமியின் நம்பிள்ளை ஸன்னிதி காலக்ஷேப கோஷ்டியின் ஒரு பகுதி.

ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை
குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)
ஸ்ரீகாஞ்சிபுரியில் வித்வதக்ரேஸரராய் எழுந்தருளியிருந்தவர்.

ஸ்ரீ

ஸ்ரீமத் உ. வே. குன்றபாக்கம் திருமலை அனந்தாண்பிள்ளை

வித்வதக்ரேஸர ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி வைபவம்.

கலி ௵ 4943. ப்லவ ஸம்வத்ஸரம், ஐப்பசி மாதத்தில் (கி. பி. 1841, நவம்பர்) மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் திருப்பதியில் மாதுலக்ருஹத்தில் இந்த மஹாபுருஷர் அவதரித்தார். இவரது திருத்தகப்பனார்—அனந்தாசார்ய ஸ்வாமி. திருத்தாயார்—மங்கம்மாள். எம்பெருமானார் நியமித்தருளிய எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் ஒருவரான அனந்தாழ்வானுடைய திருவம்சத்தில் திருவவதரித்தார்.

காஞ்சீபுரத்திற்கு வடகிழக்கு மூலையிலுள்ளதும், வெகுகாலமாகவே அபிஜாதர்களும் வித்வான்களும் அலங்கரிக்கப்பெற்றதுமான குன்றபாக்கம் என்னும் அக்ரஹாரத்தில் இந்த ஸ்வாமியின் முன்னோர்கள் வஸித்து வந்தார்களானாலும் இவர் ஸ்ரீ காஞ்சீபுரியிலேயே தமது வாழ்நாளைப் பெரும்பாலும் கழித்திருக்கிறார். நான்கு சாஸ்திரங்களிலும் பரிபூர்ணமாக அவகாஹித்தவராயினும் நியாயவேதாந்த சாஸ்த்ரங்களில் எக்காலத்திலும் நிகரற்றவரென்று எண்டிசையும் புகழோங்கநின்றவர் இவர் ஒருவரேயாவர்.

பெரிய காஞ்சீபுரத்தில் ஏகாம்ரநாதர் ஆலயத்தின் அருகில் ஓர் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் காவ்ய நாடகாலங்காராதி ஸாஹித்ய க்ரந்தங்களில் அதிக பாகமும் நியாய சாஸ்த்ரத்தில் ப்ரகரண பாகமும் அதிகரித்தார். வியாகரண சாஸ்த்ரமும் திவ்யப்ரபந்தமும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் தமது திருத்தகப்பனாரிடத்தில் அதிகரித்தார். அக்காலத்தில் மிக ப்ரஸித்தராயிருந்த சோளஹத்தூர் விஜயராகவாசாரியர் ஸ்வாமியிடத்தில் நியாய சாஸ்த்ரத்தைப் பரிபூர்ணமாக வாசித்தார். ஸ்ரீ எம்பா. வெங்கடாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் வேதாந்த சாஸ்த்ரத்தைப் பரிபூர்ணமாக க்ரஹித்தார்.

இந்த மஹா புருஷர் நியாய சாஸ்த்ரத்தில் விடாமுயற்சியோடு பெற்றிருந்த பாண்டித்யத்தின் பெருமை மஹா மஹா பண்டிதர்களுக்கும் மிக வியக்கத்தக்கதாகவே இருந்தது. அக்காலத்தில் இவரால் அலங்கரிக்கப்படாத ராஜஸபை ஒன்றுகூட இல்லை. வட இந்தியாவில் பலகால் யாத்திரை செய்து ஒவ்வொரு ராஜஸம்ஸ்தானத்திலும் விசேஷ வாக்யார்த்தங்கள் சொல்லி விருது பெற்று விளங்கினார்.

வடமதுரையில் ப்ரஸித்தராயிருந்த லக்ஷ்மணதாஸ் ஸேட்ஜீ இவரிடம் மிகுந்த பக்திமானாக இருந்ததால் சிறிது காலம் இவர் ப்ருந்தாவனத்தில் வஸித்தார். வித்வான் என்று பேர் பெற்றவர் எந்த மதத்தினராக இருந்தாலும் எந்த தேசத்தவராக இருந்தாலும் இந்த ஸ்வாமியை அப்போது அறியாதார் ஒருவருமில்லை. வடதேசங்களில் சிங்களாச்சாரியர் என்று இவர்க்கு ப்ரஸித்தியிருந்ததாம். அத்திருநாமம் செவிப்பட்டவாறே கையெடுத்துக்கும்பிடாதார் ஒருவரும் இருந்திருக்கவில்லை.

இவருடைய ப்ரதிபாசக்தி மிக விலக்ஷணமானது, மஹாஸதஸ்ஸுகளில் நிர்ப்பயமாய் வாதம் செய்யும் ஆற்றல் இவர்க்கே அஸாதாரணமாயிருந்தது. பிரதிவாதிகள் சொல்லும் கோடிகளின்மேல் சிறிதும் தாமதமின்றியே வெகு கம்பீரமாக ப்ரதிகோடி சொல்லுவர். பெரிய வித்வான்களும் இவருடைய தத்தத்காலஸ்பூர்த்தியைக்கண்டு ஆச்சர்யப்படுவர்கள். நியாயம் வேதாந்தம் என்ற இரண்டு சாஸ்த்ரங்களிலும் ஒரு நிகராகவே இவர் கோடிக்ரமங்கள் கூறுவர். எந்த ஸபையிலும் முதல் ஸத்காரம் இவருடையதாகவே யிருந்தது.

சின்னகாஞ்சீபுரம் ஸந்நிதி வீதியிலுள்ள ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்து வெகுகாலம் நடத்திவந்தார் இந்த ஸ்வாமி. இவரிடம் பல வித்யார்த்திகள் நியாயவேதாந்த சாஸ்த்ரங்கள் பயின்று புகழ் பெற்றார்கள். சிலர் உயர்ந்த பதவிகளிலும் வாழ்ந்தார்கள். எலத்தூர் கிருஷ்ணசார், வாயி நாராயணசார், இப்போது பிரபல வித்வானாக விளங்கிவரும் புரிசை கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி முதலானோர் இவருடைய வித்யார்த்திகளே.

இந்த மஹாபுருஷர் செய்தருளியுள்ள க்ரந்தங்களில் தத்வரத்நாவளி யென்ற வேதாந்த க்ரந்தம் ஒப்புயர்வற்றது. மணிமஞ்ஜூஷிகை யென்கிற வியாக்கியானமும் அதற்குத் தாமே அருளிச்செய்தார். ஸ்ரீபாஷ்யத்தை ஸ்ரக்தராவ்ருத்தத்திலிட்டு ச்லோக ரூபமாகச் செய்தருளியிருக்கும் க்ரந்தமே தத்வரத்நாவளி யென்பது. பெரும்பாலும் ஸ்ரீபாஷ்யத்திலுள்ள சப்தங்களையே இதில் புகவிட்டிருப்பது மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஸ்ரீபாஷ்யார்த்தங்களை [ஓரெழுத்தும் விடாமல்] சுலோகமாக அமைப்பதும், அதிலும் ஒரு குறிப்பிட்ட விருத்தத்தில் அழகாக அடக்கியமைப்பதும் இந்த மஹான் ஒருவர்க்கே ஸுகஸாத்யமாயிற்று. ஏறக்குறைய அறுபத்தைந்து திருநக்ஷத்திரங்களுக்குப் பிறகே இந்த க்ரந்த மருளிச்செய்யத் தொடங்கினார். அதனால் க்ரந்தம் அபூர்ணமாகவே நின்றிட்டது. முதலத்யாயம் மூன்று பாதம் வரையில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. சென்னை சிங்கம் செட்டி சாரிடியார் நாலாயிரம் ரூபாய்க்குமேல் உதவி செய்து அந்த மஹாக்ரந்தத்தை வியாக்கியானத்தோடும் தெலுங்கு லிபியில் அச்சிடுவித்துள்ளார்கள். வித்வான்களுக்கு இனமாகக் கொடுக்கிறார்கள்.

தர்க்க சாஸ்திரத்தில் பல க்ரோட பத்திரங்களும் அருளிச்செய்திருக்கிறார், ஆனால் அவை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமத். திருமலை அனந்தாண்பிள்ளை மண்டயம் அனந்தாழ்வார் ஸ்வாமி வைபவம்.

இந்த மஹான் [கி. பி. 1822-ஸு ஏப்ரல் மாதத்தில்] சகாப்தம் 1745, ஸ்வபாநு ஸம்வத்ஸரம் பங்குனித் திங்களில் ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் மண்டயத்தில் ஜனித்து திருநாராயணபுரத்தில் ஸ்வீகாரம் வந்தவர். இவர் ஆதிசேஷனுடைய அநுக்ரஹத்தினால் அவதரித்தாரென்றும் ஆனது பற்றியே ஆதிசேஷனுடைய திருநாமம் இவர்க்கு இடப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். ஜ்யோதிஷ்மதிலதையின் தைலம் உண்பித்து மேதையின் அபிவிருத்தி செய்விக்கப் பெற்றவரிவர் என்றும் கூறுகிறார்கள். மைஸூரில் ஸ்ரீ கூளீபாளாசார்யரிடத்தில் இவர் சாஸ்த்ரங்கள் பயின்றார். தமது ஜநகபிதாவாகிய ஸ்ரீ. மஹாபாஷ்ய சிங்கராசாரியர் ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி க்ரந்தங்களை அதிகரித்தார். மைஸூர் இலாகாவைச் சேர்ந்த 'ச்ரவண பெள கொளா' என்னுமிடத்திற்கு அருகிலுள்ள ஒரு ஜைந மடத்தில் அந்த மடாதிபதிக்குப் பாடப்ரவசநம் செய்யும்பொருட்டு இவர் அழைக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார். ப்ரஹ்மஸூரி பண்டிதரென்கிற அந்த மடாதிபதிக்கு இவர் மூன்று வருஷகாலம் ஸாஹித்ய சாஸ்த்ர பாடங்கள் கற்பித்துக் கொண்டிருந்தார். அப்போது அவ்விடத்துப் புஸ்தகசாலையிலிருந்த ஜைனகத, ஆர்ஹத மதக்ரந்தங்களையெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்ய இவர்க்கு அவகாசம் ஏற்பட்டு அவற்றிலும் நிரம்பிய நைபுண்யம் பெற்றார்.

இவருடைய பாண்டித்யப்ரஸித்தி மிகவும் ஓங்கி வளர்ந்தது. மைஸூரில் பரகால மடாதிபதியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்ம தந்த்ரஸ்வாமிகள்

மைசூர் மஹாவித்வான் மண்டயம்
அனந்தாழ்வார் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)
வேதாந்த வாதாவளி – ந்யாயபாஸ்கராத்யநேக க்ரந்த நிர்மாதா.

ஒருகால் திருநாராயணபுர மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளியிருந்து இவருடைய ஒப்புயர்வற்ற வைதுஷ்யத்தைக் கடாக்ஷித்து வியந்து இவரைத் தமது மடத்தில் ஆஸ்தாந பண்டிதாக்ரேஸராராக வரித்துக்கொண்டார். அப்போது இவர்க்கு வயது 27. அப்போதே இவர் சதுச்சாஸ்த்ரபாரங்கதராய் வாக்யார்த்தம் சொல்லுவதில் ஒப்பற்றவராய் க்ரந்தங்கள் எழுதுவதிலும் நிகரற்றவராய் விளங்கிப் பெரும்புகழ் படைத்தார். ஸ்ரீ பரகால ஸ்வாமியோடு யாத்திரையாகவும் இவர் எழுந்தருளியிருந்து ஆங்காங்கு மதாந்தரஸ்த வித்வான்களை வாதில் வென்று பலரைத் திருத்தியும் பணி கொண்டார். அப்போதிருந்த மைஸூர் மஹாராஜரும் இவரை மிகச்சிறப்பாக ஸன்மானித்தார்.

இந்த மஹான் அனேக வேதாந்த வாதக்ரந்தங்களையும் அலங்கார க்ரந்தங்களையும் தர்க்க சாஸ்த்ரத்தில் வாதக்ரந்தங்களையும் செய்தருளியிருக்கிறார். இவர் இயற்றியருளின வேதாந்த வாதாவளியில் பரிசயமின்றிக்கே ஸ்ரீ பாஷ்யாதிக்ரந்தங்களை நிர்வஹிப்பவர்கள் வேதாந்திகளாகக் கருதப்படுவதில்லை. எனவே, இவருடைய வாதக்ரந்தங்களில் பரிபூர்ண அவகாஹநம் பெற்றவர்களுக்கே வேதாந்த மருமங்கள் விளங்குமென்பது ஸர்வநிர்விவாதம்.

இந்த ஸ்வாமி நாற்பது திருநக்ஷத்ரமே இந்த விபூதியில் எழுந்தருளியிருந்தார். இவர் எம்பெருமானாரை ஸாக்ஷாத்கரித்தவர் என்று ஒரு ஐதிஹ்யம் சொல்லிப்போருவர்கள். அதாவது மாயாவாதிகளுக்கு முக்கிய க்ரந்தமாகிய [ப்ரஹ்ம நிர்குணவாதப்ரதிபாதநபரமான] அத்வைத ஸித்தியென்னும் க்ரந்தத்திற்குக் கண்டனமாக ந்யாயபாஸ்கரமென்கிற மிகச்சிறந்த க்ரந்தத்தை இந்த ஸ்வாமி செய்தருள ஆரம்பித்து முதல்பரிச்சேதம் எழுதி முடித்தவன்று மிகப்ரபல வித்வான்களான சில அத்வைதிகள் இதையறிந்துவந்து வாதப் போருக்கழைத்துப் பலவகையான குத்ஸித வாதங்களைப் பண்ணினர்களாம். அப்போது பரகால மடத்தில் வித்வான்களாயிருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்களும் "ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தராயிருக்கின்ற இவரை நம் ஸம்ப்ரதாயஸ்தராக ஆக்கிக்கொள்வதற்கு இதுவே நல்ல ஸமயம்" என்று பார்த்து அவர்கள் ஸ்ரீமத் வரவரமுநி விஷயமான தூஷணைகளைப் பொழிந்து இவருடைய திருவுள்ளத்திலே மிகவும் காலுஷ்யத்தையுண்டு பண்ணினர்களாம். இவ்விரண்டு வகையான ஸம்பவங்களால் இந்த ஸ்வாமி மிகவும் திருவுள்ளம் கலங்கித் திருக்கண்வளர்ந்தருளுகையில் அன்றிரவு கனவிலே ஆதிசேஷன் முதலிலே எம்பெருமானாராகவும் பிறகு மணவாளமாமுனிகளாகவும் இவர்க்கு ஸேவை ஸாதித்து நல் தெளிவு பிறப்பித்ததாக.

இவ்விஷயத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகவே அந்த ந்யாய பாஸ்கரத்தில் இரண்டாவது பரிச்சேதத்தின் உபக்ரமத்தில்,

" ஶேஷ: ஶ்ரீஶடஜின் முநிவரகலிஜித் ஸாக்ஷாத் ப்ரவ்ருத்த:
ஶ்ரீஶ்ருத்யர்த்தவ்ருதஜநிதாம் ஸத்ஸம்ப்ரதாயம் ச ।
வித்வத்ஸத்வஸ்திதவதியீவாத நாஸ்தாஸேவ்யஸ்ஸ:
ஸம்யாக்வத்யுத்தமுநிர் ஶ்ரேயஸே ஸம்யஸே ந: ॥

என்கிற சுலோகத்தை நிவேசிப்பித்தருளினர்.

மற்றும் இவருடைய வைபவங்கள் இன்னமும் விரிவாக அறிய வேண்டியவை பலவுள ; அவை, இவருடைய பாகிநேயரான (பெங்களூர்) கல்கிஸிம்ஹம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி வெளியிட்டிருக்கிற வைபவப்ரகாசிகையிலிருந்து அறியத்தக்கன. இந்த வைபவ ஸங்க்ரஹமும் அதிலிருந்தே தொகுக்கப்பட்டது.

பெங்களூர் பல்லேச்வரம். முண்டயர் தொண்டனூர்.

நரஸிம்ஹாசாரியர் — கல்கி ஸ்வாமி

உபயபாஷா மஹாபண்டிதர்.

(வைகுண்டவாஸி)

ஸ்ரீமத். உ. வே. திருநாராயணபுரம்

மண்டயம் ஆழ்வார் ஸ்வாமி.

ந்யாய வேதாந்த பகவத்விஷய மஹா வித்வான்

(வைகுண்டவாஸி.)

ஸ்ரீபெரும்பூதூர் சதுச்சாஸ்த்ர வித்வான் ஸ்ரீமத் உ. வே. குண்டலம்

நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி.

இத்திருநாமம் பூண்ட மஹாஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூரில் விளங்கிவருகின்ற உபயவேதாந்த வர்த்திநீ வித்யாசாலையை முன்னம் அபிவிருத்திக்குக் கொண்டுவந்த மஹாபுருஷர்களில் தலைவர். இவரிடத்தில் ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை அதிகரித்து நாளைக்கும் ஜகத் ப்ரஸித்த வித்வச் சிகாமணிகளாக விளங்கும் மஹான்கள் பலருளர். தற்போது ஸ்ரீபெரும்பூதூரில் வித்வத் வரிஷ்டராய் விளங்குபவரும் மஹாவாக்மியுமான ஸ்ரீமத் உபய வே. தி. ஆஸூரி. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, இந்த ஸ்ரீ நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் அந்தேவாஸி என்பதொன்றே இவருடைய அப்ரதிம வைபவத்தை விளக்கவல்லதாகும்.

இவருடைய ஜன்மபூமி நைஜாம் இலாகாவில் சேர்ந்த 'இந்தூர்' என்னும் அக்ரஹாரம். வடதேசத்திலிருந்த ஸ்ரீ. உ. வே. இல்லந்திர ராகவாசாரியர் ஸ்வாமி யென்பவரிடத்திலும், மற்றும் சில மஹாவித்வான்களிடத்திலும் இவர் ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் வாசித்து, கத்தவால் வனபர்த்தி வேங்கடகிரி முதலான ஸம்ஸ்தானங்களில் பரீக்ஷை கொடுத்து வித்வான் என்னும் விருதும் ஸ்வர்ண குண்டலமும் பெற்றவர். அதுபற்றியே குண்டலம் ஸ்வாமி யென்றே இவர் வழங்கப்பட்டு வந்தார்.

இருபத்தைந்து திருநக்ஷத்திரத்திற்குள் சதுச்சாஸ்த்ர வித்வானாகி ஆங்காங்கு வாக்யார்த்தமும் சொல்லி ப்ரஸித்திபெற்று இவர் இருபத்தாறுவது திருநக்ஷத்திரத்தில் ஸ்ரீபெரும்பூதூர் வந்து சேர்ந்து, அப்போது அவ்விடத்தில் பர்யாய பாஷ்யகாரராக விளங்கிவந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி எம்பார் ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரித்தார். அவ்விடத்திலேயே மஹா வ்யாபகராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. ஆடூர் ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி ஸந்நிதியிலே அருளிச் செயல்களை ஸாங்கமாக ஓதி பகவத் விஷயாதி க்ரந்தங்களை அதிகரித்தார். இப்படி முப்பத்தைந்து திருநக்ஷத்ரம் வரையில் அத்யாத்ம வித்யைகளை அதிகரித்துத் தலைக்கட்டியபின் அவ்வூர் ஸம்ஸ்க்ருத கலாசாலைக்கு ப்ரதம பண்டிதராகவும் அத்யக்ஷராகவும் இவர் வரிக்கப்பட்டார். அந்த வித்யாசாலையிலும், தனியாகத் திருமாளிகையிலும் இந்த ஸ்வாமி பக்கலில் ஸாமாந்ய சாஸ்த்ரங்களை வாசித்தும் ஸ்வரூபக்ரந்தங்களை அதிகரித்தும் உத்தீர்ணரானவர்கள் பலர்.

கி. பி. 1890 ௵ முதல் 1912 ௵ வரையில் [இருபத்திரண்டு ஸம்வத்ஸரம்] இந்த ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலையில் அத்யக்ஷராக எழுந்தருளியிருந்து வித்யாதானம் செய்தருளினர். ஐம்பத்தேழாவது திருநக்ஷத்திரத்தில், (பரிதாவி ௵ வைகாசித்திங்களில், 29-5-1912-ல்) ஸ்ரீபெரும்பூதூரிலேயே திருநாட்டுக்கெழுந்தருளினர்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி, அயோத்யா ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி இவர் ஸந்நிதியிலேயே ஸ்ரீ பாஷ்யகீதா பாஷ்யங்கள் அதிகரித்தார். ஷை ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலைக்கு (இந்த ஸ்வாமிக்குப்பிறகு) அத்யக்ஷராக எழுந்தருளி யிருந்த ஸ்ரீ. உ. வே. வித்யாபூஷணம். காழியூர் ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமியும் இவர் பக்கலிலேயே வித்யாஸர்வஸ்வமும் அதிகரித்தார். மற்றும் பல திசைகளினின்றும் வந்திருந்து இவர் பக்கல் வித்யாக்ரஹணம் பண்ணி ப்ரஸித்த வித்வான்களாக விளங்கினோர் பலருண்டு.

இந்த யோக்யதைகளெல்லாம் ஒருபுறமிருக்க, * பயிலும் சுடரொளி * நெடுமாற்கடிமைகளின் ப்ரமேயத்தைப் பரிபூர்ணமாக அநுஷ்டித்துப் போந்தவர் இந்த ஸ்வாமி யொருவரே யென்பது இவர்க்கு அஸாதாரணமான பெருமை. "தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி" என்னுமா போலே அனேக காலம் புஷ்பக் குடலையுடனேயே இவர் ஸேவை ஸாதிப்பது வழக்கம். ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டவளவிலேயே நெடுந்தூரத்திலிருந்தும் ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு உபசரிக்கும் பரிசு இவரொருவர்க்கே அஸாதாரணச் செல்வமாயிருந்தது.

ஸ்ரீபெரும்பூதூரில் ஸம்ஸ்க்ருத வித்யாலய ப்ரதாநாத்யக்ஷராக
எழுந்தருளியிருந்த ந்யாயவேதாந்த பண்டிதப்ரகாண்டர்
ஸ்ரீ. உ. வே. குண்டலம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி.
(வைகுண்டவாஸி)



ஸ்ரீபெரும்பூதூரில் ஸம்ஸ்க்ருத வித்யாலயா
த்யக்ஷரா யெழுந்தருளியிருந்த (வைகுண்டவாஸி) ப்ரபல வித்வான்
ஸ்ரீ. உ. வே. காழியூர் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின்
காலக்ஷேப கோஷ்டி.

ஸ்ரீ:

ஸ்ரீமான் உ. வே. வித்வத்வரிஷ்ட, காழியூர்

ஸ்ரீ ரங்காசாரியர் ஸ்வாமி

இந்த ஸ்வாமியின் திருவுருவப்படம் ப்ரத்யேகமாகக் கிடைக்கவில்லை. காலக்ஷேப கோஷ்டியில் எழுந்தருளியிருக்கும் ஸந்நிவேசமாகவே கிடைத்தபடியால் அது வெளியிடப் பட்டுள்ளது. ஸ்ரீகோசம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் சிஷ்யவர்க்கமென்பதும் அஞ்ஜலி ஹஸ்தராயிருப்பவர் இந்த ஸ்வாமியென்பதும் தெரிவரிதன்று.

இவர் ஒரு விலக்ஷண பண்டிதராய் விளங்கினவர். முப்பது வருஷங்களுக்கு முன்பு திருநாட்டுக்கெழுந்தருளினர். *ஈ-அவ ஜெவா வெஹெர்த நஹிஊ நம் வஹா அஷெ* என்கிறபடியே மிகவும் கம்பீரமான திருவுருவத் தோற்றத்துடன் எழுந்தருளியிருந்தவர். நான்கு சாஸ்த்ரங்களையும் முறைப்படி அதிகரித்து ப்ரவசனங்களும் அழகாகச் செய்துபோந்தவர். இளம்பிராயத்தில் ஸ்ரீபெரும்பூதூர் வந்துசேர்ந்து அவ்விடத்திலேயே வித்யாப்யாஸம் செய்து அவ்விடத்து ஸம்ஸ்க்ருத கலாசாலையில் ஸ்ரீமத். உ. வே. வித்வத்சிகாமணி குண்டலம் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமிக்கு அடுத்தபடியாக ப்ரதாநாத்யக்ஷ பதவியை வஹித்து அநேகரை வித்வான்களாக்கின மஹான் இவர். உபய வேதங்களிலும் இந்த ஸ்வாமி யோக்யதை பெற்றிருந்தவர். மேலே குறித்த ஸ்ரீமத் குண்டலம் ஸ்வாமி முதலான பல மஹநீயர்களின் திருவடிகளிலே பணிந்து ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை அதிகரித்தவர். திருப்பதியில் ஸுப்ரஸித்த வித்வச்சிகாமணியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமியின் திருவடி ஸம்பந்தம் பெற்றவரான இவ்வாசிரியர்க்கு விளைந்த அதிசயங்கள் அற்புதமல்ல. இவருடைய ஞானத்திற்காட்டிலும் பரம ஸாத்விகத்வம் போற்றத்தக்கதாயிருந்தது.

ஸ்ரீமதுபய வேதாந்த வித்வத்வரிஷ்ட.
திருமலை ஈச்சம்பாடி.
நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி
காஞ்சீபுரம்.
(வைகுண்டவாஸி)

அந்த ஸ்வாமியின் திருக்குமாரர்
தீபாதுத்பங்கப்ரதீபம் திருமலை ஈச்சம்பாடி.
ராமாநுஜாசார்யர் ஸ்வாமி.
(வைகுண்டவாஸி.)



சென்னைமாநகரில் பிரபல ப்ரவசன ப்ரவீணரா யெழுந்தருளி யிருந்த வித்வத்வரேண்ய. ஸ்ரீ. உ. வே. திருக்கண்ணபுரம் **பட்டப்பாஸ்வாமி** (வைகுண்டவாஸி)

ஸ்ரீவில்லிபுத்தூரில் உபய வேதாந்த ப்ரவசந நிஷ்ணாதரா யெழுந்தருளி யிருந்த

ஸ்ரீ. உ. வே. விஞ்சிமூர் சோலைமலையாசார்யஸ்வாமி

ஸ்ரீமதித்யாதி. உ. வே. வித்வான்

திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி

யென்று ஸுப்ரஸித்தரான

திருவேங்கடாசாரியர் ஸ்வாமி

இப்பேராசிரியரின் திருநாமம் கேள்விப்படாத ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரும் இருக்க மாட்டார். இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி முப்பது ஸம்வத்ஸரங்களானாலும், இற்றைக்கும் வித்வத் கோஷ்டிகளில் இவருடைய திருநாமம் பெரும்பாலும் ப்ரஸக்தமாகியே வருகின்றது.

இந்த ஸ்வாமி ந்யாய வியாகரண வேதாந்தங்களில் சிறந்த பாண்டித்யம் ஸம்பாதித்திருந்ததோடு, பகவத் விஷயத்திலும் ரஹஸ்யப்ரஸ்தானத்திலும் தமிழ் இலக்கியங்களிலும் நிகரற்ற புலமை பெற்றிருந்தார். சென்னைமாநகரில் பத்தெட்டு வருஷங்கள் எழுந்தருளியிருந்து அமுதப்பெருக்கான உபந்யாஸங்களை வெகு ஆச்சரியமாக ஸாதித்துக் கொண்டிருந்தார். “திருக்கண்ணபுரம் ஸ்வாமி ஸாதித்த விசேஷார்த்தம்” என்று, நாளைக்கும் பல ரஸிகர்கள் அதிசயமாகச் சொல்லிக்கொண்டிருப்பர்கள். எந்த விஷயத்தையும் இனிமையே வடிவெடுத்ததாக உபந்யஸிக்கும் ஆற்றல் இந்த ஸ்வாமிக்கு அஸாதாரணமாக அமைந்திருந்தது. நாலாயிர திவ்யப் ப்ரபந்த வியாக்கியானங்கள் முழுவதும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயங்களாயிருந்தபடியால் இவருடைய பேச்சுக்கள் பெருவிலை பெற்று விளங்கின. திருவுருவத் தோற்றமோ வெகு கம்பீரமானது. திருமிடற்றோசையோ குழலையும் யாழையும்வென்று விளங்குமது. சாஸ்த்ரஜ்ஞானத்தோடு கூடிய ஸம்ப்ரதாயஜ்ஞானம் விசேஷித்திருந்தபடியால் புகழ் மிக்கது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் உபய வேதாந்த நிர்வாஹகரா யெழுந்தருளி யிருந்த (வைகுண்டவாஸி)
ஆசுகவி. ஸ்ரீ. உ. வே. மேலைவாத்யார்
திருமலை ஐயங்கார் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டி.

நமது ஸ்வாமியின் அக்ராஸனத்தின்கீழ் கோதாவரி ஜில்லா ஏலூர் நகரத்தில் பிப்ரவரியீ நடந்த
ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸபையின் ஒரு பகுதி.

ஸ்ரீ ஸ்வாமியின் சென்னையுபந்யாஸ ஸ்தலமாகிய
(தொண்டமண்டலம் ஸ்கூல்) பகவத்கதா பிரஸங்க ஸபைக்கு
வைஸ்பிரஸிடெண்டாக இருந்தவரும் ஸ்வாமியின் உபந்யாஸங்களை
இடைவிடாது அநுபவித்தவருமான அட்வொகேட்
ப்ரஹ்மஸ்ரீ. நடேச சாஸ்திரியாரவர்கள்
(பரலோகவாஸி)

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் மகா வித்வான்

அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மகோத்ஸவ ஸமயத்தில்

காஞ்சீ மண்டலவாஸிகளான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பிரதிநிதியாக, தேவப்பெருமாள் ஸன்னிதி வீதி, நடாதூர் தேவநாதய்யங்கார் ஸமர்ப்பித்துக்கொண்ட

அபிநந்தன பத்திரிகை.

1. ஸாக்ஷாத் பிரமதேவன் ஆணையை முன்னிட்டுத் தெய்வத் தச்சனாகிய விச்வகர்மாவால் நிர்மாணம் செய்யப்பட்டது இக் காஞ்சீபுரி, இஃது இன்றும் அன்றுபோல் பிரகாசிக்கிறது. ஆங்கிலப் படிப்பினால் ஜீவனார்த்தமாக நம்சிறுவர் பலர் வெளியேறிக் காலங்கழிக்க ஏற்பட்ட கொடுமையினால் வேதாத்தியயனம் இந்நகரில் அடியோடு இல்லாமல் போகுமோ என்ற பீதி அதிகரிக்கும் காலத்தில், அதைப் போக்கி, முற்காலத்தில் விருத்திராசுரன் வேதத்துடன் கடல்புக்கபோது அக்காலத்தவர்கொண்ட கவலையைப் போக்கின எம்பெருமானைப்போல் இக்காலத்தவர்க்கு வேதத்தைக் கொடுத்துக் கவலைதீர்த்த நம் அண்ணாஸ்வாமிக்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும். வேதமறிந்தவரே வேதியர் என்பது இவர் மனங் கொண்ட கொள்கை.

2. தென்னிலங்கைக் கோமான், பார்வதி பதியைப் பாடிப் பரவசப்படுத்திய சாமகானத்தை நாம் செவிகுளிரக் கேட்குமாறு செய்வித்ததும் இம் மஹான் அண்ணாஸ்வாமி அல்லவா!

3. "இளமையிற் கல்" என்னும் முதுமொழி பொய்க்க, முதுமையிலும் கற்கலாகும் என்று உலகத்தவர்க்குக் காட்டவேண்டி இருபத்திரண்டு ஆண்டுகளுக்குமேல் வேதத்தைக் கசடறக் கற்றும் கற்பித்தும் விளங்குவது நம் அண்ணாஸ்வாமியைத் தவிர வேறு யார்? இவருடைய உழைப்பும் விடாமுயற்சியும் என்னே என்று மூக்கில் விரல்வைத்து அதிசயிக்காதவரும் உளரோ!

4. இம்மட்டுமா, த்வாதச ஊர்த்துவ புண்ட்ரப் பெருமையை யறியாதவர்க்கு அதைத் தினந்தோறும் தாம் அணிந்து காட்டித் தேஜோமயமாய் திவ்ய மங்கள சரீரத்தோடு விளங்குவது நம் அண்ணாஸ்வாமியோ வேறுயாரோ!

5. "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்பதை மறந்திடாமல், உண்மைப்படுத்தி ஒரு பாடசாலையை நிறுவி வித்யாதானம் செய்து அது செவ்வனே நடைபெற வேண்டிய ஏற்பாடுகள் செய்தது மட்டுமேயல்லாது, தாமே உபாத்தியாயருமாக விருந்து அதற்கு வேண்டிய

பொருளைச் சேமித்துக் காலந்தவறாமல் கைங்கர்யங்களைச் செய்வித்துவரும் அதிசயத்தைக் கண்டால் மேனாட்டு ஆக்ஸ்போர்ட் முதலிய பல்கலைக் கழகத் தலைவரைப்போல், ஒரு வைதிகப் பிராமணர் நடத்திவருகிறாரே! இவருக்கு இந்தப் பயிற்சி எப்படி, எப்பொழுது, ஏற்பட்டது என்பது வியப்பினும் வியப்பே!

6. சூரியன் உதிக்கச் சற்று காலம் தவறினும், தாம் காலம் தவறாது விடியற்காலையில் வைதிகத்திரளுடன் வலம்வரும் பாக்கியம் இவரைத்தவிர வேறுயார் பெற்றுள்ளார்? கை கால்கள் முதலிய அங்கங்கள் பெற்ற பயனாகத் திருவீதிவலம் வருதல், தேவதாஞ்ஜலி செய்தல், வாயார வாதனைப் பாடிப் புகழ்தல், செவிக்கினிய அவன் நாமங்களைக் கேட்டல், கண்ணார அவனைக் காணுதல் என்பதை இவர் தேவப்பெருமாள் விஷயத்தில் செலுத்தியதாலல்லவா இவரது பேரும் புகழும் அமோகமாக விருத்தியடைகிறது.

7. வைஷ்ணவர்களில் ஒரு சாரார் தமிழைத் தவிர்ப்பதும் மற்றொருசாரார் ஸம்ஸ்க்ருதத்தைத் தவிர்ப்பதுமாக இருந்தாலும், நம் அண்ணாஸ்வாமி எச்சமய நூலானாலும் சரி, எது விஷயமானாலும் சரி, எல்லாவற்றையும் கற்றறிய வேண்டும் என்று கொண்ட கொள்கை மிகவும் போற்றத்தக்கது. கம்பர், வில்லிபுத்தூரார், வள்ளுவர் முதலோர் ஆக்கிய நூல்களை வைதீக வைஷ்ணவர் கண்ணாலும் காண இசையார், செவியும் சாய்க்கார், நம் அண்ணாஸ்வாமியோ புஷ்பம் எந்நிறமாயினும் எங்கே பிறப்பினும் அதிலுள்ள தேன் தெவிட்டாது என்று கண்டு, வண்டு நறுந்தேன் அருந்துவதுபோல் பலகலைகளையும் கற்று ஞானவிருத்தி அடைந்தார். இப்பெருமை இவருக்கே உரித்து.

8. கோயில்கள் கட்டுவதென்பது மகா ராஜாக்களுக்கும் மடாதிபதிகளுக்குமே சிரமஸாத்தியமா யிருக்க, இவ்வைதிக பிராமணோத்தமர் அக்கைங்கர்யத்தை ஏற்று அணிபெறச் செய்வித்து, இந்த பஞ்ச காலத்திலும்கூட சிப்பந்திகளுக்கு மனமுவப்ப ஊதியம்தந்து நிர்வகிப்பது, விந்தையினும் விந்தையே! மஹா சக்தனாலும் கூட நினைக்க முடியாத அழிவற்ற அரிய பெரிய செயல்களைச் செய்பவர் ஒரு சாமானிய மானிடனாக இருக்கவும் கூடுமோ என்பது நமக்குள்ளே உண்டாகும் ஒரு கேள்வி யல்லவா?

9. மற்றும் ஒன்று; சாதாரணமாக வைதீக வித்வான்களை நெருங்குவது என்றால் அது புலியையோ பேயையோ நெருங்குவதைப்போல இருப்பதுடன், அங்கே தேங்காய் பழத்திற்குக் காத்திருக்கும் ஆஷாடபூதிகளும், "இப்படி வ்ள்ளா, அப்படி வ்ள்ளா" என்றும் "தூர நில்" என்றும், வந்தவரை 'நாம் ஏன் இங்கு வந்தோம்' என்று நினைக்கும்படி மனம் உளையச் செய்கிறார்கள். ஆனால் நம் அண்ணாஸ்வாமியைக் காணப்போனால், சிறியவனானாலும் சரி பெரியவனானாலும் சரி, படித்தவன் அல்லது பாமரனானாலும்சரி, எக்காலத்திலும் எந்த இடத்திலும் முக மலர்ந்து புன்சிரிப்புடன் வரவேற்று விசாரித்து, ஒரு நிமிஷங்கூடக் காக்க வைக்காமல் செயல் முடித்து அனுப்புவதைக்கண்டால், இவர் ஆங்கில நாட்டிலுள்ள உயர்ந்த உத்யோகஸ்தருடன் மிகவும் பழகியிருக்க வேண்டும் என்கிற எண்ணம் எவருக்குத்தான் உண்டாகாது.

10. இதுநிற்க, ஒரு சொற்பொழிவு என்றால் குறித்த காலத்தில் ஒரு கண்ணிமைப் பொழுதும் பின்னிடாமல் வந்து ஒருகணப் பொழுதும் வீண் போக்காமலும், காலம் கடவாமலும் வாய்வந்தபடி சொல்லாமலும் கேட்போர் மனங்குளிர உபந்யாசத்தை நிகழ்த்தும் அதிசயத்துக்கு பட்டணத்து உத்யோகஸ்தர்களே சான்றுவார். 'ஸ்வாமி எள்ளுகிறார், வந்து கொண்டிருக்கிறார்' என்று ஆள்மேல் ஆள்விட்டு அதனால் ஸ்வாமித்வம் பெறுவது, இவருக்கு மிகவும் அருவருப்பாகும்.

11. சோம்பேறிகளுக்கு உணவளிப்பதோ உதவுவதோ இவரிடம் லவலேசமும் இல்லை. "உழைத்தால் கூலி, இல்லையேல் காலி" என்பது இவரது கொள்கை.

12. சுருங்கச் சொல்லின், ஸம்ஸ்கிருதம் தமிழ் தெலுங்கு ஹிந்தி முதலிய பாஷைகளில் தங்குதடையின்றி உபந்யஸிக்கும் சக்தி கலைமகள் அனுக்கிரகத்தால்தான் இவர்க்கு உண்டாயிற்று என்று உறுதியாகச் சொல்வர் சிலர். மற்றும் சிலர் ஆசார்ய கடாக்ஷமே காரணம் என்பர். ஆனால் இவரது பேருக்கும் பெருமைக்கும் காரணம் இவருடைய சலிப்பில்லா உழைப்பும், பேரருளாளன் பரிபூரண கடாக்ஷமும் இவரைப் பெற்றதாய் என்னேற்றுள் கொல் என்னும், பெற்றோர் பெற்ற பாக்கியமுமே ஆகும்.

இப்படிப்பட்ட அரும் பொருளாகிச் செயற்கரிய செய்யும் சீராளனை அறுபது ஆண்டுகள் ரட்சித்த பேரருளாளன் இன்னும் இவரைப் பல்லாண்டுகள் நம்மிடையே தீர்க்காயுளும் திடகாத்திரமும் உடையவராகவும், இவர் செய்துவரும் தொண்டுகள் ஒவ்வொன்றும் நிர்விக்கினமாக நடைபெற்று நீடூழி வாழ்விக்கும்படியாகவும், இருகையுங் கூப்பி உரைக்கும் எங்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து நம் அண்ணஸ்வாமியை அனுக்கிரகிக்குமாறு பிரார்த்திக்கின்றனம்.

காஞ்சிபுரம்,
15—3—51

பெருமாள் கோவில்,
நடாதூர், தேவநாத ஐயங்கார்.
ரிடைர்டு ஹெட்மாஸ்டர்.

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு ஷஷ்டியப்தபூர்த்தி மகோத்ஸவத்தில் சூட்டிய பாமாலை.

1 பூவிலோன் புனிதமாய புண்டரீகாக்ஷன் காண
வாவுமா மேதமாக்கி வானவரானோர் சூழத்
தேவிமா ரிருவர் கூடத் தேவாதி ராஜன்சேவை
மேவி மானிடர்கட் கெல்லாம் மனமுறவளித்த கச்சி.

2. கச்சியம் பதியில் தோன்றிக் கலைபல கற்று மேலோர்
மெச்சிட வாழவந்த மேதாவி அண்ணா வென்னின்
நச்சிடப் பலருமுண்டு நாமகளருளுண் டென்னின்
இச்சபை சொல்லுமாதை இருகண்ணால் காண்மினீரே.

3. பகலவன் தோன்றுமுன்னர் பன்னிருநாமம் சாத்திப்
பல்கலைக் கழகம் புக்குப் பரிவுடன் பாடமூட்டி
இகலவன் பெருமான் சேவைக்கேகி யங்கிருந்து வாழ்த்தி
நலமுடன் நல்லாகாரம் நாளுமே கொள்ளும் நல்லான்.

4. தன்பெரு முயற்சியாலே தனிப்பெருங் கோயிலாக்கி
நம்பிள்ளை நிலையம்புக்கு நாவார வாழ்த்திப்பின்னை
தன்பிள்ளை போலக்காக்கும் தனையரோடளவளாவி
இன்புற்று வாழ்வதன்றோ இவர்பெரும் மகிழ்ச்சியம்மா!

5. 'இளமையிற்கல்' லென்மாற்றம் எய்த்திட விரும்பூதெய்தி
வளமுறு வேதமேழும் வளர்ந்தபின் கற்றநம்பி
பளபள வென்ன வாடைப் பவித்திரமாகச் சாத்தி
இளையவ னிவனே யென்ன இருப்பது இவர்தம் கொள்கை.

6. தமிழொடு தெலுங்கு ஹிந்தி யாங்கிலத் தேவபாஷை
கமழுமின் சொற்களோடு கவினுறப் பொழியுமாற்றல்
இமயமோ டிளையாள்வாரி இடமுடை யவனியெல்லாம்
கமழுமே யென்று போற்றின் காதலாவல்ல காணீர்!

7. உபயவே தாந்தச்சோதி உத்தமன் றூப்புல் வந்த
மலையவ னருளினாலே மாற்றலர் மருண்டே யோடச்
செயவலன் என்றபட்டப் பெயர்கொண்ட வழியில் வந்தால்
எவரிவர்முன்னே நிற்பார்? எதிர்மொழி இயம்புவாரார்?

8. அண்ணனுற் காறுபத்தி னண்டுகள் அளித்துக் காத்த
மின்னனு ளிலங்குமார்பன்மாயனு ராசிபெற்றுப்
பொன்னனூர் செல்வம்தந்து பெரும்புகழ் தந்துமற்றும்
எம்மனூர் காண என்றும் இன்புற்று வாழ்க! வாழ்க!!

ஸ்ரீ காஞ்சீபுரி,
15—3—51 } பெருமாள் கோவில் நடாதூர் தேவநாத அய்யங்கார்.
ரிடையர்டு ஹெட்மாஸ்டர்.

ஸ்ரீ:

ஸ்ரீமத். உபய. வே. மகா வித்வான் காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்

ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில்

ஷை ஸ்வாமியின் திருவடித்துகளாகிய காஞ்சீ

திருமலை. திருமாலைதாங்கி. தட்டை பாஷ்யதாஸன்

நம்பிள்ளை ஸந்நிதி பகவத் விஷய நித்ய காலக்ஷேப கோஷ்டியின்

சார்பாக வாசித்தளித்த

மகிழ்ச்சியுரை.

வெண்பா

கண்ணன் திருவடியே அண்ணன் திருவடியென்
றெண்ணும் மனமுடையேனுகியே—மண்ணுலகில்
பண்பாட நாளும் பணித்திடுவாய் சேனேசா
எண்டிசையும் கொண்டிடவேதான்.

ஆசிரிய விருத்தம்

1 கச்சி நகர் அத்திகிரி கண்ணன் கழல் காணவே—நத்தினே னண்ணனையே
நச்சியே யோதினர் நான்மறை மூலமும்—நாளுமே என்றனுக்கே
சச்சம் பிரதாய ரகசியம் யாவையும்—செப்பினர் என்றனுக்கே
கொச்சமில் அவர் பாதம் மெச்சியே புகழ்வதும்—பெருமையன்றோ எனக்கே.

2 புகழ்வதும் பெருமையே புண்ணியந்தானே—அண்ணனர் அடிதம்மையே
நினைவிலும் கனவிலும் அவர் போதம் கேட்பதும்—காண்பதுமே நன்மையே
துணையடிகள் சடகோபன் ராமாநுசன் கூரன்—பட்டன் மணவாளயோகி
அனைவர்தம் அடிகளும் ஒன்றுமாய்க்—கூடியே அண்ணனய் அவதரித்தார்.

3 இன்றுந்தாமவர் தாமும் ஒழுகிடும் வழிகளை—ஓதுகின்றேமு மின்றே
என்றுமதிகாலையடி யாருடன் அருளாளன்—வீதி மறையோதி வருவார்
சென்றனுட் டானமுடன் செய்தபின் அநுதினம்—அருமறைப் பொருளுரைத்தே
நன்றுதிகழ் அத்திகிரி சென்றுமே மறைபாடி—நாடியே யகம் செல்லுவார்.

4 சென்றமுது செய்தபின் மச்சுக் கெழுந்தருளி—நேரான வேதாந்தமும்
தென்மறைக் கலைகளும் அனைவரு மறிந்திட—விரிவுரைக ளெழுதியருள்வார்
பின்னவர் நம்பிள்ளை சந்நிதானத்திலே—ரகசியங்கள் போதம் செய்வார்
அந்திக்கடன் முடித்தருளாளன் சந்நிதியில்—அழகுபெற மறையோதுவார்.

5 செய்தபின் நம்பிள்ளை சந்நிதி எழுந்தருளி—செந்தமிழ் மறைகளோதி
மெய்யடியாருடன் திருமாளிகை சென்று—வந்தவர்க்கினி தருளியே
செய்தமிழ் உரைகளைச் சீர்மைப் படுத்தியே—சிறிதுநேரம் கழித்தே
பையவே பெருந்தேவி நாயகன் நினைவுடன்—பஞ்சணையிலே துயிலுவார்.

6 பாரில் பெருந்தேவி மணவாளர் பெருமையின்—சீர்மையைப் பேசியருள
சீருற்ற செஞ்சொற்கவி **வாதிபீகரவண்ணன்**—ஒருவரே இன்று மன்றோ !
கூறிடவும் வேண்டுமோ கண்டவர் கேட்டவர்—கோடான கோடியன்றோ
பூரித்து யான்புனையும் பொன்னடிகள் தம்மையே—போற்றியே பற்றினேனே.

7 கொச்சமில்லயன் பணியும் அருளாளர் வாழி—அருள் மங்கைதானென்றும் வாழி
கச்சிநகர் தான் வாழி கடலுலகமும் வாழி—கனதமிழ் மறைகள் வாழி
சச்சம்பிரதாய உரைசீர்மைகள் தான் வாழி—சடகோபர் பாதம் வாழி
நச்சியே நம்மையருளாளர் பதம் சேர்த்திடும்—எதிராசர் என்றும் வாழி
தஞ்சமே என்றுநாம் என்றுமே போற்றிடும்—சீயர் பதமென்றும் வாழி
நெஞ்சார வாழ்த்திடும் **வாதிபீகரவண்ண**—வள்ளலே வாழி வாழி.

ஸ்ரீ நம்பிள்ளை ஸந்நிதி நித்ய காலக்ஷேப கோஷ்டியார்,
பெருமாள்கோயில்.

A THRILLING EXPERIENCE.

(*By NALLAPPA JEYAPPAIYENGAR,* B.A.)

A walking encyclopaedia, a personification of knowledge, an institution by himself, a law unto others, Sri Kanchi Jagathacharya Simmasanathipathi Ubh. Ve. Mahavidwan, Upanyasa Kersari Prativathi Bhayankaram Annangaracharya Swami has been known to me—and I consider it a privilege to be able to say so–intimately for over thirty years. I can say with equal pride that it has been given to me to know with the same intimacy many great spiritual personalities belonging to all sections of Sri Vaishnavism and Sri P. B. Annangaracharya Swami is indisputably held, by learned and lay people alike, as the most outstanding among them. //The late Advocate-sage of Mylapore, Sri S. Gopalaswami Iyengar used to refer to this *great personality* as an embodiment of the Vedas and Upanishads, the Ithihasas and Puranas, the mystic utterances of the Dravidian saints and the learned productions of our great teachers all in one without a single exception. He was himself a great authority on occidental as well as oriental philosophies and religions and I have seen many great Vidwans resorting to him for enlightenment on many subtle spiritual truths, but in the case of our Swami's lectures at Madras he used to make it a point to attend regularly, sometimes coming with a few of his chosen friends even half an hour earlier than the scheduled time. When once asked why, even at his old age and with all his wide learning, he took such pains as to hear our Swami so assiduously he gave vent to his pent up feelings thus:

"What, it is not one person that speaks here ! It is a collection, a symposium, a rich heritage of the best of our ancient intellects that we have come to witness ! It is our most ancient seers like Vyasa, Parasara and Valmiki that again speak through our Swami; it is our most beloved saints like Satakopa, Poigaiyar, Bhuthathar and Peyar that again outpour their divine inspirations through his blessed mouth; and again it is our most revered teachers like Sriman Nathamunigal, Alavandar, Ramanuja, Bhattar, Nampillai, Pillailokacharya, Vedanta Desikar and Manavala Mahamunigal that have come to re-live in him and shed their combined wisdom through his prolific tongue ! The subject matter moreover is "Divine Wisdom", and his metallic tone is so majestic and voluminous that we need no loud speaker to hear him ! When we are to be blessed with such a thrilling experience, will our travel of a thousand miles to go over here or our awaiting for hours together be enough price for it ? It is not only we but it is also our saints that should sing hail and hail to this wonderful personality !

" In a moment our Swami draws up the curtain and transports us, with our present physical bodies, to the ethereal regions of Heaven to shower on us the bliss that is his as an insatiable nectar every moment. A rare quotation at a turn to the right, a unique sermon at a turn to the left, a moving incident which will melt the stoniest of hearts this moment and a humorous anecdote which will break the ribs of even youngsters the very next moment are the common features of his resplendent lectures which go on with the same unabated flourish and sustained interest whether it be two hours or four. It is like the flow of the Ganges from the Himalayas, that quotations from the Vedas, sermons from the Upanishads, references from the Ithihasas and Puranas, incidents from the lives of our great saints and teachers, commentaries upon their inspirations and clarifications of their esoteric significance follow one upon another in close succession with marvellous ease and astounding rapidity ! The divine glories shoot forth from him like vollies of rockets and flash like lightning. The subtle virtues of our ancient teachers shine like brilliant diamonds through his lustrous tongue.

"As he goes on showering on us the choicest honey of divine beauties, the sweetest milk of our saints' virtues, the ripest fruits of our teachers' wisdom and the nectar of their immortal elegances, we are thrilled, we are entranced and bewildered into the belief that we are actually in communion with our Lord high up in His Heaven, or in company with Sri Krishna on the banks of the Jamna at Mathura or placed face to face with St. Satakopa at the foot of the holy tamarind tree at Thirukurukur whenceforth he poured out his eternal revelations or enthroned in the midst of our great teachers like Ramanuja and Battarya under the shade of that sacred Punna-tree at Srirangam where they used to hold their discussions and discourses on Divine Wisdom about one thousand years ago. Where else can we reap such a rich harvest and have such a sublime experience ?" As he closed his eulogy thus, four or five of his friends who were nearby exclaimed "yes, it is true, we can see one or two virtues shining in other Vidwans, but in the case of this Swami all the sweet qualities and great qualifications of our blessed ancients overflow to their fullest extent. This is but one aspect of Sri Swami's life as Sri Gopalaswami Iyengar saw it.

Our Swami's writings in Sanskrit and Tamil, in Telugu and Hindi are too numerous to mention. They have spread throughout the length and breadth of our country and have been well received by all lovers of religion. At a very early age he began to write his commentaries in lucid Tamil on all the four thousand mystic songs of our Dravidian saints and got the tittle of "Sen Tamil Chelvar" (a gifted scholar of chaste Tamil) from the renowned Tamil Academy of Madura (Madurai Tamil Sangam). When he was

twenty two years old he started and completed his learning and memorising of the Yajur Veda and began to make his own original research in it. His contribution in this line to Vedic literature has brought him many laurels from renowned Vedic scholars and Sanskrit Vidwans. The late Mahamohopadyaya Kapistalam Desikacharyar Swami of all India fame and many others of equal merit have commended it as a work of rare worth, the first of its kind, unattempted by any scholar from the beginning of time. Even our ancient seers like Vyasa and Parasara could not have dreamt of such a work being accomplished at any time. His works like this have not only proved his profound scholarship in Sanskrit but also his remarkable capacity for research.

Next in importance come Sri Swami's "Grantha Malas" or the publication of the complete works of four great authors namely Ramanuja, Nampillai, Vedanta Desika and Manavala Mahamunigal in beautiful globe editions. This by itself is a gigantic achievement which had baffled the endeavours of many associations and committees which were specially formed for the purpose many times before our Swami's time and by rendering such a unique service he has not only woven and hung round the necks of these Mahacharyas four fine garlands of the choicest and rare type but he has also made the whole Sri Vaishnavite world indebted to him for all time to come. It will take volumes to describe in the same way all the hundreds of books which our Swami has written and all the magnificent services which he has rendered and as they have been all concisely dealt with by Pandit A. M. Srinivasacharya of Triplicane in his small work entitled "Acharya Vaibhava Dwisathi" I shall confine myself to describing here such of the unique virtues of our Swami as I have personally known and appreciated.

